
ஒருவரை ஒருவர் கட்டியெழுப்புதல்



ஜீன் கெட்ஸ்

தனித்த மற்றும் குழுவிற்கான வழிமுறைகள் உள்ளடங்கியுள்ளன

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஒருவரை ஒருவர்
கட்டியெழுப்புதல்

ஒருவரை ஒருவர் கட்டியெழுப்புதல்

ஜீன் கெட்ஸ்

தமிழாக்கம்

ஏ டி எட்வர்ட் ராஜ்

COOK INTERNATIONAL
a grassroots partner
&
Secunderabad

Oruvarai Oruvar Katti Ezhuputhal
(Tamil)

Building Up One Another
By Gene Getz

Originally published in English language in the United States by Victor Publishing, an imprint of Cook Communications Ministries, Colorado 80918

First Tamil edition 2004
Reprint 2009

Published for the Shoebox Library Distribution Project for Pastors, co-ordinated by CCMI.

Not for Re-sale

Jointly published by
CCMI
&
OM India,
Secunderabad 55.

Printed and bound by
Authentic India, P.O. Box 2190, Secunderabad 500 003.
E-mail: printing@ombooks.org



பொருளடக்கம்

	அறிமுகம்-தொலைநோக்குதல்	7
1.	ஒருவருக்கொருவரின் உறுப்பினர்கள்	15
2.	ஒருவருக்கொருவர் அர்ப்பணித்தல்	27
3.	ஒருவருக்கொருவர் கனம் செலுத்துங்கள்	39
4.	ஒருவருக்கொருவர் ஒத்த மனதை உடையவர்களாய் இருங்கள்	51
5.	ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்	65
6.	ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்	77
7.	ஒருவருக்கொருவர் வாழ்த்து கூறுங்கள்	91
8.	ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள்	101
9.	ஒருவரின் பாரங்களை இன்னொருவர் சுமங்கள்	119
10.	ஒருவருக்கொருவர் பொறுத்துக்கொள்ளுங்கள்	135
11.	ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்	151
12.	ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்துங்கள்	167



அறிமுகம்

தொலைநோக்குதல்

இந்தத் தொடக்கபகுதியை கவனமாகவும் ஜெபத்துடன் தயவு செய்து படியுங்கள். அப்படிச் செய்யவில்லை எனில், வேதவசனங்களை குறித்த முக்கியமான விளக்கங்களை நீங்கள் இழந்துபோவீர்கள், இது தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் கோடிட்டு காட்டப்பட்டுள்ள "ஒருவருக்கொருவர்" என்ற குறிப்புகளை தெளிவாக புரிந்து கொள்ளவும் செயல்படுத்தவும் மிகவும் அவசியமானது. அதற்கு மேலும், இவ்வாசிரியரின் சொந்த வாழ்க்கையையும் அவரின் ஊழியத்தையும் இந்த ஆய்வானது எப்படி பாதித்தது என்பதைக் குறித்த சிறந்ததொரு சாட்சியை நீங்கள் இழந்துபோவீர்கள். இந்த அறிமுகமானது ஒரு சிறிய குழு ஆய்வை எப்படித் தொடங்குவது என்பதைக் குறித்து யோசனைகளை வழங்குவதையும் கவனிக்கவும்

ஆசிரியர் குழுவினர்.

பல வருடங்களுக்கு முன்னதாக ஆச்சரியமான ஒன்றைக் கண்டுபிடித்தேன். நான் ஒரு முழு நேர பேராசிரியராக ஆலயத்தைக் குறித்த கர்த்தரின் திட்டம் என்னவென்று டல்லாஸ் வேதாகமக் கல்லூரியின் மாணவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது இது நிகழ்ந்தது. அவர்களுடைய கேள்விகள் ஊடுருவுவதாயும் சவால்விடுவதாயும் இருந்தன! ஆரோக்கியமான ஆலயம் என்பதென்ன? எல்லா விசுவாசிகளிடமிருந்தும் கர்த்தர் எதனை எதிர்பார்க்கிறார்? இவ்வுலகின் ஆலயத்தை செயல்படுவதாக்குவது எது?

புதிய ஏற்பாட்டின் வெவ்வேறு ஆலயங்களுக்கு எழுதப்பட்ட நிருபங்களில் எழுத்தப்பட்டுள்ளவற்றை மிக ஆழமாக ஆராய இக்கேள்விகள் அனைத்தும் என்னை உந்தின. புதிய ஏற்பாட்டின் நிருபங்களின் வழியாக நான் பயணம் சென்று கொண்டிருந்தபோது, ஒரு முக்கியமான கொள்கை வேதாகம வசனங்களில் வெளிப்பட்டது. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் என்ன செய்ய வேண்டும் என மீண்டும் மீண்டுமாக ஓர் அறிவுரையை நான் கண்டேன். குறிப்பாக, *அல்லேலன்* என்ற கிரேக்க வார்த்தையை பவுல் ஏறத்தாழ நாற்பது முறைகள் உபயோகப்படுத்தியுள்ளான், இதன் மூலமாக தம் உடன் விசுவாசுகளுக்கு கிறிஸ்தவர்களிடம் இருக்கும் *ஒருவருக்கொருவரின்* பொறுப்பு என்னவென்று அவன் அறிவிக்கிறான்.

புதிய ஏற்பாட்டின் இந்த நிருபங்களினுடைய கொள்கைகளை அன்மையில்மீண்டும்பார்த்தேன். எப்பொழுதும்நடைபெறுவதைப்போல, முதல் சுற்றில் நான் இழந்த புதிய உள்நோக்கங்களை இம்முறைக் கண்டுபிடித்தேன். இந்தகண்டுபிடிப்புகளைஉங்களுடன்பகிர்ந்துகொள்ள ஆவலாயிருக்கிறேன். ஆனால் முதலாவதாக, என்னுடைய முதல் பயணத்தின் முடிவாக என்னவாயிற்று என்பதை நான் கூறுகிறேன்.

நான் எண்ணிப்பார்க்காத அளவு, "ஒருவருக்கொருவர்" அறிவுரையான எனது முதல் கண்டுப்பிடிப்பானது வருகின்ற வருடங்களிலெல்லாம்என்வாழ்க்கையைதாக்குவதாகஇருந்தது. முதலாவது, பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் விவரித்த செயல்முறைகளை திறப்பதற்கானதிறவுக்கோல்இதுவாயிற்று. "ஒவ்வொருபாகமும்அதனுடைய கடமையைச்" செய்யாவிட்டால், "கிறிஸ்துவின் சரீரமானது" கிறிஸ்துவின் அன்பைப்பிரதிபலிக்கும், செயல்படும்சமூகமாகவும், வளரும்சமூகமாகவும் இருக்காது என மிகப்பெரிய முதல் நூற்றாண்டு ஆலய நிறுவனர் தெள்ளத்தெளிவாக கூறினான். கர்த்தருடையைத் திட்டமானது "முழுச்சரீரமும்" "அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்கிரியைசெய்கிறபடியே" (எபேசியர்4:16) எனஎழுதப் பட்டுள்ளது. ஒரு ஆலயமானது கர்த்தா விரும்பும்படி இருக்க வேண்டுமானால், முழுச்சரீரத்தின்செயல்பாடும்மிகவும்முக்கியமானதாகும்!

நான் தொடங்கத் திட்டமிடாத ஆலயம்

வேதாகம கல்லூரியில் முதன்முறையாக நான் உரையாடிக் கொண்டிருந்தபோது, மிகஅடிப்படைநிலையிலிருந்து "ஒருவருக்கொருவர்" என்றஇவைகளைசெயல்படுத்தும்விதமாகஒருஆலயத்தைத்தொடங்குமாறு அவர்களில் அநேகர் கூறினா். முதலில், நான் தயங்கினேன், ஏறத்தாழ இருபது வருடங்களாக நான் பேராசிரியராக இருந்திருக்கிறேன். ஆனால் இந்த சவாலை நான் தீவிரமாக எடுத்துக்கொண்டதுடன் டல்லாசின் முதல் ஐக்கிய வேதாகம ஆலயத்தை உருவாக்க அநேக குடும்பங்களுக்கு உதவினேன். நான் போதகராக ஊழியம் செய்தேன். வருபவர்களின் எண்ணிக்கைஅதிகமாயிற்று, நான்மிகச்சீக்கிரமாகமுடிவெடுக்கவேண்டும் என்பதையும் அறிந்து கொண்டேன். அநேக முறை சிந்தித்த பிறகும், ஜெபித்தபிறகும், என்னுடையமுழுநேரபேராசிரியர்பணியைவிட்டுவிட்டு ஆலயங்களைஉருவாக்கும்முழுநேரபோதகரானேன். முதலாவதுஐக்கிய வேதாகமஆலயத்தை 1972இல்தொடங்கியதிலிருந்து, டல்லஸ்மாநகரத்தில் ஒரு டஜனுக்கும் மேற்பட்ட ஆலயங்களாக பெருகியதுடன் அமெரிக்க நாடுகள் முழுவதும் நூற்றுக்கணக்கான ஆலயங்களாகவும் மாறியது, போலந்து நாட்டு வார்சாவின் ஐக்கிய வேதாகம ஆலயத்தைப் போன்ற சபைகள் - வெளி நாடுகளிலும் கூட உருவாயின.

இப்பொழுது நான் டெக்சாசின், பிளானோவின் வடக்கு ஐக்கிய வேதாகமஆலயத்தில்போதகராய்இருக்கிறேன். இதனைநாங்கள் 1980இல் தொடங்கினோம் - இதுமிகவும்வேகமாய்வளரும்மிகப்பெரிய ஆலயமாக மாறியது. பிறகு 1997இல், டெக்சாசின், மார்க்கின்னியின் ஐக்கிய வேதாகம ஆலயத்தைத் தொடங்கினோம் - இது டல்லாஸ் மாநகரத்தின் வடக்காக தொலைதூரத்திலுள்ள இன்னொரு மிகப்பெரிய ஊழியத்தளமாகும்.

இத்தனை வருடங்களாக "ஆலயங்களை உருவாக்கிய அனுபவங்களைப் பார்க்கும் போது, "ஒருவருக்கொருவர்" என்பதைக் குறித்து வேதாகமம் என்ன கூறுகிறது என்பதை கிறிஸ்தவர்களுக்குப் போதிப்பதைத் தவிர வேறெந்த காரியங்களும் முக்கியமானவையல்ல

என்பதைக்கண்டுகொண்டேன். என்னுடையபிரசங்கஊழியத்திலும், எங்கள் ஒருமுகப்படுத்தும் வகுப்புகளிலும், எங்கள் தலைமத்துவ பயிற்சி நேரங்களின்போதும், சிறிய குழுக்களுக்கான (இதனை நாங்கள் சிறிய ஆலயங்கள் என அழைக்கிறோம்) ஊழியத்தின் போதும், இந்த மகத்தான வேதாகம உண்மைகளைக் குறித்து நான் பிரசங்கிக்கத் தொடங்கிய பிறகு, கிறிஸ்தவர்களுக்கு நடுவில் அதிகப்படியான "சரீர செயல்பாடுகளையும் ஒவ்வொருவரின்பங்கெடுப்புகளையும்" நான்கண்டேன். மேலும், இதற்கும் மேலான ஆவிக்குரிய வளர்ச்சியை நான் கண்டதில்லை. இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல, ஏனெனில், இதற்காகத்தான் இந்த ஆச்சரியமான அறிவுரைகளை எழுதும்படி, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களை பரிசுத்த ஆவியானவர் ஏவினார். இந்த "ஒருவருக்கொருவர்" வசனங்களை பிரசங்கங்களிலும் வேதாகம குழு ஆய்வுகளிலும் பயன்படுத்தியதால் தம் ஆலயங்களின் இயக்கம் முற்றிலும் மாறிவிட்டது என வருடக்கணக்காக, போதகர்கள், நேருக்குநேரும், கடிதங்கள் மூலமும், மீண்டும் மீண்டும் என்னிடம் கூறியுள்ளனர்.

புதிய பார்வைகள்

இந்த "ஒருவருக்கொருவரைக்" குறித்து வேதாகமத்தில் மீண்டும் நான்வாசித்தபோது, முன்புகாணாதஒன்றைக்கண்டேன். இதுவேதாகமத்தின் பிரமிக்கத்தக்க உண்மையாகும். நாம் படிக்க வேண்டியவை இன்னமும் அதிகம் உள்ளன -கர்த்தரின் வார்த்தையை எத்தனை முறை கவனமாக வாசித்திருக்கிறோம் மற்றும் படித்திருக்கிறோம் என்பது பொருட்டல்ல. கலாத்தியருக்கு பவுல் எழுதிய நிருபம் தான் முதலாவது நிருபமாக இருக்கவேண்டும், அவன் "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும்" என்றும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும்" என்றும் பவுல் எழுதினான்:

"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாத படிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது" (கலாத்தியர் 5:17).

இந்தஇடத்தில் "ஒருவருக்கொருவர்" அல்லது "ஒருவரையொருவர்" என்ற கருத்தை, "ஒருவருக்கொருவர்" வைத்திருக்கும் உறவுமுறையின் "பாவ சுபாவத்தைப்" பின்பற்றும் மக்களுக்கும் "நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்" (கலாத்தியர் 5:25) போன்றமக்களுக்கும்இடையேயானவேறுபாட்டைக்காட்டுவதற்காக, இந்த இடத்தில் "ஒருவருக்கொருவர்" அல்லது "ஒருவரையொருவர்" என்ற கருத்தை, பவுல் உபயோகித்தான். இந்த முழு வசனத்திலும், "பவுல் உறவு முறையினால் தான்" பேசுகிறான் - இங்கு தனிப்பட்ட மனோபாவங்களையும்செயல்பாடுகளையும்குறித்துஅவன்பேசவில்லை. இதனால்தான் கிறிஸ்தவர்கள் அல்லாதோரிடம் "ஆவிக்கு விரோதமாக" வெளிப்படுகிறதுஎனவும், கிறிஸ்தவர்கள்ஒருவருக்கொருவர்அவர்களிடம் சம்பந்தப்பட்டிருப்பதால் "மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பதை" பிரதிபலிக்கிறது எனவும் கூறுவதற்கு பவுல் பன்மையைக் குறிக்க கூடிய பெயர் சொற்களை உபயோகித்தான்.

புதிய ஏற்பாட்டில் "ஒருவருக்கொருவர்கள்" விளக்கப்பட்டிருக்கும் வழியைக்குறித்து மிகவும் ஆச்சரியமான இரண்டு கருத்துக்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. இவற்றை "மாம்சத்தின் கிரியைகள்" மற்றும் "ஆவியின் கனி" என்ற இரண்டு குழுக்களாகப் பிரிக்கலாம். இவர்கள் இப்படி இருக்கும்போது, இவைகள் ஒன்றுக்கொன்றுவிரோதமாயிருக்கின்றன

(கலாத்தியர் 5:17) என அவன் கூறிய போது, பவுலின் மனதில் என்ன இருந்தது என்பதை உடனடியாக நம்மால் காணமுடிகிறது.

"மாம்சத்தின் கிரியைகள்"

"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்றுமுன்னேநான்சொன்னதுபோலஇப்பொழுதும்உங்களுக்குச் சொல்லுகிறேன்." (கலாத்தியர் 5:19-21)

அநேக புதிய ஏற்பாட்டு நிருபங்களில் காணப்படும் எதிர்மறையான "ஒருவருக்கொருவர்" பட்டியல் கீழ்வருமாறு. பொதுவாக இவை தமிழ் வேதாகமத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் கூற்றுகளாகும். ஆயினும் இவைத் தெளிவாகவும் ஒத்தமுறையில் இருக்கும் விதமாக வசனங்கள் மாற்றியமைக்கப் பட்டிருக்கலாம். ஆனால் மூல வசனத்திலிருந்து பொருட்களை மாற்றி அமைக்கவில்லை. இந்த கூற்றுகள் பின்வருமாறு:

ஒருவர்மேலொருவர் விரகதாபம் [ரோமர் 1:27]
ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்த்தல் [ரோமர் 14:13]
ஒருவரைவிட்டு ஒருவர் பிரிதல் [1 கொரிந்தியர் 7:5]
ஒருவரையொருவர் கடித்தல் [கலாத்தியர் 5:15 முற்பகுதி]
ஒருவராலொருவர் அழிக்கப்பப்படுதல் [கலாத்தியர் 5:15 நடுப்பகுதி]
ஒருவராலொருவர் நாசமாக்கப்படுதல் [கலாத்தியர் 5:15 பிற்பகுதி]
ஒருவரையொருவர் கோபமூட்டுதல் [கலாத்தியர் 5:26 முற்பகுதி]
ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளுதல் [கலாத்தியர் 5:26 பிற்பகுதி]
ஒருவருக்கொருவர் பொய் சொல்லுதல் [கொலோசெயர் 3:9]
ஒருவரையொருவர் பகைத்தல் [தீத்து 3:3]
ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசுதல் [யாக்கோபு 4:11]
ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடுதல் [யாக்கோபு 5:9]

"ஆவியின் கனி"

"அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" [கலாத்தியர் 5:22-23]

கீழ்க்கண்ட கூற்றுக்களெல்லாம் சரியான "ஒருவருக்கொருவர்" அறிவுரைகளாகும். மீண்டுமாக, தெளிவாகவும் ஒத்தமுறையில் இருக்கும் விதமாகவும் வசனங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கலாம், ஆனால் ஒவ்வொன்றும், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கொண்டிருந்த பொருள்களையேபிரதிபலிக்கின்றன. இந்தஅறிவுரைகள் ஆவியின்கனியில் எப்படி பிரதிபலிக்கின்றன என்பதை பாருங்கள்:

ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருத்தல் [ரோமர் 12:5]
ஒருவர்மேலொருவர் பட்சமாயிருத்தல் [ரோமர் 12:10 முற்பகுதி]
ஒருவருக்கொருவர் கனம்பண்ணுதல் [ரோமர் 12:10 பிற்பகுதி]
ஒருவரோடொருவர்ஏகசிந்தையுள்ளவர்களாயிருத்தல்[ரோமர்12:16; 15:5]
ஒருவரிடத்திலொருவர் அன்புகூருதல் [ரோமர் 13:8; 1 தெசலோனிக்கேயர் 3:12; 4:9; 2 தெசலோனிக்கேயர் 1:3; எபிரெயர் 10:24; 1 பேதுரு 1:22; 1 யோவான் 3:11, 23; 4:7, 11, 12; 2 யோவான் 5]
ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுதல் [ரோமர் 15:7]
ஒருவருக்கொருவர் புத்திசொல்லுதல் [ரோமர் 15:14]
ஒருவரையொருவர் வாழ்த்துதல் [ரோமர் 16:16; 1 கொரிந்தியர் 16:20; 2 கொரிந்தியர் 13:12; 1 தெசலோனிக்கேயர் 5:26; 1 பேதுரு 5:14]
ஒருவருக்காக ஒருவர் காத்திருத்தல் [1கொரிந்தியர் 11:33]
ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருத்தல் [1கொரிந்தியர் 12:25]
ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்தல் [கலாத்தியர் 5:13]
ஒருவர் பாரத்தை ஒருவர் சுமத்தல் [கலாத்தியர் 6:2]
ஒருவரையொருவர்தாங்குதல்[எபேசியர்4:2; கொலோசெயர்3:13]
ஒருவருக்கொருவர் தயவாயிருங்கள் [எபேசியர் 4:32]
ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருத்தல் [எபேசியர் 5:21; 1 பேதுரு 5:5]
ஒருவரையொருவர்தங்களிலும்மேன்மையானவர்களாகஎண்ணுதல் [பிலிப்பியர் 2:3]
ஒருவரையொருவர் தேற்றுங்கள் [1தெசலோனிக்கேயர் 4:18; 5:11, 14]
குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுதல் [யாக்கோபு 5:16 முன்பகுதி]
ஒருவருக்காகஒருவர்ஜெபம்பண்ணுதல்[யாக்கோபு5:16பின்பகுதி]
ஒருவரையொருவர் உபசரித்தல் [1பேதுரு 4:9]
ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருத்தல் [1யோவான் 1:7]

வேதாகமகூற்றுகளின்இவ்விருபட்டியலிலும்இருந்துஒன்றுமிகவும் தெளிவாகிறது. "ஆவியின் கனியை" வெளிப்படுத்தும் ஆலயமானது கிறிஸ்துவின்சபையைக்கட்டும்"ஒருவருக்கொருவர்" என்றகட்டளையைக் கடைபபிடிக்கும் ஆலயமாயிருப்பதோடு, ஒரே மனம் மற்றும் ஐக்கியத்தை நோக்கியும் வழி நடத்துகிறது. "மாம்சத்தின் கிரியைகளை" பிரதிபலிக்கும் ஆலயமானது மனிததத்தனமானது. இவர்கள் கடைப்பிடிக்கும் "ஒருவருக்கொருவர்" என்பது ஆலயத்தை உலகப்படியாக வைத்திருப்பதுடன் ஐக்கியமில்லாமையும் இங்கு காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு உதாரணத்தைக்காட்டினால், இத்தகைய ஆலயத்தை "கொரிந்து ஆலயம்" [1கொரிந்தியர் 3:1-4] என அழைக்கலாம். கொரிந்து சபையின் விசுவாசிகள் கிறிஸ்தவர்களைப் போலில்லாமல், கிறிஸ்தவர்கள் அல்லாதோரைப்போன்றுசெயலாற்றியதாகபவுல்குறிப்பிடுவதைமேற்கோள் காட்டலாம். "நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?" [1 கொரிந்தியர் 3:3] என்ற கேள்வியை பவுல் கேட்டதின் பொருள் இதுதான்.

நம் தனிப்பட்ட பொறுப்புகள்

உங்களுடையமற்றும்என்னுடையஆலயமானதுஆவியின்கனியை பிரதிபலிக்கும் வளர்ச்சி பெற்ற விசுவாசிகளின் சரீரமாக மாற முடியுமா? இதற்கான பதில் வேதவசனங்களில் தெளிவாக இருக்கிறது. எல்லா விசுவாசிகளும் "ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்" [கலாத்தியர் 5:25]. கிறிஸ்துவின் சரீரத்தை அழித்து அதனைப் பிரிப்பதை [கலாத்தியர் 5:15] விடவும், அவரின் சரீரத்தை உருவாக்கும் [எபேசியர் 4:16] அறிவுரையைக் கடைப்பிடிப்பதன் மூலம், இதனைச்செய்யலாம். கர்த்தருடையவார்த்தைக்குநாம்கீழ்ப்படியவேண்டும். "நீங்கள் விரும்புவதைப்போல்," "உங்களுக்கு வசதிப்படுமானால்," "இது உங்களின் தன்மையானால்......" இந்த அறிவுரைகளை தகுதிப்படுத்த முடியாது. கர்த்தருடைய சித்தத்தை செய்வதற்கான ஒரு விளக்கத்தை இந்த அறிவுரைகள் உருவாக்குகின்றன. அனைத்து கிறிஸ்தவர்களையும் இதில் பங்கு பெற செய்யவேண்டும். இந்த நேரிடையான "ஒருவருக்கொருவர்" கட்டளைகளை நம்முடைய சொந்த வாழ்வில் கடைப்பிடிப்பதற்கான வாய்ப்புகளை எதிர்பார்த்திருக்க நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அதேநேரத்தில் எதிர்மறையான "ஒருவருக்கொருவரை" கடைப்பிடிப்பதை தவிர்க்கவேண்டும். இதுவே அன்பின் சாராம்சமாகும்!

பரிசுத்த ஆவியானவரால் வல்லமையடைதல்

வேதாகமத்தில் குறிப்பிடப் பட்டுள்ள நேரிடையான "ஒருவருக்கொருவரை" கடைப்பிடிப்பது எல்லா விசுவாசிகளினதும் பொறுப்பாய் இருக்கிறது என்பது உண்மையாகும். இயேசு கிறிஸ்துவை நாம் விசுவாசித்து, "ஒருவரை ஒருவரும்" நாம் நேசித்தால், கர்த்தருடைய வார்த்தைக்குநாம்கீழ்ப்படிந்தவர்களாவோம்[யோவான்15:10;1யோவான் 5:3]. ஆயினும் கூட இது மனிதர்களின் செயலாகும், இதனை அவர்கள் தம் விருப்பத்தின் படிச் செய்யவேண்டும். இது தெய்வீகமான ஒன்று, இங்கு கர்த்தரின் இயற்கைக்கும் மேற்பட்ட வல்லமையை விசுவாசிகள் பெறவேண்டும்.

முதலாவதாக, இயேசு நம்மனைவருக்காகவும் ஜெபித்தார் - இது அவர் நம்மை நேசித்ததைப்போல் ஒருவருக்கொருவர் நாம் நேசிக்கும் திறமையையும்நிச்சயமாய்உள்ளடக்கியுள்ளது.[யோவான்13:34].யோவான் 17 இலுள்ள பெரிதான ஜெபத்துடனே "ஒருவருக்கொருவர்" என்ற கட்டளையை இயேசு பின்பற்றினார், அதில் பின்வரும் வேண்டுகோளும் இருக்கிறது:

> நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக் காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். [யோவான் 17:20-21].

எபேசிய கிறிஸ்தவர்களுக்கான தன்னுடைய ஜெபத்தில், இந்த இயற்கைக்கும் மேலான செயல்பாடை பவுலும் உங்களுடைய மற்றும் என்னுடைய ஆலயங்களுக்கும் பொருத்தமான இந்த ஜெபமானது முழுசரீரத்திற்கானது என்பதையும் கவனியுங்கள். இந்தக் குறிப்பிற்கு

பவுல் மீண்டும் பன்மையின் பெயர்ச்சொற்களை பயன்படுத்தியுள்ளான்:

> நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப்பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்றுஉணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். [எபேசியர் 3:16-19].

"வல்லவர்களாகவும்.... நிறையப்படவும், மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே," [3:19] இந்தவிசுவாசிகள் இருக்கவேண்டுமென்பதே பவுலின் ஜெபத்தின் குறிக்கோளாகும். இந்தசிறியகூற்றுகளானது "ஆவியின் கனிகளை" சுருக்கமாக கூறுகின்றன -இது கர்த்தரின் பன்புகளைப் பிரதிபலிக்கும்- அவையாவன "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலாத்தியர் 5:22).

பவுல் இந்த ஜெபத்தை மிகப்பெரும் சொற்களால் உருவாக்கினான். இந்த வல்லமை மிக்க வசனங்களை பெரிய விளம்பரப்பலகைகளில் எழுதி நம் சொந்த ஆலயத்திற்கு முன்னால் வைத்திருக்கிறோம். கர்த்தருடைய தெய்வீக உதவியினால், சிறந்த "ஒருவருக்கொருவரை" நம்மால் கடைப்பிடிக்கமுடியுமெனகுறைந்ததுவாரத்திற்கொருமுறைஇவ்வசனங்கள் நமக்கு தெரிவிக்கின்றன:

> நாம்வேண்டிக்கொள்ளுகிறதற்கும்நினைக்கிறதற்கும்மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். [எபேசியர் 3:20-21].

எபேசியர் 3 இலுள்ள பவுலின் ஜெபம், மற்றும் 4 ஆம் அதிகாரத்தில் உள்ள சரீரத்தின் செயல்பாட்டைக் குறித்த அவனின் குறிப்புகள் ஆகியவற்றை பின்னனியாகக் கொண்டு, "ஆவியால் நிரம்புங்கள்" என்று இந்த விசுவாசிகள் பவுல் 5 ஆம் அதிகாரத்தில் உற்சாகப்படுத்தும் போது எந்த பொருளைக் கொண்டிருந்தான் என்பதை இன்னமும் முழுமையாக நம்மால் புரிந்து கொள்ள முடியும். இது முழு அமைப்புக்குமான கொள்கை என்பதையும், இது முழு எபேசு சபைக்கும் கூறப்பட்டது என்பதையும் மீண்டும் கவனியுங்கள்:

> துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால்நிறைந்து; சங்கீதங்களினாலும்கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர்[1] புத்திசொல்லிக் கொண்டு, உங்கள்இருதயத்தில்கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து. [எபேசியர் 5:18-20].

---

[1] இந்த அறிவுரையில் "ஒருவருக்கொருவர்" என்பது கிரேக்கமொழியில் 'ஹீடு' ஆகும். இதற்கும் அல்லேலன் என்பதற்கும் அடிப்படைப் பொருள் ஒன்றே. [காண்க: எபேசியர் 4:32; கொலோசெயர் 3:13, 16; எபிரெயர் 3:13; 1 பேதுரு 4:8]

இந்த ஆய்வானது தனிப்பட்ட முறையில் என்னை பாதித்ததையும், கடந்த பல ஆண்டுகளாக நான் ஊழியம் செய்த மக்களையும் பாதித்ததைப் போல, உங்கள் வாழ்வையும் உங்கள் ஆலயத்தின் வாழ்வையும் இது மாற்ற வேண்டுமென்பது உங்களுக்கான எனது தனிப்பட்ட ஜெபமாகும். கர்த்தருடைய வார்த்தையைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு, உங்களுக்கு வல்லமை அளிக்க வேண்டுமென பரிசுத்த ஆவியானவரை சார்ந்திருந்தால், அப்படி நடக்குமென உறுதி கூறுகிறேன்!

குழுத்தலைவர்களுக்கான ஆலோசனைகள்

ஒரு சிறுகுழுவின் அமைப்பில் இந்த புத்தகத்தை உபயோகிக்கும் முன்னால், நீங்கள் செய்யவேண்டிய சிலவற்றை ஆலோசனையாக வழங்குகிறேன்:

1.பவுல் "ஆவியின் கனிகள்" எனவும் "மாம்சத்தின் கிரியைகள்" எனவும் [கலாத்தியர் 5:19-22] அழைத்தவைகளை புதிய ஏற்பாட்டின் "ஒருவருக்கொருவர்" என்ற அறிவுரைகளில் எப்படிக் குழுப்படுத்தலாம் என்பதைக் காட்ட, சிறிய துண்டுபிரதிகளையோ, கருத்தரங்க ஒளிப்படங்களையோ உபயோகப் படுத்துங்கள்.

2. இந்த புத்தகத்தில் ஆழமான ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட "ஒருவருக்கொருவர்" அறிவுரைகள் எப்படி அடிப்படையாக இருக்கின்றன என்பதைக் காட்டுங்கள், உதாரணமாக, இந்நூலின் முதல் ஏழு அதிகாரங்களும், பவுல் ரோமர் 12-10 இல் கூறிய "ஒருவருக்கொருவர்" என்பதினைப் பின்பற்றுகின்றன - ரோமர் அதிகாரங்களான 1-11 இல் இவை விளக்கப்பட்டுள்ளன.

கர்த்தரின் கிருபை மற்றும் இரக்கத்தின் படி கிறிஸ்தவர்கள் எப்படி வாழ வேண்டும் என இந்நிருபத்தின் ஒரு பகுதி தெளிவாக வரையறுக்கிறது. இது மிகவும் முக்கியமானது, ஏனெனில் பவுல் எழுதிய நிருபங்களிலே இதுவே மிக விரிவானதும், பொதுவானதுமாகும். ஒரு ஆலயம் வளர்ச்சி பெற்றதாய் இருக்க ஒரு ஆலயம் தெரிந்துக் கொள்ளவேண்டிய அனைத்தையும் ரோமர் உள்ளடக்கியுள்ளது என்பது சாராம்சமாகும். கீழே வருபவைகள் வரிசையாக இருக்கின்றன:

நாம் "ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்க" வேண்டும் [ரோமர் 12:5].
நாம் "ஒருவர்மேலொருவர் பட்சமாயிருக்க" வேண்டும் ரோமர் 12:10 முன்பகுதி].
நாம் "ஒருவருக்கொருவர் கனம்பண்ண" வேண்டும் [ரோமர் 12:10 பின்பகுதி].
நாம் "ஒருவருக்கொருவர் ஒருமனப்பட்டிருக்க" வேண்டும் [ரோமர் 15:5].
நாம் "ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ள" வேண்டும் [ரோமர் 15:7].
நாம் "ஒருவருக்கொருவர் புத்திசொல்ல" வேண்டும் [ரோமர் 15:14].
நாம் "ஒருவரையொருவர் வாழ்த்த" வேண்டும் [ரோமர் 16:16].

3. சிறிது நேரத்தை ஜெபத்தில் செலவிடுங்கள். இந்த அறிவுரைகளை ஒவ்வொரு உறுப்பினரும் புரிந்துகொள்ளும் படி அவர்களை ஞானவான்களாக்கவும், இவற்றை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வல்லமையுள்ளவர்களாக்கும்படியும் பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள் இது இக்குழு செயல்பாட்டின் தொடக்கமாக இருக்கட்டும்.

4. எபேசியர் 3:20-21 இல் உள்ள பவுலின் ஆச்சரியமான ஜெபத்தினைப் பிரதிபலித்து கூட்டத்தை நிறைவு செய்யுங்கள்.

- டாக்டர் ஜீன் ஏ. கெட்ஸ்
மூத்த போதகர்
வடக்கு பிளானோவின் ஐக்கிய வேதாகம ஆலயம்
டெக்சாஸ்



அத்தியாயம் ஒன்று

ஒருவருக்கொருவரின் உறுப்பினர்கள்

அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவா அவயவங்களாயிருக்கிறோம். ரோமர் 12:5

ஒரு குறிப்பிட்ட சமயத்தில், தேசிய கால்பந்தாட்டப் போட்டியை பார்த்து கொண்டிருந்ததை நன்றாக நினைவில் வைத்திருக்கிறேன். மியாமி டால்ஃபீன்கள் டல்லாஸ் கவ்பாய்களுடன் போட்டியிட்டனர். இரண்டு குழுக்களும் அதிக புள்ளிகளை பெற விரும்பியதால், போட்டி மிகவும் கடுமையாகநிலவியது.கவ்பாய்கள்தொடக்கத்திலிருந்தேமுன்னேற்றத்துடன் விளையாடி, ஆட்டம் முழுவதும் முன்னனியில் இருந்தனர்.

ஆனால் திடீரென மியாமியின் குழுவிற்குள் ஏதோ நடந்தது. டான் மரினோவின்தலைமையிலானடால்ஃபின்கள்திடீரெனஉத்வேகம்பெற்று, பந்தை திறம் பட உதைக்கத் தொடங்கினர். ஒரு உணர்த்துதலுடனும், பிரகாசததுடனும் கலந்தவர்களாய் சிறந்தொரு கருவியைப் போல் விளையாடினா. இதனால் புள்ளிகள் உயரலாயின. அவர்களின் ஐக்கியம் புல்லரிக்கசசெய்தது! ஒவ்வொரு கால்பந்தாட்ட வீரரும் தன் பங்கை நிறைவேற்றினர். ஒருவரும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கடமையைச் செய்யத்தவறவில்லை.

நான்ஒருகால்பந்தாட்டதீர்க்கதரிசிஅல்லஅல்லதுஅத்தகையவரின் "மகனும்" அல்ல ஆனால் அப்போட்டியின் முடிவு எப்படி இருக்கப் போகிறதுஎன்பதைகூறத்தொடங்கினேன்.அங்குஉங்களால்ஏதோஒன்றை அறியவும் உணரவும் முடியும். டால்ஃபின்கள் நிறுத்த முடியாதவாகளாய் காணப்பட்டனர். கடைசி சில நொடிகளில் அவர்கள் மூன்று புள்ளிகளைப் பெற்று இப்போட்டியில் வென்றது இன்னமும் என் மனதில் இருக்கின்றது.

ஐக்கியத்தில் வலிமை இருக்கிறது-அது விளையாட்டு போட்டிகள் போன்ற மனித செயல்பாடுகளிலும் இருக்கிறது. இத்தகைய முயற்சிகள் பரிசுத்தஆவியானவரால்அதிகாரமும்வல்லமையும்அளிக்கப்பட்டிருந்தால் என்னவாகியிருக்கும் என்பதை யோசித்து பாருங்கள். தான் தன்னுடைய பிதாவுடனேஐக்கியமாயிருப்பதைப்போல்தன்சரீரத்தில்உள்ளஉறுப்புகளும் ஒன்றாக இருக்கவேண்டுமென (யோவான் 17:20-23) இயேசு ஜெபித்த போது அவா மனதில் இருந்தது அதுதான்! இது இயேசுவின் சரீரத்தில் அன்பினால்மட்டுமகட்டப்படுவதன்றி,உலகிற்குஒருசிறந்தசாட்சியாகவும்

இருப்பதற்கான மிக முக்கியமான காரியமாகும். இத்தகைய ஐக்கியம் சாத்தானைதோற்கடிக்கிறது! 'அன்பினால்சத்தியத்தைபேசும்' (எபேசியர் 4:15) அதே நேரம் "இருதயத்தை மனதாலும்" (அப்போஸ்தலர் 4:32) ஒருமைப்பட்டிருப்பதைவெளிக்காட்டியவாறுஒருஆலயம்அணிவகுத்துச் செல்லும் போது அவனுக்கு வல்லமை இருக்காது.

செயல்படும் உவமைகள்

ஆலயத்தை விளக்குவதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் பல்வேறு உவமைகளைக்கூறுகிறான்.கொரிந்தியருக்குஎழுதியநிருபத்தில் '*விவசாய*' உவமையை அவன் கூறினான், "நீங்கள் தேவனுடைய *பண்ணையும்*.." (1 கொரிந்தியர் 3:5-9) என அவன் எழுதினான். இந்த உவமையானது இயேசுகூறியவிதைவிதைப்பவனின்உவமையை(மத்தேயு13:1-23;மாற்கு 4:1-20 லூக்கா 8:4-15) ஒத்திருக்கிறது.

இதே பொருளை தரும்பொருட்டு, '*கட்டுமான*' உவமையையும் பவுல் கூறுகிறான். "தேவனுடைய *மாளி*கையுமாயிருக்கிறீர்கள்" (1கொரிந்தியர் 3:9) என கொரிந்தியரை அவன் குறிப்பிடுகிறான். அவன் மேலும் கூறினான், "அஸ்திபாரம்போட்டேன்..... போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை" மேலும் மற்ற ஆவிக்குரியத் தலைவர்களும் இந்த அதிகாரத்தில் கட்டப்பட்டார்கள் (3:10-11).

அதன் பிறகு உடற்கூற்று உவமையை உபயோகித்தான். இது ஆலயத்தைக்குறித்த மிகவும் சிறப்பான அவனின் விளக்கச்சித்திரமாகும், இதுபுதியஏற்பாட்டில்அவனால்மட்டுமேபயன்படுத்தப்பட்டது. கர்த்தரின் மக்களை"கிறிஸ்துவின்சரீரமாகவே"பவுல்கருதினான்.ரோமர்,கொரிந்தியர், எபேசியர் மற்றும் கொலோசெயர் ஆகியோருக்கு எழுதிய நிருபங்களில் "சோமா" என்ற வார்த்தையைக் குறிப்பிட்டான். இது சரீரம் என மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இது ஆலயம் செயல்படுவதைக் குறிப்பிடுவதற்காக முப்பது முறைகளுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ பதினைந்து முறைகள், மனிதர்களின் சரீரத்தையும் அதன் அவயங்களையும், உறுப்புகளையும் அவன் குறிப்பிட்டுள்ளான். மற்ற பதினைந்து முறை, ஆலயத்தினைக் குறிப்பிட அச்சொல்லை உபயோகப்படுத்துகிறான் - இது கிறிஸ்துவின் சரிரமாகும்.

"சரீரம்" என்ற ஒப்புவமை

கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் மனித சரீரத்தைக் குறித்த அநேகஒப்புவமைகள்பவுலினால்மிகஅதிகமாகஉபயோகிக்கப்பட்டுள்ளது, இதற்கு காரணம் அவர்களின் மனிதத்தன்மையும், வளர்ச்சி அடையாத நிலமையுமாகும், குறிப்பாக அவர்களின் நடுவில் ஐக்கியமின்மையும் பிரிவினைகளும்நிலவின(1கொரிந்தியர்1:10;3:1-4).மனதளவில்அவர்கள் சிறுபிள்ளைகளாய் இருந்ததினால், மனித சரீரத்திற்கும் (ஆலயமாகிய) கிறிஸ்துவின் சரீரத்திற்கும் உள்ள ஒற்றுமைகளைத் தெளிவாகவும் கவனமாகவும் கூற ஒரு சிறப்பு முயற்சியினை மேற்கொண்டான். மிகவும் விரிவானஇரண்டுபந்திகளில்,மனிதசரீரம்எப்படிஇயங்குகிறதுஎன்பதைத் தெளிவாகக் காட்டுவதற்கு "*சோமா*" என்ற கிரேக்க வார்த்தையை பதினான்குமுறை கூறியுள்ளான். பவுல் தான் கூறுவதை இழக்க விரும்பவில்லை!ஆவிக்குரியசத்தியங்களைப்பற்றிக்கொள்ளஅவர்களால் முடியாதிருப்பதை அவன் முன்னதாக கண்டதாலும், "திட உணவை" அவர்களால் இன்னமும் உண்ண முடியாததாலும் (1 கொரிந்தியர் 3:1-2) எந்த ஒரு வளர்ச்சியும் இல்லாதவர்களானதாலும் அவன் கூறுவதைத்

தெளிவாக புரிந்துக் கொள்ளும் விதமாக, தெளிவாகக் கூறுவது என்று அவன் முடிவு செய்தான்.

சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களை உடையதாயிருக்கிறது. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அயவமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே? தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே? அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே. கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டு வதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது. சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப் படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்; நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை. சரீரத்திலே பிரிவினை யுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்றுகவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். (1 கொரிந்தியர் 12:14-16).

எவ்வித வளர்ச்சியும் அடையாத கிறிஸ்தவ கொரிந்தியர்களாலும் பவுலின் செய்தியை தவறவிடமுடியாது. கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவரின் உறுப்பினர்கள்" என்பது அவனின் செயல்படுத்தும் கருத்தாகும். இதனால் அவன் நீளமான, விளக்கமான வசனங்களால் முடிவு செய்கிறான். மேலும் சுருக்கமான கூற்றினாலும், செயல்பாட்டினாலும் அதனை முடிவு செய்கிறான்: "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், *தனித்தனியே* அவயவங்களாயுமிருக்கிறீர்கள்." (1 கொரிந்தியர் 12:27).

ரோமருக்கு பவுல் எழுதிய போது சரீரத்தைக் குறித்த உவமையை அவர்கள் புரிந்துக்கொண்டனர் என அவன் கருதினான்-ஏனெனில் இந்த கிறிஸ்தவர்கள் கொரிந்தியர்களை விட மிகவும் வளர்ச்சியடைந்தவர்களாய் இருந்தனர். இதன் பலனாக நேரடியாக அந்த ஒப்புவமையைக் கூறி நேரடியாகத் தன் கருத்தைக் கூறத்தொடங்கினான்.

உவமை

ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல (ரோமர் 12:4)

செயல்படுத்தல்

"அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்." (ரோமர் 12:5)

மூன்று முக்கிய உண்மைகள்

இந்த வசனங்களில் மூன்று முக்கியக் கொள்கைகளைப் பவுல் குறிப்பிடுகிறான்,அதுஅவன்எழுதியகாலத்தைப்போன்றேஇக்காலத்திற்கும் பொருத்தமானது.

1. ஒருவரை ஒருவர் சார்ந்திருத்தல் ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனால் தனியாக இருந்தும், பிரிந்திருந்தும் சிறப்பாக செயல்படமுடியாது.

என்னுடைய ஆர்வமுள்ள விளையாட்டுக்களில் ராக்கெட் பாலும்அடங்கும்."சரீரமுயற்சிஅற்பபிரயோஜனமுள்ளது"(1தீமோத்தேயு 4:8)என்பதைநினைவுபடுத்தி,ஒவ்வொருநாளும்விளையாடமுயன்றேன். ஆயினும் இந்த விளையாட்டில் போட்டியிடவேண்டுமென்றால் ஒரு ஒருங்கமைப்பை வளர்ப்பது முக்கியமென்பதையும் நான் கண்டுக்கொண்டேன்.நம்சரீரத்தின்ஒவ்வொருபாகமும்"ஒன்றாகவேலை செய்தால்" இப்போட்டியை மிகவும் வேகமானதாக்கும். முக்கியமாக கண், கைஒருங்கிணைவில்இதுஉண்மையாகும்.அடுத்துஎன்னநிகழப்போகிறது என்றுஎதிர்பார்க்கும்திறமையும்,உங்கள்எதிர்போட்டியாளர்பந்தைஉங்களை நோக்கி எறிவதற்கு முன்னதாக அப்பந்து வீசப்படும் இடத்தில் நீங்கள் நிற்பதையும், இந்த விளையாட்டு எதிர்பார்க்கிறது!

நம்மைத்தனிப்பட்டவர்களாய்செயல்படுத்தஏதுவாக்கும்மனிதர்கள் உருவாவதற்கு "ஒருசரீரத்தில்" பல்வேறுஉருப்புகள்இருப்பதைப்போன்று கிறிஸ்துவின்சரீரமாகியஆலயமானதுஅநேகதனிப்பட்டஉறுப்பினர்களால் அமைந்தது. குறிப்பாக கூறினால் நான் "ஒருவருக்கொருவரின் உறுப்பினர்கள்" கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எந்த ஒரு உறுப்பினாரலும் "உன் உதவி எனக்கு தேவை இல்லை" எனக்கூறமுடியாது. நமக்கு அனைவரும் தேவை. ஆவிக்குரிய உலகில் நம் எதிரியுடனான போரில் நாம் வெல்லவேண்டுமானால், நாம் செயல்படும் அமைப்பாக செயல்பட வேண்டும். ஒருவரை ஒருவர் சார்ந்திருத்தலும், ஒருங்கிசைவும் மிகவும் அவசியமானவை.

2. தாழ்மை: கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள மற்றெந்த உறுப்பினர்களையும் விட தான் முக்கியமானவன் என எந்த உறுப்பினரும் எண்ணக்கூடாது.

கர்த்தருடையகிருபையானதுஎந்தவொருகிறிஸ்தவனின்தனிப்பட்ட உரிமையுமல்ல. உடல் இயங்குவதைக் குறித்த வசனங்களின் முக்கியமான பவுலின்போதனைஇதுவேயாகும்அவன்வலியுறுத்தியதுதாழ்மையாகும்! கொரிந்தியரின் எல்லா வசனங்களிலும் இது எழுதப்பட்டிருந்தாலும் (சில கொரிந்தியர்கள் "நீ எனக்குத் தேவையில்லை" என்றும் "நான் உன்னை விட முக்கியமானவன்" எனவும் கூறினர்). இதனையொத்த இன்னொரு வசனத்தில் (ரோமருக்கு எழுதின நிருபத்தில்) பவுல் இதனை இன்னமும் தெளிவுப்படுத்துகிறான்:

"அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான்சொல்லுகிறதாவது;உங்களில்எவனானாலும்தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணினால், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்." (ரோமர் 12:3)

பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்திலும் இதுவே காணப்படுகிறது. வரங்கள் எதற்காக அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை உரையாடுவதற்கான தளத்தை ஏற்படுத்தி (எபேசியர் 4:11-12 இல் எழுதப்பட்டிருப்பதைப் போன்று) பவுல் தொடர்ந்து எழுதினான், "மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி" (எபேசியர் 4:2).

இந்த வசனத்தில் தாழ்மை, சாந்தம், பொறுமை ஆகியவற்றை பவுல் ஏன் வலியுறுத்துகிறான்? ஏனெனில் அவன் தொடர்ந்து எழுதுகிறான், "ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு" (எபேசியர் 4:4). அடிப்படையில் பார்க்கும்போது இதனைத் தான் அவன் கொரிந்தியருக்கு கூறினான்; "எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு" (1 கொரிந்தியர் 12:13). வேறு வார்த்தையில் கூறினால், கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள எந்தவொரு உறுப்பினரும் ஒருவருக்கொருவர் உயர்ந்தவரில்லை. ஒரு நபருக்கு பொறுப்பான இடமளிக்கப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய பார்வையில் குறிப்பிடப்படாத எந்த ஒரு உறுப்பினரும் கூட கிறிஸ்துவின் சரீரத்தைப் போன்று முக்கியமானவர்களே.

தேசிய கால்பந்தாட்ட போட்டியில் எப்போதும் ஓடும் மிகப்பெரும் வீரர் கால்வின் ஹில் ஆவார். ஆயினும் அவருக்கும் ஒரு வலிமைக் குன்றிய உறுப்பு இருந்தது - அது கால் பெருவிரலாகும்! அவருடைய கம்பீரமான சரீரத்துடன் ஒப்பிடுகையில் அது கவரக்கூடியதாகவும் அழகாகவும் இல்லாவிட்டாலும், அந்த பெருவிரலில் காயம் ஏற்பட்டபோது, முன்பைப்போல் அவரால் ஓடமுடியவில்லை. அவருடைய வேலையைச் செய்வதற்கு, அவர் சரீரத்தின் இந்த உறுப்பு குணமடைவதற்காக காத்திருந்தார்.

கிறிஸ்துவின் சரீரமாகிய ஆலயத்திலும் கூட அப்படித்தான் இருக்கிறது. பவுல் கொரிந்தியருக்கு நிருபம் எழுதியபோது இந்த கருத்தை மிகவும் வலியுறுத்தினான்:

> "சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்" (1 கொரிந்தியர் 12:22-23)

3. ஐக்கியம்: கிறிஸ்துவின் சரீரத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்த ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் கடுமையாக உழைக்கவேண்டும்.

இதனால்தான் "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்." (1 கொரிந்தியர் 1:10) என கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தின் தொடக்கத்திலேயே பவுல் எழுதினான். மேலும் இதனால்தான் சரீர செயல்பாடுகளை விளக்குகையில் இதே வசனங்களை பவுல் எபேசியருக்கும் எழுதினான்: "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (எபேசியர் 4:3). இதே கருத்தை வலியுறுத்தி ரோமர்களுக்கும் அவன் எழுதினான் ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய

பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்" (ரோமர் 14:19). வேறுவகையாக கூறினால், "ஒருவரை ஒருவர் உருவாக்குவதற்கு" எதனை எல்லாம் செய்யவேண்டுமோ, அதனை செய்யும்படி கிறிஸ்தவர்களுக்கு பவுல் அறிவுரை கூறினான்.

ஆவிக்குரிய வரங்கள்

ஆவிக்குரியவரங்களைக்குறித்துவளர்ந்தகிறிஸ்தவர்களின்நடுவில் வெவ்வேறு கருத்துக்கள் இருக்கின்றன - அவை எத்தனை இருக்கின்றன, அவற்றை அறிந்துக் கொள்வது எப்படி மற்றும் அவற்றை எப்படி பயன்படுத்துவது ஆகியவை அவையாகும். "வரங்களை குறித்த வசனங்களை" தவறாகவிளக்குவதேஇந்தகுழப்பங்களுக்கானமுக்கியமான காரணம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். கிறிஸ்துவின் சரீரத்தின்[1] உறுப்பினர்களாக நாம் இயங்குவதற்கு தனிப்பட்டவர்களாகிய நாம் நம் வரங்களைத் தேடி அதனைக் கண்டுபிடிக்க வேண்டியதில்லை என்பதை இந்த ஆவிக்குரிய எழுத்துக்கள் கூறுகின்றன என்பது உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கலாம் மாறாக கிறிஸ்துவின் சரீரத்தை சரியான மன நிலையுடன் கட்டுவதற்கு வரங்களையும் திறமைகளையும் நாம் பயன்படுத்தவேண்டும். வரங்கள் இருப்பதையும் இவை ஒவ்வொருவருக்குமானது என்பதையும் பவுல் அறிந்துக் கொண்டான்.

வேதாகம வலியுறுத்தல்

இரண்டு முக்கியமான சத்தியங்களை வேதாகம எழுத்தாளர்கள் வலியுறுத்துகின்றனர். தனிப்பட்ட முறையிலும், குழுவான வகையிலும் வளரவேண்டுமெனமீண்டும்மீண்டும்நாம்கூறப்பட்டுள்ளோம். குழுவான வகை வளர்ச்சியில் விசுவாசத்தின் அளவு, நம்பிக்கை, மற்றும் அன்பு ஆகியவை எதிரொளிக்கின்றன - ஆனால் மிகக்குறிப்பாக அன்பு எந்த ஒரு உள்ளூர் ஆலயத்திலும் வளர்க்கக் கூடிய ஒன்று. இதனால் தான் 1 கொரிந்தியர் 13இல் பவுல் முடிவு செய்கிறான்: "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது" (1 கொரிந்தியர் 13:13). இதனால் தான் அவர்களின் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றிற்காக கர்த்தருக்கு நன்றி கூறி வெவ்வேறு ஆலயங்களுக்கான தன் நிருபத்தின் அறிமுகத்தில் அடிக்கடி அவன் எழுதினான். உதாரணமாக, தெசலோனிக்கேயருக்கு அவன் இவ்வாறு எழுதினான்.

---

[1] ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆவிக்குரிய வரங்களைக் கண்டுப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டுமென போதிப்பதற்கு 1 கொரிந்தியர் 14:1 ஐ சில கிறிஸ்தவர்கள் பயன்படுத்துகின்றனர். ஆனால்இந்தவசனங்களையும்அவைக்கூறப்பட்டஇடங்களையும் காணும்போது, பவுல் போதித்த போதனைகள் இவையல்ல என்பதை குறிப்பிடுக்கின்றன. கொரிந்தியருக்கு எழுதிய இப்பகுதியின் எல்லாப் பகுதிகளிலும் தனிப்பட்டவர்களுக்கு தன் அறிவுரைகளை பவுல் கூறாமல் - கொரிந்திய விசுவாசிகளின் குழுவான சரீரத்திற்கே இதனைக்கூறுகிறான். கிரேக்கமொழியின் இரண்டாம்நபர் பன்மையில் இவ்வார்த்தையை குறிப்பிடுகிறான்: "விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்" (1 கொரிந்தியர் 14:1). வேறு வார்த்தைகளில் கூறினால், மிகப்பெரிய வரங்கள் அவர்கள் நடுவில் அறிவிக்கப்பட்டிருக்கிறது எனவும், சிறிதான வரங்கள் அல்லவென்றும் பவுல் கொரிந்தியர்களிடம் கூறுகிறான். அப்போஸ்தலராதல், தீர்க்கதரிசனம்போதனைகள் ஆகிய "பெரிதான வரங்களை" கவனிக்காது சாதாரண வரங்களுக்கு கொரிந்திய விசுவாசிகளில் சிலர் முக்கியகவனத்தைக்கொண்டிருப்பதுதெளிவாகத்தெரிகிறது. (காண்க: 1 கொரிந்தியர் 12:28-31). இந்நிலையானது பெருமைப் பாராட்டுதலுக்கும், எல்லையில்லா பிரிவினை களுக்கும் ஒத்துக்கொள்ளாதமைக்கும் வழி நடத்துகிறது.

தேவனுக்குப்பிரியமானசகோதரரே, உங்கள்விசுவாசத்தின் கிரியையையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தருடையஇயேசுகிறிஸ்துவின்மேலுள்ளஉங்கள்நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து, நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து, எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்." (1 தெசலோனிக்கேயர் 1:2-4); மேலும் காணவும் 2 தெசலோனிக்கேயர் 1:3-4; எபேசியர் 1:15-18; கொலோசெயர் 1:3-5)

1 தீமோத்தேயு 3 ஆம் அதிகாரம் மற்றும் தீத்து 1 ஆம் அதிகாரம் ஆகியவற்றில் பவுல் கோடிட்டு காட்டிய குணநலன்களில் தன்மையின் வளர்ச்சி காணப்படுகிறது: அவை எல்லாவற்றிக்கும் மேலானதும் நல்லொழுக்கம் உடையதும், அமைதியானதும், சிறந்ததும், மரியாதைக்கொடுக்ககூடியதும், விருந்தோம்பக் கூடியதும், போதிக்கக்கூடியதும்,[2] மதுப்பானத்திற்கு அடிமையாகாததும், சுயசித்தத்தை சாராததும், சீக்கிரமாக கோபம் கொள்ளாததும், குறைக் கூறமுடியாததும், நற்குணம் உடையதும், பண ஆசை இல்லாததும், குடும்பத்தை நன்கு வழிநடத்தக்கூடியதும், கிறிஸ்தவர்கள் அல்லாதோராலும் மதிக்கப்படக்கூடியதாயும், நன்மையை விரும்புகிறதாயும், நீதியாயும், அர்ப்பணம் உடையதாயும் உள்ள மனிதராக இருக்கவேண்டும். (1 தீமோத்தேயு3:1-13;தீத்து1:5-9). இவைஆவிக்குரியதலைவராகியவர்களின் குணநலன்களாக இவற்றை பட்டியலிட்டிருந்த போதிலும், அவை புதிய ஏற்பாடு முழுமையிலும் விளக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ வளர்ச்சிக்கான யதார்த்தமான விளக்கமாகும். ஆவிக்குரிய தலைவராக யாராவது விரும்பினால் அது அதிசயமான இலக்கு என பவுல் கூறுகிறான். ஆயினும் அந்நபர் தான் வளர்ச்சி அடைந்த கிறிஸ்தவன் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு வளர்ச்சியடைந்த விசுவாசியின் குணநலன்கள் எப்படி இருக்கவேண்டும் என பவுல் விவரிக்கிறான்.[3]

ஒரு சுய அனுபவம்

நான் ஏற்கெனவே ஆலயம் நிறுவுதலைப் பற்றி என்னுடைய சில அனுபவங்களை பகிர்ந்துள்ளேன், இவை வேதாகமம் அந்த பாடத்தைப்

---

[2] "கற்பிக்க முடிந்தது" என்று 1 தீமோத்தேயு 3 குறிப்பிட்டுள்ளதை கற்பிப்பதின் வரம் என்று சிலர் விளக்கியுள்ளனர். ஆனாலும் கூட கற்பிக்க முடிந்தது என்று மொழிப்பெயர்க்கப்பட்ட வார்த்தையை உண்மையான புத்தகத்தில் கவனமாக பார்க்கும் பொழுது, கூடவே பவுல் அதை 1 தீமோத்தேயு 3:2 இலும், 2 தீமோத்தேயு 2:24 இலும் பயன்படுத்தியுள்ளது, பவுல் வாழ்க்கையின் தரத்தைப் பற்றி பேசிக்கொண்டிருந்தானே தவிர ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் திறமையைக் குறித்தோ ஒரு குறிப்பிட்ட திறமையைக் குறித்தோ பேசவில்லை என்பதைத் தெளிவுப்படுத்துகிறது. இன்னும் அதிகமாக போதகரின் பரிசையும் ஆட்சி செய்வதின் பரிசையும் விளக்கிவிட்டு 'போதிப்பதின் பரிசு' தலைமை தாங்கும் திறமைக்கு ஒரு தேவையாக தனிமைப்படுத்திக் காட்டுவது பவுலுக்கு ஒரு முற்றிலும்புதியதாகவேஇருக்கும்ஆலயத்தின்போதிக்கும்மேய்க்கும்மற்றும்நிர்வகிக்கும் பொறுப்புகளுக்கு பொறுப்பேற்குமாறு பெரியவர்களுக்கு பவுல் அறிவுருத்திய இந்த உண்மையின் கோணத்தில் பார்க்கும்போது இது முற்றிலும் புதியதாகவே இருக்கும்.

[3] இந்த ஒவ்வொரு தன்மையின் அகன்ற மற்றும் நடைமுறை செயல்பாட்டிற்காக "ஜீன் ஏ கெட்ஸ் எழுதிய *ஆண்களின் அளவுகோல்*," என்ற ரீகல் புத்தகம் பதிப்பித்துள்ள புத்தகத்தைப் பார்க்கவும்.

பற்றி உண்மையில் என்ன போதிக்கிறது என்பதை சரிப்பார்ப்பதற்கு மிகவும் உதவியாயிருந்தது. நமது ஊழிய நடவடிக்கைகளின் மூலம் ஒரு வேதாகம நிலையை உருவாக்குவது. ஆபத்தாக இருந்தாலும், நம்முடைய அனுபவங்கள் கண்டிப்பாக வேதாகமம் போதிப்பதை சரிப்பார்க்க உதவ வேண்டும். இந்த இரண்டுமே ஒருங்கிணைந்திருக்க வேண்டும்.

வேதாகம மற்றும் என்னுடைய ஆலய நிறுவுதல் அனுபவம் ஆகிய இவை இரண்டு படிப்புகளில் இருந்து நான் கற்றுக்கொண்ட ஆவிக்குரிய வரங்களில் ஒரு விஷயம் என்னவென்றால் ஒருபொழுதும் குதிரைக்கு முன் குதிரைவண்டியை வைக்கக்கூடாது என்பதுதான். விசுவாசிகளை அவர்களின் பரிசுகளுக்காக அவர்களை தேடச்செய்வது மற்றும் பார்க்க செய்ய முயற்சிக்க வைப்பது அதைச் செய்வதைப் போலவே இருக்கிறது என்றுசுயமாகநம்புகிறேன். நாம் தவறான இடங்களில் முக்கியத்துவத்தைப் போட்டுவருகிறோம். ஆனாலும்கூடநான்விசுவாசிகளுக்குகிறிஸ்துவுக்குள் கூட்டமாக மற்றும் சுயமாக எப்படி வளர வேண்டும் என்று போதித்தால், நாம் அவர்கள் வாழ்க்கையிலும் எப்பொழுதும் இல்லாத ஆவிக்குரிய வளர்ச்சியை அவர்களின்வாழ்கையில்பார்க்கமுடியும். இன்னும் அதிகமாக பரிசுத்த ஆவியைச் சார்வது மூலமாகவும், கீழ்ப்படிவது மூலமாகவும் நல்முறையுள்ள ஒருவருக்கொருவர் ஊக்கமளிப்பதை எப்படி பயிற்சி செய்யவேண்டும் என்று எல்லா விசுவாசிகளுக்கும் போதித்தால் இதற்கு முன் இல்லாத அளவு சரீர இயக்கத்தை நாம் அதிக அளவில் பார்ப்போம். நாம் குழப்பத்தையும் தவறாக புரிந்துக் கொள்ளுதலையும் தவிர்ப்போம். விசுவாசிகள் இயற்கையாகவும் ஆவியானவர் - வழி நடத்தும் வழியாகவும் அவர்களின் வரங்களையும் திறமைகளையும், தங்களுக்குத் தாங்களே முக்கியத்துவம் கொடுத்துக்கொள்வதைவிட மற்றவர்களை முன்னேற்றவே அவைகளை பக்குவத்துடனும் பணிவுடனும் பயன்படுத்த தொடங்குவதை நம்மால் பார்க்க முடியும். நம்முடைய வரங்களைப் பார்ப்பது நம்மை நாமே பார்த்துக்கொள்வது போலவும், பக்குவத்தையும் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைக்கட்டுவதைப்பார்ப்பதும்கடவுளையும்மற்றவர்களையும்பார்ப்பது போன்றது.

ஒரு மிகவும் முக்கியமான முதலாம் முயற்சி

ஒருவருக்கொருவர் என்ற கருத்தை பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை நீங்கள் புரிந்துக் கொண்டுவிட்டால், உங்களுடைய ஆலயத்தின் அமைப்பைக்குறித்துஒருநெருங்கியபார்வையைப்பாருங்கள். அதுசரீரசெயல்பாடுநடைப்பெறுவதற்காகஅமைக்கப்பட்டுள்ளதாஅல்லது அது சில உயர்ந்த - நிலையில் உள்ள மக்கள் பங்கு கொள்ளுவதற்காக மட்டும் அமைக்கப்பட்டுள்ளதா?

ஆலயம் சிறியதாக இருக்கும் பொழுது, முழு ஆலயமும் கூட்டத்தை சந்திக்கும் பொழுது, மக்கள் பங்குபெறுவதற்குவாய்ப்புகொடுப்பது மிகவும் எளிதாக இருக்கும். ஆனால், ஆலயம் வளர வளர இது மிகவும் கடினமாகி விடும். இதன் விளைவாக கிறிஸ்தவர்களை ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய வைப்பதற்காக அமைப்புகளும் குழுக்களும் அமைக்கப்பட வேண்டும். ஐக்கியத்தை ஆலயங்களாக இருந்து, நாங்கள் ஒரு சிறு குழு ஊழியத்தைஏற்படுத்தியுள்ளோம், அதைசிறுஆலயங்கள்என்றுநாங்கள் அழைக்கிறோம். இந்த சிறு குழுக்கள் இயல்பாக மாதத்திற்கு இரண்டு முறை வீடுகளில் சந்திக்கும் கூடவே இது போதகர்களால் வழி நடத்தப்படுகிறது. வழிபாடு, கொண்டாட்டம் மற்றும் கடவுளின் வார்த்தையை கற்பிப்பது போன்றவற்றை சந்திக்கும் ஆலயத்தின் பெரிய கட்டடங்களுக்கு துணையாக இவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த சிறு குழுக்களில் தான்

உண்மையான சரீர செயல்பாடு நடைப்பெறுகிறது. இந்த அனுபவம் இல்லாமல்இயேசுவின்சரீரம்தானாகவேஅன்புடன்வளருவதற்குஒவ்வொரு பகுதியும்முக்கியம்என்றுவேதாகமம்போதிப்பதுடன்நாம்ஒருங்கிணைந்து போக முடியாது.

சில ஆலயங்கள் இளைஞர் ஞாயிறு பள்ளி வகுப்புகளை இந்த தேவையை சந்திப்பதற்காக பயன்படுத்துகின்றன. எதிர்பாராத விதமாக, சில ஆலயங்களில் இந்த வகுப்புகள் சிறிதளவு சரீர செயல்பாடு நடக்கும் மற்றொரு போதிக்கும் -பிரசங்கிக்கும்- வகுப்பாக ஆகிவிடுகிறது. கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவரை ஊக்கப்படுத்த பயிற்சி செய்வதை சாத்தியப்படுவதற்கு உங்கள் ஆலயம் என்ன செய்கிறது? உங்களுடைய சபை மற்றும் அமைப்பு இந்த செயலிற்காக எவ்வாறு உதவுகிறது அல்லது எவ்வாறு தடுக்கிறது!

சிறு குழுக்கள் விவாதிப்பதற்கான வழிமுறைகள்

தொடக்கம்

அந்த முதலாம் வகுப்பு தொடங்கும் பொழுது ஒருவருக்கொருவர் பழகுவதற்காகசிறிது நேரங்களைச்செலவுச்செய்யுங்கள். குறைந்தபடசம், எல்லோருக்கும் அங்கு உள்ள எல்லோருடைய பெயரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருங்கள்.

ஒவ்வொருவரும் இந்த வாக்கியங்களை பூர்த்தி செய்யுங்கள்.

நான் மனித சரீரத்தின் ஏதாவது ஒரு அங்கமாயிருந்தால், நான்

இருக்கவேண்டுமென்பது________________ஏனெனில்______________

____

____

எனக்கு மிகவும் பிடிக்கும் என்று நான் நினைக்கும் சரீரத்தின் பகுதி

எதுவென்றால்____________________ ஏனெனில் ____________

____

____

இந்த புத்தகத்தை நீங்கள் படிப்பதற்கு ஒன்றாக சேர்ந்து குழு எதிர்பார்ப்புகளையும் அல்லது குறிக்கோள்களையும் பட்டியலிடுங்கள் குழுவுக்குஉதவி செய்யஒவ்வொருஉறுப்பினரும்என்னசெய்யவேண்டும் என்பதைதெரியப்படுத்துவதற்காகபலசிறுகுழுக்கள்ஒருகுழுஒப்பந்தத்தை எழுத விரும்புகின்றன. இங்கு சேர்க்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தை நீங்கள் உபயோகிக்கலாம் அல்லது உங்கள் குழு குறிக்கோள்களுக்கு ஏற்ப எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் உங்கள் ஒப்பந்தத்தை விவாதித்து அதை ஒப்புக்கொண்ட பிறகு ஒவ்வொரு குழு உறுப்பினரும் ஒரு நகலை கையெழுத்திடுங்கள்.

குழு ஒப்பந்தம்

சிறு குழுக்களின் உறுப்பினர்களாக இருந்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும் என்பது என்ன என்றநம்முடையபுரிந்துக்கொள்ளுதலிலும்செயல்பாட்டிலும்மற்ற ஒருவருக்கொருவரை உதவ கர்த்தரின் உதவியுடன் நாம் ஒன்றாக ஒபபந்தம் செய்துக் கொள்வோம்.

- சாத்தியமான போது குழு சந்திப்புகளில் தொடர்ந்து பங்கேற்பது.
- ஒவ்வொருகுழுபகுதியிலும்ஒவ்வொருஅதிகாரங்களைப் படிப்பது.
- நம்முடைய எண்ணங்களை, குறிக்கோள்களை, மற்றும் பாடுகளை வெளிப்படையாக பகிர்ந்துக் கொள்வது.
- குழுவுக்குள்ளேயேஇரகசியங்களைப்பாதுகாப்பதுகூடவே,
- ஒருவருக்கொருவர் ஜெபம் பண்ணுவது.

கையொப்பம் ____________________

திகதி ____________________

விவாதத்திற்காக

1. கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினராக இருப்பதில் உங்களுக்கு அது என்ன பொருள் தருகிறது? நீங்கள் மற்ற கிறிஸ்தவர்களால் எப்படி கட்டப்பட்டுள்ளீர்கள்?

2. கிறிஸ்துவின் சரீரம் செயல்படுவதற்கு, ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பது, பணிவு மற்றும் ஒற்றுமை ஏன் மிகவும் முக்கியமானதாக உள்ளது? நீங்கள் எந்த குறிப்பிட்ட வழியில் இந்த ஒவ்வொரு சிறப்பியல்புகளையும் உங்கள் சொந்த ஆலயத்தில் கண்டுள்ளீர்கள்?

3. கிறிஸ்தவ வளர்ச்சியின் அடையாளங்களாக நீங்கள் எதைக் கருதுவீர்கள்? வளர்ச்சி எப்படி வளர்கிறது? சுய வளர்ச்சிக்கும் சபை வளர்ச்சிக்கும் உள்ள உறவு என்ன?

4. உங்கள் ஆலயத்தில்உள்ள அமைப்புஎப்படிசபைசெயல்பாட்டை தத்தெடுக்கிறது? இந்தவேதாகமச்செயல்முறைகளை அவைஎந்தவகையில் தடுக்கின்றன?

5. ஆவிக்குரியதாக நீங்கள் எந்த இடத்தில் வளர விரும்புகிறீர்கள்?

முடிவு

ஒரு சிறு குழுவில், வளர்ந்து வரும் இனத்தவரின் ஒரு முக்கியமான பகுதியினர் இருந்துக்கொண்டு ஒருவருக்கொருவர் ஜெபித்துக்கொண்டு இருக்கிறார்கள். இரண்டு அல்லது மூன்று பேர் குழுக்களாக இருந்து, சில குறிப்பிட்ட ஜெபத் தேவைகளை பகிர்ந்துக் கொள்ளுவீர்களா? வாரம் முழுவதும் குறிப்பாக அதே மக்களுக்காக ஜெபிப்பதை தொடருவீர்களா!

அடுத்த முறைக்காக

1. அதிகாரம் இரண்டை வாசியுங்கள்
2. உங்கள் ஜெபத்துணைவருக்காக ஜெபியுங்கள்
3. இந்தப் பகுதியில் நீங்கள் ஒப்புகொடுத்த செயல் முயற்சியை பின் தொடருங்கள்.



அத்தியாயம் இரண்டு

ஒருவருக்கொருவர் அர்ப்பணித்தல்

சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்.

(ரோமர் 12:10)

நான் எந்த அளவிற்கு ஊழியத்தில் இருக்கிறோனோ, செயல்படாத குடும்பங்களின் அழிவான முடிவுகளை எவ்வளவு அதிகமாக சந்திக்கிறேனோ, அதை விட அதிகமாக என் சொந்த பெற்றோர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். என் தந்தை ஆறாம் வகுப்பும், என் தாயார் எட்டாம் வகுப்பும் முடித்து, குறைவாக கல்வி கற்று அவ்வளவு படிக்காதவர்களாக இருந்தாலும் என் மூன்று சகோதரர்களுக்கும் இரண்டு சகோதரிகளுக்கும் ஒரு பாதுகாப்பான சூழலை அமைத்துக்கொடுத்தார்கள். அவர்கள் குழந்தை மனநிலைக் குறித்து எந்த படிப்பும் படிக்கவில்லை என்றாலும் கூட, பல தவறுகளை செய்திருந்தாலும் இன்று கல்லூரி படிப்பை முடித்த பெற்றோர்கள் பலரை விட மிகவும் அதிகமாக அவர்கள் எங்கள் உணர்ச்சி தேவைகளைச் சந்தித்தார்கள்.

என்னுடைய குழந்தைப் பருவத்தை திரும்பிப் பார்க்கும் பொழுது என் பெற்றோர்கள் ஒன்றாக இருக்கமாட்டார்கள் என்று நான் எப்பொழுதுமே கவலைப்பட்ட ஒரு நேரத்தை நான் ஞாபகப்படுத்த முடியவில்லை என்பதை மிகவும் நேர்மையுடன் என்னால் சொல்ல முடியும். அந்த நினைவு எப்பொழுதுமே என் மனதில் நுழையவில்லை. கிறிஸ்தவ குடும்பங்களில், தாங்கள் பள்ளியில் இருந்து வீட்டிற்கு வரும் வேளையில் தன் தாயோ அல்லது தன் தகப்பனில் யாரோ ஒருவர் வெளியில் சென்றிருப்பார்கள் என்று கவலைப்படும் எண்ணற்ற குழந்தைகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது இது சிறப்பான பரம்பரைச் சொத்தாக உள்ளது.

என்னுடைய பெற்றோர்கள் எப்பொழுதுமே அதிகமாக வெளிப்படுத்தாதவர்களாய் இருந்த போதிலும் அவர்கள் எப்பொழுதுமே எங்களிடத்தில் இயற்கையாகவே பாசமுடையவர்களாய் இருந்தார்கள். என் வீட்டை விட்டு கல்லூரிக்கு சென்றபொழுது நாங்கள் தூரமான இடத்தின் காரணமாக பிரிக்கப்பட்டிருந்தாலும், நான் வீட்டிற்கு திரும்பும் வேலையில் நாங்கள் எப்பொழுதுமே ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி முத்தமிட்டுக் கொள்வோம். நான் வளர்ந்து கொண்டிருக்கும் பொழுது என்ன நடந்தது

என்பதின் அதிகரிப்பாக தான் இது இருந்தது, நான் தூங்க செல்வதற்கு முன் ஒவ்வொரு இரவும், வணக்கம் சொல்லி அவர்களை முத்தமிடுவது எனக்கு இயற்கையாகவே இருந்தது.

எங்களுடைய வாழ்க்கைக்கு கொடுக்கப்பட்ட ஒரு மிகவும் முக்கியமான பங்கு ஆவிக்குரிய பன்புகளாகும். அவர்கள் எங்கள் மனரீதியானமற்றும்உடல்ரீதியானதேவைகளைச்சந்தித்தவிதத்திலிருந்து இது எந்த வகையிலும் கண்டிப்பாக பிரிக்கப்படவில்லை. இருப்பினும், அவர்கள் எங்களுக்கு கிறிஸ்துவத்தின் உண்மையான செய்தியைக் கற்று கொடுத்தார்கள். ஞாயிறு பள்ளிகளில் நாங்கள் தொடர்ந்து இருக்கிறோம் என்பதை அவர்கள் உறுதி படுத்திக் கொள்வார்கள். கூடவே ஒவ்வொரு சாப்பாட்டு வேலைக்கு முன்னும் பின்னும் ஆன அப்பாவுடைய குடும்ப ஜெபத்தைஎன்னால்எப்பொழுதுமேமறக்கமுடியாது,இன்னும்அதிகமாக, ஒவ்வொருஇரவும்என்தாயார்மண்டியிட்டுஎங்கள்எல்லோருக்காகவும் ஜெபிப்பதை நான் பார்த்ததை எப்பொழுதுமே ஞாபகம் வைத்துள்ளேன்.

என்னுடைய பதினறாம் வயதில் நான் கிறிஸ்தவனாககியபொழுது இந்த குடும்ப சூழ்நிலை ஏதாவது வித்தியாசத்தை ஏற்படுத்தியதா? முற்றிலுமாக, நான் கர்த்தருடைய குடும்பத்தின் வீட்டில் உடனடியாக விழுந்தேன், என்னுடைய குடும்பத்தில் நான் அனுபவித்த பாதுகாப்பு உடனடியாக கிறிஸ்துவுக்குள் இருக்கும் என் சகோதர சகோதரிகளுக்கு மாற்றப்பட்டது. நான் ஏற்றுக் கொள்ளப்பட்டு நேசித்ததைப் போல உணர்ந்தேன். இன்னும் அதிகமாக என் பெற்றோர்களை நான் நம்பிய காரணத்தால், ஆலயத்தில் இருந்த என் ஆவிக்குரிய பெற்றோர்களாகிய என் தலைவர்களை நான் உடனடியாக நம்பினேன். மேலும் என்னுடைய குடும்ப உறுப்பினர்களிடம் நான் அன்புடன் இருக்க கற்றிருந்தபடியால் என்னுடைய புதிய மற்றும் பெரிய குடும்பத்துடன் நான் அன்புடன் இருப்பதற்கு மிகவும் இயல்பாக இருந்தது.

என்ன ஒரு சிறந்த பரம்பரை சொத்து, என்னுடைய கடைசி கிறிஸ்தவ அனுபவம் வரையிலும் இந்த எல்லா வகை சக்திகளையும் நான் புரிந்து கொள்ளவில்லை என்றாலும் நான் உண்மையில் எவ்வளவு அதிர்ஷ்டமானவனாக இருந்தேன் என்பதை நான் உணர்தேன். மேலும் உண்மையில்,தங்களுடையகுடும்பத்தில்எப்பொழுதுமேபத்திரத்தையும் பாதுகாப்பையும்உணராதகாரணத்தால்கிறிஸ்தவர்களிடம்பத்திரத்தையும் பாதுகாப்பையும் உணராத மக்களிடம் தொடர்ச்சியாக நான் தொடர்புக் கொள்ளும்போது இது அதிகமாகியிருந்தது.

கர்த்தருடைய குடும்பம்

"ஒருவருக்கொருவர் சகோதர அன்பில் ஒப்புவித்துக் கொள்ளுங்கள்" என்று ரோம கிறிஸ்தவர்களுக்கு பவுல் சொன்னபோது, ஆலயத்தைப் பற்றி விளக்குவதற்கு அவன் நமக்கு ஒரு சக்தி வாய்ந்த உருவகத்தை அறிமுகப்படுத்தினான். "ஃபிலடெல்ஃபியா" என்ற வார்த்தைமொழி பெயர்க்கும் பொழுது சகோதர அன்பு என்று பொருள் கொண்டு குடும்ப உறவைக் குறிக்கிறது. கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர சகோதரிகளுக்கு மற்றவர்கள் மீது இருக்கவேண்டிய அன்பைக் குறித்து பவுல் குறிப்பிடுகிறான்.

சகோதரன் அல்லது சகோதரர்கள் என்ற வார்த்தை (அடெல்ஃபொஸ்)மிகவும்தேவைப்படும்அளவில்"ஃபிலடெல்ஃபியா" என்று வார்த்தையின் ஒரு பகுதியாகும். இது புதிய ஏற்பாட்டில் உள்ள

அப்போஸ்தலர் புத்தகத்தின் தொடக்கத்திலிருந்து[1] சுமார் 220 முறை புதிய ஏற்பாடு முழுவதும் கிறிஸ்தவ குடும்பங்களைக் குறிப்பிடுவதற்காக, புதிய ஏற்பாடு எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை ஒரே கருவிலிருந்து என்று சரியாக பொருள் கொள்ளும், மேலும் இது தன்னுடைய பொதுவான முறையில் சகோதரன் மற்றும் சகோதரி என்று இரண்டையும் பொருள் கொள்ளும். இது முற்றிலுமாக ஒரு குடும்ப வார்த்தை. இது கிறிஸ்தவர்களுக்காக அமல் படுத்தும்பொழுது இது சக விசுவாசிகள் என்றும் கடவுளுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் என்றும், கிறிஸ்துவுக்குள் உள்ள சகோதரர்களும்சகோதரிகளும்என்றும்கர்த்தருடையவீட்டின்உறுபபினர்கள் என்றும்பொருள்கொள்ளும்.இதுநாமெல்லோரும்கர்த்தருடைய அழிவில்லாத குடும்பத்திற்குள் மீண்டும் பிறந்துள்ளோம் என்பதை குறிப்பிடுகிறது. ஒரு பொதுவானபரம்பரைசொத்தின்மூலம்நாம்ஒருவருக்கொருவர்அவசியமாக சம்பந்தப் படுத்தப்பட்டுள்ளோம் (எபேசியர் 1:5)

கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவரின் உறுப்பினர்கள் என்பதனை விளக்குவதற்காக 'சபை' என்னும் உருவகத்தை பவுல் உபயோகப் படுத்தியுள்ளான்! ஆலயம் *எப்படிச்* செயல்படுகிறது என்பதை விளக்குவதற்கான அழகுள்ள விளக்கமாக செயல்படுகிறது. எல்லா விசுவாசிகளும் கர்த்தருடைய திட்டத்தில் தேவைப் படுகிறவர்களாகவும் மிகவும்முக்கியமானவர்களாகவும்இருக்கிறார்கள். கர்த்தர்செயல்படுவதற்காக அமைத்துக்கொடுத்த குடும்பமானது நமக்கு ஒரு ஆரோக்கியமான ஆலயம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான அதிக ஊக்கத்தைத் தருகிறது இந்த உருவகம் மனமார்ந்த அன்பின் அமைதியான தன்மையின் அக்கரை மற்றும்நேர்மையின்கோணங்களையும், சுருக்கமாகமனிதஉணர்வுகளையும், ஒப்புக்கொடுத்தலையும் தனக்குள் சேர்த்துக் கொள்கிறது. வேறு வகையில் கூறினால், பவுல் சபை உருவகத்தைப் பயன்படுத்தும் பொழுது, ஆலயத்தில் எல்லா உறுப்பினர்களும் பங்குக் கொள்ளவேண்டும் என்ற அவசியத்தை விளக்குவதற்காக, அவன் வெளிப்படையான விஷயங்களைப் பயன்படுத்தினான். ஆனால், அவன் குடும்பம் என்ற உருவகத்தை உபயோகிக்கும் பொழுது, உறவுகள் கிறிஸ்துவத்தின் மனரீதியான விஷயங்களை குறித்து எடுத்துக்காட்டுடன் விளக்கிக் கொண்டிருந்தான்.

கெட்ட செய்தியும் நல்ல செய்தியும்

குடும்பஎடுத்துக்காட்டானதுநமக்கு "கெட்டசெய்தி" "நல்லசெய்தி" இரண்டையயும் அறிமுகப்படுத்துகிறது. கெட்ட செய்தியானது, குழந்தைகள் என்ன நினைக்கிறார்களோ அவை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும், தாராளமாக நேசிக்கப்படவேண்டும், கூடவே பாதுகாப்புடன் இருக்கிறோம் என்று உணர்த்தப்படுவதுமான இவைகளை தெரிந்துக்கொள்ளாமலேஅவர்கள்வளர்ந்துவிடுகிறார்களோஎன்பதுதான்! அவர்கள் எந்த வகை பழக்கத்தையும் வளர்த்து கொள்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்களாய் இருந்து பொய் சொல்ல கற்றுக் கொள்வது, ஏமாற்ற கற்றுக் கொள்வது மற்றும் பொய்யாக்கிக் காட்டுவதுமாயுள்ளது. அவர்கள் மதிப்பு பத்து கட்டளைகளில் குறிப்பிட்டுள்ள முற்றிலுமான நிலையை

[1] புதியஏற்பாட்டில்அப்போஸ்தலர்புத்தகத்திலிருந்துதொடங்கிசகோதரன்அல்லது சகோதரர்கள் என்ற வார்த்தைகள் எத்தனை முறை உபயோகிக்கப்பட்டுள்ளன என்ற விபரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது. அப்போஸ்தலர் (43); ரோமர் (19); 1 கொரிந்தியர் (37); 2 கொரிந்தியர் (12); கலாத்தியர் (10); எபேசியர் (3); பிலிப்பியர் (9); கொலோசெயர் (5); 1 தெசலோனிகேயர் (19); 2 தெசலோனிகேயர் (9); 1 தீமோத்தேயு (3); 2 தீமோத்தேயு (1); பிலேமோன் (4); எபிரெயர் (10); யாக்கோபு (18); 1 பேதுரு (11); 2 பேதுரு (2); 1 யோவான் (17); 3 யோவான் (3); வெளிப்படுத்தின விசேஷம் (5).

சார்ந்திருப்பதைவிட உறவையையே சார்ந்திருக்கிறது. கொடுப்பதும், தருமம் செய்வதையும்விட அவர்கள் சுயநலமாக இருக்கவே கற்றுக்கொண்டார்கள். எதிர்பாராத விதமாக கிறிஸ்தவனாக மாறும்பொழுது பல நீண்ட காலங்களாக உருவாக்கப்பட்ட இந்த மனநிலையும் செயல்களும் தானாகவே மாறிவிடுவதில்லை. இதன் விளைவாக அவர்கள் கர்த்தருடைய குடும்பத்தில் சேரும்பொழுது, அன்பாக, அக்கரையாக, நம்பிக்கையாக, இயேசு கிறிஸ்துவுக்குள் உண்மையான சகோதர சகோதரிகளாக இருப்பதில் என்ன அர்த்தம் என்பதைப் பற்றி அவர்களுக்கு எந்த அறிவும் கிடையாது.

ஆனால் இது நம்மை நல்ல செய்திக்கு அறிமுகப்படுத்துகிறது. பலவீனமான குடும்பங்களில் வளர்ந்துள்ள மக்களுக்கு உணர்ச்சி ரீதியான மற்றும் ஆவிக்குரிய ரீதியான சுகத்தை தருவதற்கான ஒரு பாதுகாக்கும் உயிருள்ள பொருளாக கர்த்தரின் குடும்பமாகிய ஆலயத்தை கர்த்தர் அமைத்துள்ளார். மற்றவர்களை எப்படி நேசிக்கவும் அக்கரை எடுத்துக்கொள்ளவும் வேண்டும் என்பதையும் இன்றைய மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஆலயங்களில் தவிர அவர்கள் இந்த வகையான சூழலை எப்பொழுதுமே அனுபவித்திருக்க முடியாது. இது 'இப்படி செயல்படவேண்டும்' என கர்த்தர் கூறுவதைப் போல் செயல்பட்டால், அவர்கள் தங்களின் புதிய விரிவாக்கப்பட்ட குடும்பத்தில் இது மாதிரியாக இருப்பதை பார்க்கமுடியும்.

தன் தகப்பன் தன் தாயை நேசித்ததை எப்பொழுதுமே பார்க்காத ஒரு வாலிபனுக்கு இது என்ன பொருள் தரும் என்பதை நினைத்துப் பாருங்கள். தன்னுடைய தாயார் தன் தகப்பனை நேசித்ததை எப்பொழுதுமே பார்க்காத ஒரு இளம்பெண்ணுக்கு இது என்ன பொருள் தரும் என்பதை நினைத்துப்பாருங்கள். திருமணம் மற்றும் குடும்பம் எப்படி இருக்கவேண்டும் என்ற கர்த்தரின் உண்மையான நோக்கத்தை இளைய மக்கள் பார்ப்பதற்கான ஒரே இடமாக இருப்பது ஒரு சக்தி வாய்ந்த ஆரோக்கியமான ஆலயம் மட்டும் தான். இது உண்மையில் நல்ல செய்தி, ஆனாலும் கூட, அதிக கெட்ட செய்திகள் இருக்கின்றன. ஒரு குடும்பமாக செயல்படாத வேதாகம விசுவாசமுடைய ஆலயங்கள் என்று அழைக்கப்படும் ஆலயங்களால் இந்த உலகம் நிரப்பப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் சகோதர அன்புடன் ஒருவருக்கொருவர் இருப்பதில்லை. இந்த ஆலயங்களில் உறுப்பினர்களிடையே குறைந்த அளவு அன்பும் அக்கரையுமே உள்ளது. ஒருவருக்கொருவர் ஊக்கமுட்டவேண்டும் என்பதை விசுவாசிகள் பயிற்சி செய்வதில்லை. கவலைக்கிடமாக கிறிஸ்துவுக்கு மாறப்பட்ட மக்கள் அடிக்கடி ஒரு செயல்படாத குடும்பத்தில் இருந்து வெளியே வந்து மற்றொரு செயல்படாத குடும்பத்திடம் சேர்ந்துவிடுகிறார்கள். இது நடக்கும்பொழுது, கர்த்தருடைய உணர்ச்சியான மற்றும் ஆவிக்குரிய சுகத்தின் திட்டமானது இடையூறுசெய்யப்படுகிறது. உண்மையில், இது, தவறான எண்ணத்திற்கும் ஆவிக்குரிய அழிவிற்கும் அழைத்துச் செல்லும். இன்னொரு வெற்றியை பெறுவதற்கு சாத்தானை நாம் சற்று அனுமதித்துள்ளோம்.

ஒரு இரு வழித்தெரு

வெளிப்படையாக இந்த முழு செயல்களுமே ஒரு இருவழித்தெருத்தான். சக்தி வாய்ந்த, பக்குவப்பட்ட குடும்பங்கள் சக்திவாய்ந்த பக்குவப்பட்ட ஆலயங்களை உருவாக்குகின்றன. கூடவே சக்தி வாய்ந்த, பக்குவப்பட்ட குடும்பங்களையும் உருவாக்குகின்றன. ஆனாலும் கூட, இவை எல்லாம் சொல்லப்பட்டு செய்யப்படும்பொழுது, ஆலயம் ஒரு சில சக்தி வாய்ந்த குடும்பங்களால் அமைக்கப்பட்டிருந்தாலும் பெரிய குடும்பமானது தலைமை தாங்கி நடத்த வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் இது தான் நடந்தது. ஒரு சக்தி வாய்ந்த குடும்ப

சக்தியை உருவாக்குவதற்காக இது, பெரிய குடும்ப உறுப்பினர் குழுக்களை எடுக்கவில்லை. எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் கூடியுள்ளார்களோ அங்கு இயேசு தனிப்பட்ட வழியில் இருப்பார் என்று அவர் வாக்களித்துள்ளதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் (மத்தேயு 18:20). கர்த்தர் சொன்னதைப்போல இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் செயல்பட தொடங்கும் பொழுது, ஒரு நல்ல உறவான மாதிரி தேவைப்படும். மக்கள் மீது அந்த ஆலயம் ஒரு சக்திவாய்ந்த அழுத்தத்தை ஏற்படுத்த முடியும்.

லேரி ஃபிலின்ட்ஸின் சுயசரிதையை வாங்குவதற்காகவும், அவருடைய கையெழுத்தை வாங்குவதற்காகவும் ஒரு தம்பதியினர் வரிசையில் நின்றுக் கொண்டிருந்ததைப் பற்றி நான் ஒரு கட்டுரையில் படித்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. அவர்களுக்கு அருகில் மூன்று வயதான அவர்களின் இளைய மகள் நின்று கொண்டிருந்தாள். உங்களுடைய மனதை புத்துணர்ச்சியூட்டுவதற்காக லேரி ஃபிலின்ட்ஸ் பத்திரிக்கை உலகிலேயே மிகவும் இழிவான, ஆபாசப்படங்களின் பதிப்பான ஹஸ்லர் பத்திரிக்கையை சொந்தமாக வைத்து அதை பதிப்பித்துக் கொண்டிருந்தார். மக்களை குற்றப்படுத்துவதே அவரின் குறிக்கோள்களில் ஒன்று என உண்மையை பற்றி அவர் வெளிப்படையாக பெருமைப் பேசினார்.

இந்த சிறுமியின் தாயாரை ஒரு செய்தியாளர் அனுகி, பத்திரிக்கைக்கு தங்களுடைய ஆபாசப்படங்களை அனுப்பும் பல பெண்களுடன் என்றோ ஒரு நாள், உங்கள் மகள் சேர்ந்துவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று அவளிடம் கேட்டார். "அவள் வளர்ந்த பிறகு, அவளுடைய சொந்த விருப்பங்களை அவளே முடிவு செய்வாள்" என்று தாயார் கூறினாள். கூடவே "அவர்களுடைய சொந்த விருப்பங்களை தேர்வு செய்பவர்களை எனக்கும் உண்மையில் பிடிக்கும்" என்றும் கூறினாள். இருபது வருடங்களுக்கு அமெரிக்காவின் மிகவும் தேவைப்படாத இடத்தில் இருந்திருக்ககூடிய மனிதனின் தேசிய வெற்றி பெற்ற கட்சியை விட இந்த வகையான எண்ணங்கள் பின்னாகவே உள்ளது என்று செய்தியாளர் குறிப்பிட்டார்.[2]

துரதிருஷ்டவசமாக, நம்முடைய சமுதாயத்தில் உள்ள ஒழுக்கமான வழிகளுக்கு இந்த தம்பதியினரின் கதை ஒரு விதிவிலக்கான பிரதிபலிப்பு அல்ல. நம்முடைய சமுதாயத்தை ஒரு முறை சிறப்பித்து தந்த மதிப்பாகிய அவர்களின் குழந்தைகளின் வாழ்க்கையை கட்டுவதற்கு பல பெற்றோர் களுக்கு எபொழுதுமே எந்த வகையான பொறுப்புமே இல்லை. இந்த உண்மையை ஏற்றுக்கொள்வதை விட, ஒருமுறை வேதாகமத்தின் முக்கியத்துவத்தை பிரதிபலித்த ஒரு வலுவான தேசிய விழிப்புணர்வை வெளிப்படையாக எதிர்த்த ஆபாசக்காரருக்கு இந்த புகழைக் கொடுக்கலாம்.[2]

அதே சமயத்தில் ஃபிலின்ட்சின் புத்தகம் விற்பனைக்கு வெளிவந்தது; 'தி பியூபல் வெர்சஸ் லேரி ஃபிலின்ட்' என்ற பெயரில் ஹாலிவுட் ஒரு திரைப்படத்தை வெளியிட்டது, ஆச்சரியப்படும் வகையில், இந்த திரைப்படம் உடனடியாக இரண்டு உருண்டைகளை வென்றது. உடனடியாக இந்த எழுத்தாளர் தொடர்ந்தார் "நீங்கள் எதிர்க்கும் நோக்கமுடைய இழிவான நடத்தை உள்ள வாழ்க்கை வாழ்ந்தாலும் கூடவே ஒரு கதாநாயகனை காலி செய்துவிடலாம்."[3]

முழுமையான மதச்சார்பற்ற மக்களுக்கு ஆலயம் சுகத்தையும் ஆரோக்கியத்தையும் கொண்டு வர முடியுமா? பதில் 'ஆம்' என்று முடிவு செய்யப்பட்டது. இது பழைய ஏற்பாட்டின் உலகத்தில் நடந்தது.

---

[2] *டல்லாஸ் மானிங் நியூஸ், ஜனவரி 21, 1997*

[3] *டல்லாஸ் மானிங் நியூஸ், ஜனவரி 21, 1997*

ரோம சாம்ராஜ்ஜியத்தின் அழிவிற்கு, அது ஏன், எந்த ஒற்றுமையும் இல்லாத நம்முடைய சொந்த சமுதாயத்திலும் இது நடக்கக்கூடும். ஆனாலும் கூட, கர்த்தர் இப்படித்தான் செயல்படவேண்டும் என்று சொன்னதுபோல, ஆலயம் செயல்படுவதில்லை என்றால் நாங்கள் எப்பொழுதுமே மக்கள் ஆவிக்குரியவர்களாகவும் மனரீதியாகவும் வளர்ச்சியடைய உதவி செய்யமாட்டோம். நாம் ஒருவருக்கொருவர் சகோதர அன்புடன் 'ஒப்புக்கொடுத்து' இருக்க வேண்டும்.

உங்கள் ஆலயங்களில் குடும்ப உறவுகளை வளர்த்து கொள்வதற்கான நடைமுறை முயற்சிகள்

முயற்சி 1

மற்ற கிறிஸ்தவர்களிடத்தில் அன்பும் அரவணைப்பும் காட்டுவதும், கிறிஸ்துவுக்குள் அவர்களை சகோதர சகோதரிகளாக நடத்துவதும் தானாகவே நடந்துவிடாது. ஒரு வேளை அது தானாகவே நடந்துவிடக்கூடியதாக இருந்தால், நமக்கு இந்த அளவு ஊக்கப்படுத்த வேண்டியிருக்காது. சகோதர அன்பு என்பதை பற்றி வேதாகமம் போதிப்பதை மெய்யாக எடுத்துக்கொள்வதே நம்முடைய முதல் முயற்சியாக இருக்க வேண்டும் தொடரும் கூடுதல் ஊக்கப்படுத்துதலை கவனமாக படியுங்கள். கர்த்தருடைய சித்தத்தில் நடப்பதில் இது ஒரு பகுதி என்பதை தெரிந்துக்கொண்டு அவைகளை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அமல்படுத்த வேண்டுமென்பதற்காக கர்த்தரிடம் உதவிகேளுங்கள்.

> சகோதர சிநேகத்தைக்குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே. அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும் (1தெசலோனிகேயர் 4:9-10).

> சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது. அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு. கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்களும் சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து, தீங்கநுபவிக்கிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள். (எபிரெயர் 13:1-3).

> ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே (1 பேதுரு 1:22-23).

மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும் மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள் (1 பேதுரு 3:8-9).

இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் (2 பேதுரு 1:5-7).

முயற்சி 2

உங்களுடைய மற்ற கிறிஸ்தவ குடும்ப உறுப்பினர்களுக்கு நேராக உங்களுடைய மனநிலையையும் செயல்களையும் கணக்கிடுங்கள். ஒவ்வொரு சக கிறிஸ்தவனிடமிருந்தும் நீங்கள் எந்த அளவிற்கு உணர்ச்சி மற்றும் அரவணைப்பை அனுபவிக்கிறீர்கள்? பவுல் 'ஒருவருக்கொருவர் சகோதர அன்புடன் ஒப்புக்கொடுங்கள்' என்று ஊக்கப்படுத்தியுள்ள இந்த பகுதியில் தான், மகிழ்ச்சி படுத்துபவர்களிடம் நாம் மகிழுங்கள் என்றும் துக்கப்படுத்துபவர்களிடம் துக்கமாய் இருங்கள் என்றும் பவுல் உற்சாகப்படுத்தியுள்ளான் (ரோமர் 12:15). ஆம், இது சந்தோஷத்தின் ஆழ்ந்த உணர்ச்சியையும் அடங்கும்.

சில கிறிஸ்தவர்கள் மற்ற விசுவாசிகளிடம் 'உணர்ச்சி' நிலையில் கண்டுப்பிடிப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு காரணங்கள் உள்ளன. கூடவே மற்றவர்களிடத்தில் தங்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு கஷ்டப்படும் எல்லா கிறிஸ்தவனும், அவனை பின்னால் பிடித்து தள்ளும் தடையை உடைக்க வழி தேடி அவனுடைய வாழ்க்கையை பரீட்சைப்பார்க்க வேண்டும்.

தொடரும் இந்த கேள்விகளைக் குறித்து யோசியுங்கள்

1.தள்ளிவிடுவார்களோ என நான் பயப்படுகிறேனா?

தங்கள் உணர்ச்சிகளை மற்றவர்களிடம் வெளிப்படுத்த பயப்படும் அளவிற்கு சில நபர்கள் மற்றவர்களால் மிகவும் ஆழமாக காயப்படுத்தப் பட்டுள்ளார்கள். மீண்டும் ஒரு முறை காயமடைவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வரவேற்க அவர்கள் முன் வருவதில்லை. இது உண்மையில், மற்றவர்களிடம் சேராததற்கான ஒரு காரணம் அல்ல, மனித உறவுகளின் ஒரு முழுமையான தோற்றத்திற்கு நேராக நாம் வேலைச் செய்யவேண்டும். கிறிஸ்தவர்கள் மென்மையாக இருக்கவேண்டும். மேலும், நாம் சேரும் கிறிஸ்தவர்கள் நம்மை கீழே விட்டு விட மாட்டார்கள். உங்களுக்கு கர்த்தர் கொடுத்த சிறப்பை ஒரு கெட்ட அனுபவம் திருடிச் செல்ல அனுமதிக்காதீர்கள்.

நான்சி தன் தகப்பனால் ஒதுக்கப்பட்டாள். அவள் செய்த எதுவுமே அவரை சந்தோஷப்படுத்தவில்லை. குறிப்பாக அவள் தன் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாம் இடத்தை பெறமுடியாதது அவரை சந்தோஷப்படுத்தவில்லை. அவருடைய அங்கீகாரத்தை வெல்லுவதற்கான எஞ்சிய முயற்சிகளை எடுப்பதிலிருந்து அவள் பின்வாங்கிவிட்டாள். இந்த மனநிலை அவளுடைய வாலிப வாழ்க்கையிலும் தொடர்ந்து வந்தது. அவள் தொடர்ந்து பின்வாங்கிக் கொண்டிருந்தாள். மீண்டும் ஒதுக்கப்பட்டு

விடுவோம், என்ற சந்தர்ப்பத்தை அவள் சந்திக்க தயாராக இல்லை. எனவே, தனக்கு மதிப்பை வென்று தரும் எந்த திறமையுள்ள நடவடிக்கைகளையும் அவள் எப்பொழுதுமே முயற்சிக்கவில்லை.

2.ஏழ்மையான குடும்ப பின்னனி எனக்கு இருந்ததா?

மற்ற குடும்ப உறுப்பினர்களிடத்தில் வெளிப்படையான அரவணைப்பையும் அன்பையும் எப்பொழுதுமே வெளிப்படுத்தாத வீடுகளில் சில மக்கள் வளர்ந்து வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, குடும்ப உறுப்பினர்கள் எப்போதாவது அன்பை வெளிப்படுத்தும் வீட்டில் மேரி வளர்ந்தாள். இது ஒருவருக்கொருவர் நேசிக்கவில்லை என்று பொருள் அல்ல. அவர்கள் அதை வெளிப்படையாகவோ உணர்ச்சிபூர்வமாகவோ வெளியில் காட்டவில்லை. அவளுடைய கணவர் பில்லின் அனுபவம் இதற்கும் முரண்பாடாக இருந்தது. இதன் காரணமாக அன்பை வெளிப்படையாக மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்துவதை அவர் எப்பொழுதுமே மிகவும் இலகுவானதாக கண்டார். இருப்பினும் மேரி பெரியவளாக இருந்து இந்த செயல்முறையை கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இது மிகவும் கஷ்டமாயிருந்தது. ஆனால் அவள் சிறப்பாக செய்து முடிந்திருந்தாள், ஆனால் அதற்கு அதிக நேரம் எடுத்தது.

உதாரணத்துடனும் பயிற்சியுடனும் உணர்ச்சிகளை உள்ளே வைத்துக்கொள்வதற்கும் அவற்றை எப்பொழுதுமே வெளிப்படுத்தாமல் இருப்பதற்கும் கற்பிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய குடும்பத்து உறுப்பினர்களிடத்திலும் அப்படியே இருக்கின்றனர். இந்த வகை நடத்தை முறைகளை மாற்றுவதற்கு நேரம் பிடிக்கும்.

சில கிறிஸ்தவர்களுக்கு கர்த்தரிடம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் கஷ்டம் இருப்பதற்கு காரணம் அவர்களுடைய வீட்டில், குறிப்பாக அவர்களின் பூலோக தந்தையிடம் உள்ள கெட்ட அனுபவங்கள் தான். பரலோக தந்தையினிடத்திற்கும் மற்ற கிறிஸ்துவின் சபை உறுப்பினர்களிடத்திற்கும் இந்த உணர்ச்சிகள் மிக எளிதாக மாற்றப்படுகிறது.

ஒரு இளம் பெண்ணை கிறிஸ்துவிடத்தில் கொண்டு வருவதற்கு நான் முயற்சி செய்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. அவள் பாவம் செய்து விட்டாள். அவளுக்கு ஒரு இரட்சகர் வேண்டும் என்பது அவளுக்குத் தெரியும். இதன் விளைவாக, நான் அவளிடம், கர்த்தரிடம் ஜெபம் பண்ணும்படியும், கூடவே இயேசு கிறிஸ்துவை தன் வாழ்க்கையிலும் இருதயத்திலும் வரும்படி அழைக்கவேண்டும் என்றும் கேட்டேன். நான் சொல்வதை திரும்பச் சொல்லுமாறு அவளிடம் கூறிவிட்டு நான் ஜெபத்தை தொடங்கினேன். "பரலோக தந்தையே" நான் சொன்னேன் பின்பு நான் மௌனமாயிருந்தேன். அங்கு எந்த பதிலும் இல்லை. அவள் தவறாக புரிந்துக்கொண்டாள் என்று நான் நினைத்தேன். அதனால் முன்பு சொன்ன "பரலோக தந்தையே" என்பதை திரும்பச சொன்னேன். மீண்டும் நான் மௌனமாயிருந்தேன். அப்போதும் அங்கு மீண்டும் அமைதி இருந்தது.

பின்பு நான் இந்த இளம் பெண்ணிடம் "ஏதாவது பிரச்சினை இருக்கிறதா" என்று கேட்டேன். "ஆம்" என்று அவள் பதிலளித்தாள். "தந்தை" என்ற வார்த்தையை குறிப்பிட்டு, இந்த வார்த்தையை நான் உபயோகிக்க முடியாது என்று அவள் பதிலளித்தாள். தான் குழந்தையாக இருக்கும்பொழுது தன்னுடைய பூலோக தந்தை தன்னை பாலியியல் ரீதியாக சீர்குலைத்து விட்டதை அவள் விளக்கத் தொடங்கினாள்.

நான் உடனடியாக என் தொடக்க வார்த்தைகளை 'கர்த்தரே' என்று மாற்றிகொண்டேன். இந்த வார்த்தைகளை சொல்வதில் அவளுக்கு எந்த கஷ்டமும் இருக்கவில்லை கூடவே அதிலிருந்து நாங்கள் தொடர ஆரம்பித்தோம்.

இது எத்தனை கவலை அளிப்பதாக உள்ளது! ஆனால் அது உண்மை! பரலோக தந்தையாக நாம் எப்படி செயல்படுகிறோமோ அப்படிதான் பரலோகத்தைபற்றி குழந்தைகளுடைய கோணம் உருவாகிறது. இது முற்றிலும் உண்மையான ஒன்று.

இந்த உதாரணம் உங்கள் சூழ்நிலையை சிறிதளவு பிரதிபலித்தால் கூட நீங்கள் நம்பும் சக கிறிஸ்தவனிடமிருந்து உதவி கேளுங்கள். உங்களை கண்டிக்காமல் அதற்கு பதிலாக பரிதாபத்துடனும், அக்கறையுடனும் உங்களின் வார்த்தையை கவனிப்பார்கள். யாரையாவது நீங்கள் கண்டுபிடியுங்கள். உங்களுடைய ஆழ்ந்த மற்றும் உள்ளுக்குள் உள்ள உணர்ச்சியை பகிர்ந்துக்கொள்ளுங்கள். ஒன்றாக ஜெபம் பண்ணுங்கள்.

1. நான் இயற்கையாக கோபமும் ஆத்திரமும் உடையவனா?

சில கிறிஸ்தவர்கள் மற்ற மக்களிடத்தில், கோபம் மற்றும் ஆத்திரத்தின் ஆழ்ந்த உணர்ச்சியினால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். இவர்கள், வழக்கமாக ஆரம்ப தொடக்க குழந்தைப் பருவத்தில் தங்களின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தியுள்ள நபர்களாக உள்ளனர். இவர்கள் தன் சக கிறிஸ்தவர்களிடமும் கூட நன்மையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

தன் குழந்தை பருவத்தில் மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட சில மக்களுக்கும், வழக்கத்திற்கு மாறான மன அதிர்ச்சியையும் அனுபவித்துள்ள சில மக்களுக்கும், தொழில் ரீதியான ஆலோசனை தேவைப்படலாம். இந்த வகையான பிரச்சினைகள் எந்த ஆவிக்குரியதல்ல ஆனால் அதன் மூலமானது மனரீதியானது.

2. என்னைப் பற்றி நினைத்துக் கொள்வதிலேயே அதிக நேரத்தைச் செலவு செய்கிறானோ?

சில கிறிஸ்தவர்கள் மிகவும் தன்னலமுடையவர்களாகவும் தன்னலமே கருதுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அவர்களைப் பற்றியே நினைத்துக்கொள்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கும் அவர்களுடைய சகோதர சகோதரிகளை பற்றி அவர்கள் கொஞ்சம் கூட அக்கறை எடுத்துக்கொள்வதில்லை. இயற்கையாக, சகோதர அன்பை வெளிப்ப்டுத்துவதில் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இந்த சுயநல மனநிலை அவர்களின் ஜெபத்தில் அடிக்கடி வெளிப்படுத்தப்படுகிறது. லேரி எத்தனை முறை தனக்கு பொருள் தரவேண்டும் என்று கார்த்தரிடம் கெஞ்சினார் என்று கண்டுபிடித்தார். கிட்டத்தட்ட எல்லா ஜெபங்களும் லேரியின் சொந்த விருப்பங்களுக்காகவே குறிவைக்கபட்டது. அதிர்ஷ்டவசமாக, அதிக தேவையுள்ளவர்களுக்காக ஆலயத்தில் உள்ள மற்றவர்கள் எப்படி தேவையான நேரங்களை செலவு செய்து ஜெபிக்கிறார்கள் என்பதை அவர் கவனித்தார். பின்பு அவருடைய ஜெப பட்டியலின் மேலே மற்றவர்களை போட முடிவு செய்தார். பின்பு வாழ்க்கை ஒரு புதிய அர்த்தத்தை எடுத்தது.

முயற்சி 3

மேலே உள்ள பிரச்சனைகளில் ஏதோ ஒன்று உங்களிடம் இருப்பதாக நீங்கள் கண்டுபிடித்தால், நீங்கள் நம்பும் மற்றும் பக்குவமடைந்துள்ள கிறிஸ்துவின் ஆலயத்தினுடைய சக உறுப்பினர் யாரிடமாவதிருந்து உதவி கோருங்கள். நீங்கள் எந்த முயற்சி எடுத்தாலும், கர்த்தருடைய விருப்பம் என்ன என்று உங்களுக்குத் தெரியும். என்பதை உடனடியாக செயல்படுத்த தொடங்குகள். உதாரணமாக: ஒரு சக கிறிஸ்தவரை நீங்கள் சோதிப்பதாக

அவரிடம் சொல்ல உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால், உங்களுக்கு என்ன தெரிந்துள்ளதோ, அதனை அமல்படுத்தத் தொடங்குங்கள். உங்களுக்கு அப்படி தோன்றும் வரை நீங்கள் காத்திருக்கவேண்டாம். உணர்ச்சிரீதியாகஅதிகமாகபயமுறுத்தாதசிலவிஷயங்களைச்செய்வதின் மூலம் தொடங்குங்கள். இவைகள், ஒரு பரிசை அந்த நபருடன் பகிர்ந்து கொள்வது,உற்சாகப்படுத்துவதைப்பற்றியஒருசெய்தி,இரவுவிருந்திற்கான ஒரு அழைப்பிதல் ஆகியவையாகும். உணர்ச்சிகள் செயல்களை தொடரத் தொடங்கும். குறிப்பாகநாம்உணர்ச்சிரீதியாகபுகழப்படும்பொழுது, கூடவே நம்முடைய அன்பான நடவடிக்கைகளுக்காக நாம் உற்சாகப்படுத்தபடும் பொழுது,அன்பைஉண்மையானவழியில்வெளிப்படுத்துவதினால்,பேச்சின் மூலம் பகிர்ந்துக் கொள்ளக் கூடிய அன்பின் உணர்ச்சியை வளர்த்துக் கொள்ள முடியும்.

நீங்கள்ஆழமாககாயப்படுத்தப்பட்டுகூடவேகட்டுப்படுத்தப்பட்டோ அல்லது ஏமாற்றப்பட்டவராகவோ இருந்தால், உங்களை நீங்களே பின்வாங்கிச் செல்ல அனுமதிக்காதீர்கள். நீங்கள் இன்னும் அதிகமாக தவறானஎண்ணம்உடையவர்களாவீர்கள்.உங்கள்பிரச்சினைகள்இன்னும் அதிகமாகிவிடும். கலகலப்பில்லாதவர்களுக்கு, குறைந்த அன்பும் அரவணைப்பும் போதும் என்று பலர் புரிந்துக்கொள்கிறார்கள். அத்தகைய நபர் மற்ற மக்களிடம் கலந்து கொள்ள நினைப்பதில்லை என்றும் அவர்கள் நினைக்கிறார்கள்.இதன்விளைவாக,விரைவில்பின்வாங்கும்நபர்,அவருக்கு அதிக உதவிச் செய்யக் கூடியவர்களிடமிருந்து தனிமை ஆகிவிடுகிறார்.

கர்த்தருடைய குடும்பம்

சகோதர சகோதரி என்று இங்கு நாம் சொல்வதை நீங்கள் கவனிக்க முடியும்
இதற்கு காரணம் நாம் குடும்பமாயிருப்பதும், இந்த மக்கள் மிகவும் அருமையானவர்களாய் உள்ளதும் தான்.
எப்போதாவது ஒருவருக்கு நெஞ்சுவலிக்கும் பொழுது எல்லோரும் கண்ணீரைப் பகிர்ந்துக் கொள்கிறோம்.
பிறகு மிகவும் அருமையாக இந்த குடும்பத்தில் உள்ள எல்லா வெற்றிகளையும் கொண்டாடுகிறோம்.

அனாதை விடுதியின் கதவிலிருந்து இராஜாவின் வீடு வரைக்கும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவன்.
யாரும் இல்லை, ஒரு புதிய பாடலை நான் பாடுகிறேன்.
ஏழையில் இருந்து பணம் படைத்தவர்மட்டும், பலவீனரிலிருந்து லமுள்ளவர் வரைக்கும்,
நான் இங்கு இருக்கத் தகுதியானவன் அல்ல ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தவே நான் சொந்தம்.

அனுப்பல்லவி
கர்த்தருடைய குடும்பத்தில் நானும் ஒரு பகுதி என்பதில் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.
நான்நீருற்றில்கழுவப்பட்டேன்,இரத்தத்தால்சுத்தம்செய்யப்பட்டேன்.
இந்தபுறதரையில்நாம்பயணம்செய்யும்பொழுதுஇயேசுவிடம்வாரிசாக சேர்ந்துக்கொள்ளுங்கள்
நான் கர்த்தருடைய குடும்பத்தில் ஒரு பகுதியாக உள்ளேன்.[4]

---

4 "கர்த்தருடைய குடும்பம்" © பதிப்புரிமை 1970 வில்லியம் J கெய்தர். அனுமதி பெற்று பிரசுரிக்கப்பட்டுள்ளது

சிறு குழுக்கள் விவாதிப்பதற்கான விதிமுறைகள்

தொடக்கம்

இந்த கேள்விகளுக்கு ஒவ்வொரு நபரும் அவளுடைய அல்லது அவனுடைய பதிலை பகிர்ந்துக் கொள்ள வேண்டும்:

நீங்கள் வளர்ந்து கொண்டிருந்த போது உங்கள் குடும்பம் எப்படி இருந்தது? உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் என்ன கனவு வைத்திருக்கிறீர்கள்? கர்த்தருடைய குடும்பத்தின் ஒரு பகுதியாக இருப்பதன் அர்த்தத்தை நீங்கள் எப்போது முதலில் உணர்ந்தீர்கள்?

விவாதத்திற்காக

1 கர்த்தருடைய குடும்பமாக செயல்படும் ஆலயம் எப்படி காட்டியளிக்கும்? உங்களுடைய ஆலயம் கர்த்தருடைய குடும்பமாக செயல்படுவதை நீங்கள் எந்த வழியில் பார்த்துள்ளீர்கள்?

2 உங்கள் ஆலயத்தில் குடும்ப உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு முயற்சி ஒன்றில் குறிப்பிட்டுள்ள வேதாகம பகுதிகளை படியுங்கள். அந்த ஊக்கமளித்தலை அந்த சிறு குழுக்கள் உண்மையில் ஏற்றுக்கொண்டால், இது எப்படி இந்த குழுவைப் பாதிக்கும்? இது ஆலயத்தை எப்படி பாதிக்கலாம்?

3 ஒதுக்கப்படுதலின் உணர்ச்சியைப் பற்றிய தொடரும் கேள்விகளுக்கு பதிலளியுங்கள்:

ஒதுக்கப்படுதலின் பயம் ஒருவரை ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுப்பதிலிருந்து எப்படி தடுக்கிறது?
ஒதுக்கப்படுதலின் பயத்திலிருந்து எப்படி ஒரு நபர் வெற்றிப் பெறமுடியும்?
ஒதுக்கப்படுதலை குறித்து பயப்படும் ஒருவருக்கு மற்றவர்களால் எப்படி உதவ முடியும்?
ஒதுக்கப்படுதலைக் குறித்து ஒரு நபர் பயப்படுகிறார் என்பதை எது தெரிவிக்கும்?
ஒதுக்கப்படுதலின் ஆபத்தில் நீங்கள் உள்ளீர்கள் என்பதை எப்போது உணருகிறீர்கள்?

4. ஒரு நபரின் குடும்பத்தின் பின்னனிக்கும், ஆலயக் குடும்பத்தில் அந்த நபர் தொடர்புக் கொள்ளும் வழிக்கும் உள்ள உறவு என்ன? "தந்தை" அல்லது "அண்ணன்" போன்ற வார்த்தைகளைக் குறித்து உங்களுடைய உணர்ச்சிபூர்வமான பிரதிபலிப்பு என்ன?

5. உங்களுடைய குடும்பத்தின் உறுப்பினர்களைப்பற்றி உங்களுக்குள்ள அக்கரை அளவு பற்றி உங்கள் ஜெப வாழ்க்கை என்ன சொல்கிறது? நீங்கள் தனியாகவும் குழுவாகவும் இருந்து ஜெபம் பண்ணக்கூடிய, உங்கள் ஆலய குடும்பத்தில் உள்ள மற்றவர்களின் ஜெபத்தேவைகளை ஒரு பட்டியலிடுங்கள்.

முடிவு

இரண்டு அல்லது மூன்று பேர் ஒரு குழுவாக இருந்து, இந்த அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள சகோதர அன்பின் தடைகளைக் குறித்து உங்களுடைய சொந்த பதில்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கர்த்தருடைய குடும்பத்தில் அன்பை அனுபவிப்பதற்கும், கொடுப்பதற்கும், உங்களை தடுக்கும் காயங்கள் ஏதாவது உங்களிடம் இருக்கிறதா? அல்லது அந்த அன்பை அனுபவிப்பதற்கு தனிப்பட்ட கவனம் தேவைப்படும் யாரையாவது உங்களுக்குத் தெரியுமா? கர்த்தருடைய விருப்பத்திற்கேற்ப இருக்க என்ன செய்யவேண்டும் என்று உங்களுக்குத் தெரிந்ததை குறித்து செயல்பட நீங்கள் என்ன முயற்சி எடுக்க முடியும்? இரண்டு அல்லது மூன்றுபேர் குழுக்களாக இருந்து உங்களுடைய தேவைகளைப் பகிர்ந்து கொண்ட பிறகு ஒருவருக்கொருவர் தேவைகளைக் குறித்து ஜெபம் பண்ணுங்கள்.

4. கர்த்தருடைய விருப்பத்தின் பகுதி என்று நீங்கள் கண்டு கொண்ட முயற்சிகளில் எதையாவது ஒன்றைச் செய்யுங்கள்.

அடுத்த முறைக்காக

1. மூன்றாம் அத்தியாயத்தை வாசியுங்கள்.
2. இந்த கூட்டத்தில் நீங்கள் பட்டியலிட்ட உங்களுடைய ஆலய குடும்பத்தின் தேவைகளுக்காக ஜெபம் பண்ணுங்கள்.
3. உங்கள் சிறு குழுக்களின் உறுப்பினர்களின் தேவைகளுக்காக தொடர்ந்து ஜெபம் பண்ணுங்கள்.



அத்தியாயம் மூன்று

ஒருவருக்கொருவர் கனம் செலுத்துங்கள்

கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்
(ரோமர் 12:10)

எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். அவர் ஒரு வழிபடும் தலைவரும், வியக்கும் பியானோ வாசிப்பவருமாவர், அவருடைய பெயர் பிரெண்ட் டவண்ட் என்பதாகும். அவர் தன் கோணத்தில் இருந்து இசை சம்மந்தப்பட்ட செயல்கள் நிறைவேற்றியது பற்றி அதிக அளவில் விருப்பமுள்ள கருத்துரைகளைக் கொண்டு வருபவர்.

பிரெண்ட் தன்னைப்பற்றிய ஒரு சிரிப்பூட்டும் கதையைச் சொல்கிறார். இக்கதை "ஒருவருக்கு ஒருவர்" என்றத்தலைப்பைப்பற்றி நாம் படிப்பதற்கு ஒரு அழகான நிலையை அமைத்து தருகின்றது. "கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" (ரோமர் 12:10).

பிரெண்ட் இளைஞராக இருக்கும்பொழுது அவருக்கு மிகவும் தெரிந்த தனிக்கருவி இசைஞர் ஒருவர் அவருடைய தேவாலயத்துக்கு வந்தார். அப்பொழுது அந்த இசைஞருக்கு பக்கவாத்தியக்காரராக சேவை செய்யும் அதிர்ஷ்டம் பிரெண்டுக்கு கிடைத்தது. இந்த நிகழ்வை தன் பியானோ திறமையை மெய்ப்பித்துக் காட்டும் ஒரு வாய்ப்பாக கண்டதால் அவர் மிகவும் கிளர்ச்சியுற்றார். ஒத்திகையின் பொழுது அந்த பெண் இசைஞர் தன் பாடலின் முதல் செய்யுட்பகுதியைப் பாடும் பொழுது அவர் தன் விரல்களை இசைப்பெட்டியில் வைத்து மேலும் கீழுமாகவும் சுதந்திரமாகவும், வாசிக்கத் தொடங்கினார்.

இந்த தொடக்க பாடலைத் தொடர்ந்து அந்த பாடகி பாடுவதை நிறுத்திவிட்டு, என் நண்பனை பார்த்து புன்னகையுடன் சொன்னார், "பிரெண்ட், உங்களுக்குத் தெரியுமா, நான் உங்களுக்கு ஒரு வியக்கத்தகு பக்கவாத்தியகாரராகவே உள்ளேன்!"

ஒளி போய்க்கொண்டிருந்து. திடீரென பிரெண்ட் அவர் என்ன செய்திருந்தார் என்பதைப் பார்த்தார். அவர் ஒரு பக்கவாத்தியக்காரராகவே இருக்க வேண்டியிருந்தது. அவர் தன்னுடைய தனி திறமைக்கு கவனம் செலுத்தியும் மற்றவரின் முக்கியத்துவத்தைக் குறைத்து காண்பிக்காமலும் ஒரு தனிக்கருவி இசைஞருக்கு துணையாக இருக்கவேண்டியிருந்தது. சுருக்கமாக அவள் சிறப்பாக காட்சியளிக்க அவரால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதை எல்லாம் *அவர்* செய்ய வேண்டியிருந்தது!

நான் இந்த கதையைக் கேட்டவுடன் மற்றவர்களை ஏன் உண்மையாகவேமதிக்கவேண்டும்என்பதைப்பற்றி விளக்கும்ஒருசக்திமிக்க உருவகம்உடனடியாகஎன்நினைவுக்குவந்தது. நீங்கள்பாருங்கள்ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்ற *ஒவ்வொரு* கிறிஸ்தவர்களுக்கும் ஒரு பக்கவாத்தியகாரராகவே இருக்க வேண்டும். மற்றவர்களை சிறப்பாகவும் நன்றாகவும் இருக்கச் செய்யவே நாம் அனைவரும் உள்ளோம்.

தற்செயலாகவே கூட பிரெண்ட் அந்த பாடத்தை எப்பொழுதுமே மறக்கவே இல்லை. இன்று, அவர் ஒரு சிறந்த தனிக்கருவி இசைஞராக இருந்தாலும்,எனக்குத்தெரிந்தவரைஅவர்ஒருசிறந்தபக்கவாத்தியக்காரர். இசைபெட்டிக்கு முன் மற்றவர்களை எப்படி மதிக்கவேண்டும் என்பது அவருக்கு நன்றாக தெரியும், அதை அவர் செயல்படுத்துவார். அவர் இசைவாசிப்பதைகவனிக்கும்பொழுதுநான்அந்தஉருவகத்தைமறப்பதே இல்லை. கிறிஸ்தவர்களாக என்னுடைய மற்றும் உங்களுடைய கடமை என்னவென்றால்மற்றவர்களைச்சிறப்பாகவும்நன்றாகவும்இருக்கசெய்வது தான். நாம் இதைச் செய்யும் பொழுது நம்மை விட மற்றவர்களுக்கு தான் நாம் மதிப்பு தருவோம்.

கிறிஸ்துவின் ஒப்புயர்வற்ற எடுத்துக்காட்டு

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் நடக்கையில் தன்னை விட மற்றவர்களைமதிப்பதில்ஒருஉயர்வானஎடுத்துக்காட்டாகவேதிகழ்ந்தார். இயேசு கிறிஸ்து தான் இறப்பதற்கு சற்று முன்பு ஒரு நிகழ்ச்சியில் தாம் சீடர்களுக்குகற்பித்தஒருசக்திமிகுந்தஉண்மையும்ஒருசிறந்தஉருவகமே.

ஒரு சாயங்கால உணவு வேலையின் போது இயேசு கிறிஸ்து தம் சீடர்களுடன் இருக்கையில் தம்முடைய தந்தை எல்லாவற்றையும் தம் சக்தியால் செய்ததையும், அவர் கடவுளிடமிருந்து வந்தார் என்பதையும், அவரிடமே திரும்பி சென்றிடுவார் என்பதையும் அறிந்திருந்தார். அப்பொழுது அவர் ஒரு கிண்ணத்தில் தண்ணீர் நிரப்பி குனிந்து அவர் சீடர்களுடைய கால்களைக் கழுவினார். அவர் அந்த பணியை முடித்த பின்புஅவர்தம்முடையசீடர்களுடன்ஒருபாடத்தைபகிர்ந்துக்கொண்டார். அதைஅவர்கள்மறக்கவேமுடியாதுஎன்பதில்நான்உறுதியாகஉள்ளேன்.

நான் உங்களுக்கு என்ன செய்தேன் என்பது உங்களுக்கு புரிந்ததா என்றுஅவர்களிடம்கேட்டார். அவருடையகேள்விக்கேஅவர்பதிலளிக்க முன்வந்தார். அவர்களுடையகால்களைஅவர்கழுவினபின்பு,தம்முடைய வஸ்திரங்களைத்தரித்துக்கொண்டு,திரும்பஉட்கார்ந்து,அவர்களைநோக்கி: "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும்ஆண்டவரென்றும்சொல்லுகிறீர்களே. நீங்கள்சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:12-15)

சில கிறிஸ்தவர்கள் இந்த கதையில் உள்ள கருத்தையும் தத்துவத்தையும் குறித்து குழம்பிக்கொள்கிறார்கள் என்பதே என்னுடைய கருத்து. இன்றைய கலாச்சாரத்தில்நாம்ஒருவருக்கொருவர்கால்களைகழுவிக்கொள்ளவேண்டும் என்பதைத் தான் இயேசு கிறிஸ்து உண்மையில் நமக்கு கற்பிக்கிறார் என்பதை நான்விசுவாசிக்கிறேன். நான்உண்மையில்இப்படிபட்டபழமையானபழக்கத்தை செயல்படுத்தி கடவுளின் விருப்பத்திற்கு கீழ்ப்படியும் கிறிஸ்தவர்களை மதிக்கின்றேன். நிச்சயமாக ஒரு கிறிஸ்தவன் மற்ற கிறிஸ்தவனின் கால்களை கழுவ கிறிஸ்துவுக்குள் சுதந்திரமுண்டு. உண்மையாக இது ஒரு சக்திவாய்ந்த எடுத்துக்காட்டாக இருக்க முடியும்.

உண்மையான பணிவின் ஓர் அடையாளம்!

சத்திய காப்பாளர்களால் நடத்தப்படும் அட்லாண்டா, ஜார்ஜியா நாடுகளின் போதகர்கள் மாநாட்டில் கலந்துக்கொள்ள நான் எப்பொழுதுமே மறப்பதில்லை. நாற்பதாயிரத்திற்கும் மேலான ஊழியர்கள் ஆராதனைக்காக ஒன்று கூடினார்கள், கூடவே கிறிஸ்துவின் அழைப்பிற்கு விசுவாசமாய் இருக்கவும் உறுதிமொழி எடுத்தார்கள். பிஷப் வெலிங்டன் ஃபூண் என்ற கருப்பு மனிதா போதித்துக்கொண்டிருந்தார். திடீரென தான் போதிப்பதை நிறுத்திவிட்டு, மேடையில் அமர்ந்திருந்த தன் சக போதகரும் கருப்பு மனிதருமான "டோனி இவேன்ஸ்" என்பவரை பார்த்து "நான் உங்கள் கால்களைக் கழுவி அதன் மூலம் உங்களுக்குச் சேவை செய்ய விரும்புகிறேன்" என்றார்.

ஒரு சில நிமிடங்களில் மிகவும் இயல்பான ஒரு நிகழ்ச்சி நடந்தது. கூட்டத்தில் இருந்த அநேக ஆண்கள் தற்காலிகமான சரக்கு பெட்டியை மேடையின் மேல் வைத்து அதில் பல தண்ணீர் குப்பிகளை வைத்து நிரப்பினார்கள். அவர்கள் வெலிங்டன் ஃபூணுக்கு ஒரு துண்டு துணியை கொடுத்தார்கள். அது ஒருவகையான டி-சட்டைப் போல இருந்தது. அவர் டோனி இவேன்சிற்கு முன்பாக மண்டியிட்டு, அவருடைய காலணிகளையும் காலுரைகளையும் கழட்டிவிட்டு அவருடைய பாதங்களை கழுவ தொடங்கினார். ஃபூண் இதைச் செய்யும்பொழுதெல்லாம் இந்த கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரனைப் பார்த்து தான் அவரை நேசிப்பதாகவும் அவருக்கு சக போதகராக இருந்து சேவை செய்ய விரும்புவதாகவும் கூறிக்கொண்டே இருந்தார். அந்த அனுபவத்தை என்னால் மறக்கவே முடியாது. இது உண்மையான பணிவின் ஓர் அடையாளமாக இருந்தது. இயேசு தன் சீடர்களுக்கு ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி சேவை செய்யுங்கள் என்று சொன்னபோது தன் என்ன மனதில் நினைத்தார் என்பதை இது படம் பிடித்து காட்டியது. (யோவான் 13:12-15, 34-35).

உண்மையான ஓர் பணியாளுக்கான அடையாளம்!

இதே காலத்தில் எனக்கு கிடைத்த மற்றுமொரு அனுபவத்தைப் பற்றி நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எங்கள் தேவாலயத்தில் இருந்து ஒரு இளைஞர் குழு பல நாள் சுற்றுலாவாக கொலராடோ காட்டு மலைப்பகுதிக்குச் சென்றது. சுற்றுலாவின் கடைசி நாளன்று, அந்த கடினமான பயணத்தின் முடிவுக்கு வரும் வேலையில் அவர்கள் குளிர்ந்த மலை ஓடையின் அருகில் அமர்ந்தனர். அவர்களின் மிகவும் புண்பட்டு வலிமிகுந்த பாதங்களிலிருந்து தம்முடைய காலணிகளை கழற்றினார்கள். அந்த வேலையில், இந்த இளைஞர்களுக்கு இப்பயணத்தில் வழிகாட்டிய போதகர்களில் ஒருவர் அவர்களை நோக்கி ஒருவருக்கு ஒருவர் தங்கள் பாதங்களைக் கழுவி பணிவிடை செய்துகொண்டு அன்பு மற்றும் ஊக்கத்தின் வார்த்தையை பகிர்ந்து கொள்ளலாம் என்று யோசனைக் கூறினார். இது ஓர் சக்தி மிகுந்த அனுபவம். மேலும் இது அந்த நேரத்தின் கட்டாயமான தேவையை சந்தித்தது மட்டுமில்லாமல், அந்த கலாச்சார தேவையை இயேசுவில் மற்றவர்களுக்கு பணிவிடை செய்யவேண்டும் வாஞ்சையை அமுல்படுத்தும் ஓர் சந்தர்ப்பமாகவே மாற்றியது.

பாதங்களை கழுவுதல் நம் பார்வைக்கு எப்படி இருந்தாலும், இயேசு கற்பித்ததகவலையும் தத்துவத்தையும் நாம் எப்பொழுதுமே மறக்கக்கூடாது. கலாச்சாரம் மாறியப்போதிலும், போக்குவரத்து முறைகள் அதிகரித்த போதிலும், நம்மில் பெரும்பாலும் அழுக்கான, புழுதி நிறைந்த சாலைகளில் செருப்பு அணிந்து நடப்பதை விட்டு விட்டு நடை பாதையில் காலணி

அணிந்து நடப்பது இயல்பான போதிலும் ஒரு விஷயம் மட்டும் இன்னமும் மாறவில்லை. நாம் கிறிஸ்தவர்களாய் இருப்பது நம்மைவிட மற்ற ஒருவருக்கு மதிப்பு கொடுப்பதற்கு தான் என்று கூறி பவுல் இதை உறுதிச்செய்தார். இதை தான் இயேசு பாதம் கழுவும் பகுதியில் தெளிவுப்படுத்தினார்.

உண்மையான மதிப்பின் ஓர் அடையாளம்!

மற்றுமொரு திருமணத்தின் போது இயேசு இந்த உண்மையை இன்னும் அதிக தெளிவாக எடுத்துரைத்தார். அவர் மதத்தலைவர்களை தங்கள் பெருமைக்கும் அகந்தைக்கும் பொறுப்பேற்கும்படி வைத்தார். "தங்கள் கிரியைகளெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரத்தின் தொங்கல்களைப் பெரிதாக்கி, விருந்துகளில் *முதன்மையான இடங்களையும்*, ஜெப ஆலயங்களில் *முதன்மையான ஆசனங்களையும்*, சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்"

அதன் பிறகு இயேசு அவருடைய சீடர்களை நோக்கினார். அவர்கள் கடவுளின் ஊழியத்தைச் செய்ய முழு வளர்ச்சியுற்ற மனிதர்களாக இருக்கவேண்டும் என்பதால் அவர்கள் கற்க வேண்டியப் பாடத்தைக் கற்பித்தார். "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத்தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்தேயு 23:5-12).

விமான துறையைச் சேர்ந்த கிறிஸ்தவ ஊழியர் கழகம் நடத்திய தேசிய மாநாட்டில் பேசுவதற்கு என்னை அழைத்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. விமான துறையில் பணிபுரியும் யாவரும் விமானி முதல் தரையில் விமானத்துக்கு எரிபொருளை நிரப்பும் மற்றும் போக்குவரத்து பைகளை தூக்கிச் செல்லும் விமான ஊழியர் வரை அனைவரும் இந்த கிறிஸ்தவ அமைப்பில் பங்கு பெறுகின்றனர்.

மாநாட்டிற்கு நான் வந்தபொழுது முக்கியமான நகரங்களுக்கு பல வருடங்களாக விமானத்தை இயக்கும் விமானிகள் எனக்கு வரவேற்பு அளிக்கவில்லை, மாறாக L1011S என்ற மிகப் பெரிய, விரைவில் செல்லக்கூடிய விமானத்தை இயக்கும் ஒரு கேப்டன் தான் என்னை சந்தித்து என் பைகளை எல்லாம் சுமந்து வந்தார். இந்த சிறந்த விமானிகள் அந்த மாநாட்டிற்கு வந்துள்ள மற்ற விமான ஊழியர்களை, அவர்களின் தகுதி விமானத்துறையில்என்னவென்றுபார்க்காமல்எல்லோரையும்ஒரேமாதிரியாக வரவேற்று அவர்கள் பைகளை அறைகளுக்கு எடுத்துச் செல்வதை நான் பிறகு தான் கவனித்தேன். இதை பார்த்து, நான் ஊழிய ஒற்றுமை மற்றும் மதிப்பிற்கு என்ன ஒரு அடையாளம் என்றும் "உங்களுக்குள் சிறந்தவர் யார் என்றால் உங்கள் பணிவிடைகாரர் தான்" என்று இயேசு தன் மனதில் வைத்து சொன்னதின் ஓர் உதாரணமும் இது தான் என்றும் எனக்கு நானே நினைத்துக்கொண்டேன்!

பவுலின் ஆற்றல் வாய்ந்த விண்ணப்பம்

அப்போஸ்தலனாகிய பவுல், இயேசு கிறிஸ்து பூமியில் சுற்றித்திரிந்தப் போது அவர் பாதங்களின் அடியில் அமராவிட்டாலும் மற்றவர்களை மதிக்க அவன் கற்றுக்கொண்டான். இந்த உண்மையை தம் வாழ்வில் அமுல்படுத்தி மற்றவர்களும் இதைக் கடைப்பிடித்து செயல்படும்படி போதித்தான். இப்படிதான் இவன் பிலிப்பியருக்கு எழுதினான். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின

பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலிப்பியர் 2:5)

குறிக்கோள்தான் என்ன? பவுல் கவனமாக வெளியில் சொன்னான்! இவ்வுலகிற்கு எப்போதும் தெரிந்த சிறந்த செயல்களாகிய சுயநலமின்மை, பணிவு, மற்றும் சுய தியாகத்தை கிறிஸ்து எல்லா மனிதக் குலத்திற்கும் தெளிவுப்படுத்தி காட்டினார்:

> அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:6-8).

கிறிஸ்துவின் அன்பு மற்றும் ஒப்படைப்பு செயலின் முடிவு என்னவென்றால், தம் சீடர்களுக்கு அவர் தம்மைவிட பிறரை மதிக்கவேண்டும் என்றுகூறி, இதன்மூலம் கிடைக்கும் உயர்த்துதலைப்பற்றி உறுதியளித்ததே அவருக்கு அவசியமானதாய் இருந்தது. இதைத்தான் இயேசு கிறிஸ்துவுக்கு கர்த்தர் செய்தார்.

> ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய அவருக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப்பியர் 2:9-11).

நம்முடைய சுய உயர்த்துதல் கிறிஸ்துவின் உயர்த்துதலில் இருந்து வித்தியாசமாகவே இருக்கும். எனினும், கர்த்தர் தம்மைவிட மற்றவர்களை உண்மையாகவே மதிக்கும் கிறிஸ்தவர்களை உயர்த்துவார். இது விரைவில் நடைபெறாமல் இருக்கலாம். ஆனால் இது நடக்கும் - பூமியில் நடக்காவிட்டாலும் இது நிச்சயமாக நித்தியகாலம் முழுவதிலும் நடைபெறும். இயேசு கற்பித்தது என்னவென்றால் "ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்" (மத்தேயு 19:30).

கிறிஸ்துவின் குறிக்கோள்களையும் செயல்களையும் பின்பற்றுவது பற்றி அவர் சொன்னதை பிலிப்பியர்கள் புரிந்து கொண்டார்களா என்பதை உறுதி செய்யவே அவர் கிறிஸ்துவின் செயல்பாடாகிய பணிவையையும் சுயநலமின்மையையும் குறித்து ஒரு முழு பகுதியை அறிமுகப் படுத்தியுள்ளார்:

> ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவகளையும் நோக்குவானாக. (பிலிப்பியர் 2:3-4).

தவறாக புரிந்துக்கொள்ளவேண்டாம். பரிசுத்த வேதாகமம் நமக்கு சுய விருப்பங்கள் இருக்கவே கூடாது என்று கற்பிக்கவில்லை. அது

சாத்தியமில்லாதது. வாழ்க்கையின் மிக இயற்கை நிகழ்வுகளான குடும்பத்தை பராமரிப்பது, வாழ்வை அமைத்துக் கொள்வது, பணியிடத்தில் போட்டியிடுவது, மற்றும் நமக்கு நாமே நேரம் ஒதுக்கிக்கொள்வது எல்லாம் நாம் நம் சுய விருப்பங்களுக்காக நாம் விடுக்கும் கோரிக்கைகள் என்பதும் தெரிகின்றது. ஆயினும் வேதாகமம் நம் சுய விருப்பங்களை மட்டும் பார்க்காமல் பிறருடைய நலன்களையும் பார்க்கவேண்டும் என்பதை கற்பிக்கிறது. அது நம்மை விட மற்றவர்களை எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதை கற்பிக்கிறது. தன்னலமே கருதுகிற நோக்கம் மற்றும் பெருமையினால் நாம் ஊக்கமடைய கூடாது. "பயனற்ற தற்பெருமை." நம்முடைய குறிக்கோள் இயேசு கிறிஸ்துவை முதலில் மதிக்கவும், இரண்டவாதாக மேலிருந்து மற்றவர்களை மதிக்கவும் மூன்றாவதாக நம்மை மதிக்கும் வகையிலும் அமைந்து இருக்கவேண்டும். இதை நாம் செய்தால் தக்கசமயத்தில் நாம் மதிக்கப்படுவோம். இயேசு சொன்னதுபோல அவர்களை மீண்டும் கண்டடையாமல் நாம் நம் வாழ்க்கையை இழக்க முடியாது. (மத்தேயு 10:39).

இத்தத்துவத்தை இன்றைய நடைமுறை வாழ்க்கையில் அமுல்படுத்துவதற்காக எடுக்கவேண்டிய முயற்சிகள்

முயற்சி 1

"மற்றவர்களை மதிக்கவேண்டும்" என்றஈவை குறித்து கவனமாயிருங்கள்! தொடரவிருக்கும் கேள்விகள் உங்களுக்கு உதவும்:
உங்களை விட மற்றவர்களை மதிக்க வேண்டுமென்று நீங்கள் முயற்சித்த எத்தனை சூழ்நிலைகளை உங்களால் நினைவிற்கு கொண்டுவர முடியும்? நேற்று எப்படி? சென்ற வாரம் எப்படி? சென்ற மாதம் எப்படி? எந்தவகையில் நீங்கள் மற்றவர்களுக்கு உங்கள் உண்மையான பாராட்டுதலை அளித்தீர்கள்?

இந்த இடத்தில் கவனமாயிருங்கள்! நாமெல்லாம் தட்டிக்கொடுத்து பாராட்டுபவர்களை சந்தித்திருப்போம். அவர்கள் எல்லோரும் மற்றவர்களை உயர்த்தி பார்க்கக்கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தாங்கள் உயர நினைக்கும் சந்தர்ப்பவாதிகள். இது தான் அவர்களின் சிறந்த குறிக்கோள். நாம் அவர்கள் முதுகில் சுரண்டினால் அவர்களும் நம் முதுகில் சுரண்ட முன் வருவார்கள். மற்றவர்களுக்கு நாம் உதவினால் அவர்கள் நமக்கு உதவுவார்கள் என்ற பொன் விதியை இவர்கள் மாற்றிவிட்டதாக யாரோ சொன்னார்கள். நம்மை விட மற்ற ஒருவரை நாம் மதிக்கவேண்டும் என்று பவுல் சொன்ன வேலையில் நிச்சயமாக அவன் இதை தன் மனதில் நினைத்திருக்கமாட்டான்.

இத்தகைய சூழ்ச்சிமுறைகள் எப்பொழுதும் எதிர் விளைவுகளைக் கொண்டுவரும். இது உண்மையில்லாமையை வெளிப்படுத்தும். உண்மையில் இத்தகைய மக்களுக்கு விரைவில் முடிவு கிடைக்கவில்லையென்றால் அவர்கள் தங்கள் அணுகு முறையை அடிக்கடி மாற்றிக்கொள்கின்றனர். இத்தகைய மக்கள் மற்றவர்களை உண்மையில் முன்னிற்கு கொண்டு வருவதற்கு பதிலாக அவர்களை கீழே தள்ள முன்வருவார்கள். நாம் மற்றவர்களை உண்மையில் மதித்தால், அவர்கள் நமக்கு பதிலளிக்கவில்லையென்றாலும் நமக்குள் அவர்களை பழிக்குபழி வாங்கும் எண்ணத்தை வளர விடமாட்டோம்.

முயற்சி 2

இப்போதுநீங்கள்இருக்கும்நிலைக்குஉதவியவர்களுக்குமதிப்புகொடுக்க நீங்கள் மறக்கவேண்டாம்!

நான் ஒரு பேராசிரியராகவும் போதகராகவும் இருந்து பல இளைஞர்களுக்கு, குறிப்பாக ஆண்களுக்கு பயிற்சிக் கொடுத்து உதவியுள்ளேன். சிலருக்கு மிகவும் குறிப்பிடத்தக்க வழியில் நான் உதவியுள்ளேன்.என்னுடையசொந்தசெல்வாக்கைபயன்படுத்திவாய்ப்பின் கதவுகளை,தொலைபேசிஅழைப்பின்மூலம்திறந்துள்ளேன்.தேவைப்படும் நேரத்தில் முக்கியமான நபர்களிடம் சந்திப்பு அனுமதியை நானே சுயமாக வாங்கிக் கொடுத்து அவர்களுக்கு பாலம் அமைத்து கொடுத்துள்ளேன்.

எதிர்பாரதவிதமாக இந்த கதவின் வழியாக வந்த சில இளைஞர்கள் எப்போதுமே திரும்பிப் பார்த்து கூட நன்றி சொல்வதில்லை. உண்மையில் அவர்கள் தங்கள் சொந்த கதைகளைச் சொல்லும்போது அவர்கள் இந்த நிலையை அடைய உதவியாளார்களைப் பற்றி அவர்கள் கூறுவதை நாம் எப்போதுமே கேட்க முடியாது.

இந்ததனிநபர்களைப்பார்த்துசிலவேலைகளில்மிகவும்ஏமாற்றத்தின் பக்கம் ஈர்க்கப்படுகிறோம் விசேஷமாக அவர்கள் முழு நேர ஊழியத்தில் இருக்கும் பொழுது அவர்கள் எப்படியோ சௌகர்யமாக தங்களுக்கு உதவியவர்களை, அவர்களை நம்பியவர்களை வாய்ப்பின் கதவுகளை திறந்தவர்களை மறந்துவிட்டார்கள். இது எனக்கு தெரிந்த மற்ற கிறிஸ்தவ தலைவர்களுக்கும் பொருந்தும்.

நாங்கள்அனைவரும்மற்றவர்களின்உதவியைவைத்துதான்நாங்கள் இருக்கும் இடத்தை பெற்றோம் என்பது உண்மை. என் வாழ்க்கையில் இது உண்மையாகிற்று என்பது எனக்குத் தெரியும். என் மீது தனிப்பட்ட முறையில்அக்கரைஎடுத்துக்கொண்டமூடிவேதாகமகல்லூரியில்இருக்கும் பேராசிரியரான அரால்டு கார்னர் அவர்களுக்கு நான் எப்பொழுதுமே நன்றியுடன் இருப்பேன். என்னை நான் நம்பாத வேலையிலும் கூட அவர் என்னை நம்பினார். அவர் பல்வேறு மாநாடுகளில் பேசுவதை கவனிப்பதற்காகவும் அவர் மக்களுடன் உரையாடுவதை காதுகொடுத்துக் கேட்பதற்காகவும் என்னை அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் அழைத்துச்செல்வார். அப்படிப்பட்ட மாநாடுகள் ஒன்றில் நான் பேசி என் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள முதல் வாய்ப்பை அவர் எனக்குத் தந்தார். அவருடைய சிபாரிசின் மூலமே நான் என் முதல் காட்டுரையை எழுதி வெளியிட்டேன். அவர் எனக்கு அமைத்துக் கொடுத்த பாலத்தால் தான் குறிப்பிடத்தக்கமுதல்ஊழியஅனுபவம்எனக்குகிடைத்தது.ஒருகுறிப்பிட்ட சூழ்நிலையில் அவர் எனக்கு சிபாரிசு செய்ததால் தான் என்னால் வேதாகம கல்லூரியில் ஆசிரியராக முடிந்தது.

இந்தபாடத்தில்நான்போதித்தைபழக்கப்படுத்தஎந்தமுயற்சியையும் எப்போதுமே எடுக்கவில்லை. கூடவே அவர் எனக்கு செய்ததை மறக்க நான் ஒருபோதும் அனுமதி கொடுத்தது கிடையாது. அவருக்கு அடிக்கடி நன்றி செலுத்தவேண்டும் என்று நான் விரும்பியதால் அவர் வாழும் காலம் முழுவதும் தக்க காலங்களில் அவருக்கு நன்றி செலுத்துவதை நான் ஒரு வழக்கமாகவே ஆக்கிக்கொண்டேன். என்னால் செய்ய முடியாத காரியங்களுக்காக நான் நற்பெயரை எடுக்க நினைத்தேனே தவிர அவர் எனக்கு செய்தவற்றிற்காக இல்லை என்பது எனக்குத் தெரியும், எனவே அவரைவிடஎனக்குமதிப்புகொடுக்கநான்ஈர்க்கப்பட்டகாலங்கள்இருந்தது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆயினும் அது நடந்த பொழுது நான் மீண்டும் பழைய பாதைக்கு வர முயற்சி செய்து நற்மதிப்பு எங்கு தேவைப்பட்டதோ அங்கு அதை கொடுக்கவும் முயற்சி செய்தேன். என்

வாழ்க்கையின் எஞ்சி உள்ள காலத்திலும் அதற்கு பின் உள்ள முடிவற்ற காலத்திலும் நான் இந்த மனிதருக்கு எப்பொழுதும் நன்றியுள்ளவனாகவே இருப்பேன். நான் கர்த்தரின் ராஜ்யத்திற்கு என்னால் முடிந்தவரை செய்தமையால், என்னைவிட அவருக்கு அதிக அளவில் வெகுமதி கிடைக்கும் என்பது உறுதி.

நான் மீண்டும் ஒரு முறை சொல்கிறேன். இந்த நிலைமையில் இருக்க உங்களுக்கு உதவியவர்களை நீங்கள் மறக்கவே கூடாது. நீங்கள் அவர்களுக்கு கடைசியாக எப்போது நன்றி கூறினீர்கள்?

முயற்சி 3

மற்றவர்களை நீங்கள் பாராட்டுவதிலும் அவர்களின் வெற்றியைக் குறித்து நீங்கள் சந்தோஷப்படுவதிலும் உங்களுக்கு கஷ்டம் இருந்தால் உங்களுடைய தனி மனிதத்தன்மையை அருகில் சென்று பாருங்கள். தொடரும் சோதனைகள் உங்களுக்கு உதவும்:

1.சில மக்களால் பிறரை பாராட்டவும் அவர்களின் வெற்றியில் சந்தோஷப்படவும்முடியாது,ஏனென்றால்அவர்கள்எப்போதுமேதமக்குத் தாமே கவனத்தின் நடுநிலையாக இருக்கின்றனர்.

உதாரணமாக, ஜேன் அவள் குடும்பத்தில் ஒரே குழந்தை, கூடவே அவளுக்கு வேண்டிய எல்லாமே எப்போதுமே கிடைத்தது. வருடங்கள் செல்லச்செல்ல அவள் தன்னலவாதியாக மாறிவிட்டாள். இப்போது அவள் இளம்பெண்ணாக இருந்து அவளுடைய கணவரைக் கூட பாராட்ட முடிவதில்லை.ஆனால்அவரிடம்போட்டிபோடவேஅவள்முன்வருகிறாள். ஆனால் அவளுடைய பிரச்சினை அவளுடைய திருமண வாழ்க்கையை அழித்துவிடும்.

உண்மையில்இது ஆவிக்குரியமற்றும்உணர்ச்சியின்பிரச்சினையை காண்பித்து, கூடவே பக்குவமடையாததையும் பிரதிபலிக்கிறது. கொரிந்தியரின் பிரச்சினை இதுவாக தான் இருந்தது. உங்கள் பாவத்தை அறிக்கையிட்டு உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொள்ளுங்கள். பிலிப்பியர் 2:3-4 வசனங்களை மனப்பாடம் செய்து கொண்டு ஒவ்வொரு நாளும் உற்சாகப்படுத்தும் இவைகளைத் தியானியுங்கள்.

2. சிலருக்கு மற்றவர்களைப் பாராட்டுவதிலும் மதிப்பதிலும் கஷ்டம் இருப்பதற்கு காரணம் அவர்கள் பாதுக்காப்பற்று இருப்பது தான். இந்த சூழ்நிலைகளின் முடிவு ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. ஆனால் உணர்ச்சியின் இயக்க ஆற்றல் வேறுபடுகிறது. இவ்வகை மக்கள் தன்னலம் கருதுகிறவர்களாய் இருப்பதை தவிர தங்களைப் பற்றியே உயர்வாக நினைப்பதில்லை. மற்றவர்களை மதிப்பதில் அவர்களுக்கு சிரமம் இருப்பது ஏனென்றால்தங்களைத்தானேமதிக்கவேண்டும்என்றஅவசியம்இருப்பதாக அவர்கள்நினைக்கிறார்கள்.உண்மையில்இப்படிப்பட்டவர்களால்போதிய மதிப்பையும் முக்கியத்தையும் எப்போதுமே பெற இயலாது. அவர்கள் இதையே தின்று தங்களைத் தானே ஆவலுடன் விழுங்கிக்கொள்கின்றனர். மேலும் அவர்கள் அதிக மதிப்புக்காக அழுகின்றனர். இதற்கும் மேலாக அவர்களுக்கு யாரும் முக்கியத்துவம் தருவதில்லை என்ற குற்றச்சாட்டை வேறு சொல்கிறார்கள். இது ஒரு வகை தன்னலமே ஆனால் அவர்களின் ஊன்றுதல் முழுமையான தன்னலவாதிகளில் வித்தியாசப்படுகிறது.

உதாரணத்திற்கு, டாம், அப்படிப்பட்ட ஒரு நபர் தான். குழந்தையாக இருக்கையிலேயேஅவர்கீழேத்தள்ளப்பட்டார்.அவருடையபெறறோர்கள் ஒருவரிடம்இருந்துஒருவர்முக்கியத்துவத்தைபெறநினைத்ததில்தங்களை முழுமையாக ஈடுப்படுத்திக்கொண்டதால் டாமுக்கு அவர்களால்

முக்கியத்துவம் கொடுக்கமுடிவில்லை. இதன் விளைவாக அவர் தனக்குள்ளேயே முக்கியத்துவத்துக்கும் அங்கீகாரத்துக்கும் மனநிறைவடையாத ஆசையுடையமனிதனாககாணப்படுகின்றார். இவைகள் கிடைப்பதற்கு அநேகமாக அவர் என்ன வேண்டுமானாலும் செய்வார்.

டாமுக்குமனரீதியாக ஆவிக்குரியவகையிலும்பிரச்சினைஇருக்கிறது. அந்த காலத்தில் டாமைப் போல உள்ளவர்களுக்கு போதிய அன்பும் முக்கியத்துவமும் கொடுக்கப்படவில்லை. இதன் விளைவாக மற்றவர்களிடமிருந்து உறிஞ்சி கொள்ளும் குணம் படைத்த நபர்களாக வளர்கின்றனர். அவர்களால் கொடுக்க முடியாது, அவர்கள் எப்போதும் பெற்றுக் கொள்வதைத்தான் நினைப்பார்கள். உங்களால் இதனைக் கண்டுபிடிக்க முடியுமா?

இப்படிப்பட்டவர்களுக்கு மற்றவரிடமிருந்து நல்ல அறிவுரை, புரிந்துக்கொள்ளுதல் மற்றும் உதவி ஆகியவைகள் தேவைப்படுகின்றன. தன்னுடைய மனதையும் உணர்ச்சிகளையும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற அவசியத்தை அவர் அடையாளம் கண்டு கொள்ளவேண்டும். வேதாகமத்தின் (பிலிப்பியர் 2:3-4) போன்ற வசனங்களை மனப்பாடம் செய்து கொள்வதுடன் கூடவே அவருக்கு, அவர் நடந்துக்கொள்ளும் விதங்கள் பற்றி நேருக்கு நேரான அன்பு கலந்த ஆலோசனைத் தேவைப்படுகிறது.

இந்தஇரண்டுபிரச்சினைகளில்ஒன்றுஉங்கள்நடத்தையாகஇருந்தால் இன்றே கிறிஸ்துவின் ஆலயத்தில் இருக்கும் பக்குவமடைந்த ஒருவரிடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ளத் தொடங்குங்கள். எப்பொழுதுமே நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் இருக்க வேண்டாம் (உங்கள் பிரச்சினையின் விளைவு என்னவாக இருந்தாலும் அதனைப் பொருட்படுத்தவேண்டாம்). நீங்கள் இதை தொடர்ந்தால் உண்மையாக உங்களைவிடமற்றவர்களைமதிப்பதின்மூலம்கிடைக்கும்ஆசீர்வாதங்களை நீங்கள் இழந்து போவீர்கள்.

நீங்கள் மற்றவர்களை உண்மையாக மதிப்பதின் மூலம் தோல்வி அடையமாட்டீர்கள், கர்த்தர்அதைமறக்கமாட்டார், நீங்கள்மதித்தவர்களும் உங்களைமறக்கமாட்டார்கள். இதனைஞாபகத்தில்வைத்துக்கொள்ளுங்கள்,

முடிவில்லாத வாழ்க்கை

ஆண்டவரே, உமது அமைதியின் ஒரு கருவியாக மாற்றும்
வெறுப்பு உள்ள இடத்தில், நான் அன்பை விதைக்கவேண்டும்
காயமுள்ள இடத்தில் மன்னிப்பாகவும்
சந்தேகம் உள்ள இடத்தில் நம்பிக்கையாகவும்
நம்பிக்கையில்லாத இடத்தில் நம்பிக்கையாகவும்
இருள் இருக்கும் இடத்தில் வெளிச்சமாகவும்
கவலை உள்ள இடத்தில் மகிழ்ச்சியாகவும்

ஒப்பற்ற நல்ல ஆண்டவரே, நான் அவ்வளவாய் தேடாததை
ஆறுதலாக இருக்க ஆறுதலாக இருக்க எனக்கு ஆறுதல் தாரும்
புரிந்துக்கொண்டவனாக இருக்க புரிந்துக்கொண்டவனாக இருக்கச் செய்யும்
அன்புள்ளவனாய் இருக்க அன்பைத் தாரும்
எனென்றால்,
"கொடுப்பதில் தான் நாம் பெறுகின்றோம்"
"மன்னிப்பதில் தான் நாம் மன்னிக்கப்படுகின்றோம்"
"சாவதில் தான் நாம் முடிவில்லாத வாழ்க்கைக்கு பிறக்கிறோம்"

அசிசியின் புனித பிரான்சிஸ்

சிறு குழுக்கள் உரையாடுவதற்கான வழிகாட்டி

தொடக்கம் (ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்)

1. ஒவ்வொருவரும் அவளோ, அவனோ தங்களின் பதிலை இந்த கேள்விகளுக்குபகிர்ந்துகொண்டார்களா? நீங்கள்மிகவும்உயர்வாககருதிய எந்த பாராட்டை அல்லது மதிப்பை பெற்றுள்ளீர்கள்? ஏன்?

2. ஒரு தாம்பளத்தில் தண்ணீரையும் ஒரு துண்டு துணியையும் எடுத்துவிட்டுஅவற்றைஉங்களைச்சுற்றிக்கொள்ளுங்கள்.உங்கள்பக்கத்தில் உள்ள ஆண் நபரோ, பெண் நபரோ அவர்களின் கால்களைக் கழுவுங்கள். அதற்கு பிறகு இந்த கேள்விகளுக்கு உங்கள் பதிலைப் பகிர்ந்துக்கொள்ளுங்கள்.

வேறொருவர் உங்கள் கால்களைக் கழுவும் போது உங்களுக்கு எப்படி இருந்தது?

நீங்கள் மற்றவரின் கால்களைக் கழுவும் போது என்ன நினைத்து கொண்டிருந்தீர்கள்?

மற்றவர் உங்கள் கால்களை அடையாளமாக கடைசி தடவையாக கழுவியது எப்போது?

அவனோ,அவளோ,என்னசெய்தார்கள்?கூடவேஅந்தஅனுபவம் உங்களுக்கு எதனை எடுத்துரைத்தது?

உரையாடலுக்காக

1. யோவான் 13:1-17 ஐ வாசியுங்கள். இயேசு கால்களை கழுவிய சீடர்களில் ஒருவராக நீங்கள் இருந்திருந்தால் நீங்கள் எப்படி நடந்துக்கொண்டிருப்பீர்கள்? இந்தஅனுபவம்உங்களுக்குமற்றசீடர்களிடம் இருந்த உறவை எப்படி பாதித்திருக்கும்? ஒரு வேலை கர்த்தர் வந்து உங்கள் குழுவிற்கு அதே உதாரணத்தைத் தருவாரானால் அவர் உங்கள் கால்களைக் கழுவுவதற்கு பதிலாக அவர் என்ன நடவடிக்கை எடுப்பார்?

2. இயேசுவின் கால் கழுவும் உதாரணத்தில் இருந்து உருவான மற்றவர்களுக்கு சேவை செய்து மதிக்கவேண்டும் என்ற தத்துவத்தைச் செயல்படுத்த நடைமுறையில் உள்ள சில வழிமுறைகள் என்ன?

3. பிலிப்பியர் 2:3ஐ வாசியுங்கள். ஆரோக்கியமான சுய கௌரவத்தையும் உங்களை விட மற்றவர்களை உயர்வாக கருதுவதிற்கும் உள்ளஉறவுஎன்ன?பிலிப்பியர்2:5-11எப்படிஉங்கள்புரிந்துகொள்ளுதலை அதிகப்படுத்துக்கிறது?

4. இந்த கொள்கையை இன்று அமுல்படுத்துவதற்கான நடைமுறை முயற்சிகளில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் பிரச்சனையை நீங்கள் கண்டுபிடித்தீர்களா? உங்கள் போராட்டங்களை வெளிப்படையாக உங்கள் குழுவிடம் பகிர்ந்துக்கொள்ளுங்கள், மேலும் ஒருவருக்கொருவர் ஜெபம் பண்ணிக்கொள்ளுங்கள். (விருப்பம்: நீங்கள் மூன்று அல்லது நான்கு பேர் கொண்ட சிறு குழுக்களைத் தேர்ந்தெடுக்கலாம்).

5. ஒருவருக்கொருவர்மதிப்பதற்குநீங்கள்எடுக்கவேண்டியஅடுத்த முயற்சி என்ன?

முடிவு

கர்த்தர்ஒவ்வொருவருக்கும்கொடுத்துள்ளசக்திக்காகசிறிதுநேரத்தைச் செலவிட்டு, ஒருவருக்கொருவர் மதிப்பை அளித்து, கூடவே அதனை உறுதி படுத்திக்கொள்ளுங்கள். இவைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள்அல்லதுசுயமாகஉருவாக்கிகொள்ளுங்கள்.

1. ஒவ்வொருவரையும் வட்டத்தின் நடுவில் உட்காரவைத்து விட்டு அதே சமயம் குழுவில் உள்ள மற்ற நபர்களுடன் இந்த வாக்கியத்தை நிறைவு செய்யச் செய்யுங்கள்: உன்னைக் கண்டு நான் வியப்படையும் விஷயம் என்னவென்றால்.......

2. மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியத்தை தன் வலதுபுறத்தில் உள்ள ஆண்நபரிடமோபெண்நபரிடமோஒவ்வொருவரும்சொல்லிமுடித்தவாரே அந்த வட்டத்தைச் சுற்றி வாருங்கள்.

3. ஒவ்வொருவரும் கீழே சொல்லப் பட்டுள்ள விருதுகளில் இருந்து ஒன்றை குழுவில் உள்ள மற்ற ஒவ்வொரு நபர்களுக்கும் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். அதன் பிறகு குழுவின் நடுவில் அமர்ந்துக்கொள்ள ஒவ்வொருவரும் வாய்ப்பு எடுத்துக்கொண்டு அதே நேரத்தில் மற்ற நபர்கள் அந்த நபருக்கு என்ன விருதை தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்பதைச் சொல்ல வையுங்கள்.

நோபல் அமைதிப் பரிசு: நாம் ஒத்துக்கொள்ளாத பொழுதும் கூட நம்மை நல்ல நிலையில் இருக்கச் செய்த நபருக்கானது

தங்க உலக விருது: நாம் இருக்கும் இடத்தைவிட உயர்வான இடத்தைப் பார்க்கச் செய்த நபருக்கானது.

ஸடான்லி கோப்பை: கூட்டு முயற்சியின் மூலம் நம் குறிக்கோளை எப்படி அடையவேண்டும் என்பதை தெரிந்த நபருக்கானது.


இண்டி 500 கோப்பை; அவர் முன் செல்ல முன்வராமல் தம்மை நகர்த்திக்கொண்டிருக்கும் நபருக்கு

ஆஸ்கார்; நாம் இப்போது பயின்றதை நடித்துக் காட்டும் நபருக்கு.

மற்றவை:

அடுத்தமுறைக்காக

1. நான்காம் அதிகாரத்தைப் படியுங்கள்.
2. பிலிப்பியர் 2:3-4 வசனங்களை மனப்பாடம் செய்துக் கொள்ளுங்கள்.
3. இந்த வாரம் நீங்கள் வேறு ஒருவரை மதிக்க ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் செய்ததைப்பகிர்ந்துக்கொள்ள தயாராக வாருங்கள்.



ஒருவருக்கொருவர் ஒத்த மனதை உடையவர்களாய் இருங்கள்

நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு.
(ரோமர் 15:5)

சறுக்கு விளையாட்டு எனக்கு அதிகம் பிடிக்கும், கொலராடோவில் உள்ள எனக்கு விருப்பமான மலை கிரெஸ்டட் பியூட் ஆகும். சாயங்காலமாகிவிட்டிருந்தது. நான் மலையை விட்டு இறங்கி, பேருந்தில் நுழைந்து, தங்கும் விடுதிக்கு திரும்ப காத்திருந்தேன்.

அது ஒரு அருமையான நாள்! அந்நாளுக்காக முந்தின நாள் ஓர் அடி உயரத்திற்கு உறைப்பனியை இயற்கைத் தாய் கொட்டியிருந்தாள், பனியை சமப்படுத்துபவர்கள் இரவு முழுவதும் வேலை செய்து அடுத்த நாளுக்காக அச்சரிவை ஆயத்தம் செய்தனர். பகல் வந்தபோது, சூரியன் உதித்து அந்நாள் முழுவதும் பிரகாசித்து. சறுக்கு விளையாட்டுக்கான சூழ்நிலை மிகவும் நன்றாக இருந்தது.

அந்நாளின் இனிமையான நேரத்தை அசைபோட்டவாறு நான் பேருந்தில் அமர்ந்திருந்தபோது, ஒரு இளம் பெண்ணை சுமந்தவாறு ஒரு மனிதர் பேருந்தில் நுழைந்தார். அந்த பெண் சிறு பெண்ணாக இருக்கவேண்டும். மேலும் அவர் அப்பெண்ணின் தந்தை என உடனடியாக முடிவு செய்தேன். அவள் தனக்குத்தானே காயமேற்படுத்திக் கொண்டாள் என்பது எனது முதல் எண்ணமாயிருந்தது. ஆனால் வேறு எங்கோ தவறிருக்கிறது என்பதை நான் கவனித்தேன். அப்பெண் இருக்கையில் அமர்ந்தபோது, அவளை அப்பேருந்துக்குள் தூக்கி வந்த மனிதர் அவளைச் சுற்றி தன் கைகளால் வளைத்து நேராக பிடித்தார். அவர் அப்படி செய்திராவிட்டால் அவள் கீழே விழுந்திருப்பாள். அவள் பேசுவதற்கு முயற்சித்தாள் என்பதையும் கைகளால் ஏதோ கூறுகிறாள் என்பதையும் கவனித்தேன், ஆனால் அவள் வாயின் வார்த்தைகள் குளறிற்று, கைகளோ கட்டுப்படுத்த முடியாதவாறு ஆடின. ஒருங்கிணைப்பில் அவளிடம் பிரச்சனை இருக்கிறது என்பதைக் கண்டேன். அவளுடைய அறிவில் எந்தக்குறையும் இல்லை. அந்தநாள் கொடுத்த மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ள முயன்றபோது அவளுடைய புன்னகை கோணியதாயிருந்தாலும், அவள் மகிழ்ச்சியாகத்தான் இருந்தாள்.

இப்பெண் மனிதக் குறைபாடுகளுடன் கவலைக்கிடமான நிலையில் பிறக்கும் மனிதர்களுக்கு பிரதிநிதியாவாள், இத்தகையவர்களின் மூளை,

சரீரத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு சைகைகளை அனுப்பிவிடுகிறது, ஆனால் உடலின் பாகங்கள் அதற்கேற்ற விதமாக உடனடியாக செயல்படுவதில்லை. இப்பெண் நிச்சயமாக உடல் ஊனமுற்றவளே. மக்கள் பரவலாக "முடக்கம்" என்ற சொல்லினை, இத்தகைய நிலையிலிருப்பவர்களைக்குறிப்பிட உபயோகிப்பதுண்டு. இதுகூட சரியான வார்த்தையாகாது. இப்படி முடங்கிப்போன நிலையிலிருந்தாலும் பனிச்சறுக்கு வண்டியில் அமர்ந்து, அந்நாளை இனிமையாக கழித்ததை தெளிவாக காணமுடிந்தது.

நான் அமர்ந்தவாறே அவளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, என சரீரம் சிறப்பாக இயங்குவது எத்தனை அதிசயமானது என்பதை உணர்ந்துகொண்டேன். என்னுடைய மூளை அளிக்கும் சைகைகளுக்கு ஏற்றவாறு எனது கால்களும் கைகளும் செயலாற்றும் என்ற நம்பிக்கையில், அந்நாள் முழுவதும் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டேன்.

ஆனால் நான் அமர்ந்து சிந்திக்கும்போது, இந்த கொடூரத்தைக் குறித்துச் சிந்தித்தேன். எந்த வகைகளில் பார்த்தாலும், இது மிகப்பெரிய கொடூரமாகும். இன்றைய தினத்தில் உலகம் முழுவதும் பரவியிருக்கும் "முடங்கிப் போன ஆலயங்கள்" எல்லாவற்றையும் சிந்தித்தேன். இயேசு கிறிஸ்து நிலையாக இருக்கும் ஆலயங்களில், தனது சரீரத்திற்கு தேவையான சைகைளை ஒவ்வொரு அவயவத்திற்கும் அனுப்பிவைக்கிறார், ஆனால் அவை அதற்கேற்றப்படி இயங்குவதில்லை. அதற்கு மாறாக, ஐக்கியத்திலும் ஒருங்கிசைவிலும் அவை குறைப்பாடுடையவையாக இருக்கின்றன. அவை மனித சிந்தனைகளாலும் - பிரிவினைகளாலும் நிறைந்து இருக்கின்றன. கொரிந்து சபையானது, இத்தகைய விசுவாசிகளினால் ஆன சரீரமாகும். "நீங்கள் இன்னமும் உலகிற்குரியவர்களாகவே இருக்கிறீர்கள்" என பவுல் எழுதினான். "பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷ மார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?" (1கொரிந்தியர் 3:3).

ஐக்கியத்திற்கான கிறிஸ்துவின் ஜெபம்

யோவான் 17இல் எழுதப்பட்டுள்ள கிறிஸ்துவானவர் பிதாவினிடம் ஜெபித்த ஜெபத்தில், கிறிஸ்தவத்தின் ஒப்பிடமுடியாத நான்கு பெரும் கூறுகளைக் குறித்து நேரடியாக குறிப்பிடுகிறார்-இரட்சிப்பு (17:1-3); தெரிந்தெடுக்கப்படுதல் (17:4-6); பரிசுத்தமாதல் (17:17-19); மகிமைப்படுதல் (17:24). இந்த அழகிய, முக்கியமான ஜெபத்தில் முக்கியமான வேண்டுகோள் ஒன்றிருக்கிறது - கிறிஸ்துவின் சீடர்கள் (எக்காலத்திலுமுள்ள கிறிஸ்தவர்கள்) ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் அனுபவிக்க வேண்டுமென்பதே அது. "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்." என இயேசு ஜெபித்தார் (யோவான் 17:11).

பின்னால் இயேசு இந்த வேண்டுகோளை பெரிதாக்கினார்:

> நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னைவிசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல: அவர்களும் ஒன்றாயிருக்கும்

படிநீர்எனக்குத்தந்தமகிமையைநான்அவர்களுக்குக்கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:20-23).

கிறிஸ்தவத்தின் சாராம்சம்

இந்த ஜெபத்தில் தன்னுடைய ஆலயங்களை குறித்த இயேசுகிறிஸ்துவின் முக்கியமான கவலை வெளிப்படையாக பெரிதாகத் தெரிகிறது. அது தெரியக்கூடிய ஐக்கியமாகவும் - ஒருமைப்பாடாகவும் - கிறிஸ்தவ நற்செய்தியின் முக்கிய சாராம்சத்தை வெளிப்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி" (2கொரிந்தியர் 5:19) என்ற குறிப்பினை இச் சாராம்சம் உள்ளடக்கியுள்ளது. இயேசுவானவர்சரீரத்தில்வந்தகர்த்தராவார்.அவர்கர்த்தருடன்இருந்தவரும் இருக்கின்றவருமாய் உள்ளார். சில சிறந்த ஆச்சரியமான முறைகளில் வெளிப்படும் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒருமைப்பாடானது கிறிஸ்துவே கர்த்தர் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர் கர்த்தராக இருக்காவிட்டால், இரட்சிப்பைக் குறித்த எந்த சட்டமும் இருந்திருக்காது. கிறிஸ்தவமானது மனிதர்களால் உருவாக்கப்பட்ட இன்னொரு மதமாகியிருக்கும்.

சபை வரலாறு முழுவதிலும், கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒற்றுமையைக்குலைப்பது,சாத்தானின்திட்டமாகஇதனால்தான்இருக்கிறது. சாத்தானின் பக்கமிருந்து பார்த்தால் இதற்கு ஒரு மதிப்பு இருப்பது தெரியும். இந்த இந்த ஐக்கியத்தை அவன் உடைத்துவிட்டால், கிறிஸ்துவானவர் கர்த்தரென்ற மிக முக்கிய வல்லமையான ஒரு முறையை அவனால் அகற்றிவிடமுடியும். அந்தச் செய்தியானது மறைக்கப்பட்டாலோ அல்லது பிரகாசம் குறைந்தாலோ, நித்திய பரிதவிப்பிற்கு மக்கள் உள்ளாவர். தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அறிவதைத் தவிர, வேறு எவ்வழியிலும் கர்த்தரை அறிந்து கொள்ள முடியாது (யோவான் 14:6; 20:30-31).

ஒரு வல்லமையான அற்புதம்

கிறிஸ்துவானவர் உலகில் இருக்கும்போது, தான் கர்த்தர் என்பதை மக்களிடம் நிருபிப்பதற்கு, அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் பரலோகம் சென்றபிறகும், இந்த உண்மையை அறிவிக்க தன் சபையை விட்டுச்சென்றார். "ஒருவருக்கொருவர் ஒத்த மனதை உடையவர்களாய் இருங்கள்" என்றிருக்கும் ஐக்கியமானது இயேசுவே கர்த்தர் என்பதை கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்கு தெரியச் செய்வதே ஆலயத்தின் சாராம்சமாகும். இதுவும் கூட ஒரு அற்புதத்தைக் குறிக்கிறது, ஏனெனில், எல்லா இடங்களிலும் உள்ள மக்கள் பிரிந்து போக விழைகிறார்கள். மனிதகுலத்திடம்நல்லிணக்கம்இல்லாததைவரலாறுகாட்டுகிறது.போர்களே இதற்குச்சான்று-இதுமனிதநடத்தைக்கானஅளவுகோலாகும்.உண்மையான ஐக்கியத்தையும், உண்மையான ஒருமைப்பாட்டையும் கிறிஸ்தவர்கள் அல்லாதோர் காணும் போது, அத்தகைய அன்பின் ஒரு பகுதியாவதற்கு அவர்களின் இருதயங்கள் அழுகின்றன.

முதலாவது,ஐக்கியவேதாகமஆலயத்தில்கிட்டியஒருஅனுபவத்தை என்னால் மறக்கவே முடியாது. இயேசு கிறிஸ்துவானவர் மாமிசத்தினால்

ஆன கர்த்தர் என்பதை விசுவாசிக்காத ஒரு இளம் தம்பதியினர் எங்கள் ஆலயத்திற்கு முதல்முறையாகவந்தனர், இது எனக்குத் தெரியாது. ஆயினும் கூட நான் வேதவசனங்களைப் போதிப்பதை மிகவும் கவனமாக கேட்டதுடன், எங்கள் ஆராதனையின் இரண்டாவது பகுதியிலும் பங்கேற்றனர் - இது வெளிப்படையாக பகிர்ந்து கொள்வதற்கான நேரமாகும். அவர்கள் அங்கிருக்கிறார்கள் என்பதைக் குறித்து அறியாமலேயே, ஒரு அமைதியான அழைப்புடன் ஆராதனையை முடிவு செய்தேன். தேவனாகிய இயேசு கிறிஸ்துவை தமது வாழ்வினுள் இரட்சகராக அழைக்கும்படி எல்லோருக்கும் ஒரு வாய்ப்பைக் கொடுத்தேன். அத்தம்பதியினர் அத்தீர்மானத்தைச் செய்தார்கள் என்பதைப் பின்னால் கண்டுப்பிடித்தேன்.

வேறு சிலவற்றையும் கூட கண்டுபிடித்தேன். கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தை கர்த்தர் எடுத்து வருகிறார் என்பது எனது செய்தி அல்ல. மாறாக ஆராதனையின் இரண்டாவது பகுதியில் கிறிஸ்துவின் சரீரமானது அன்புடனும் ஐக்கியமாகவும் செயல்பட்டது. விசுவாசிகள் ஒருவரை ஒருவர் நேசிப்பதையும், ஒருவரையொருவர் மதிப்பதையும், ஒவ்வொருவரின் தேவைகளுக்காக ஜெபிப்பதையும் அவர்கள் கண்டபோது, நற்செய்திக்கு தமது இருதயங்களை திறந்ததாக பிறகு அவர்கள் பகிர்ந்துகொண்டார்கள். சுருக்கமாககூறினால், செயல்படும் விசுவாசிகளின் அன்பு சரீரத்தை அவர்கள் கண்டனர். நான் போதிக்கும், பிரசங்கிக்கும் இறைச்செய்திகளுக்கு பரிசுத்த ஆவியானவர் அவர்களின் இருதயத்தைத் திறப்பது அற்புதமாகும். இதற்காகத்தான் இயேசுகிறிஸ்து ஜெபித்தார், மேலும் இத்தனைக்காலஞ்சென்ற டாக்டர் ஃபிரான்சிஸ் சோஃபர் "இறுதி வருத்தம் தெரிவித்தல்" என அழைத்தார்.

என்ன நடந்தது என ஒரு நிமிடம் எண்ணிப்பாருங்கள்! இந்தத் தம்பதியினர் இவ்வாராதனைக்கு அவிசுவாசிகளாய் வந்தனர் - தேவனாகிய இயேசுகிறிஸ்துவை தமது இரட்சகராக அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்ற கருத்தில் மட்டும் இதனைக் கூறவில்லை. அவர் "மாமிசமாகிய வார்த்தை" (யோவான் 1:14) என்பதைக்கூட அவர்கள் விசுவாசிக்கவில்லை. என்னுடைய செய்தியும், பகிர்ந்து கொள்ளும்படியான அழைப்பும் மட்டுமே கிறிஸ்துவிடம் அவர்களை அழைத்து வந்தது எனக் கூறுவது எனக்கும் - மற்றவர்களுக்கும் எத்தனை எளிதானது, ஆனால் உண்மையில் இது இயேசுவின் ஜெபத்திற்க்கான பதிலாக இருக்கிறது - கர்த்தர் மனிதகுலம் முழுவதையும் நேசித்தபடியினால் (17:23) இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார் என்பதை "இம்முழு உலகமும் தெரிந்துகொள்ளும் விதமாக, முழு ஐக்கியத்திற்குள் நாம் வரவேண்டும்" என்பது அவரின் ஜெபமாயிருந்தது.

கிறிஸ்துவை நோக்கி மக்களை வழிநடத்தும் ஒரு அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்ததால், இப்படி நடப்பதை அடிக்கடி கண்டுள்ளேன். "சரீர நற்செய்தி" என நான் அழைக்கவிரும்புவது இதைத்தான். "ஒருவருடன் ஒருவர் ஒத்த மனநிலையில்" நாம் இருக்கும்போது, அவிசுவாசிகளின் இருதயங்களில் செய்திகள் உயிர் பெறுவதற்கு பரிசுத்த ஆவியானவர் செயல்படுகிறார். கிறிஸ்துவிற்காக ஒரு தீர்மானம் செய்யும்படி நான் வழிநடத்தியிருந்தாலும், உண்மையாகப் பார்த்தால் "முழு ஆலயமும்" அவர்களை கிறிஸ்துவின் மீதான விசுவாசத்திற்கு வழிநடத்தினர். தொடர்ந்து இவ்வாறு நடைபெறுவேண்டுமென்பதே கர்த்தரின் விருப்பமாகும்.

ஐக்கியத்திற்கான பவுலின் ஜெபம்

"ஒருவருக்கொருவர் ஒரேமனநிலையில் இருக்கவேண்டும்" என்ற பவுலின் விளக்கமானது ஒரு வகை ஜெபமாக இருப்பது ஆர்வத்தை ஊட்டுகிறது. இந்த விஷயத்தில் அவன் இயேசுவின் உதாரணத்தைப்

பின்பற்றுகிறான். இந்த "ஒருவருக்கொருவர்" ஜெபத்திற்கு முன்னால் பவுல் இன்னும் இரண்டு "ஒருவருக்கொருவர்" அறிவுரையைக் கொடுப்பதையும் இது ஐக்கியத்திற்கான ஜெபத்திற்கு மேடையாயிற்று என்பதையும் கவனியுங்கள்.

"ஒருவரையொருவர் தீர்க்காதிருங்கள்"

முதலாவதாக "ஒருவரையொருவர் தீர்க்காதிருங்கள்" என பவுல் இந்த விசுவாசிகளிடம் கூறியதோடு, சகோதரன் ஒருவன் வழியிலே இடைகல்லையோ, மறைப்புகளையோ வைக்காமலிருக்க" தீர்மானம் செய்தவர்களாய் இருக்கவேண்டுமெனவும் கூறினான் (ரோமர் 14:3). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கர்த்தருடைய சித்தத்திற்கு மாறான காரியங்களைச்செய்வதற்குநமக்குசுதந்திரம்இருக்கிறதுஎனஉணர்ந்தாலும், இன்னொருசகோதரன்அல்லதுசகோதரிபாவத்திற்குள்தடுக்கிவிழச்செய்யும் அந்த ஒரு நடத்தையையும் தவிர்க்கும்படி அன்பின் சட்டம் கூறுகிறது.

"ஒருவரை ஒருவர் கட்டி எழுப்புங்கள்"

இரண்டாவதாக, ஐக்கியமாகவும் ஒருமைப்பாட்டுடனும் இருக்கவேண்டும் என பவுல் தன் ஜெபத்தைத் தொடங்குவதற்கு முன்னால் இன்னொரு "ஒருவருக்கொருவர்" அறிவுரையைக் கூறினான். அது "ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்" (14:19) என்பதாகும். "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துகொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (எபேசியர் 4:3) என சில அடிப்படை அறிவுரைகளை பவுல் எபேசியருக்கும் அளித்தான்.

நாம்கிறிஸ்தவர்களாகும்போது, கிறிஸ்துவுடனேகூட நாம் ஒன்றாய் இருக்கிறோம் என்பது உண்மையே. இப்படித்தான் தேவன் நம்மைக் காண்கிறார்-இது ஒரு மனிதனையும் அவன் மனைவியும் "ஒரேமாமிசமாக" (5:31) அவர் காண்பதைப் போன்றிருக்கிறது. ஆயினும் கூட, கணவன் மனைவி உட்பட எல்லாகிறிஸ்தவர்களும், வாழ்க்கையின் எல்லாநிலையிலும் இந்த ஐக்கியத்தைப் பிரதிபலிப்பதில்லை, இப்படி நடக்க அவர்கள் எல்லாவற்றையும் செய்யவேண்டும்.

இந்த இடத்தில் அல்லேலன் என்பது "ஒருவருக்கொருவர் உரமளித்தல்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது-இதனைச்சிறப்பாககூறவேண்டுமானால், இது "ஒருவரையொருவர் கட்டியெழுப்புதல்" என்பதாகும்.

மேலும், இந்த ஐக்கியத்தைத் தொடருவதற்கு நம்மை ஏதுவாக்கும் தெய்வீக உதவிகள் நமக்குத் தேவைப்படுகின்றன. இதுதானாகவே நடைபெறாது. கர்த்தர் எதிர்பார்க்கும் வகையான மக்களாக இருப்பதற்கு செயல்களும் முயற்சிகளும் தேவை. இதனால் தான், ஐக்கியத்தை குறித்து இயேசுஜெபிப்பதற்கு முன்னால், அவர் சீடர்களைநேசித்ததைப்போலவே, அவர்களும் "ஒருவரை ஒருவர் நேசிக்கவேண்டுமென" உறுதியான வார்த்தைகளைக் கூறினார். (யோவான் 13:33-34). இத்தகையநிலையானது, நம்மைத் தாழ்த்தி, அறையைக் கடந்து, ஒரு துண்டுத் துணியையும் ஒரு பாத்திரத்தில் நீரையும் எடுத்து ஒருவரின் காலை மற்றொருவா கழுவவேண்டுமென இது பொருள்படுகிறது.

சாத்தானின் அடிப்படைத் திட்டம்

ஒருமனப்படுதலையும்ஐக்கியத்தையும்பவுலின்ஜெபம்கோடிட்டுக்

காட்டுவதும் அதனைக்குறிப்பிடுவதும் ஏனெனில், ஆலய வரலாறு முழுவதிலும்,வேதாகமத்தைவிசவாசிக்கும்கிறிஸ்தவர்களின்ஐக்கியத்தை அழிப்பது சாத்தானின் அடிப்படைத் திட்டமாக இருந்ததே; கிறிஸ்துவிடமிருந்துமக்களைத்தூரப்படுத்தஅவன்விரும்புகிறான்.இதனால் தான் சாத்தான் தவறான மதங்களில் ஒருவித ஐக்கியத்தை ஏற்படுத்த முயல்கிறான் - குறிப்பாக கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை மறுப்பவர்களுக்கு இது மிகவும் பொருந்தும்.

இந்த மிகப்பெரும் சத்தியத்தைக்குறித்து ஒரு நாள் உரையாடிய போதுமார்மோன்களின்ஊழியக்காரர்ஒருவருடன்பேசியதுஎனக்குநினைவு வருகிறது. மிகவும் பிரபலமான நற்செய்தி வேதாகமக் கல்லூரி ஒன்றில் பட்டம் பெற்ற இளைஞர் ஒருவரைப் பற்றி அவர் என்னிடம் கூறினார், அந்த இளைஞர், ஒரு பிரசித்தி பெற்ற ஊழிய நிறுவனத்தின் பிரதிநிதியாக ஊழியக் களத்திற்கு செல்ல திட்டமிட்டிருந்தார். ஆயினும், பட்டம் பெற்ற பின்பு, ஊழியக் களத்திற்கு செல்வதற்கு முன்னதாக, ஒரு மார்மோன் குழுவினரைச் சந்திக்கத் திட்டமிட்டார். அவர்கள் எப்படிச் செயல்பட்டார்களெனவும், அவர்கள் எப்படி ஊழியப் பணி செய்கிறார்கள் எனவும் காண விரும்பினார். அவரால் கற்றுக்கொள்ள முடிபவைகளைப் பார்க்க விரும்பினார். ஆச்சரியப்படத்தக்கவிதமாக, மார்மோனிசக் காற்று பட்டவுடன் - இதுவரை இயேசு கிறிஸ்துவை கர்த்தராக அறிவித்து வந்த இந்த இளைஞர் ஒரு மார்மோனாக மாற தீர்மானித்தார் - அந்த மார்மோன்கள் இயேசு கிறிஸ்து மாமிசத்தில் வந்ததையும், அவர் கர்த்தருடன் இருந்தார் என்பதையும் பகிரங்கமாக மறுத்தனர், அந்த இளைஞர் இத்தகைய ஒரு மதக்குழுவுடன் இணைய முடிவு செய்தார். நீங்கள் ஏன் மார்மோனிசத்திற்கு மாறினீர்கள் எனக்கேட்டபோது, அதற்கான பதிலை நேரடியாகவும் உடனடியாகவும் அந்த இளைஞர் கூறினார். இயேசு கிறிஸ்துவே கர்த்தரென்றும், பரலோகம் செல்வதற்கான ஒரே வழியானது தேவனாகிய இயேசு கிறிஸ்துவைத் தமது சொந்த இரட்சகராக விசுவாசிப்பது மட்டுமே எனபோதித்தநற்செய்தியானவேதாகமத்தைவிசுவாசிக்கும்ஆலயங்களில் காணப்படாத அன்பையும் ஐக்கியத்தையும் மார்மோன்களின் ஆலயத்தில் கண்டதாக அவர் உணர்ந்ததே இதற்கான காரணம்.

அவர் அனுபவித்தது உண்மையான கிறிஸ்தவ அன்பு இல்லை என நமக்கு வேண்டியபடி நம்மால் வாதம் செய்யமுடியும். ஆயினும் உண்மைக் கிறிஸ்தவர்களிடம் இருக்கவேண்டிய கரிசனத்தையும், பாசத்தையும் அங்குக் கண்டார் என்பது அவரின் வார்த்தைகளாகும். இயேசுவானவர்கூறியதைப்போன்று "இந்தப்பிரபஞ்சத்தின்பிள்ளைகள்" சிலவேளைகளில் "ஒளியின்பிள்ளைகளைப்பார்க்கிலும்" அதிகஞானத்தை வெளிப்படுத்துகிறார்கள் (லூக்கா 16:8).

இன்னொரு உதாரணத்தையும் காணலாம். எங்கள் ஆலயத்திற்கு வரும் பெற்றோர்களின், இளைய பெண் ஒருத்தி, சூரியன் சந்திரன் ஐக்கிய ஆலயத்தினால் கவரப்பட்டாள். அன்பையும், ஏற்றுக்கொள்ளுதலையும், ஒரு நோக்கத்திற்கான ஒருமைப்பாடு அம்மக்களிடம் இருப்பதையும் உணர்ந்தாள் - இவற்றை அவள் தன்னுடைய குடும்பத்திலோ, அல்லது அவள் தன் சிறுவயதிலிருந்து சென்றுக் கொண்டிருந்த ஆலயத்திலேயோ காணவில்லை. தம் மக்கள் வேதவசனங்களுக்கு எதிராக நடந்து கொள்ளுகிறார்கள்என்றுஎத்தனைத்தெளிவாக "சரியானகொள்கைகளைக் கூறியும்எப்பயனும்இருக்கவில்லை.அவள்தன்னுடையபெற்றோர்களுடன் எங்கள் ஆலயத்திற்கு வருகைப் புரிந்தபோது ஐக்கிய ஆலயத்திலுள்ள கொள்கைத்தவறுகளைக்கூறி அவள்மனதைமாற்றமுயன்றோம்.ஆயினும் கூட தன்னுடைய உணர்ச்சிகளை மதித்தவைகள், கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மைகளை குறித்த எங்கள் அறிவு பூர்வமான வாதங்களை விட மிகவும் முக்கியமானதாகவிருந்தது.

இந்த இரண்டு நிகழ்வுகளும், கிறிஸ்தவத்தின் அடிப்படை உண்மைகளிலிருந்து மக்களை குருடாக்குவதற்கு சாத்தானிடம் உள்ள வல்லமையைவிளக்குகின்றன.கிறிஸ்துவானவர்கர்த்தர்இல்லையென்றால், அவரால் சிலுவையின் சிறப்பான பலியாக இருந்திருக்கமுடியாது. இது நற்செய்தியின் சாராம்சமாகும் (2 கொரிந்தியர் 5:18-19).

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்கும் சாத்தானின் திட்டம் எத்தனைஆச்சரியமானது!ஒருபுறத்தில்,இயேசுகிறிஸ்துவின்தெய்வீகத்தை உண்மையாகவேவிசுவாசிக்கும்ஆலயங்களில்அன்பையும்ஐக்கியத்தையும் அழிக்க சாத்தான் முயலுகிறான். மறுபுறத்தில், இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுக்கும் ஆலயங்களிலும் குழுக்களிலும், அன்பு மற்றும் ஐக்கியம் ஆகியவை இருப்பதாக காட்டிக்கொள்ள சாத்தான் முயலுகிறான். நற்செய்தியிலிருந்து மக்களை தூரப்படுத்தும் இத்திட்டம் எத்தகையது? ஒரு புறம் பார்த்தால், சத்தியத்தைத் தம்மிடம் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் ஐக்கியம் இல்லாமையால் ஒருவரை விட்டு ஒருவர் தூரமாகப் போகிறார்கள், மறுபுறம், சத்தியத்தை விசுவாசிக்காத, ஐக்கியத்தைக் காட்டிக்கொள்ளும் குழுக்களை நோக்கி கவரப்படுகிறார்கள்.

சாத்தானைத் தோற்கடிக்க முடியும்

அதிர்ஷ்டவசமாக, சாத்தானை தோற்கடிக்க கூடிய முறைகளை கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ளார். "ஒருவருக்கொருவர் ஒரேவிதமான மனதுடன்" இருந்து, அதன் விளைவுக்களை காணமுடியும். இந்த "ஒருவருக்கொருவர்" அறிவுரைகளைநாம்கடைப்பிடிக்கும்போதுஎன்ன நடக்கும்என்பதற்கு,இரண்டுவல்லமையானவிளக்கங்களைக்கூறுகிறேன். இரண்டு வெவ்வேறு தென் அமெரிக்க நாடுகளுக்கு பயணம் செய்தபோது இவை இரண்டும் எனக்கே நிகழ்ந்தன.

ஒரு முதல் சூழ்நிலை

ஒரு சந்தர்ப்பத்தில், ஈக்குவேடாரின் குய்டோவில் ஒரு ஊழியர்கள் குழுவின் நடுவில் ஊழியம் செய்யும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் ஆவிக்குரிய புத்துணர்வையும், உற்சாகப்படுத்துதலையும் பெறுவதற்கான வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். இந்த கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, ஒரு வயதான தம்பதியினரிடம் பேசினேன், அவர்கள் உலகின் அப்பகுதியில், குறிப்பாக ஈக்குவேடாரின் இந்தியஆதிவாசிகளின்நடுவில்பல்லாண்டுகளாகஊழியம்செய்துவந்தனர். நான் எதனைப்பற்றிப் பேசப்போகிறேன் என்பதை அறியாத அவர்கள், தம்முடையஊழியத்தின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்,பரிசுத்தஆவியானவர் மிகஅதிகமாகஊற்றப்பட்டதம்முடையஅனுபவத்தைஎன்னிடம்பகிர்ந்து கொண்டனர். உண்மையாகவே ஆயிரக்கணக்கான இந்த இந்தியர்கள் நற்செய்திக்கு செவிமடுத்ததுடன் இரட்சிப்பிற்காக தமது விசுவாசத்தை இயேசுவின் மீது வைத்தனர்.

அவர்களுடையஉற்சாகப்படுத்தக்கூடியநிகழ்வால்இயற்கையாகவே ஆச்சரியப்பட்டவனாய்இந்தஅதிகப்படியானஆவிக்குரியஅனுபவத்திற்கு காரணமான எந்த குறிப்பிட்ட நிகழ்வாவது இருக்கிறதா என அவர்களிடம் கேட்டேன். அந்தக் கேள்வியைக் குறித்து ஒரு நொடிப்பொழுது அவர்களிருவரும் யோசித்தனர் - அதன் பிறகு, மனைவி பதில் கூறினார் "ஆம்! அங்கு மிக முக்கியமான ஏதோ ஒன்று நடைபெற்றது, ஒரு முறை அப்படி நடைபெற்றது. அப்பொழுதுதான்" அந்த நற்செய்தி பிரசங்கத்திற்கு ஒரு எதிர்பாராத வரவேற்புகிட்டியது."

இந்த தம்பதியினர் தாமறியாமலேயே ஒரு உதாரணத்தைக் கூறினர், அந்த ஆண்டு கூட்டத்தில் பங்குபெற்ற எல்லா ஊழியர்களுக்கும் பிரசங்கிக்கவேண்டுமென நான் திட்டமிட்டிருந்த பிரசங்கத்துடன் அது நேரடித் தொடர்புக் கொண்டிருந்தது. "ஒருவரையொருவர் நேசியுங்கள்" (யோவான் 13:34-35) என்று இயேசு தன்னுடைய சீடர்களுக்கு கூறிய அறிவுரையும், யோவான் 17இன் ஐக்கியத்திற்காக இயேசுவானவர் ஜெபித்த ஜெபத்தில் இருந்து, அந்நாளுக்கான பிரசங்கத்திற்கு தேவையான செய்திகளை எடுத்திருந்தேன்.

மிகப் பெரிய தென்னமரிக்க இந்திய ஆதிவாசிகளுக்கு அநேக ஆண்டுகளாக ஊழியம் செய்து வந்த ஒரு பிரசங்க குழுவினில் இந்தத்தம்பதியினர் ஒரு பகுதியாக இருந்தனர் என்பதைக் கவனிக்கவும். ஆயினும் கூட, மிக அதிக காலமாக, இந்த ஆதிவாசிகளின் நடுவில் ஊழியம் செய்த மிகப்பெரிய ஊழியக் கூட்டத்தாரிடம் ஒரு ஐக்கியமின்மை நிலவி வந்தது. அப்பொழுது கர்த்தரின் பரிசுத்த ஆவியானவர் இந்த ஊழியர்களின் இருதயங்களில் ஒரு சிறப்பு கிருபையின் செய்கை ஒன்றை நடத்தினார். அவர்கள் ஒருவருக்கொருவர் தமது குற்றங்களை அறிக்கையிட்டு பாவ மன்னிப்பு கேட்டனர். ஐக்கியம் உருவாகியது, இந்த மக்களுக்குள் உள்ள அன்பானது மிகவும் உறுதியாகியது, மேலும் அவர்கள் ஊழியம் செய்யும் மக்களுக்கு இது மிகவும் தெளிவாக தெரிந்தது. இதன் தொடர்ச்சியாக, நற்செய்திக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த இந்தியர்களின் நடுவில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டார். ஆயிரக்கணக்கானோர் தம் இரட்சிப்பிற்காக நாடினர். இது இயேசுவின் ஜெபத்திற்கான பதில் என்பதையும், "ஒருவருக்கொருவர் ஒரே விதமான மனநிலையில்" இருக்கவேண்டும் என்ற பவுலின் மனதிலிருந்த "ஒருவருக்கொருவர்" என்ற அறிவுரையின் விளக்கமும் ஆகும்.

பண்பாடுள்ள சூழ்நிலை

என்னுடைய இரண்டாவது அனுபவம் பிரேசில் நாட்டில் கிட்டியது. அங்கு ஜிம் பீட்டர்சன் என்ற என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவர் இருந்தார். அவர் இந்நாட்டிலுள்ள கப்பல் ஊழியர்களுக்கு நடுவே 25 வருடங்களுக்கும் மேலாக ஊழியம் செய்து வந்தார். அவரும் அவருடைய மனைவியான மார்ஜும், மதச்சார்பற்ற மக்களின் நடுவில் பணியாற்றினர், அவர்களில் அநேகர் மார்க்சிஸ்டுகளும், கர்த்தரை அறிய முடியாது என எண்ணுபவர்களுமாகும். அவர்களில் அநேகர் டாக்டர்கள், வழக்கறிஞர்கள், கட்டிடக்கலை நிபுணர்கள் போன்ற நன்கு கற்ற மக்கள் ஆவர். வேதாகமம் என்னதான் கூறுகிறது என்பதை அறிய செய்யும் விதமாக, மீண்டும் மீண்டும் வேதாகமத்தைப் படிக்க செய்வது அவருடைய அணுகுமுறையாகும். கிறிஸ்துவின் மீது அவர்கள் விசுவாசிக்கும்படியான ஒரு நேரம் வருவதற்கு அதிககாலம் பிடித்தாலும், கர்த்தரின் சத்தியத்தைக் குறித்து மிகத் தெளிவாக அறிந்து கொண்டனர் மேலும், வேதவசனங்களின் தெய்வீக ஆசிரியரான பரிசுத்த ஆவியானவரே இம்மக்களை விசுவாசிக்கும் படிச் செய்தவர் (1 கொரிந்தியர் 12:3).

இவர்களில் ஒரு தனிப்பட்ட நபரான மேரியோ நிட்சி என்பவர் தன்னை நாத்திகராக கருதினார். ஜிம் மேரியோவைச் சந்தித்த போது, அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்தவ மனவியலாளர் நடத்திய கூட்டத்தில் அவர் பங்கேற்றவராயிருந்தார். இந்த தொழிலுக்கு புதியவரான ஜிம், வருகைத்தந்திருந்த பேச்சாளருக்காக போர்த்துகேய மொழியை மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். அந்த பிரசங்கம் முடிந்த பிறகு சில கேள்விகளுடன் மேரியோ அவரை நோக்கி வந்தார். மேரியோவின் கேள்வி

கேட்கும் மனப்பாங்கினை அறிந்த ஜிம், வேதாகமம் என்ன கூறுகிறது என்பதைப்பார்ப்பதற்காகஅதனைவாசிக்கிறீர்களாஎனக்கேட்டார்.மேரியோ ஒத்துக்கொண்டார்.

ரோமருக்கு எழுதிய நிருபத்தை வாசிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட இடைவேளையில் அவர்களிருவரும் சந்திக்கத் தொடங்கினர். முதலாம் அதிகாரத்தைஅவர்கள்வாசிக்கும்போது "இயேசுகிறிஸ்து" என்றபெயரை அவர்கள் கண்டனர். இந்த ஒரு நிலையில் இயேசு கிறிஸ்துவைத் தான் இதுவரை விசுவாசிக்கவில்லை என்பதை அறிவித்தார். "அது சரி," ஜிம் பதில் கூறினார் "அவரை 'X' என்று நாம் அழைப்போம். பவுல் கூறுவதை நாம் பார்க்கலாம்.

இத்தகைய ஒரு ஒப்பந்ததை மேரியோ ஏற்றுக் கொண்டார். அடுத்து "கர்த்தர்" என்ற வார்த்தையை அவர்கள் வாசித்தனர். மீண்டுமாக "X" என்ற எழுத்தை "கர்த்தர்" என்ற சொல்லுக்கு மாற்றாக உபயோகப்படுத்த இருவரும் ஒத்துக்கொண்டனர் இப்படியாக வாராவாரம் அவர்களிருவரும் சந்தித்தனர் - அவ்வப்பொழுது இடைவெளி விட்டுத் தொடர்ந்தனா - இதுநான்குவருடங்களாகதொடந்தது.இறுதியாகமேரியோவிசுவாசியானார்.

நான் மேரியோவைச் சந்தித்த போது, அவர் கிறிஸ்தவராகி அநேக ஆண்டுகளாகியிருந்தன அவருடைய வீட்டிற்குச் செல்லும் ஒரு வாய்ப்பு கிட்டியது. அவருடைய வரலாறை அறிந்த நான், அவர் விசுவாசித்திராத சத்தியத்தைஉள்ளடக்கியபுத்தகத்தைஎவ்வாறுவிசுவாசிக்கத்தொடங்கினார் என்று விசாரித்தேன். ஜிம்முடன் சேர்ந்து ஒரு நொடிப் பொழுது நிதானித்து பிட்டுமிகச்சீக்கிரமாக,எவ்விததடங்கலுமின்றிபதில்கூறினார். "ஜிம்மிற்கும் அவர் மனைவியான மார்ஜிற்கும் இருந்த அன்பின் உறவாடுதலே அதன் காரணம். அந்த அன்பும் ஐக்கியமும் அந்த குடும்பத்தில் இருந்தது தான் காரணம்". என அவர் கூறினார் "மேலும் இதனால் தான் வேதவாசிப்பை நான் தொடர்ந்தேன். அவர்களிடமிருந்ததை நானும் பெற்றுக்கொள்ள விரும்பினேன். அவர்களின் உறவாடுதலுக்கிடையே ஏதோ இருக்கவேண்டுமென்பதை அறிந்தேன், மேலும் வேதாகமம் போதித்தை அவர்கள் விசுவாசித்தனர்."

வேதாகமத்தைப் பொருத்தவரை, குடும்பமானது சிறிய ஆலயம். ஐக்கியமாக இருக்கவேண்டும் என்பது ஆலயத்திற்கு மட்டுமல்லாமல், அந்த ஆலயத்திலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பங்களுக்கும் பொருந்தும் என்பதை நாம் இங்கே காண்கிறோம். இந்த ஆய்வில் "ஒருவருக்கொருவர்" அறிவுரைகள் எல்லாம், எல்லோருக்கும் இந்த விதத்தில் பொருந்துகிறது என்பதை நாம் காணலாம். "எங்கெல்லாம் கிறிஸ்தவ உறவுமுறைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இது பொருந்துகிறது.

எருசலேம் ஆலயம் - சிறந்ததோர் எடுத்துக்காட்டு

கிறிஸ்துவானவர் . பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட உடனேயே, எருசலேம் ஆலயம் இயேசுவின் ஜெபத்திற்கு நேரடி பதிலாக உருவாயிற்று. அவர்களுடைய ஐக்கியம் தெளிவாகத் தெரிந்தது. லூக்கா எழுதுகிறான், "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும்தரித்திருந்து,வீடுகள்தோறும்அப்பம்பிட்டுமகிழ்ச்சியோடும் கபடமில்லலாதஇருதயத்தோடும்போஜனம்பண்ணி" (அப்போஸ்தலர்2:46). பின்னால் லூக்கா கூறுகிறான், "விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரேஇருதயமும்ஒரேமனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்" (அப்போஸ்தலர் 4:32).

அங்கு எப்பிரச்சினைகளும் இல்லை என்பது இதற்கான பொருள்

அல்ல. அந்த ஐக்கியத்தை அழிக்க சாத்தான் முயன்றான். உணவை விநியோகிக்கும்போது குறிப்பிட்ட சில விதவைகள் அலட்சியப் படுத்தப் பட்டதாக லூக்கா எழுதியுள்ளான். இது மனஸ்தாபங்களையும் புகார் கூறுதலையும் உருவாக்கிற்று சுருக்கமாக கூறினால், ஐக்கியம் குலைந்தது. இந்த பிரச்சினையை அப்போஸ்தலர்கள் ஞானத்துடனும் கவனமாகவும் கையாண்டு, இத்தகைய ஒரு சூழ்நிலையை சமாளிக்க தகுந்த மனிதர்களை நியமித்தனர். இந்த பிரச்சினை சீக்கிரமாகவே தீர்க்கப்பட்டது. மீண்டும் ஐக்கியம் உருவாக்கப்பட்டது (காண்க: அப்போஸ்தலர் 6:1-4).

ஐக்கியத்தின் விளைவுகள், ஐக்கியத்தைக்குறித்து எழுதப்பட்டிருப்பவைகளை விட மிகவும் முக்கியமானவை. யோவான் 17 இல் எழுதப்பட்டுள்ள கிறிஸ்துவின் தலைமை ஆசாரிய ஜெபத்திற்கான நேரடி பதில் இதுவென நமக்கு மீண்டும் தோன்றுகிறது. அனைத்து மக்களையும் அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்க, தான் (மாமிசமாக)வந்ததைஇந்தஐக்கியம்வெளிப்படுத்தவேண்டுமெனஇயேசு ஜெபித்தார். அப்போஸ்தலர் 2 இல், எருசலேம் ஆலயத்தின் ஐக்கியத்தைக் குறித்து லூக்காவால் எழுதப்பட்டிருப்பவைகளை வாசிக்கும்போது "எல்லா மக்களினதும் ஒத்துழைப்பைப்" பெற்றிருப்பதை நாம் காண்கிறோம் - அது எருசலேமின் கிறிஸ்தவர்கள் அல்லாதோர் என்பதைக் கூறத்தேவையில்லை. "இரட்சிக்கப்படுகிறவர்களைக்கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்." (அப்போஸ்தலர்2:47)என்பதையும் நாம் வாசிக்கிறோம்.

பின்னால்லூக்காஎழுதுகிறான்"விசுவாசிகளாகியதிரளானகூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்" அப்போது ஆலயம்வளர்ந்துகொண்டிருந்தது,இதன்பலனாக, "கர்த்தராகியஇயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது" (அப்போஸ்தலர் 4:32-33). மீண்டுமாக, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் உள்ள ஐக்கியத்திற்கும் பலனுக்கும் உள்ள நேரடி தொடர்பை நாம் காண்கிறோம்.

அப்போஸ்தலர் 6 இல் இதனை ஒத்தவைகளை நாம் காணும் போது நாம் ஆச்சரியப்படக்கூடாது. தேவைகளுள்ள விதவைகளினால் உருவான இடையூறுகள் சரியான பிறகு அப்படியாயிற்று. ஒரு முறை பிரச்சினை ஒன்றைச் சந்தித்து அதனை தீர்த்துக்கொண்டனர், "தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடையதொகைஎருசலேமில்மிகவும்பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்" (அப்போஸ்தலர் 6:7).

உங்கள் ஆலயத்தில் ஐக்கியத்தை உருவாக்குவதற்கான செயல் முறைகள்

முயற்சி 1

ஐக்கியமானது சாத்தியமாகக்கூடிய ஒன்று என்பதை உணர்ந்துக்கொள்ளுங்கள்

முழு உலக ஆலயத்தில் எல்லா விசுவாசிகளையும் ஒரு ஆவிக்குரிய ஐக்கியம் இணைக்கிறது என்பது உண்மைதான். நமக்கு தெரியாவிட்டாலும் கூட நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஒன்றாகவே இருக்கிறோம், இதனை நாம் பரலோகம் செல்லுவதற்கு முன்னதாக அறிந்துகொள்ளவே முடியாது. ஆனால் இயேசுவும் பவுலும் ஜெபித்த ஐக்கியமானது உறுதியானதும், தெளிவாகத் தெரியக் கூடியதுமாகும், இந்த செயல்படும் ஐக்கியமானது

ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும், ஒன்றுப்பட்டுள்ள விசுவாசிகளுக்கு நடுவே இருக்கமுடியும். அது அன்றாடம் இருக்ககூடிய, துணிச்சலான ஐக்கியமாகும். இது எருசலேமில் தெளிவாகத் தெரிந்தது.

அப்படி இருக்கும்போது, ஒரு உள்ளூர் சபையில் ஐக்கியமும் ஒருமைப்பாடும் இருக்கமுடியும். ஒரு விசுவாசிகளின் கூட்டமாகிய குடும்பத்தில் பல்வேறு வகையான தனிப்பட்டவர்கள் இருந்தாலும், அவர்களை ஒரு இருதயம் உடையவர்களாகவும் ஒரு ஆத்துமா உடையவர்களாகவும் ஈர்க்கமுடியும்.

இது மிகப்பெரிய அதிசயமாகும், ஆனால் கிறிஸ்துவுக்குள்ளாக இது சாத்தியமே. புதிய ஏற்பாட்டுக்கால ஆலயங்களின் ஆவிக்குரிய செயல்பாடாக இது இருந்திருந்தால் (அப்படித்தான் இருந்தது, அங்கு அடிமைகளும், அடிமைகளின் எஜமானர்களும், கிறிஸ்துவிற்குள்ளான சகோதரர்களாகபக்கம்பக்கமாகஅமர்ந்திருந்தனர்), "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (எபேசியர்4:3), எனஇருக்கும்இருபத்தியோரம்நூற்றாண்டின்ஆலயத்திலும் இது சாத்தியமே.

முயற்சி 2

ஒருஉள்ளூர்ஆலயத்தில்ஐக்கியமானதுதானாகவேவருவதில்லைஎன்பதை அறிந்து கொள்ளுங்கள்.

பவுல்அறிவுரைக்கூறியதைப்போல், ஐக்கியத்தைஉருவாக்கி அதனை பராமரிப்பதற்கு முயற்சிகள் தேவை. இது உண்மையே, இங்கு கூறியதைப் போல் சூழ்நிலைகளுக்கான ஐக்கியம் இருக்கிறது. ஏனெனில் நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடையகடமைகளைநிறைவேற்றும்போதுசெயல்படும், காணக்கூடிய ஐக்கியத்தை அறியலாம்.

அலட்சியப்படுத்தப்பட்ட விதவைகளின் பிரச்சினையை அப்போஸ்தலர்கள்சந்தித்திருக்கவில்லைஎன்றால்எருசலேம்ஆலயத்தின் ஐக்கியத்திற்குஎன்னவாகியிருக்கும்எனயோசித்துப்பாருங்கள். முதலாவது உள்ளூர் ஆலய பிளவு அங்கு உருவாகியிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை.

யூதமதத்தினால் உருவாகிய இறையியல் பிரச்சனைகளை அந்தியோகியாவின்தலைவர்சந்தித்திருக்காவிட்டால்என்னவாகியிருக்கும் எனயோசித்துப்பாருங்கள்(அப்போஸ்தலர்15). எருசலேம்ஆலோசனைச் சங்கத்தாரின் உதவியுடன் அந்தப் பிரச்சினையை தீர்த்திருக்காவிட்டால், புதிய ஏற்பாட்டு உலகம் முழுவதும் இறையியல் குழப்பங்களும் பிரிவினைகளும் உருவாகியிருக்கும். ஆனால் அவர்கள் பிரச்சினையைச் சந்தித்தப் பிறகு அதற்காக சிலகாரியங்களைச் செய்தமையால் ஐக்கியம் மீண்டும் உருவாகியது.

ஐக்கியத்திற்கு இரண்டு பரிமாணங்கள் இருப்பதை இவைக் காட்டுகின்றன. முதலாவது, கிறிஸ்து நமக்காக ஜெபித்தும் ஜெபித்துக் கொண்டும்இருக்கிறார். சாத்தானைவெல்வதற்குஇயற்கைக்கும்மேற்பட்ட உதவிநம்மிடமஉள்ளது. இரண்டாவதாகநம்மைபிரிக்கும்படியானதவறான புரிந்துகொள்ளுதலைஎடுத்துவரும்எரிச்சலூட்டும்காரியங்களைஅளிக்கும் மனிதசுபாவங்களைஅனுமதிக்காமலிருக்க "எல்லாவிதமுயற்சிகளையும்" நாம் செய்ய வேண்டும். உள்ளூர் ஆலயங்களை உடைப்பதற்கு சந்தேகங்களைப் பயன்படுத்தும் சாத்தான் மகிழ்கிறான்.

முயற்சி 3

ஐக்கியத்திற்கானதிறவுகோலானது அன்பைப்பிரதிபலிக்கும்கிறிஸ்தவ வளர்ச்சி என்பதை அறிந்துக்கொள்ளுங்கள்.

இதற்கு முந்தைய அதிகாரத்தில் காணப்பட்டவைகள் இவைகளே. இதுகொரிந்தியஆலயத்தினால்நன்றாகவிளக்கப்பட்டது (எதிர்மறையாக) அவர்களின் வளர்ச்சி இரங்கத்தக்கதாகவும், அவர்களுடைய மனோபாவங்களிலும்செயல்களிலும் அன்பில்லாதவர்களாயும் இருந்தனர். இதன்பலனாக, புதியஏற்பாட்டு உலகம்முழுவதிலும்உள்ள ஆலயங்களில், மனிதசிந்தனைகளும், பிரிவினைகளும்நிறந்த, ஐக்கியமில்லாதஆலயமாக இது விளங்கியது.

முயற்சி 4

அத்தியாயம் 1,2 மற்றும் 3இலுள்ள "ஒருவருக்கொருவர்" அறிவுரைகளைக் குறித்து ஆராயுங்கள்

"ஒருவருக்கொருவரின் உறுப்பினர்களாக" செயல்படும் போது கிறிஸ்தவர்கள் "ஒருவருக்கொருவர் சகோதர பாசத்துடன் தம்மை அர்ப்பணித்துள்ளனர்" என்றிருக்கும்போது, நாமனைவரும் "ஒருவரையொருவர் நமக்கும் மேலாக மரியாதைச்" செலுத்தும் போது, ஒருவரோடொருவர் ஒருமித்த சரீரமாக வேண்டுமானால் அதற்கு அவசியமான இன்னுமொரு அடிப்படையான "ஒருவருக்கொருவர்" இருப்பதை அடுத்த அத்தியாயம் விவரிக்கிறது.

சிறிய குழுக்களுக்கான உரையாடல் வழிகாட்டி

தொடக்கம்

குடும்பங்கள், நிறுவனங்கள், கிளப்புகள், அமைப்புகள் ஆகியவற்றின் குழு உறுப்பினர்களின் "அங்கங்களை" நன்கு மனப்பயிற்சி செய்யுங்கள். அதன்பிறகு ஒவ்வொருவரையும் பதில் கூறச்செய்யுங்கள்: இந்த அங்கங்களில் எதனிடம் அதிகப்படியான ஐக்கியம் இருக்கிறது? அந்த ஐக்கியம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது?

உரையாடலுக்காக

1. கிறிஸ்தவர்களுக்கு மத்தியிலுள்ள ஐக்கியத்தை அழிப்பதுதான் சாத்தானின் முக்கியமானதிட்டம் என்பதைஒத்துக்கொள்கிறீர்களா? அதுஏன் இத்தனை தீவிரமாகஇருக்கிறது? ஆலயத்தின்நடுவில்உள்ள ஐக்கியம் இல்லாமைக்கு எந்த உதாரணத்தை நீங்கள் கண்டீர்கள்? ஐக்கியமில்லாமையை மேற்கொள்ளும் கிறிஸ்தவர்களிடம் எந்த உதாரணத்தைக் கண்டீர்கள்?

2. யோவான் 17:20-25ஐ வாசியுங்கள். இயேசு ஜெபித்த இந்த ஜெபத்தைக் கேட்ட ஒரு சீடராக நீங்கள் இருந்தால், உங்கள் நடவடிக்கைகள் எந்த வகையானதாக இருந்திருக்கும்?

3. யோவான் 17:23 இல் எழுதப்பட்டுள்ள இயேசுவின் விண்ணப்பத்திற்கு கர்த்தர் எப்படி பதிலளித்தார்? இயேசுவின் இந்த வேண்டுகோளினை நிறைவு செய்ய, இயற்கைக்கும்மேலான உதவியும், மனிதமுயற்சிகளுமாகிய இரண்டு பரிமாணங்களின் செய்கைகளில் உங்கள் பாத்திரம் என்னவென்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?

4. அப்போஸ்தலர் 2:42-47ஐ வாசியுங்கள். ஆதிசபையின் காலத்தில், நீங்கள் ஒரு அவிசுவாசியாக இருந்திருந்தால், எந்த அத்தாட்சிகள் மிகவும் முக்கியமானவைகள் என நீங்கள் கண்டிருப்பீர்கள்? உங்கள் உள்ளூர் ஆலயத்தில் இன்று ஐக்கியத்திற்கான எத்தகைய அத்தாட்சிகளை நீங்கள் காணுகிறீர்கள்?

5. ஐக்கியத்தைவெளிக்காட்ட உங்கள் ஆலயம் எவ்விஷயங்களில் அதிகம் முயற்சி செய்யவேண்டும்? அவற்றை ஒரு தாளில் எழுதுங்கள். தனிப்பட்ட முறையில் இவற்றில் எப்பகுதியை உங்களால் சரிப்படுத்தமுடியும்? எப்படி?

முடிவு

நீங்கள் பட்டியலிட்ட ஐக்கியமில்லாமைக்கான பகுதிகளை நினையுங்கள். ஐக்கியத்தைகடைப்பிடிப்பதற்கானஇரண்டுபரிமாணங்களை நினைவில் வைத்திருங்கள்: அவை தெய்வீக உதவியும், மனித முயற்சியுமாகும். ஒரு குழுவாக இருந்து, ஐக்கியமில்லாத பகுதிகளைச் சரிசெய்யக்கூடியநிலையிலிருக்கும்குழுஉறுப்பினர்களுக்காகஜெபியுங்கள். நீங்கள்பட்டியலிட்டபகுதிகளில்ஐக்கியத்தைமீண்டும்ஏற்படுத்தி அதனைப் பராமரிக்க கர்த்தரின் உதவிக்காக ஜெபியுங்கள்.

அடுத்தமுறைக்காக

1. அத்தியாயம் 5 ஐப் படியுங்கள்
2. ஐக்கியத்திற்காக தொடர்ந்து ஜெபியுங்கள், குறிப்பிட்ட பகுதிகளில் ஐக்கியத்தை மீண்டும் ஏற்படுத்த, குறிப்பிட்ட செயல்களை செய்ய வேண்டியவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.



அத்தியாயம் ஐந்து

ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்

...தலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக் ...ண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள் (ரோமர் 15:7).

மற்றவர்களால்ஏற்றுக்கொள்ளப்படுதலானதுநீங்கள்செய்த அல்லது ...யாத ஒன்றின் அடிப்படையைச் சார்ந்து இருந்த ஒரு ஆலயத்தில் ... வளர்ந்தேன். நீங்கள் செய்த அல்லது செய்யாததின் பட்டியல் ...தாகமத்தின் பட்டியலை சமாதானப்படுத்தவில்லை என்று நீங்கள் ...க்கலாம். ஆனால் இதில் அதிக வேதாகம நடவடிக்கைகள் ...ங்கியிருந்தன, இவற்றில் பெரும்பாலானவை கலாச்சாரமுடைய ...ருந்தது.

சட்டப்படியானதைக்" குறித்து நான் விளக்கிக்கொண்டி ...கிறேன். இயேசு கிறிஸ்துவுடன் உள்ள ஒரு நபரின் உறவை ...டபிடுவதற்காக நாம் பயன்படுத்தும் வேதாகம சட்டங்களையும் ...க்களையும் விட எதுவுமே கிறிஸ்தவர்களுக்கிடையே உண்மையான ...விக்குரிய ஒற்றுமையை அதிக முழுமையாக அசைப்பதில்லை. ...வர்கள் ஏற்றுக்கொள்ளபடுதலும் நிராகரித்தலும் சட்டப்படியான மாற்ற ...யாத மன எண்ணத்தைப் பொருத்திருக்கும் வேளையில், இது அதிக ...ரவாகதீர்ப்புகூறும்கூடவேபோலித்தனமானஆவிக்குரியநடத்தைக்கும் ...வகுக்கும். இது தவறான சட்டத்தை கீறும் குற்றத்தை உருவாக்குகிறது. ...த்தர் கிறிஸ்தவர்களை எப்படி உண்மையான சுய சுதந்திரத்துடன் இருக்க ...ண்டும் என்று நினைத்தாரோ அதைப் பாதிக்கிறது. மேலும் கிறிஸ்தவ ...த்தைக்கான உண்மையான வேதாகம தரத்தை எதிர்ப்பதற்கு அடிக்கடி ... வகுக்கிறது. உண்மையில், சில கிறிஸ்தவர்கள் எப்பொழுதுமே அவர்களுடைய கலாச்சார தரத்தை எதிர்ப்பதில்லை, கூடவே இன்னமும் ...றிஸ்து அவர்களை ஏற்றுக்கொண்டதைப் போல் இவர்கள் மற்றவர்களை ...ற்றுக்கொள்வதும் இல்லை. வேதாகமப் பொறுப்புக்களுடன் குறிப்பிட்ட ...ல்லா தொடர்ச்சியின் கோணத்திலிருந்தும் எதிர்க்கிறது.

நான்வளர்ந்தஆலயத்திற்குபலஅற்புதமானமனிதர்கள்வந்தார்கள், ...வே அந்த குழுக்களுக்குள்ளே நம்ப முடியாத விசுவாசமும் இருந்தது. ...ருப்பினும், அங்கு குறைந்த அளவிற்கே ஆழமான ஆவிக்குரி பன்புகள் ...ருந்தன. கூடவே அதிகமானஉட்பிரிவினைகளும்இருந்தன. முன்முடிவுச் ...செய்யப்பட்ட குறிப்பிட்ட நடத்தை எதிர்பார்ப்புகளை அவர்கள் பூர்த்தி

செய்த பிறகு தான் அவர்களை குழுவின் ஒரு பகுதியாக்க வேண்டும் என்பவர்கள் ஒப்புக்கொண்ட இந்த மத சமுதாயத்தை நான் விட்ட பிறகும் கூட, சுயமாக, தவறான சட்டத்தை மீறும் பாவத்தை பல வருடங்களுக்கு நான் அனுபவித்துக் கொண்டிருந்தேன். நான் குழந்தையாக இருக்கும் பொழுது எனக்கு கற்பிக்கப்பட்ட கலாச்சார தரத்தை விட்டு வேதாகமத்தை நோக்கி என் மனதை மாற்றி அமைத்துக்கொள்ளுவதற்கு எனக்கு ஐந்து வருடங்கள் பிடித்தது. உண்மையான ஆவிக்குரிய பன்பு என்னவென்று எனக்கு *தெரிந்த பிறகும்* கூட, என் உணர்ச்சிகள் இன்னமும் தகுதியற்ற முறையிலே பதிலளித்தன.

கிறிஸ்தவர்கள் பல சூழ்நிலைகளில் என்னவாக மாறியிருக்கிறார்கள் என்பதை பற்றிய ஒரு சோகமான வர்ணனையாக இது உள்ளது. வேதாகமம் கிறிஸ்தவர்களுக்கு நடத்தை எதிர்ப்பார்ப்புகளை வகுத்துள்ளது. ஆனால் குறிப்பிட்ட ஆவிக்குரிய வாக்குமூலங்களை மீறும் வெளிப்புற அலங்காரங்களை பொருத்தே அது தள்ளுபடி செய்வதையும் ஏற்றுக்கொள்ளுதலையும் கண்டிக்கிறது.

சட்டபூர்வமானதும் அனுமதிக்கப்பட்டதும்

கிறிஸ்தவர்களை ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று பவுல் ஊக்கப்படுத்தியதன் மூலம் உண்மையில் என்ன சொன்னான் என்று நாம் விவாதிக்க செல்வதற்கு முன், மக்கள் அடிக்கடி சட்டத்திற்கு எதிராக அடிக்கடி அதிகமாக பிரதிபலிக்கிறார்கள் என்பதையும் கூடவே *"ஆபத்தின் பிடியில் அகப்பட்டுள்ளார்கள்"* என்பதையும் தெளிவாக புரிந்து கொள்ளுங்கள். கிறிஸ்துவுக்குள் அவர்களுக்கு இருக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்தி கர்த்தரின் விருப்பத்திற்கு எதிரான சந்தேகத்திற்கு இடமில்லாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவர்கள் சட்டத்திலிருந்து அனுமதி கொடுப்பதற்கு நகர்ந்து செல்கிறார்கள். உலக நடத்தையை "இரக்கத்திற்கு அடியில்" உள்ளதென்றும் அது "சட்டத்திற்கடியில் இல்லை" என்றும் அவர்கள் நியாயப்படுத்துகிறார்கள்.

இந்த அறிக்கையை நாம் நேராக வைப்போம். கர்த்தருடைய கிருபையின் உண்மையான புரிந்துக்கொள்ளுதலும் இயேசுகிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கும் சுதந்திரமும் பரிசுத்தத்திற்கு அழைத்து செல்லுமே தவிர உலகபிரகாரமானதுக்கு அல்ல. பவுல் தீத்துவிற்கு எழுதிய அவனுடைய நிருபத்தில் இதைப்பற்றி தெளிவாக கூறியுள்ளான். இந்த செய்தி என் வாழ்க்கையை ஆழமாக தொட்டது, கூடவே என் வாழ்க்கையை குறித்து கர்த்தருடைய திட்டத்தை நான் புரிந்துகொள்ள எனக்கு உதவியது. கர்த்தருடைய இரட்சிக்கும் கிருபையை நாம் புரிந்துகொண்டு கூடவே கிறிஸ்துவுக்குள் நமக்கு உள்ளதை நாம் உண்மையில் ஊக்கப்படுத்தும் பொழுது, ஜீவிக்கும் தியாகமாக நம்முடைய சரீரங்களை திரும்ப கொடுப்பதைத் தவிர அவருடைய அன்புக்கு ஈடாக நம்மால் என்ன செய்ய முடியும் (ரோமர் 12:1-2)? தீத்துவுக்கு பவுல் கூறிய இந்த சிறந்த உண்மையை கவனியுங்கள்.

> "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப்

போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்." (தீத்து 2:11-14).

ஐக்கியத்திற்கான திறவுகோல்

நம்முடைய கடைசி அதிகாரத்தில் ஒருமைப்பாட்டின் தத்துவத்தைப்பற்றியும், இயேசு கிறிஸ்துவும் பவுலும் ஏன் இந்த வகையான ஒற்றுமைக்கு ஜெபம் பண்ணினார்கள் என்றும் பார்த்தோம். இந்த பகுதியில் "ஒருவருக்கொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று விசுவாசிகளை விளக்கப்படுத்தினான். கட்டளையின்பகுதியைகுறித்துக்கொள்ளுங்கள்.

"நீங்கள் ஒருமனப்பட்டுநம்முடையகர்த்தராகியஇயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ளவர் களாயிருக்கும்படிஉங்களுக்குஅநுக்கிரகஞ்செய்வாராக. ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள். (ரோமர் 15:5-7).

ஏற்றுக்கொள்ளுதலின் உதாரணமாக இயேசு கிறிஸ்துவை பவுல் பயன்படுத்தினான். இயேசு கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல நாம் மற்ற கிறிஸ்தவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது மிகவும் அடிப்படையான கேள்வியை எழுப்புகிறது. இயேசு கிறிஸ்து உண்மையில் நம்மை எப்படி ஏற்றுக்கொண்டார்? நீங்கள் ஜெர்மன் மொழியில் பேசினால் நான் உங்களைஏற்றுக்கொள்வேன்என்றுஅவர்சொன்னாரா? இதுதற்செயலாக ஒரு சமயத்தில், நான் வளர்ந்த ஆலயத்தில் பிரிவினை மற்றும் ஒற்றுமையின் ஒரு பகுதியாக இருந்தது. உண்மையில் முழு ஆலயமும் ஜெர்மன் கலாச்சாரத்தால் நிறைந்திருந்தது, இது அடிக்கடி வேதாகம கிறிஸ்தவத்துடன் சமமாக்கப்பட்டது.

நாம் குறிப்பிட்ட மொழியைப் பேசுவதால் இயேசு நம்மை ஏற்றுக்கொள்வதில்லை. நம்முடைய நிறம், நம் அந்தஸ்து, நம் செல்வாக்கு, நம் வயது அல்லது நம்முடைய பாலின் அடிப்படையில் இயேசு கிறிஸ்து நம்மை அவருடைய குடும்பத்தில் ஏற்றுக்கொள்வதில்லை. நாம் கிறிஸ்தவர்களாகும் பொழுது, இயேசு கிறிஸ்து நம்மை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்கிறார். கிருபையின் மூலம் விசுவாசத்தின் வழியாக நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம். "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபேசியர் 2:8-9).

இந்த உண்மை *காலங்களின் பாறை* என்ற பாடலில் அழகாக காட்டப்பட்டுள்ளது.

என் கண்ணீர் எப்பொழுதுமே வழிந்தோடுமா,
என்னுடையஆர்வம்உற்சாகமின்மைஇல்லாமல்தெரியப்படாதா,
இந்த பாவங்களை எல்லாம் நிவர்த்தி செய்ய முடியாது,
நீர் எம்மை இரட்சிக்க வேண்டும், உம்மால் மட்டுமே ஆகும்,
எந்த ஈவையும் நான் என் கைகளில் எடுத்துவரவில்லை,
உம் சிலுவையை நான் பற்றியிருக்கிறேன்.

இயேசு கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொள்வதற்கு முன் நம்முடைய செயல்களை சுத்தம் செய்யும்படிக் கூட கேட்பதில்லை. ஆனால், நம்மை அப்படியே நம்முடைய பலவீனங்களுடனும் மற்றும் எல்லாவற்றுடனும் ஏற்றுக்கொள்வேன் என்று அவர் சொல்லி இருக்கிறார். அவரிடம் போய் அவரை பெற்றுக்கொள்ளுமாறு அவர் நமக்கு சொல்லுகிறார், கூடவே அவர் நம்முடைய செயல்களை சுத்தப்படுத்துவார். இதைதான் பவுல் தன்னுடையசிறந்தஉறுதிமொழியானவிசுவாசத்தின்வழியாககிருபையினால் நாம் இரட்சிக்கப் பட்டுள்ளோம் என்று சொன்னான்.

> ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாகஅவைகளைஆயத்தம்பண்ணியிருக்கிறார்(எபேசியர் 2:10).

ஒருவருக்கொருவர் நியாயம் தீர்ப்பது

"ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்ற பவுலின் ஊக்கப்படுத்தலுக்கு, மற்ற கிறிஸ்தவர்களை நியாயம் தீர்க்க உட்காருவது எதிரானது. அப்போஸ்தலன் இந்த இரண்டு கருத்துக்களையும் ரோமர் நிருபத்தில் எழுதி அவனுடைய கருத்தை அழுத்தமாக கூறுவது ஆர்வமளிப்பதாக உள்ளது. அவன் எழுதினான்: "விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச்சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும்அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள்." (ரோமர் 14:1).

இந்த குறிப்பிட்ட புதிய ஏற்பாட்டு ஆலயத்தில் (இதை போன்ற மற்றவைகளிலும்) சில கிறிஸ்தவர்கள் சில நியாயமான நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கு மறுத்துவிடுகின்றார்கள். அந்த நடவடிக்கைகளுடன் சேர்ந்த பழைய பாவமான தொடர்புகளினாலேயே இந்த பிரச்சினைகள் உருவாகி இருப்பினும், இந்த மிகுந்த உண்மையான ஆனால் உத்திரவாதமில்லாதகுற்றத்திலிருந்துமற்றவர்கள்சுதந்திரமாகஇருந்தார்கள்.

விக்கிரகங்களுக்கு படைத்த மாமிசத்தை உண்பது, ரோம மற்றும் கொரிந்திய ஆலயங்கள் இரண்டிலும் காணப்பட்ட ஒன்றாயிருந்தது. பவுல் குறிப்பாக அவனுடைய கொரிந்திய கடிதத்தில் இந்த பிரச்சினையைக் கொண்டுவந்தான்.

> "விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப்பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். ஆனாலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும்இல்லை.சிலர்இன்றையவரைக்கும்விக்கிரகத்தை ஒருபொருளென்றுஎண்ணி விக்கிரகத்துக்குப்படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள்;அவர்களுடையமனச்சாட்சிபலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது. போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது, என்னத்தினாலெனில், புசிப்பதினால் நமக்கு ஒருமேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை." (1கொரிந்தியர் 8:4, 7-8; மேலும் காண்க ரோமர் 14:14)

இந்த பிரச்சனையை பவுல் எப்படிக் கையாண்டான்? முதலில் அவன் பலவீனமானவர்களிடத்திலும் பலமுள்ளவர்களிடத்திலும் பேசினான்.

"புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக; புசியாதிருக்கிறவனும்புசிக்கிறவனைக்குற்றவாளியாகத்தீர்க்காதிருப்பானாக; தேவன் அவனைஏற்றுக்கொண்டாரே." (ரோமர்14:3)வேறுவார்த்தைகளில் கூறினால், கர்த்தர் பாவம் என்று குறிப்பிடாத இடங்களில் நாம் ஒருவருக்கொருவர் நியாயம் விசாரிக்கக்கூடாது. பவுல் கூறினான், "அவனவ்வொருவரும் "அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்" (ரோமர் 14:5).

இரண்டாவதாக வளர்ந்த மற்றும் வளராத கிறிஸ்தவர்கள் ஆகிய இருவரையும் ஒருவருக்கொருவர் நியாயம் விசாரிக்கக் கூடாது என்று பவுல் அறிவுறுத்தியதற்குப்பிறகுகுற்றவுணர்வுஇல்லாமல்விக்கிரகங்களுக்கு படைத்த மாமிசத்தை உண்ணக் கூடிய வளர்ந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல் ஒரு பெரிய பொறுப்பைச் சுமத்துகிறான்.

"எந்தப்பதார்த்தமும்சுத்தமுள்ளதுதான்;ஆனாலும்இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாயிருக்கும். உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்.... அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்." (ரோமர் 14:20-21; 15:1).

நாம்உண்மையில்கிறிஸ்துவுக்குள்வளர்ந்திருந்தால்,நம்மைப்போல் பலமுள்ளவர்களாய்இல்லாமல்,பலவீனமானவர்களாய்இருக்கும்சகோதர சகோதரிகளிடம் நாம் சரியான உணர்ச்சியுடன் இருப்போம். அவர்களை தடுமாடவைத்துப்பாவத்தில்விழச்செய்யும்எதையும்செய்யாமல்இருப்பதில் நாம் கவனமாயிருப்போம். இந்த இரண்டு மன நிலைகளும் உள்ளூர் விசுவாசிகள் குழுவில் ஒன்றுபட்டு செயல்பட்டால், ஒற்றுமை கேள்விக்கிடமில்லாமல்உருவாகும்.பலவீனமாயிருப்பவர்கள்விரைவில் பலமுள்ளவர்களாய்ஆவார்கள்,கூடவேபலமுள்ளவர்களாய்இருப்பவர்கள் இன்னமும் அதிக வளர்ச்சியுள்ளவர்களாய் ஆவார்கள்.

பாரபட்சமாக நடத்தல்

சட்டபூர்வத்தை பற்றி கூறுவதற்கு முன்னால், பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பாரபட்சமாக நடத்தல், ஒற்றுமை மற்றும் மற்றவர்களை ஏற்றுக்கொள்ளுதலில் உள்ள தடை, என்று அறிமுகப்படுத்தியுள்ளான். "ஒருவருக்கொருவர் "ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்" எனஅவன்எழுதினான்."மேட்டிமையானவைகளைச்சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இரங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்." (ரோமர் 12:16).

இந்த பாவத்தை தீங்கிழைப்பதாக அழைத்தான். அவன் "மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக." (யாக்கோபு 2:1) என எழுதும் பொழுது, தவறாக விளக்கம் அளிப்பதற்கு எந்த இடமும் தரவில்லை.

பணக்காரனும்ஏழையும்அடங்கியுள்ளஒருபிரச்சனையையாக்கோபு அறிவித்துக்கொண்டிருந்தான்.பணக்காரனாகஇருந்து,வெளிப்படையாக நன்குஉடையணிந்துஅவர்களுடையசபைக்குள்ஒருமனிதன்வந்தவுடன், தலைவர்கள்உடனடியாகஅவனுக்குசிறந்தஇருக்கையைக்கொடுத்தார்கள். ஆனால் அசிங்கமான உடைகளுடன் ஒரு ஏழை மனிதன் வந்தவுடன், அவர்கள் அதிக முக்கியத்துவம் இல்லாத இருக்கையை கொடுத்தார்கள்.

இதைச் செய்யும் பொழுது, யாக்கோபு கூறினான். "உங்களுக்குள்ளே பேதகம்பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர் களல்லவா?" (யாக்கோபு 2:4) இந்த சொந்த கேள்விகளுக்கு யாக்கோபு இருபொருள் படக்கூடிய முறையில் பதிலளித்துள்ளான்: "பட்சபாத முள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து" (யாக்கோபு 2:9).

மரியாதைச் செய்வதும் பாரபட்சமாக நடத்தலும்

தங்களுடையபொருள்பலத்துடன்மதிப்பைக்காண்பிப்பதும், சலுகை காண்பிப்பதும், கர்த்தருக்குஉண்மையாய்இருக்கும்மற்றவர்களைமதிப்பதும் தவறுஇல்லை. இதைப்போலவே, ஆதரிக்கின்ற, கிறிஸ்துவைமற்றவர்களிடம் பகிர்ந்துக்கொள்கின்ற, மற்றும்கர்த்தரைமற்றவழியில்சேவைசெய்பவர்களை மதிப்பது தவறில்லை. உண்மையில், நாம் அதிகாரம் 3இல் ஏற்கெனவே குறித்துகொண்டது போல, நாம் மற்றவர்களை மதிப்புக்கொடுக்க ஊக்கப்படுத்தபட்டுள்ளோம். நல்ல மனப்பான்மையுடன் இருக்கும் அப்போஸ்தலன் யோசேப்பின் பெயரை பர்னபாஸ் (உற்சாகப்படுத்தும் மகன் என்று பொருள் கொள்ளும்) என்று மாற்றினான். எருசலேமில் உள்ள ஆலயங்களுக்கு தன் செல்வத்தைப் பயன்படுத்தி சேவை செய்ததற்காக அவன் பெயரை இவ்வாறு மாற்றினர் (அப்போஸ்தலர் 4:36-37). இது பொதுவாக மதிப்பு கிடைப்பதைப் பற்றியுள்ளது. ஆனால் இது சலுகைக் கொடுப்பதிலிருந்து அதிகமாக வேறுபட்டுள்ளது. எல்லா கிறிஸ்தவர்களும் அவர்களுடையவிசுவாசத்திற்காகபலவகைகளில்மதிக்கப்படவேண்டும். பொதுவான அடிப்படையில், இது நமக்கு இருக்கும் ஒளியிலுள்ள விசுவாசத்தின்அடிப்படையில்அமைந்திருக்கவேண்டுமேதவிரஅளவின் அடிப்படையில் இருக்ககூடாது.

தவறானஅபிப்பிராயம், சலுகைக்காட்டுதல், வித்தியாசம்காட்டுதல் ஆகியவை, கிறிஸ்துவின் சபையில் இருக்கும் சில கிறிஸ்தவர்களை ஒதுக்கிவிட்டு மற்றவர்களை ஏற்றுக் கொள்கிறது. இது கர்த்தரின் சட்டத்தை எதிர்க்கிறது. இன்னமும் அதிகமாக, இந்தவகையானநடத்தைகிறிஸ்துவின் சபையினுடைய இயற்கையான செயல்பாட்டை எதிர்க்கிறது. நாமெல்லாம் ஒன்று தான். ஏழையோ பணக்காரனோ, இளைஞனோ முதியவனோ, கருப்போவெள்ளையோ, பலமுள்ளவனோ, பலமில்லாதவனோ, சுவீடனைச் சேர்ந்தவனோ அல்லது நார்வேயனோ, ஆங்கிலம் பேசகூடியவனோ, கூடவே ஸ்பானிய மொழியையும் பேசக்கூடியவனோ, அல்லது மற்ற மொழி பேசக்கூடியவனோ, எல்லா உறுப்பினர்களும் முக்கியமானவர்கள் தான். நாம் சலுகை காண்பித்தால், கிறிஸ்துவும் பவுலும் இருவராக சேர்ந்து ஜெபம் பண்ணி, கட்டளையிட்ட கிறிஸ்துவின் சபையில் உள்ள ஒற்றுமை, சமாதானம் மற்றும் ஒன்றாயிருத்தலை அழிக்கிறோம்.

சுவர்களை உடைத்தல்

டல்லாஸ் வேதாகம கல்லூரியில் டோனி எவான்ஸ் என்னுடைய மாணவர்களில்ஒருவராகஇருந்தார். அந்தவேளையில்கல்லூரியின் முதல் கருப்பராக அவர் இருந்தார். டல்லாசில் உள்ள நன்கு தெரிந்த வேதாகம போதிக்கும்ஆலயத்திற்குஅவரும்அவருடையமனைவியும்சென்றபோது என்ன நடந்தது என்பதை டோனி என்னிடம் பகிர்ந்து கொண்டதை நான் எப்பொழுதுமே மறக்கமாட்டேன். நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ, ஆலய டீக்கன் ஒருவர் சத்தமில்லாமல் ஆனால் வேண்டுமென்றே இந்த இளம்தம்பதிகளை கதவுவரைக்கும்வந்துவிட்டுவிட்டு, இந்தஆலயத்திற்கு நீங்கள் அழைக்கப்படவில்லை என்று சொன்னார்.

இதைதவறாகவிளக்குவவதைவிட இந்தகதையினுடையவிளைவை ...ன் பகிர்ந்து கொள்ளவேண்டும். டல்லாசில் நான் முதலில் உருவாக்கிய ...லயமான ஐக்கிய வேதாகம ஆலயத்தை குறித்தும் டோனி என்னிடம் ...ர்ந்துக்கொண்டார். அந்தவேளையில் அவரும் அவர் மனைவி லூயிசும் ...ம்வரவேற்கப்பட்டதாக நினைத்த ஒரே வெள்ளையர் போதிக்கும் ஆலயம் ...துவாக இருந்தது. பிறகு எங்களுடைய முதல் முழுநேர ஆலய நிறுவும் ...ணியாக அவர்கள் மாறினார்கள். டோனி அவருடைய சொந்த நோக்கத்தை ...ருவதற்கு உதவும் வகையில் ஐக்கிய வேதாகம ஆலயத்தில் உள்ள ...யார் இந்த தம்பதியருக்கு மூன்று வருடங்களுக்கான முழு சம்பளத்தை ...ளித்தனர். கருப்புஇனத்தவர்களுக்குள் ஒரு வேதாகமத்தைப் போதிக்கும் ...லயத்தை தொடங்குவதே அவருடைய நோக்கமாயிருந்தது. இப்பொழுது ...ந்த ஆலயம் ஒக்கிலிஃப் வேதாகம ஐக்கியம் என்று உலகம் முழுவதிலும் ...ழைக்கப்படுகின்றது.

போதகராக இருக்கும் எனக்கு டோனியின் சாட்சி ஒரு உண்மையாகவே ...கமாயிருந்தது, ஏனென்றால் ஏற்கெனவே என்னுடைய மக்களுக்கு ... 'ஒருவருக்கொருவர்' கருத்துக்களைப் போதித்துள்ளேன். இதை ...கள் அமுல்படுத்திக் கொண்டிருப்பதை, குறிப்பாக கிறிஸ்து ...க்கொண்டதைப்போல மற்றவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற ...ப்படுத்துதலை பார்ப்பது உணர்ச்சியூட்டுவதாய் இருந்தது. இருப்பினும் ... கதையை, வேதாகமத்தை விசுவாசித்து போதிக்க வேண்டும் என்று ...றையிடும் வெள்ளை ஆலயங்களில் எந்த அளவிற்கு தவறான ...பிப்ராயம் இருந்திருந்தது என்பதை உதாரணத்துடன் விளக்கவே ...ந்துக் கொள்கிறேன். 1970 இல் இருந்து நம்முடைய மனநிலையும் ...லகளும் கனிசமாக மாறியுள்ளது என்பது உண்மை. ஆனால் பல ...டங்களுக்கு முன்னால் அப்படி இல்லை என்பதை நான் நினைவுப்படுத்த ...ண்டியுள்ளது.

பல ஊழியக்காரர்களும், வேதாகமத்தை விசுவாசிக்கும் ...லயங்களும் பல வருடங்களாக தவறான அபிப்பிராயத்தை எப்படி ...ட பிடித்துள்ளன என்பது திடுக்கிடச் செய்கிறது. ஆம், நமக்கு வேண்டும் ...தையும் போதிக்கவைக்க நாம் வேதாகமத்தை மாற்றிவிடலாம், கூடவே ... உண்மையுள்ள மற்றும் நடைமுறைப்படுத்தும் கிறிஸ்தவர்களையும் ...கிறிஸ்தவர்கள் அல்லாதவரையும் உள்ளூர் ஆலயங்களுக்கு போகவிடாமல் ...ப்பதின் மூலம் இதைச் சரியாக செய்து கொண்டிருக்கிறோம். இதை நாம் செய்யும் பொழுது கர்த்தருக்கும் மனிதனுக்கும் எதிராக பாவம் செய்கிறோம்.

ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வதற்கான நடைமுறை முயற்சிகள்

முயற்சி 1

ரோமர் 14 இல் பவுல் எதனைப் போதிக்கிறான் என்பதை புரிந்துக் கொண்டீர்களா என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.

இந்த பகுதி தவறாக புரிந்துக்கொள்ளப்பட்டு, தவறாக அமுல்படுத்தப் பட்டுள்ளது வேதனை அளிக்கிறது. பலமுள்ளவனோ, பலமில்லாதவனோ ஒருவருக்கொருவர் நியாயம் தீர்க்க கூடாது என்று பவுல் போதித்தான். இது ஒரு இரண்டு வகைப் பொறுப்பாகும். இருபததோராம் நூற்றாண்டில் உள்ள பல ஆலயங்களில், பலமுள்ளவர்கள் முழு பொறுப்புகளையும் தாங்குமாறு எதிர்பார்க்கப்பட்டனர். ஆனால், இது பவுலின் போதகத்திற்கு எதிரானது.

இரண்டாவதாக, பலமுள்ள கிறிஸ்தவர்கள் பலமில்லாத சகோதர சகோதரிகளை பாவத்தில் விழ விடாமல் இருப்பதில் கவணமாயிருக்க வேண்டும். இந்த இடத்தில் தான் இன்றைய கிறிஸ்தவர்கள் தவறாக புரிந்துகொண்டுபவுலின்போதகத்தைஎதிர்க்கிறார்கள்.குற்றப்படுத்துவதும், தவறுசெய்வதும்சிலரால்,முக்கியமாகவளர்ச்சியடையாதகிறிஸ்தவர்களால், அவர்களை சோகப்படுத்துவதாகவும் அசௌகரியப் படுத்துவதாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. காயப்படுத்துவதின் மூலமோ, அல்லது சோகப் படுத்துவதின் மூலமோ, அல்லது யாராவது தவறு செய்வதற்கு காரணமாயிருந்தோபவுல்இதைச்சொல்லவில்லை.ஆனால்,இந்தவழியில் மற்றவர்களைஅவர்களுடையதவறானசெயல்களுக்காககுற்றப்படுத்துவது இதற்குள்ளேயே நியாயம் விசாரிக்கக் கூடியது என்று அவன் இதை தெளிவுப்படுத்தியுள்ளான். யாரையாவது தவறு செய்யச்செய்தால், அவனுடைய சக கிறிஸ்தவனை, அவனுக்கு எதிராகவும் ஆண்டவருக்கு எதிராகவும் பாவம் செய்ய வைப்பதற்கு சமம் என்று பவுல் கூறியுள்ளான்.

முயற்சி 2

உங்களுடைய சொந்த, பலவீனமான மனச்சாட்சியின் காரணமாக, நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ள அல்லது நிர்னயித்துள்ள உங்கள் தரத்தின் அடிப்படையில் மற்றவர்களை ஏற்றுக்கொள்கிறீர்களா அல்லது ஒதுக்குகிறீர்களாஎன்பதைப்பார்க்கநீங்கள்உங்கள்சொந்தமனநிலையையும் செயல்களையும் மதிப்பிடுங்கள்.

எதிரிடையாக, சில கிறிஸ்தவர்கள் தம் விசுவாசத்தில் பலவீனமாயிருக்கும் பொழுது அவர்களுக்கென்று வேதாகமத்திற்கு புறம்பான தரங்களை நிர்னயித்துக் கொள்கிறார்கள். காலங்கள் கடந்து அவர்கள்மற்றவர்களுக்குதலைவர்களாகும்பொழுது,ஆவிக்குரியவர்களாக இருக்க வேண்டுமானால், எல்லா கிறிஸ்தவர்களும் அவர்களுக்கென்று நிர்னயித்த அதே தரத்தை உடையவர்களாக இருக்கவேண்டும் என்பது அவர்களின் தேவையாக இருக்கிறது. இதைத் தெரியாமல் இம்மக்கள் தமக்குத்தாமே பலவீனத்தை அதிகப்படுத்திக் கொள்ள அனுமதித்து; அவர்களை விட பலமானவர்களை நியாயம் தீர்க்கவும் அனுமதித் துள்ளார்கள். இது உண்மையில், மற்றவர்களை நியாயம் விசாரிப்பதும், நாம் செய்ய வேண்டியதைப் போல மற்றவர்களை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதுமாயிருக்கிறது.

என் சொந்த கிறிஸ்தவ வாழ்க்கையில் இந்த பிரச்சினையை நான் சமாளிக்கவேண்டியிருந்ததுஎனக்குஞாபகமிருக்கிறது.ஒருகிறிஸ்தவனாக நான் மாறியபோது, சில வகை இசைப்பாங்கும் கிறிஸ்தவ வார்த்தைகளும் என்னைதொந்தரவுசெய்தன.இதற்குமுதற்காரணம்நான்கிறிஸ்தவனாவதற்கு முன் இருந்த என் சொந்த வாழ்க்கை முறை தான். இந்த இசைக்கு சில கிறிஸ்தவர்களிடத்தில்இதேவிதமானஉணர்ச்சிஇல்லாதபோதுநான்எப்படி கஷ்டப்பட்டேன் என்பது எனக்கு ஞாபகமிருக்கிறது.

திரும்பவும் யோசிக்கும் பொழுது, நான் நியாயம் தீர்க்கும் சுபாவத்துடன்இருந்தது எனக்குஇப்போதுதெரிகிறது.இந்தஇசைஎன்னை கவலைபடுத்தியது என்ற காரணத்திற்காக இது மற்ற எல்லோரையும் கவலைப்படுத்தும்என்றுநான்கருதினேன்.எதிர்பாராதவிதமாக,எனக்கென்று ஒருதரத்தைநிர்னயித்துக்கொண்டுஆவிக்குரியபன்பின்ஒருஅறிகுறியாக இதனைப் பொதுப் படையாக்கினேன். உண்மையாக கூறினால் நான் பலவீனமானசகோதரனாயிருந்தேன்.”இதைநான்புரிந்துகொண்டபிறகு, பலஇசைத்தொகுப்புகளைஏற்றுக்கொள்ளவும்உற்சாகப்படுத்தவும்முடிந்தது. இன்னமும் அதிகமாக என் சொந்த மனச்சாட்சியை கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை நான் உணர்ந்தேன். கூடவே கர்த்தரின்

வார்த்தைக்கு அதை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. இன்று பல்வகையான இசைகளை நான் இரசிக்கிறேன். கூடவே என்னுடைய இரசனைகளில் இருந்து அதிக வேறுபாடுள்ள மற்றவர்களின் விருப்பத்தையும் நான் ஊக்கப்படுத்துகிறேன்.

பாவத்தை பற்றி என்ன? மற்றவர்களை நிபந்தனையில்லாமல் ஏற்றுக்கொள்வது என்பது, வேதாகமம் பாவம் என்று தெளிவாக விளக்கியுள்ளதை அப்படியே ஏற்றுக்கொள்வது என்று அர்த்தமில்லை. நாம் அடுத்த பாடத்தில் பார்க்கவிருப்பதைப்போல பவுல் இந்த பிரச்சனையைக் குறித்து உடனடியாக பேசுகிறான். ஒருவருக்கொருவர் ஊக்கப் படுத்த வேண்டும் என்று கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்திய பிறகு, ஒருவருக்கொருவர் அறிவுரைக்கூறுவது என்று அன்பின் அடுத்தப்பகுதிக்கு போகிறான். நாம் பார்க்கப்போவதுபோல, இது இதற்குள்ளேயே கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கான மிகவும் முக்கியமான பகுதியாய் உள்ளது!

சுயதரங்களும் ஸ்தாபன தரங்களும்

ஒரு கிறிஸ்தவ நிறுவனத்திற்கு, வேதாகமத்திற்கு புறம்பேயான தரங்களை நிர்ணயிக்கும் உரிமை இருந்தாலும், வேதாகமத்தின் போதகத்தை மீறும்படி செய்யக்கூடாது என்று நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன். ஆனால் இந்த தரங்களின் அடிப்படையில் மற்ற கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய பண்புகளை நாம் கணக்கிடத் தொடங்கும் வேளையிலும், கூடவே கிறிஸ்தவ வளர்ச்சியின் அடிப்படையில் இந்த தரங்களை நாம் வளர்க்கும் வேளையிலும், நாம் வேதாகமத்தின் போதகத்தை எதிர்க்கிறோம். ஆவிக்குரிய பண்பை அளப்பதற்கு நாம் தவறான தகுதிகளை பயன்படுத்துகிறோம்.

ஆனாலும் வேதாகமத்திற்கு புறம்பான நிறுவன தரங்களை நாம் அனுமதித்தப் பிறகு, நான் என்ன நம்புகிறேனோ அது ஒரு சிறப்பான வழி என்பதை நான் காண்பிக்கலாமா. நாம் ஆவிக்குரிய பண்பின் உண்மையான வேதாகம தகுதிகளைப் போதித்து, அவற்றை அமல்படுத்தும் பொழுது வேதாகமத்தின் தரங்களுடன் கூடுதல் தரங்களை நிர்ணயிப்பது தேவையற்றது என்று நாம் கண்டு கொள்வோம். உண்மையான வேதாகம தத்துவங்கள் மற்றும் போதனையின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் அவர்களின் நடத்தையைக் குறித்து முடிவு எடுக்க கற்றுக்கொள்வார்கள். அவர்கள் இதைச் செய்யும் பொழுது, அவர்கள் தலையில் இருந்து இயக்குவதைவிட இருதயத்தில் இருந்து இயக்குவார்கள். அவர்களுடைய உற்சாகம் வெளியில் இருந்து வருவதைவிட உள்ளிருந்து வரும். மேலும், வேஷம் இல்லாமல் சரியான முடிவுகளை எடுக்க அவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

முயற்சி 3

மற்ற கிறிஸ்தவர்களிடத்தில் முன்தீர்ப்பு மற்றும் சலுகைக்காட்டுதல் ஆகியவற்றைக் குறித்த உங்கள் மனநிலையை மதிப்பிட்டுக்கொள்ளுங்கள்.

முன்தீர்ப்பு மிகவும் சிறிய பாவம். பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்து ஐந்து வருடங்கள் ஆனபின்பே, அப்போஸ்தலனாகிய பேதுருவால் புறஜாதியாரும் இரட்சிக்கப்படக்கூடும் என்ற உண்மையை புரிந்துக்கொண்டு ஏற்றுக்கொள்ள முடிந்தது என்பதை நீங்கள் உணருகிறீர்களா? இருந்தாலும் கூட, அவன் ஒரு காட்சியை கண்ட பிறகே இந்த அறிவு அவனுக்கு உண்டாகியது. இதில் பரலோகத்திற்கு கீழே ஒரு விரிப்பு உண்டாகியது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அசுத்தம் என்று கருதப்பட்ட எல்லா வகையான விலங்குகளும் அதில் இருந்தன. "கொன்று

பூசி" என்று ஒரு குரல் அவனிடம் சொன்னது. பேதுரு மறுத்தான். கூடவே "நான்சுத்தமாக" படைத்தஎதையுமே "அசுத்தம்" என்றுகூப்பிடவேண்டாம் என்று ஆண்டவர் அவனிடம் சொன்னார்.

அதே வேளையில் சிசேரியாவில் வசித்து வந்த கொர்நேலியஸ் என்றபெயர்கொண்டபுறஜாதியானிடத்தில்கர்த்தர்தோன்றினார். கர்த்தரின் சித்தத்தைச்செய்யஇந்தமனிதன்விரும்பியதால், கர்த்தர்அவனைமதித்தார். மேலும் பேதுருவை அனுப்பி வைப்பதாகவும் கூறினார். பேதுரு விருப்பமில்லாமல் வந்து, இந்த புறஜாதியானின் வீட்டிற்குள் புகுந்து சுவிசேஷத்தைப் போதித்தான் (அப்போஸ்தலர் 10:27-28). அந்த வீடு முழுவதும் பரிசுத்த ஆவியானவர் வந்த பொழுது, அப்போஸ்தலர்களின் சிறந்த தலைவனாகிய பேதுரு, இயேசு கிறிஸ்து எல்லா மக்களுடைய பாவங்களுக்காகவும்மரித்தாரென்பதைமுதல்முறையாகபுரிந்துகொண்டான். "இப்போது நான் உணருகிறேன்" என அவன் சொன்னான். "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்துநீதியைச்செய்கிறவன்எவனோஅவருக்குஉகந்தவன்என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்." (10:34-35).

இந்தகதையினைஎன்னுடன்தொடர்புபடுத்தமுடியும். கர்த்தருடைய பார்வையில் நாம் விசேஷித்தவர்கள், என்று போதித்த மதம் மற்றும் கலாச்சார சூழலில் நான் வளர்க்கப்பட்ட காரணத்தால், கர்த்தருடைய விருப்பத்தை பல வகையில் எதிர்க்கிறோம் என்பதை தெரிந்திருந்தாலும், நாம் இருக்கும் இதே நிலையில் இருந்து மற்ற கிறிஸ்தவர்களை ஏற்றுக்கொள்வதற்கு எனக்கு கடினமாகவே இருந்தது. முன்தீர்ப்பும், பெருமையும் நம்முடைய பாவங்களை இப்படி பார்க்கச் செய்கிறது. என்னுடைய சொந்த விசுவாசத்தில் ஒரு பெரிய நெருக்கடியை நான் சந்தித்தேன். அப்போது இதனைக் கண்டுகொண்டேன். என்னுடைய முன்தீர்ப்பை கண்டு கொள்வதற்கு கிட்டதட்ட ஐந்து வருடங்களுக்கும் மேல் ஆனது. என்னுடைய இருதயத்தில் உண்மையில் என்ன இருந்தது என்பதைக்காண்பிப்பதுஒருமிகுந்தவேதனையானஅனுபவமாயிருந்தது.

உங்களைக் குறித்து என்ன? எல்லா விசுவாசிகளையும், கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர சகோதரிகளாக உங்களால் ஏற்றுக் கொள்ளமுடியுமா? இதுஉங்கள்ஆலயத்தில்உண்மையாகவேநடக்கிறதா?

முயற்சி 4

சட்டம் மற்றும் முன்தீர்ப்பை பிரதிபலிக்கும் உங்கள் வாழ்க்கையில் உள்ள எந்த பிரச்சனையிலிருந்தும் மேலே வர இந்த மூன்று குறிப்புகளைப் பின்பற்றுங்கள்.

1. அதனைப் பாவமாக கருதுங்கள் (1 யோவான் 1:9).
2. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மாறவேண்டிய இடத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்? உங்கள் பாவங்களிலிருந்து விடுபட்டு வர உதவுமாறு கர்த்தரிடம் கேளுங்கள். குறிப்பிட்ட பிரச்சனைகளை குறித்து ஜெபம் பண்ணுங்கள்.
3. முயலும்நடவடிக்கைகளைமேற்கொள்ளுங்கள். தொடங்கும்நிலையில் இருந்தால், நீங்கள் ஏற்றுக்கொள்வதற்கு கடினமாயிருக்கும் கிறிஸ்துவின் சரீரத்தின் வேறு உறுப்பினரை தேர்ந்தெடுங்கள். உண்மையான கிறிஸ்தவ அன்பு பிரதிபலிக்கும் அந்த நபருக்காக எதையாவது செய்யுங்கள். உதாரணமாக, அந்த நபரை இரவு விருந்திற்காக உங்கள் வீட்டிற்கு அழைக்கலாம்.

பாவத்தைக்குறித்துநீங்கள்எதையாவதுசெய்யவேண்டுமென்றோ, மாறவேண்டுமென்றோ நினைக்கும்வரை காத்திருக்க வேண்டாம். நீங்கள்

இதைச் செய்தால், அப்படிப்பட்ட நினைவுகள் எப்பொழுதுமே வராது. சரியாகசெய்வதுஎதுஎன்பதைப்பொருத்தேகிறிஸ்தவஅன்புசெயல்படும்.

சட்டபூர்வ நடத்தை அல்லது முன்தீர்ப்பு ஆகியவற்றால் உங்கள் ஆலயம்நிரப்பப்பட்டிருந்தால்,உங்கள்ஆலயத்தில்உள்ளபோதகரையோ அல்லது வேறு யாராவது தலைவரையோ இந்த அதிகாரத்தை வாசிக்கச் சொல்லுங்கள். கூடவே இது வேதாகமத்தின் அடிப்படையில் இருக்கிறதா அல்லது இல்லையா என்பது பற்றி அவரின் கருத்தை உங்களுக்கு கொடுக்கும்படி கூறுங்கள். அவருடையபிரதிபலிப்புகெட்டதாகஇருந்தால் அவருடைய முடிவுகளுக்கு வேதாகம சான்றுகளைத் தரும்படி அவரிடம் தாழ்மையாய் கேளுங்கள்.

சிறுகுழுக்கள் விவாதிப்பதற்கான வழிமுறைகள்

தொடக்கம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் ஏற்றுக்கொள்ளுதல் எப்படி உங்களுக்கு காட்சியளிக்கிறது என்பதை குறித்து ஒரு படத்தையோ, வார்த்தையையோ, வரையவோ, எழுதவோ செய்யுங்கள்.

குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்களுக்கு உங்கள் வரைபடத்தையோ வார்த்தையையோ விளக்குங்கள்.

விவாதத்திற்காக

1.பலவகையானகிறிஸ்தவசமுதாயத்திலும்ஆலயங்களிலும்நடத்தைக்கான வேதாகம தரங்களுக்கு எதிரான எந்த வகையான கலாச்சார தரங்களை கவணித்துள்ளீர்கள்?உங்கள்ஆலயம்வேதாகமத்திற்குபுறம்பானஎத்தகைய தரங்களைக்கொண்டுள்ளது?இந்ததரங்கள்எப்படிவளர்கின்றன?அவைகள் எப்படி உதவியாயிருக்கும்? அவைகள் எப்படி தீங்குள்ளதாய் இருக்கும்?

2. ரோமர் 14:1-15:1 வரை வாசியுங்கள். அந்த இடங்களில் கிறிஸ்தவ சுதந்திரத்துடன் சௌகரியமாக இருக்கிறேன் என்று நினைக்கும் ஒரு சகோதரனாகசகோதரியாக இருந்து, நடத்தையின் எந்த இடங்களில் நீங்கள் உங்களை பலமுள்ளவராக கருதுகிறீர்கள்? அந்த இடங்களில் உங்களின் நடத்தைக்கு மற்றவர்கள் எப்படி பிரதிபலித்துள்ளார்கள்? உங்கள் நடத்தை சரி என்பதில் உறுதியில்லாத பலவீனமான சகோதர சகோதரியிடத்தில் நீங்கள் எப்படி பதிலளித்துள்ளீர்கள்?

3. மற்ற கிறிஸ்தவர்கள் கண்டிக்கும் நடத்தையும், அசௌகரியமாக இருக்கிறேன்என்றுநினைக்கும்ஒருபலவீனமானசகோதரனாகசகோதரியாக எந்த இடத்தில் இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்கள்? அந்த இடங்களில், உங்கள்நடத்தையிலிருந்துவித்தியாசப்படும்நடத்தைஉள்ளவர்களிடத்தில், நீங்கள் எப்படி பதிலளிப்பீர்கள்? அவர்கள் உங்களுக்கு எப்படி பதிலளித்துள்ளார்கள்?

4. சில 'தரங்கள்' வேதாகமப் படியானதா அல்லது முழுமையாக கலாச்சாரமானதா என்பதில் உள்ள எந்த பிரச்சனை உங்களை கஷ்டப்படுத்துகிறது? உங்கள் புரிந்துக் கொள்ளுதலை தெளிவாக்குவதில் இந்த குழுவால் உங்களுக்கு எப்படி உதவமுடியும்?

5. முன்தீர்ப்பும் சலுகைக்காட்டுவதும் உங்கள் ஆலயத்தில் எந்த இடத்தை வகிக்கிறது? இதற்கு பதிலாக, ஏற்றுக்கொள்ளுதலை வளர்க்க உங்களால் எப்படி வேலைச் செய்யமுடியும்?

முடிவு

ஜோடிஅமையுங்கள். முயற்சி 2,3 மற்றும் 4இல் கொடுக்கப்பட்டுள்ளபடியும், "உங்கள் ஆலயத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் ஒருவரைஒருவர் ஏற்றுக்கொள்ள உதவும் நடைமுறை முயற்சிகளுக்குமான," தம் பதில்களைத் தம்முடன் இருப்பவருடன் பகிர்ந்துகொள்ளுங்கள். துணைகள் அவர்களின் பதிலைப் பகிர்ந்துக்கொள்ள வேண்டும். துணையாக இருந்து, ஒருவருக்கொருவர் உரையாடுங்கள், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள், ஒருவருக் கொருவர் ஜெபம் பண்ணுங்கள். இவற்றை இரகசியமாக செய்யவேண்டும் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

அடுத்தமுறைக்காக

1. அதிகாரம் 6ஐ வாசியுங்கள்
2. உங்கள் ஜெப துணைக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.
3. முயற்சி 4 இல் நீங்கள் கண்டுகொண்டபடி உங்கள் ஆலயத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவார் ஏற்றுக்கொள்ள உதவும் நடைமுறை முயற்சிகளுக்கான நடவடிக்கை முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.



அத்தியாயம் ஆறு

ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்

என் சகோதரரே, நீங்கள் நற்குணத்தில் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்.

(ரோமர் 15:14)

நான்பல ஆண்டுகளாகபணியாற்றியதின்மூலம்ஏற்படுத்தியமிகவும் முக்கியமான உறவானது பாவத்தைக் குறித்து இன்னொரு கிறிஸ்தவருடன் போராடிய அனுபவத்திலிருந்து கிடைத்தது. அது இலகுவான குறிக்கோளில்லை (அதை எப்போதும் அசைபோடுகிறேன்). ஆனாலும் கூட, முடிவில் அது உணர்ச்சி பூர்வமிக்க, ஆவிக்குரிய பலனளிக்கும் குறிக்கோளாக இருந்தது. இதற்கு மேலும், தனிப்பட்ட மனரீதியான, மற்றும் ஆவிக்குரியவளர்ச்சியை இது எனக்கு எப்போதும் அளித்தது. என்னுடைய கிறிஸ்தவவாழ்க்கைமுறையைக்குறித்து எடைபோட நிர்பந்திக்கப்பட்டதால் சில மாறுதல்கள் அவசியம் என்பதை அடிக்கடி கண்டு கொண்டேன். மற்றவர்களால் தள்ளப்படுவதையும், உறவுகள் உடைக்கப்படுவதையும் தாங்குவதற்கு சித்தமாயிருப்பதைத் தவிர அன்பிற்கான பெரிய அடையாளம் வேறொன்றுமில்லை. சரியான ஒரு வழியில் புத்திமதி கூறப்பட்டால் கிறிஸ்துவின் நற்செய்திப்படி வாழாத ஒருவர் நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை கண்டிப்பாக உணருவார். அந்த ஒரு நொடிப்பொழுதில் அதனை ஒத்துக்கொள்ள அந்நபருக்கு கடினமாயிருந்தாலும், உள்ளத்தின் ஆழத்தில் இது அவருக்கு நன்கு தெரியும். உங்கள் அன்பிற்காக எப்போதாவது ஒரு நாள் அவர் உங்களுக்கு நன்றி கூறுவார்.

போராட்டம் ஏன் இத்தனைக்கடினமானதாய் இருக்கிறது?

நான் கல்லூரியில் படித்தவாறே கிறிஸ்தவ நிறுவனமென்றில் பணியாற்றியபோது நிகழ்ந்த வேதனை மிக்க நிகழ்வொன்றை நினைவு கூறுகின்றேன். நான் ஒரு வாலிபருடன் நெருக்கமாக பணியாற்றினேன். மற்றவர்களை பற்றி குறை கூறுவதில் அவர் பெயர் பெற்றவராயிருந்தார். அவர் எப்பொழுதும் புகார் கூறிக்கொண்டும் விமர்சித்துக்கொண்டுமிருந்தார். நாம் பேசத் தொடங்கிய போது, மற்றவர்கள் தம் கண்களைச் சிமிட்டி வேறு விதமாக பார்க்கத் தொடங்குவர். ஆனால் அவருடைய மோசமான

நடத்தையை அவரிடம் கூறி அவரைத் திருத்த யாருமே முன் வரவில்லை. அவருடைய முதுகுக்கு பின்னால் அனைவரும் அவரைக் குறித்து பேசிக் கொண்டிருந்தனர்.

இந்த வாலிபருடனான எனது தொடர்பு மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. நாங்களிருவரும் ஒரே அறையில் தங்கியிருந்தோம் எனக்கு கோபம் வரும்போதெல்லாம் எனது நாக்கை இறுக்கமாக கடித்துக்கொள்வேன். அவருடன் போராடவும் எனக்கு துணிச்சல் இல்லை குறிப்பாக நான் வெறுக்கப்படுவதை விரும்பவில்லை. இதனால் தான் மற்றவர்கள் தவறிழைக்கும்போது அவர்களுக்கு புத்திமதி கூற நம்மில் அநேகர் தயங்குகிறோம்.

இத்தகைய நிகழ்வுகளினால், அந்த நிறுவனத்தை விட்டுச் சென்று விட அவர் முடிவு செய்தார். எங்களில் அநேகர் நிம்மதி பெருமூச்சு விட்டோம். ஆனால் அவர் எங்களை விட்டுச் செல்வதற்கு முந்திய நாள், அடக்கிவைக்கப்பட்டிருந்த கோபத்தையும், ஆதங்கத்தையும் என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. வெளிப்படையாக கூறினால் நான் என்ன செய்யப்போகிறேன் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அந்த நேரத்தில் நடந்த நிகழ்வுகளை என்னால் மறக்கமுடியாது. நாம் ஒரு உணவகத்தில் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அப்பொழுது என்னுடைய ஆதங்கத்தை இடை இடையே நிரப்பி, அவருக்குப் பின்னால் மற்றவர்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை கூறினேன். வேறுவழி இல்லாததால், நான் கூறியவற்றை அமைதியாக அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

அப்பொழுது எதுவோ நடந்தது. எங்கள் வீட்டிற்கு திரும்பச் செல்வதற்காக காரில் ஏறி அமர்ந்தோம். நான் பெரிதாக அழத்தொடங்கினேன்! குறைந்தது பத்து நிமிடங்களாவது அழுதிருப்பேன். அப்பொழுது தான் அவர் மிருதுவாகி, மனத்துருக்கதுடன் என்னிடம் பேசத் தொடங்கினார். "நான் கட்டுப்பாடு இழந்ததை" அவர் இரசித்துப் பார்த்தார் என்று நான் எண்ணுகிறேன். இதனை அவர் எப்போதும் செய்திருக்கவேண்டும். இத்தகைய மனநிலையை உடைய மக்கள் மற்றவர்களை "தள்ளிவிட்டு" தம்மைப்போல் மற்றவர்களும் தற்பாதுகாப்பை இழந்து தம்மைப்போலவே நடப்பார்களா என எதிர்பார்ப்பர். மற்றவர்கள் தம்முடைய பலவீனத்தை வெளிப்படுத்தும் போது, உண்மையாகவே அவர்கள் மகிழ்ச்சியடைவர். அவர் கோபப்படாததைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். நான் அவரை எதிர்கொள்ள நேரிட்டாலும் கூட நான் அச்சமயத்தில் குளறுபடி செய்தேன், ஆனால் நான் அவரை நேசிக்கிறேன் என்பதை அவர் கண்டார். நான் அடிபடக்கூடியவன் என்பதை அவர் அறிவார். இரண்டு வருடங்களுக்குப் பின் அவரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. நான் நேர்மையாக செயல்பட்டமைக்கு நன்றி தெரிவித்து எழுதியிருந்தார். "அப்பொழுது நீங்கள் கூறிய அனைத்தும் உண்மையானவை என்பதை நான் அறிவேன்," தொடர்ந்து கூறினார், "ஆனால் அப்போது அதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை இப்போது நான் வளர்ந்திருப்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்!"

புத்தி கூறுதல் என்றால் என்ன?

ரோம கிறிஸ்தவர்களுக்கு பவுல் கூறிய அறிவுரைகளைக் குறிப்பிடுவதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் வெவ்வேறு சொற்களை உபயோகப்படுத்துகிறார்கள். *புதிய அமெரிக்க வேதாகமம்* "ஒருவருக்கொருவர் புத்தி கூறுங்கள் எனக்கூறுகிறது. வில்லியம் என்பவர் *ஒருவருக்கொருவர் ஆலோசனைக் கூறுங்கள்*" என்கிறார். "சரியான" என்ற வார்த்தையை பெக பயன்படுத்துகிறார். புதிய உலக மொழிபெயர்ப்பு

இவ்வாறு கூறுகிறது "என் சகோதரரே.... ஒருவருக்கொருவர் *புத்திசொல்ல* வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்"

"*நவுதிடியோ*" என்ற சொல்லானது சாதாரண உரையாடல்களையோ அல்லது இயல்பான போதனை மற்றும் ஆலோசனை கூறுதல் ஆகியவற்றையோ குறிப்பதில்லை. அது நேரடியான புத்தி சொல்லுதலை, ஏற்படுத்தப்படுவதைக் குறிக்கிறது. புதிய உலக மொழிபெயர்ப்பில், சாம்பேறிகளாக இருக்கும் கிறிஸ்தவர்களை அறிவுறுத்துவதற்கு பவுல் தெசலோனிகேயருக்கு எழுதிய நிருபத்தில் இதற்கான சொல்லாக "எச்சரித்தல்" என்ற சொல்லை மொழிபெயர்ப்பாளர்கள் உபயோகித்தனர் (1 தெசலோனிகேயர் 5:14).[1]

ரோமருக்கு எழுதிய நிருபத்தில் "ஒருவருக்கு ஒருவர் புத்தி சொல்லுங்கள்" என்ற பவுலின் அறிவுரையானது "ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்பதற்கான தெய்வீக சமன்பாடாகும். ஒரு மனிதனின் பாவச்சுபாவத்தைநாம் "ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்பதைப் போல் இது தோன்றலாம். ஆனால் அது அப்படிப்பட்ட ஒன்றல்ல! ஒருவரின் பாவங்களை ஏற்றுக்கொள்ளாமல்" அந்தப் "பாவியை மட்டுமே நம்மால் ஏற்றுக்கொள்ள" முடியும். குறிப்பாக கூறினால் இந்த நிபந்தனையற்ற ஏற்றுக்கொள்ளுதலே மற்றவர்களுக்கு புத்தி கூறி சரி செய்யும் உரிமையை நமக்கு வழங்குகிறது. கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதைப் போல் நாமும் மற்றவர்களைஏற்றுக்கொள்ளும்போது, நமக்காகதேவன்வேதவசனங்களின் மூலம் ஏற்படுத்திய நேரான குறுகலான பாதையை விட்டு விலகிச் செல்வோருக்குஅறிவுரைக்கூறும்உரிமையைநாம்பெற்றுக்கொள்கிறோம்.

ஒரு வாலிபனிடமிருந்து ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. என் மீதும் எங்கள் ஆலய மூப்பர்களின் மீதும், டல்லாஸ் வேதாகமக் கல்லூரியின் பேராசிரியர்கள் மீதும் அவர் கோபத்துடனிருந்தார். என்னையும், வேறு பலரையும் தன்னுடைய பிரச்சனைகளுக்கான காரணம் எனக்கூறி கடுமையாக திட்டியதை தொலைபேசியில் கேட்டது என்னை தூக்கிவாரிப்போட்டது.

அதிர்ஷ்டவசமாக இத்தகைய "சொந்தங்களை" இதற்கு முன் சந்தித்திருக்கிறேன். நான் நிதானம் தவற நேரிடும், ஆனாலும் கூட அதனைக் காட்டிக்கொள்ளாமலிருக்க என்னால் முடிந்தது. இத்தகைய ஆபத்துக்களை சந்திக்கதயாராக இருக்கும் மக்கள் உதவிக்காக கூக்குரலிடுகின்றனர் என்பதை அறிந்திருந்தேன். அவர்களுடைய அனுகுமுறையானது யாரை வேண்டி கூக்குரலிடுகிறார்களோ அவர்களிலிருந்து அவர்களைத் தனிமைப் படுத்தினாலும் அப்படிச்செய்கிறார்கள். இது வித்தியாசமானதாக தெரியலாம். நம்மால் தாக்க முடியும் என்ற மக்களைத் தான் அவர்கள் தாக்குகின்றனர். அது கையை பின்னால் கட்டியிருப்பது என இலகுவாக தப்பார்த்தம் செய்யப்படுகிறது - இப்படித்தான் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது!

இந்த நிகழ்வில் எனது அனுமானங்கள் சரியானவையாக இருந்தன. இந்தவாலிபன் உதவிக்காக கூக்குரலிட்டார். அதிர்ஷ்டவசமாக அவருடைய அனுகுதலை அறிந்துகொண்டேன், என்னை குற்றப்படுத்தியதாக உணர்ந்து, கோப உணர்ச்சிகள் எனக்குள் உருவாகத்தொடங்கினாலும், நான் அவரைப் புறம்பேத் தள்ளிவிடவில்லை - அவர் மீது மிகவும் கோபம் ஏற்பட்டிருந்தும் நான் அப்படி செய்யவில்லை. அதற்குமாறாக அவருடைய பிரச்சினைகளைக் குறித்துநாம் சந்தித்துப்பேசலாம் என அவரிடம் கூறினேன். அந்தசமயத்தில்

---

[1] அப்போஸ்தலர் 20:31 மற்றும் 1 கொரிந்தியர் 4:14ஐயும் பார்க்கவும்.) புதிய உலக மொழிபெயர்ப்பின் மொழிபெயர்ப்பாளர்கள் இதே சொல்லையே உபயோகப்படுத்தியுள்ளனர்.

நான் கூறுவதை அவர் கேட்டார் என்று எனக்குத் தோன்றவில்லை, மேலும் அவருடைய பிரச்சினையை தீர்ப்பதற்கான சரியான மனநிலையிலும் நான் இருக்கவில்லை. ஆகவே நாம் அமைதியாவதற்கு நேரம் தேவைப்பட்டது.

நாம் சந்தித்த போது, அவருடைய உண்மையான பிரச்சினையை பகிர்ந்து கொண்டார். அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் தன்மீதும் தன் அலுவலகத்தின் மீதும் அவர் கோபத்துடனிருந்தார். அவர் தன்னுடைய பதவியை இழந்ததால், அதுசரியானதல்ல என்பதை உணர்ந்தார். அவர் தன்னுடைய மனைவியின் முழு ஆதரவையும் பெற்றுக்கொண்டதாக உணராததால், தன் மனைவியின் மீதும் கோபத்துடன் இருந்தார் (அங்கே நடைபெற்றவைகளுக்கு தன் கணவருக்கும் பங்கு இருக்கிறது என்பதை அவர் ஆழமாக அறிந்திருக்கலாம்). நான் சந்தேகப்பட்ட விதமாகவே அவர் கூறுவதைக் கேட்டேன். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை என் மீதும் என்னை சார்ந்திருந்தவர்கள் மீதும் முந்திய நாள் அவர் திருப்பியிருந்தார்.

இந்த இளைஞர் தன்னுடைய ஆழமான காயங்களையும் வேதனைகளையும் ஒரு நேர்மையான முறையில் வெளிப்படுத்திய பிறகு, இந்த பிரச்சனையை முன்னிட்டு, முந்திய தினம் என்னைத் தாக்கி குற்றப்படுத்தியதற்கு பதிலாக இவ்விதமாக கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என அவரிடம் கூறினேன். "நீங்கள்தான் காரணம்" என்பதற்கு பதிலாக "நான் எண்ணுகிறேன்" என்று தன் காயங்களைக் குறித்து என்னிடம் கூறியிருந்தால் இருவருக்கும் குறைவான வேதனை மட்டுமே உண்டாகியிருக்கும். இத்தகைய உணர்ச்சிவசப்படுதல் இல்லாத சூழ்நிலையில் என்ன நடந்தது என்பதை அவருக்கு விளக்கியிருப்பேன். நாம் பிரச்சனைகளுக்குள் சிக்கிக்கொள்ளும்போது, நமது தவறுகளுக்காக மற்றவர்களை குறைச் சொல்ல தலைப்படுகிறோம்.

இந்த இளைஞனின் உணர்வு மாற்றங்களை என்னால் மறக்க முடியாது. தன்னுடைய கன்னங்கள் வழியே கண்ணீர் வழிந்தோட என்னைப் பார்த்தார். ஒரு கள்ளத்தனம் அவரிடம் தோன்றியது "அது எனக்குத் தெரியும், ஆனால் என்னிடம் உள்ள தவறுகளை கூறுமளவிற்கு என்னை நேசித்த முதல் மனிதர் நீங்கள் தான்!" நான் அதை தொட்டுவிட்டேன் என்பதை அந்நொடியில் அறிந்து கொண்டேன். பரிசுத்த ஆவியானவர் என் சொற்களை எடுத்துக்கொண்டு கடினமான அன்பினால் அவர் இருதயத்தை துளைத்தார்!

எத்தகைய சூழ்நிலைகளும் இப்படியாக மாறும் என்பதை என்னால் கூறமுடியும். நாம் அன்புடனே கூட உண்மையாய் பேசினாலும் கூட எல்லோரும் சரியான முறையில் நடந்துகொள்ளமாட்டார்கள் சிலநேரங்களில் இத்தகைய நேருக்குநேர் அனுகுமுறைகளைக் குறித்தும் நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளமுடியும். அவை வேதாகமக் கொள்கைகளுக்கு ஒத்தவை அல்ல என்பதை இப்போது அறிவேன், இவை எந்த நன்மையையும் அளிக்கவில்லை. இதனால் தான், இத்தகைய தொடர்புகளில் நாம் ஈடுபடும் போது, வேதாகமம் காட்டும் வழிமுறைகளை கவனமாக நாம் பார்க்கவேண்டும்.

"மற்றவர்களுக்கு புத்திமதி கூறும் தகுதியை" நமக்களிப்பது எது?

"ஒருவருக்கொருவர் அறிவுரைக் கூற அல்லது புத்திமதி கூற தகுதியானவர்களாக" ரோமகிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்பதில் தனக்கு எந்த சந்தேகமும் இல்லை என பவுல் அவர்களிடம் கூறினான். இப்படி ஏன் உணர்ந்தான் என்பதையும் கூறினான்.

அவர்கள் *"நன்மையால் நிறைந்திருந்தார்கள்"* (ரோமர் 15:14).

நீங்கள் முற்றிலுமாக "நன்மையால் நிறைந்திருப்பதால்" நீங்கள் தகுதியானவர்கள் எனபவுல்கூறினான். அவர்களுடைய அடிப்படையான ஆவிக்குரிய வழிகளில் தான் உறுதியாக இருப்பதாகவும், இயேசு கிறிஸ்துவைப்போல் அவர்கள் மாறுவதற்கான முன்னேற்றம் அவர்களிடம் இருப்பதாகவும், அவன் கூறினான். வேறு வார்த்தைகளில் கூறினால், இந்த விசுவாசிகளால் ஒருவருக்கொருவர் புத்திமதி கூறமுடிந்தது, ஏனெனில் அவர்களுக்கு தம் சொந்த வாழ்வில் முன்னேற்றம் இருந்தது என்பதை அறிந்து கொண்டேன். அவர்கள் நிறைவானவர்களாக இல்லாவிட்டாலும் சகோதரர்களின் கண்களிலிருந்த "துகளை" அகற்ற முயலுவதற்கு முன்னால் தம் கண்களிலிருந்த "உத்திரத்தை" அகற்றிப் போடுமளவிற்கு முதிர்ச்சி பெற்றவர்களாயிருந்தனர். (மத்தேயு 7:3-5).

கர்த்தருடனே நடப்பதைக்குறித்து உணர்ச்சி உடைய கிறிஸ்தவர்களுக்கு, மற்ற கிறிஸ்தவர்களுக்கு புத்திமதி கூறும் பொறுப்பு இருக்கிறது. இதற்கான தகுதியும் அவர்களிடமிருக்கிறது. வேதாகமம் அடிப்படையாக போதிப்பவைகளை குழப்பக் கூடிய நடத்தைகளை கொண்டிருப்பவர்களுக்கு எச்சரிக்கைச் செய்யும் உரிமையை அவர்கள் பெற்றுள்ளனர். வேறுவகையாககூறினால், மற்றவர்கள் தம்முடைய சொந்த நடத்தைகளைச் சரிசெய்ய உதவுவதற்கு முன்னால். "தம்முடைய சொந்த செய்கைகளை சுத்தப்படுத்திக்கொள்வதில்" மிகவும் நிச்சயம் உடையவர்களாய் இருக்கவேண்டும்.

அவர்கள் *"அறிவு முதிர்ச்சி உடையவர்களாய்"* இருந்தனர் (ரோமர் 15:14).

மற்றவர்களுக்கு புத்திமதி கூறுவதற்கு தேவையான இரண்டாவது தேவையானது, கர்த்தரின் வார்த்தையைக்குறித்த சரியான அறிவை பெற்றிருப்பதே. இந்த பகுதியில் ரோமர்களின் வளர்ச்சி பெற்ற நிலையை பவுல் பாராட்டினான்.

நாம் கூறும் புத்திமதியானது கர்த்தரின் குறிப்பிட்ட சித்தம் மற்றும் வழிகளின் அடிப்படையில் அமைந்திருக்கவேண்டும். மற்றகிறிஸ்தவர்கள் எதைச் செய்யவேண்டும் எதைச் செய்யகூடாது என, *நாம் எண்ணுவதை* அவர்களுக்கு கூறக்கூடாது. அநேக கிறிஸ்தவர்கள் முற்றிலும் சரியானவைகளையும், ஓரளவு சரியானவைகளையும் குறித்து குழம்பிக் கொள்கிறார்கள். வேதாகமத்திற்கு வெளியே உள்ள காரியங்களைக்குறித்து கிறிஸ்தவர்களுக்கு அறிவுரை கூறினால்-அதாவது அது வேதவசனங்களில் தெளிவாக கூறப்பட்டிராவிட்டாலோ அல்லது கலாச்சாரப் படியான செய்கைகளை உள்ளடக்கிய குறிப்பிட்ட காரியங்களிலோ நாம் தலையிட்டால் வேதாகமத்தின் நிலைக்கு எதிரான தராதரங்களை நிர்ணயிக்கும் அபாயத்தில் நாம் இருக்கிறோம்.

அந்த வேறுபாடு ஒரு நூலிழை அளவே இருக்கலாம். வேதாகமம் தடைச்செய்யாத ஒரு செயலில் ஈடுபட்டிருக்கும் ஒரு கிறிஸ்தவன், வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தடைச்செய்யப்பட்ட ஒரு காரியத்தை செய்து கொண்டிருக்கலாம். உதாரணமாக கூறினால், இக்கால பத்திரிக்கைகளைப் படிப்பதற்கோ, குறிப்பிட்ட வகையான படங்களுக்கு செல்வதற்கோ தடைச்செய்யவில்லை, ஆனால் ஆபாசபடங்கள் போன்ற அசுத்தமான நீதியில்லாத செய்கைகளில் மனதை ஈடுபடுத்துவதைக்குறித்து வேதாகமம் நிச்சயமாக எச்சரிக்கிறது (பிலிப்பியர் 4:8).

எதனைச் செய்யலாம் எதனை செய்யக்கூடாது என அறிவிக்கும் அறிவிப்பு பலகைகளைக் கொண்ட ஆலயங்களுக்கு நம்மில் அநேகர் சென்றிருப்போம். கலாச்சார மாறுபாடுகளுக்கு தக்கதாக இத்தகைய பட்டியல்கள் எழுதப்பட்டிருக்கும். அவற்றில் சில வேதாகம அடிப்படையில்

அமைந்ததாய் இருக்கலாம். சில காரியங்கள் "செய்யக்கூடாது" என்ற பட்டியலில் ஆலயத் தலைவர்களால் எழுதப் பட்டிருக்கலாம். ஏனெனில் அவர்கள் ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டிருக்கக் கூடும். மற்ற கிறிஸ்தவர்களுக்கு புத்திமதி கூறும் போது, வேதாகமம் பட்டியலிடும் பாவங்களின் அடிப்படையில் அது அமைந்திருக்க வேண்டுமென்பது முக்கியமானது என்பதை அறிந்து கொள்ளுவார்கள், வேதாகமத்தின் பாவ பட்டியலுடன் நாம் எதனையும் சேர்க்கக்கூடாது. அது மனிதப்படியான கிறிஸ்தவர்களுக்கான ஆவிக்குரிய பட்டியலாகும்.

அனுபவத்தின் மூலமாக இதனைக் கண்டுகொண்டேன். கர்த்தரின் வார்த்தையில் வல்லமையும் அதிகாரமும் இருக்கிறது. சில கிறிஸ்தவர்கள் தேவையான மாறுதல்களைச் செய்துக் கொள்ளாவிட்டாலும் அது பொருட்டல்ல. எங்கள் ஆலயத்திற்கு ஒழுங்காக வரும் ஒரு நபருக்கு புத்திமதி கூறிய நிகழ்ச்சி என் நினைவில் இருக்கிறது. எங்கள் ஆலயத்திற்கு வரும் அவருடைய மனைவி, அந்நபருக்கு வேறு ஆலயத்திற்குச் செல்லும் ஒரு பெண்ணுடன் தகாத உறவு இருப்பதாக என்னிடம் புகார் கூறினார். மிகவும் அன்பான முறையில் இதனைக் குறித்து நான் அந்த நபரிடம் கேட்டபோது அதனை அவர் மறுக்கவில்லை. அதற்கு மேலும் "செய்யக்கூடாது" என்ற கர்த்தரின் பட்டியலில் விபச்சாரமும் இருப்பது அவருக்குத் தெரியும். ஆயினும் கூட அந்தப் பாவத்தை கைவிட அவர் விரும்பவில்லை. மாறாக, கர்த்தருடைய சித்தத்திற்கு மாறாக செயல்படுவது தனக்கு தெரியும் என அவர் கூறினார். இதற்கு மேலும், தான் மாறுவதற்கான திட்டம் எதுவும் தன்னிடம் இல்லை எனவும் அவர் கூறினார் - ஆனால் அவரின் மனைவிக்கோ எந்தவிதத்திலும் இடறலாயில்லாமல் இருப்பதோடு, ஆலயத்திற்கு ஒழுங்காக வந்து, ஆலயத்திற்கும் இடறலாயில்லாமல் இருப்பதாக என்னிடம் உறுதி கூறினார். அவர் தன்னை அகற்றிக்கொண்டார். என்னிடமோ அல்லது ஆலயத்தின் மீதோ அவர் கோபப்படவில்லை. கர்த்தரின் சித்தத்திற்கு மாறாக வாழுவதற்கு முடிவு செய்தார். இதற்கான தண்டனை காத்திருக்கிறது என்பதை அவர் அறிந்திருந்தார். விதைப்பதையும் அறுப்பதையும் குறித்த சட்டத்தையும் தெளிவாக அறிந்திருந்தார்.

மேலும் சில வேதாகம வழிகாட்டுதல்கள்

அதிர்ஷ்டவசமாக புத்திமதி கூறும் செய்கைகளைச் செய்வதற்கு நமக்குதவும் படியாக மேலும் சில உதாரணங்களையும் புத்திமதிகளையும் வேதாகமம் நமக்கு கொடுக்கிறது.

1. ஆழமான கரிசனையுடனும் அன்புடனும் புத்திமதிக் கூறப்படவேண்டும்.

தன்னுடைய சொந்த வாழ்வையே பவுல் இதற்கு உதாரணமாக்கினான். அவன் எருசலேமிற்குச் செல்லும்போது, எபேசிய மூப்பர்களை வழியில் சந்தித்தான். கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்குமாறு அவர்களுக்கு பவுல் புத்திமதி கூறினான். "ஆனபடியால், நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்" (அப்போஸ்தலர் 20:31). பவுல் தம்மை நேசிக்கிறான் என்பதில் இம்மனிதர்களுக்கு எவ்வித சந்தேகங்களும் இருக்கவில்லை. பவுலின் கண்ணீரானது, கிறிஸ்துவுக்குள் உள்ள இச்சகோதரர்களின் மீதான கரிசனையின் பிரதிபலிப்பாகும். இந்த செயலை, அவன் தம்மைத் தீர்க்கிறான் என்று அவர்களால் எவ்வழியிலும் குற்றம் சொல்ல முடியவில்லை.

2. புத்திகூறுதல்தனிப்பட்டவர்களுக்கானதாகஇருக்கவேண்டும்.

பொதுவாக புத்தி கூறவே கூடாது என்பது இதன் பொருள் அல்ல. வெவ்வேறு ஆலயங்களுக்கு நிருபம் எழுதிய போது பவுல் இதனைத் ...ன் செய்தான். அவர்களில் *ஒவ்வொருவரையும்* எச்சரித்ததாக எபேசிய ...பர்களுக்கு நினைவு படுத்தினான். தெசலோனிக்கேயருக்கு அவன் நிருபம் எழுதிய போது, இவ்வாறு கூறினான்:

> மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள். (1 தெசலோனிக்கேயர் 2:11-12).

ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவன் பாவம் செய்யும்போது, சில ...தகர்களும், ஆசிரியர்களும், முழு ஆலயத்திற்கும் புத்திமதி கூற ...ப்படுகின்றனா. இப்புத்திமதி தேவைப்படுகிறவன் அதனைக்கேட்க ...ண்டுமென அவர்கள்விரும்புகின்றனர். இதுநேருக்குநேராகஅறிவுரைக் ...றுவதை தவிர்ப்பதற்காகும். இதற்கு மேலும், இதனைக் கேட்கும் அந்த ... அங்கு கூறப்படுவது, தனக்கு என்பதை அறிந்து, அதனைத் ...சைத்திருப்பவகையுள்ளவராயிருப்பார். அநேகசூழ்நிலைகளில்பிரசங்க ...டையிலிருந்து யாருக்கு புத்திமதி வருகிறது என்பதை ஆலயத்திலுள்ள ...றவர்கள் அறிந்து வைத்திருப்பர் - இது அப்பிரச்சினையை மேலும் ...கலாக்குவதோடு, அந்நபரின் கோபத்தையும் ஆத்திரத்தையும் தூண்டிவிடும். இத்தகைய புத்திமதிகள் தனிப்பட்டவர்களுக்காக இருப்பது ...கவும் நல்லது. இதன் விளைவுகள் சிறந்ததாயிருக்கும் - நீங்கள் தூக்கி எறியப்பட்டாலும் பிரச்சனை இல்லை.

இதனை இங்கு கூறுகையில் "பொது இடங்களில் கண்டிப்பதைக்" குறித்து வேதாகமம் எதனையும் கூறவில்லை என்பதை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும், குறிப்பாக போதிக்கும் தலைவர்கள் இப்படிச் செய்யக்கூடாது, ஆனால் நேரடியான அறிவுரைக்குப் பின்னும், பாவம் செய்கிறார் என்பதற்கு இரண்டு மூன்று பேர் போதுமான சாட்சியம் கூறிய பிறகு அப்படிச்செய்யலாம் (மத்தேயு 18:15-17; 1 தீமோத்தேயு 5:19).

3. புத்திமதி செயல்படவேண்டுமானால் அது தொடர்ந்து கூறப்படவேண்டும்

எபேசியர்களுக்கு "மூன்று வருடங்களாக" தொடர்ந்து "இரவும் பகலும்" பவுல் புத்திமதி கூறினான் என்பதை மீண்டும் கவனிக்கவும். இத்தகைய அறிவுரைகள் தொடர்ந்து இருக்கவேண்டும். சிறிய ஒரு சந்திப்பிற்கு பிறகு அதனை நிறுத்தக்கூடாது. கர்த்தருடைய வார்த்தையில் பெருந்திரளான அறிவுரைகளும், எச்சரிக்கைகளும், முறைகளும் நிரம்பியுள்ளன. அவை அனைத்தையும் கூறுவதற்கு அதிக நேரம்பிடிக்கும் - அவற்றைகடைப்பிடிக்க வாழ்நாள் முழுவதும் செலவாகும்.

தனிப்பட்ட சந்திப்புகளும் புத்திமதிகளும் கூட தொடர்ந்து நடைப் பெறவேண்டும். நம்முடைய புத்திமதிகளை புறம்பேதள்ளி ஆலயத்திலிருந்து தன்னை அகற்றிக்கொண்டார் என்றால், நாம் நம்முடைய வேதாகமக் கடமைகளை நிறைவேற்றிவிட்டோம் என்பதை அறிந்துகொள்ளவேண்டும் ஆனால் அந்நபருக்காக தொடர்ந்து நாம் ஜெபிக்க வேண்டும். இதன்

பலனாக அந்நபர் பாவத்தை விட்டு விட்டு ஆலயத்திற்கு திரும்பி வந்தால், விரிக்கப்பட்ட கரங்களுடன் அவரை நாம் வரவேற்க வேண்டும். கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதைப் போல் நாம் மற்றவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற அறிவுரையை இதன் மூலம் நாம் செயல் படுத்துகிறோம்! அறிக்கையிட்ட பாவங்களை இயேசு கிறிஸ்து மன்னிக்கும் போது, அதனை நாம் எப்படி செய்யமாலிருக்க முடியும்?

4. சரியான நோக்கங்களிலிருந்து புத்திமதிகள் புறப்படவேண்டும்.

மீண்டும் பவுல் சிறந்ததொரு உதாரணமாக விளங்குகிறான். கொரிந்தியருக்கு அவன் எழுதினான்: "உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1 கொரிந்தியர் 4:14). மக்கள் குற்றம் செய்தவர்களாய் இருந்தாலும் கூட அவர்களை வெட்கப்படுத்தாதிருக்க நம்மால் முடிந்த அனைத்தையும் செய்யவேண்டும். இதனால் தான் பொது இடங்களில் சந்தித்து பேசுவதற்கு முன் தனிமையில் சந்தித்து பேசவேண்டும். ஒரு சகோதரனோ சகோதரியோ, தனிமையாகவும் கிறிஸ்தவ அன்புடனும் புத்திமதி கூறப்பட்டால், பொது இடத்தில் புத்திமதி கூறுவதைத் தவிர்க்கலாம். இதற்கு மேலும், அந்த நபர் ஆலயத்திலிருந்து விலகிக் கொண்டால் பொதுவிடங்களில் அவரைப் பற்றி விமரிசிப்பது தேவையற்றதாகி விடுகிறது.

இந்த வேதாகம கொள்கையை எங்கள் ஆலயம் கடைப்பிடிக்காததால், அது நீதிமன்ற விசாரணைக்குச் சென்றது. ஒரு முறை ஒரு நபர் ஆலயத்தை விட்டு பிரிந்து சென்றுவிட்டால், பொது இடங்களில் அவரைப் பற்றி பேசுவது தேவையற்றது - அவர் ஆலயத்தில் தொடர்ந்து குழப்பங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்தால் அது வேறு விஷயம். ஒரு வேசித்தனமான வாழ்க்கை வாழ்ந்த ஒரு போதகருக்கு அறிவுரைக் கூறும் போராட்டத்தை எங்கள் ஆலய மூப்பர்கள் சந்திக்க நேர்ந்தது சிறந்த உதாரணமாகும். எல்லாருக்கும் முன்பாக தன் பாவத்தை ஒத்துக்கொண்ட அவர் ஆலயத்தை விட்டு வெளியேறிவிட்டார் - ஆனால் எங்கள் சபையிலுள்ளவர்களிடம் தொடர்ந்து பொய்கூறுவதிலும் ஏமாற்றுவதிலும் ஈடுபட்டார். தன்னுடைய பாவம் அத்தனை மோசமானதல்ல என்ற கருத்தை அவர்கள் நடுவில் உருவாக்க முயன்றார். இத்தகைய சூழ்நிலையில் நாங்கள் இருந்தமையால் அங்கு என்ன நடந்தது என ஆலயத்திற்கு ஒரு கடிதத்தை எழுதினோம். ஆனால் அதனை வெளியிடுவதற்கு முன்னால், மீண்டும் அவற்றை சரிபார்ப்பதற்காக இந்த நபரை மீண்டும் ஒரு முறை சந்தித்தோம். இரண்டு சாட்சிகளுக்கு முன்னதாக உண்மையை அவர் ஒத்துக்கொண்டார். ஆகவே இப்பிரச்சனை ஒரு முடிவிற்கு வந்தது.

5. புத்திமதி கூறும் போது சரியான இலக்கு இருக்க வேண்டும்.

மற்றவர்களுக்கு புத்திமதி கூறும் போது ஒரே ஒரு அடிப்படைக் குறிக்கோள் மட்டுமே இருக்கவேண்டும்: இயேசு கிறிஸ்துவுக்குள் வளரச்செய்ய அவர்களுக்கு உதவுவது மட்டுமே அது. இதனால் பவுல் கொலோசெயருக்கு இவ்வாறு எழுதினான்: "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம். அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்." (கொலோசெயர் 1:28-29).

6. சரீரம் சரியாக இயங்குவதற்கு இயற்கையான வளர்ச்சியாக புத்திகூறுதல் இருக்க வேண்டும்.

இரண்டு வகையான புத்திகூறுதல்கள் இருக்கின்றன - ஒன்று முன்னெச்சரிக்கையாக கூறுவது, மற்றது சரிசெய்வதற்காக கூறப்படுகிறது. பாவத்திலிருந்து விலகி இருக்கும்படி" ஒருவருக்கொருவர் எச்சரிக்கவேண்டும் என வேதவசனம் நமக்கு போதிக்கிறது. (இது முன்னெச்சரிக்கையாக கூறுவதாகும்.) இத்தகைய தொடர்பு கொள்ளும் முறைகளை நாம் கண்டிருந்தாலும் கூட, சரிசெய்யும் வகையைப் பற்றியும் நாம் கூறினோம். கிறிஸ்துவின் சரீரமாகிய ஆலயம் ஒரு குழுவாக செயல்படுவதால், முன்னெச்சரிக்கையாககூறப்படும்புத்திமதிகள்தொடர்ந்து கூறப்படவேண்டும்.பவுல்கொலோசெயருக்குஎழுதியபோதுஇதனைத்தான் அவன் குறிப்பிட்டான்:

> கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும்ஞானப்பாட்டுகளினாலும்ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி (கொலோசெயர் 3:16).

இன்று இந்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான செயல் முறைக்குறிப்புகள்

முயற்சி 1

மற்றவர்களுக்கு புத்திமதி கூறுவதற்கு முன்னர் நம் ஒவ்வொருவரும் நம் சொந்த வாழ்க்கையைக் குறித்து ஆராய்ந்தறிய வேண்டும். தனிப்பட்டவர்களின் பன்புகளை கீழ்க்கண்ட கேள்விகள் காட்டுகின்றன.

1. என் வாழ்வு "நற்குணத்தால் நிறைந்திருக்கிறது" என என்னால் கூறமுடியுமா?
2. தேவனுக்கேற்ற மற்றும் நீதியின் வாழ்க்கை என வேதாகமம் போதிப்பது என்ன என்பது உண்மையாகவே எனக்குத் தெரியுமா?
3. இன்னொரு கிறிஸ்தவரை (அல்லது கிறிஸ்தவர்களை) அறிவுறுத்தும் அல்லது புத்திமதி கூறும்போது, ஆழமான அன்புடனும் கரிசனத்துடனும் அப்படிச் செய்கின்றேனா?
4. ஒரு குறிப்பிட்ட பாவத்தைக் குறித்து கிறிஸ்தவர் ஒருவருக்கு புத்திமதி கூறும் போது, அவருடன் தனிமையில் பேச விரும்புகிறேனா, அல்லது, எல்லோருக்கும் பேசுவதைப் போல் காட்டும் விதமாக, பொதுவாக பேசுகின்றேனா?
5. அறுவருப்பின்றியும், அடக்கியாளாமலும் என்னுடைய புத்திமதி கூறுதலைத் தொடருகின்றேனா?
6. மற்றவர்களை கிழித்துப் போடவும், வெட்கத்திற்குட்படுத்தாமலும், அவர்களைகட்டிஎழுப்புவதற்காகஅவர்களுக்குபுத்திமதிகூறுகின்றேனா?
7. கிறிஸ்துவிற்குள்ளாக வளர்ச்சி பெறவும் முழுமையுள்ளவனாகவும் மாறுவதற்கு உதவவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்திற்காக மட்டுமே மற்றவர்களுக்கு புத்திமதி கூறுகிறேனா?

முயற்சி 2

உங்கள் ஆலய அமைப்புகளை மதிப்பீடு செய்யுங்கள். "ஒருவருக்கொருவர் புத்தி கூறுவதில்" கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள அனைவரும் பங்கேற்கும் படி இலகுவாகவும், இயற்கையானதாகவும் அவர்கள் அமைந்துள்ளார்களா?

சரீரம் சரியானபடி இயங்கும் வகையில் அநேக ஆலயங்கள் அமைக்கப்படவில்லை. நிறுவனத்துடன் பகிர்ந்து கொள்ளுவதற்கும் "சரீர வாழ்வுக்கும்" இங்கு எந்த வாய்ப்புகளும் இல்லை. ஒவ்வொன்றும் மிகவும் இருக்கமாக அமைக்கப் பட்டிருப்பதால் சரீரத்தின் உறுப்பினர்களினால் உடனுக்குடன் அறிவுரை கூறவும், செயல்படவும் முடியாது. உங்கள் ஆலயத்தில் இப்படிப்பட்ட நிலையிருந்தால், உங்கள் அமைப்பைக் குறித்து கவனமாக மதிப்பீடு செய்து தேவைப்படும் மாற்றங்களையும் செய்யுங்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கும் எங்கள் சொந்த சபையில் இத்தகைய பரிமாற்றங்கள் நடைபெறுவதற்கு ஏற்றவகையில், சிறுசிறு குழுக்களை உருவாக்கியுள்ளோம். (இதனை சிறிய ஆலயங்கள் என அழைக்கிறோம்.) குறிப்பாக கூறினால், இந்த சிறிய ஆலயங்களின் மூலம் தான், புத்திமதி தேவைப்படுபவர்களை நாம் கண்டுகொள்கிறோம். மேலும், அன்பு, நம்பிக்கை, நாணயம் ஆகியவற்றை ஏற்படுத்தும் ஒரு சூழ்நிலையையும் இதுவே ஏற்படுத்துகிறது. அந்த சிறிய குழுவிற்குள் அந்தப் பிரச்சனைத் தீர்க்கப்படவில்லை எனில், இந்த சிறிய குழுவை மேற்பார்வைச் செய்துக்கொண்டிருக்கும் போதகரின் கவனத்திற்கு அப்பிரச்சனை கொண்டு வரப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட சமயத்தில், எங்கள் சிறு குழுக்களில் அதிககாலம் உறுப்பினராக இருந்த விவாகரத்து பெற்ற பெண் ஒருவர், இன்னொரு விவாகரத்து பெற்ற மனிதனுடன் வாழுவதற்கு முடிவு செய்தார். அங்கு உருவாகியுள்ள பிரச்சனையை அந்த சிறிய குழுவில் உள்ள உறுப்பினர்கள் அறிந்து அதனை சமாளிக்க முயற்சி செய்தனர். ஆயினும் கூட, அவர்களின் முயற்சிகளை அப்பெண் எதிர்த்தார். இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, மூத்த போதகரான என்னை அவர்கள் அனுகினர்.

இந்த பிரச்சனையைப் பொருத்தவரை, இப்பெண்ணை நான் நன்கு அறிவேன். இதனால், அவர்களுடன் ஒரு நேரத்தைக் குறிப்பிட்டு அவர்களிருவரும் ஒன்றாக வாழும் இடத்திற்கு நேராக சென்றேன். சாப்பாட்டு மேசையில் நாங்கள் ஒன்றாக அமர்ந்தோம். அன்புடனே கூட அவர்கள் இருவருக்கும் புத்திமதி கூறத் தொடங்கினேன். என்னுடைய அன்பையும் கரிசனத்தையும் அவர்கள் அறிந்துகொண்டார்கள். அந்த சாயங்காலம் கடப்பதற்கு முன் அப்பெண்ணின் மகனை சாப்பாட்டிற்கு வரும்படி அவர்கள் அழைத்தனர். அம்மனிதன் அச்சிறுவனிடம் மன்னிப்பு கேட்டார். அச்சிறுவனின் தாயான அப்பெண்ணும் கூட அவனிடம் மன்னிப்புக் கேட்டு "நாம் இந்த இடத்திற்கு உரியவர்கள் அல்ல" எனக்கூறி அவனுடைய சாமான்களை அடுக்கும்படி கூறினார்.

கர்த்தரிடம் தம் பாவங்களை ஒத்துக்கொண்டு, தேவனிடமிருந்தும் ஒருவரிடம் ஒருவரும் மன்னிப்பு கேட்டு, அந்த இரவில் அவர்கள் இருவரும் பிரிந்தனர். ஆயினும் இக்கதையின் முடிவு உற்சாகமளிப்பதாய் இருந்தது. இதன்பிறகு, கர்த்தருடைய சித்தத்தின்படி திருமணம் செய்துகொண்டு வாழுவோம் என அவர்கள் தீர்மானித்தனர். அவர்களுடைய திருமணத்தை முன்னின்று நடத்தினேன். இன்று, எங்கள் ஆலயத்தில் அவர்கள் செயல்படும் உறுப்பினர்களாக உள்ளனர், இந்த சம்பவத்தை மற்றவர்களுக்கு கூற அவர்கள் தவறுவதில்லை.

இதன் குறிப்பு இதுவே. சிறு குழுக்களின் அமைப்பு இருந்திருக்க

விட்டால் இந்த பிரச்சனையை நாம் அறிந்திருக்கவே மாட்டோம். எங்கள் ஆலய அமைப்பில் அநேக மக்கள் ஒளிந்திருக்கலாம். ஆனால் பாவம் கண்டுபிடிக்கப்படும் போது, அது ஆலயம் முழுவதற்குமான பிரச்சினை ஆகிவிடுகின்றது-அந்தநபர்மனம்திரும்பஉதவுவதைசாத்தியமில்லாததாக்கி விடுகிறோம். ஒரு நபர் திடீரென காணாமல் போய் குழுக்கூட்டங்களில் பங்கேற்பதைநிறுத்திவிட்டாலும்கூட, தொடர்புகள்ஏற்படுத்தப்பட்டிருந்தால், அவரை எப்படியோ சந்தித்து விடுவோம் - இதனால் உண்மை வெளிவரும். இந்த குறிப்பிட்ட சூழ்நிலையில் நடந்தது இதுதான்.

முயற்சி 3

நீங்கள் பெற்றோராயிருந்தால் (அல்லது பெற்றோராகதிட்டமிட்டிருந்தால்), நிலை 1 இலுள்ள கேள்விகளை மீண்டும் வாசியுங்கள்.

ஒரு பெற்றோராகவோ அல்லது பெற்றோராகதிட்டமிட்டிருந்தாலோ உங்களை எப்படி அளந்து கொள்வீர்கள்? உங்கள் பிள்ளைகளுக்கு புத்திமதி கூறும் தகுதியை பெற்றுள்ளீர்களா? அப்படி இல்லை என்றால், "பெற்றோரென்றநிலையிலிருந்துமாறமுடியாது" என்பதைநீங்கள்நினைவில் வைத்திருங்கள். அதிகதகுதியானவர்களாகமாறுவதற்குகர்த்தரின்சித்தப்படி வாழுவது மட்டுமே ஒரே வழி.

கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் இதே கொள்கைபொருந்துகிறது. நாம்தரம்குறைந்துவிட்டோம்என்றுஉணர்வதை வைத்து ஒருவருக்கொருவர்புத்தி கூறும்பொறுப்பிலிருந்து, நம்மைவிலக்கிக் கொள்ளமுடியாது. மாறாக, கிறிஸ்துவில் பக்குவமடைந்தவர்களாகும் பொறுப்பு கர்த்தருக்கு முன்னதாக நம்மிடம் இருக்கிறது, இதன் மூலமாக மற்றவர்கள் கிறிஸ்துவில் பக்குவமடைய உதவமுடியும்.

உற்சாகப்படுத்த ஒரு வார்த்தை

ரோம கிறிஸ்தவர்கள் நிறைவானவர்கள் அல்ல என்பதை நினைவு கூறுங்கள். இந்நாளின் எல்லா ஆலயங்களிலும் இருப்பதைப் போன்று அப்போதும் கூட பிரச்சனைகள் நிச்சயமாய் இருந்தன. சில மக்கள் பலவீனர்களாயிருந்தனர், சிலர் பலமுடையவர்களாய் இருந்தனர். அப்படி இல்லாவிட்டால், இந்தவிஷயத்தைக்குறித்துபவுல்அவர்களுக்கு "புத்திமதி கூறவேண்டியநிலைஏற்பட்டிருக்காது. இத்தகையபலவீனங்கள்இருந்தாலும் கூட பவுல் கூறினான்:

> என் சகோதரரே, நீங்கள் நற்குணத்தில் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன் (ரோமர் 15:14).

"தேவனே என்னுடன் பேசும்" என்ற பாடலின் சொற்களை தனிப்பட்ட ஜெபத்திற்கு உபயோகப்படுத்துங்கள்.

தேவனே, என்னுடன் பேசும், உம்முடைய தொனியில் நான் பேசட்டும்;
நீர் தேடியடியே, இழந்து போன, தனிமையான பிள்ளைகளை நானும் தேடட்டும்.
எனக்கு போதியும் தேவனே, நீர் கூறும் விலையேறப் பட்டவைகளை நானும் போதிக்கட்டும்;
எனது சொற்களுக்கு இறகுகளைத்தாரும், இருதயத்தின் ஆழங்களை அது

சென்றடையட்டும்.
உம்முடைய பரிபூரணத்தால் என்னை நிரப்பும் தேவனே, எனது இருதயம் அதனால் பொங்கிவழியட்டும்.
ஆர்வமளிக்கும் சிந்தனையும், பிரகாசிக்கும் சொல்லும், உம் அன்பைக் கூறட்டும், உம்மைத் துதிக்கட்டும்.
தேவனே என்னை உபயோகியும், உமது சித்தப்படியும், எங்கும் எப்போதும் என்னையும் உபயோகியும்;
உமது ஆசிர்வதிக்கப்பட்ட முகத்தைக் காணும்வரை, உம்மில் களைப்பாறி உம்மில் மகிழ்ந்து, உமது மகிமையை பகிருவேன்.

சிறுகுழுக்கள் உரையாடுவதற்கான வழிகாட்டி

தொடக்கம்

கீழ்க்கண்ட சொற்றொடர்களை ஒவ்வொருவரும் நிரப்பும்படியும், அவனுடைய அவளுடைய சிந்தனைகளை குழுவுடன் பகிருமாறு கூறுங்கள்.

கட்டியெழுப்பும் விமரிசனத்தை பெறுவதைக் குறித்த எனது மனோபாவம்...............
-வலியில்லாமல் லாபமில்லை.
-பல்லைக்காட்டி வாங்கிக்கட்டு.
-அறியாமை பேரானந்தம்.

-கட்டியெழுப்பும் விமரிசனத்தைக் கொடுப்பதைக்குறித்த எனது மனோபாவம்......
-உங்களை காயப்படுத்தியதை விடவும் இது என்னை அதிகம் காலப்படுத்தப் போகிறது.
-ஜியார்ஜ் இதனைச் செய்யட்டும்!
-என்னபோகிறது, என்ன வருகிறது.

உரையாடுவதற்காக

1. ரோமர் 15:14 ஐ வாசியுங்கள். "ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" என்பதிற்கும் "ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்" (ரோமர் 15:7) என்பதிற்கும் உள்ள தொடர்பு யாது?
2. "ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" என்பதை எப்படி வரையறுக்கிறீர்கள்? நீங்கள் வரையறுத்தவற்றை விளக்குவதற்கு சில உதாரணங்களைக் கொடுங்கள்.

3. ரோமர் 15:14 ஐ அடிப்படையாக வைத்து பார்க்கும்போது, ஒருவருக்கு ஒருவர் புத்திமதி கூறுவதற்கு, உங்கள் ஆலய விசுவாசிகள் எத்தகைய தகுதி உடையவர்களாய் இருக்கின்றனர்? உங்களின் தகுதி என்ன? ஒருவருக்கு புத்திமதி கூறுவதற்கான உரிமையை நாம் ஏன் சம்பாதிக்க வேண்டும்? புத்திமதி கூறுவதற்கு எந்த அளவு சித்தமுடையவர்களாய் இருக்கிறீர்கள்? அதனைப் பெறுவதற்கு எந்த அளவு சித்தமுடையவர்களாயிருக்கிறீர்கள்?

4. அப்போஸ்தலர் 20:31ஐ வாசியுங்கள். "கண்ணீருடனே" கூட பவுல் விசுவாசிகளுக்கு புத்திமதி கூறினான் என்பதின் பொருள் என்ன? உங்கள் இலக்கினை தூயதாக எப்படி வைத்துக்கொள்வீர்கள்? தனிப்பட்ட புத்திமதி ஏன் பலனுள்ளதாய் இருக்கிறது? ஒரு விஷயத்தின் எந்த நிலையில் முழு ஆலயமும் பங்கேற்கவேண்டும்?

விசுவாசிகளின் கூட்டத்தில் ஒருவருக்கொருவர் புத்தி கூறுவது எதனால் அவசியமானது? உங்கள் ஆலயத்தில் கூறப்படும்புத்திமதி எச்சரிக்கையாக இருக்கிறதா, அல்லது சரிசெய்வதாக இருக்கிறதா? இந்த சிறுகுழுவானது உங்கள் வாழ்க்கையில் எவ்வாறு "எச்சரிக்கைபுத்திமதியாக" செயல்படுகிறது.

முடிவு

ஜோடிகளை உருவாக்குங்கள் "இன்று ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள் என்ற அறிவுரையை நடைமுறைப்படுத்துவதற்கான செயல் முறைக்குறிப்புகள்" என்ற நிலை 1 இற்கான பதிலை அவர்கள் பகிர்ந்து கொள்ளட்டும். துணையாக இருந்து, ஒருவருக்கொருவர் உரையாடுங்கள், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள், ஒருவருக்கொருவர் ஜெபம் பண்ணுங்கள். இவற்றை இரகசியமாக வைக்கவேண்டும் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

அடுத்தமுறைக்காக

அத்தியாயம் 7ஐப் படியுங்கள்.
உங்கள் ஜெப துணைக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.
நீங்கள் பெற்றோராயிருந்தால் நிலை 1இலுள்ள "செயல் முறைகள்" ல் சுயமதிப்பீட்டு கேள்விகளை நிறைவு செய்யுங்கள், அது உங்கள் பிள்ளைகளுடனான உறவுமுறையைகுறித்த அடிப்படையில்இருக்கட்டும்.
இயலுமென்றால் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் - ஒருவருக்கொருவர் புத்திமதி கூறுவதைக் குறித்து அவசியப்படும் போது உரையாடுங்கள்.



அத்தியாயம் ஏழு

ஒருவருக்கொருவர் வாழ்த்து கூறுங்கள்

பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள்.... அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள்.... என் பிரியமான எப்பனெத்தை வாழ்த்துங்கள்.... எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்.... ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள். கிறிஸ்துவின், சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர் 16:3-6, 16)

பல ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு சாயங்கால வேளையில் எங்கள் ஆலயக் கட்டிடத்திற்குள் சென்றேன். ஒரு தலைவர்கள் குழுவும் அவர்களுடைய குடும்பத்தாரும் ஐக்கியத்தை வேண்டி ஒன்றுகூடியிருந்தனர். அங்கு கூடியிருந்த கூட்டத்தினர் நடுவில் நான் கடந்து செல்லுகையில், ஒரு உயர் நிலை பள்ளியில் படிக்கும் ஒரு மாணவனைக் கடந்தவாறே "ஹை, புரூஸ் எப்படி இருக்கிறாய்?" எனக் கேட்டேன். சில நிமிடங்களுக்குப் பிறகு எங்கள் மூப்பர்களில் ஒருவர் என் தோள்களைத் தொட்டார். "ஜீன், உங்களுக்கு ஒன்றைக் குறித்து புத்திமதி கூறவேண்டியதிருக்கிறது" என்றார்.

முதலில் மைக் என்னைக் கிண்டல் செய்கிறார் என எண்ணினேன். ஆனால் அவர் கேலி செய்யவில்லை. "ஜீன்" அவர் தொடர்ந்தார், "நான் அடிக்கடி செய்யும் ஒன்றை சிறிது நேரத்திற்கு முன் நீங்களும் செய்தீர்கள்". கூறப்போனால் ஒரு சகோதரருக்கு அறிவுரைக் கூறுவதற்கு இது மிகவும் உணர்ச்சிபூர்வமான வழியாகும். ஆழமாக குத்தப்படுவதாக கூறியவாறு என்னை எதுவும் செய்யமுடியாதவனாக்கினார்.

மைக் மிகவும் தீவிரமாக இருக்கிறார் என்பது எனக்குத் தெரிந்தது, நான் உடனடியாக, "நான் என்ன செய்தேன்" என அவரிடம் கேட்டேன் "ஹை புரூஸ் எப்படி இருக்கிறாய்?" என்ற காட்சியை மைக் எனக்கு நினைவுபடுத்தினார். "நீ எப்படி இருக்கிறாய் என்று அவனிடம் கேட்டீர்கள்" அவர் தொடர்ந்தார். "ஆனால் அவன் கூறிய பதிலை கேட்க சிறிது நேரம் அங்கே நிற்கவில்லை.

அந்நொடியில் எனது முழுக் கவனமும் மைக்கின் மீது இருந்தது! "அவன் என்ன கூறினான்?" என நான் கேட்டேன். "நான் நன்றாக இல்லை. இன்று எனது சகோதரன் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது விபத்தில் மாட்டிக் கொண்டான்" என்று அந்த இளைஞன் என்னிடம் கூறினான் என்பதை மைக் என்னிடன் கூறினார்.

வெளிப்படையாக கூறினால், நான் வெட்கப்பட்டேன், ஆனால் "எனது தோளை தொடும் அளவிற்கு" மைக்கிற்கு என்மீது கரிசனமும், துணிச்சலும் இருந்தமையால், அந்நிகழ்வை எனது கவனத்திற்கு எடுத்து வந்தார். நான் தனிப்பட்ட முறையில் அவருக்கு நன்றி கூறி விட்டு புரூசை உடனடியாக கண்டுபிடித்து, அவனுடைய பதிலைக் கேட்காமல் சென்றதற்காக என்னை மன்னிக்கும்படி அவனை கேட்டுக் கொண்டேன்.

இந்தஅனுபவம்பெரியதொருபாடத்தைஎனக்குகற்றுக்கொடுத்தது. மற்றவர்களிடம் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டபிறகு அவர் கூறுவதைக் கேட்டு முடிக்கும் வரை அங்கு நிற்க வேண்டும். "நீங்கள் எப்படிஇருக்கிறீர்கள்?" வெறும்சடங்காகமாறிவிடுவதற்கானசாத்தியம் அதிகம். அதற்கான பதிலும் கூட மேலோட்டமாகவே இருக்கிறது - "நான் நலமாகஇருக்கிறேன், நீங்கள்எப்படி இருக்கிறீர்கள்?" இத்தகையமேலும் சில சந்திப்புகள் அங்கு நிகழ்கின்றன.

தவறாக புரிந்துகொள்ளாதீர்கள்! இத்தகைய வரவேற்பு முறைகள் எல்லாகலாச்சாரங்களிலும்இருக்கின்றன. ஒவ்வொருமுறையும் "ஹலோ" என்று கூறும்போது அங்கு எந்தவொரு பெரிய தகவல் மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆனால்ஒருமட்டத்திற்குமேலேநாம்செல்லுவதில்லை. தாம் எப்படி இருக்கிறோம் என்று கூறக் கூடாத அளவில் மக்கள் இருக்கின்றனர் என்று சில சமயங்களில் நாம் எண்ணுகிறோம். நாம் அதனைப்பற்றி கவலைப்படுவதில்லை.

இந்தஅனுபவம்இன்னொருபாடத்தையும்எனக்குகற்றுக்கொடுத்தது. எனக்குபுத்திகூறமைக்சிறிதுநேரத்தைஎடுத்துக்கொண்டுஅச்சிறுவனிடம் மன்னிப்பு கேட்க ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்தமையால் நான் மிகவும் மகிழ்ந்தேன். அவர் அப்படிச் செய்திருக்காவிட்டால் நான் செய்து கொண்டிருப்பதை அறிந்திருக்க மாட்டேன் என்பதுடன் நம் வழக்கமான "வாழ்த்துக்களுக்கு" மேல் செல்லவேண்டும் என்ற உணர்வுக்கும் முக்கியத்துவம் அளித்திருக்கமாட்டேன். இதனால் தான் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள மற்ற உறுப்பினர்கள் நமக்குத் தேவை.

ஒரு தனிப்பட்ட கரிசனம்

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் கடைசியில் ஒவ்வொருவருக்கும் "வாழ்த்துக்களை" தெரிவிக்கிறான், அவர்கள் ஒவ்வொரு வகையில் அவனுக்கு முக்கியமானவர்களாயிருந்தனர். 26 மக்களின் பெயர்களை அவன் குறிப்பிடுகிறான். பெயர் சொல்லி அழைப்பதினால் தான் மக்கள் மிகவும் மகிழுகிறார்கள் - இந்த சமூக நடத்தைக்கு அத்தனை ஒழுங்கு இருக்கிறது, குறிப்பாக நாம் அடிக்கடி புதியவர்களை சந்தித்துக் கொண்டிருக்கும்போது இது முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. வெளிப்படையாககூறினால், இப்பகுதியில்நான்கவனம் செலுத்தி இன்னமும் முன்னேற வேண்டியுள்ளது.

இம்மக்களின்பெயர்களைபவுல்அறிவித்துவிட்டு, பாராட்டுவதற்கான சில சிறப்பு சொற்களால் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவர்களுக்கு வாழ்த்துகூறி, "ஒருவரையொருவர்பரிசுத்தமுத்தத்தோடுவாழ்த்துங்கள்" (ரோமர் 16:16) என்ற அறிவுரையையும் கூறி தன்னுடைய சிறப்பான "ஹலோ" என்ற பகுதியினை நிறைவு செய்தான்.

பவுலின் பொருள் என்ன? இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் பவுலின் அறிவுரைக்கும் தொடர்பு இருக்கிறதா? இந்த "ஒருவருக்கொருவர்" அறிவுரை "கலாச்சார" அடிப்படையில் அமைந்ததா? இக்கேள்விகளுக்கு பதில் காணவேண்டும் - ஏனெனில் இந்த அறிவுரை புதிய ஏற்பாட்டில் ஐந்துமுறைகூறப்பட்டுள்ளது.-பவுல்நான்குமுறையும்பேதுருஒருமுறையும் கூறியுள்ளனர். (1கொரிந்தியர் 16:20;2கொரிந்தியர் 13:12;1தெசலோனிகேயர் 5:26; 1 பேதுரு 5:14).

முக்கியமானவைகளும் முக்கியம் இல்லாதவைகளும்

சரியான முறையில் வேத வசனங்களை கூறும் அறிவுரையை விளக்குவதற்கு "முக்கியமானவைகளுக்கும்" முக்கியம் இல்லாதவைகளுக்கும்" உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ளவேண்டும். உதாரணமாகநாம் "ஒருவருக்கொருவர்" போதனைசெய்துமற்றவர்களுக்கு ஆலோசனைக் கூறவேண்டும். இது ஒரு செயலாகும். ஆயினும் கூட, இந்த செயல் நடைபெறுவதற்கு வேதாகமம் நம்மை ஒரு குறிப்பிட்ட அமைப்பிற்குள் வைத்திருப்பதில்லை.

"வார்த்தையைபிரசங்கிக்கவேண்டும்" எனநமக்குகூறப்பட்டுள்ளது. ஆனால் எப்படி என்று கூறப்படவில்லை. இத்தகைய விஷயங்களில், போதிப்பதும், பிரசங்கிப்பதும், ஆலோசனைக் கூறுவதுமான இந்த அடிப்படை செயல்கள் வெவ்வேறு முறைகளில் செய்யப்படுகிறது. ஒரு முறை இல்லாமல்செயல்படுவதுசாத்தியம்இல்லாதஒன்று.ஒருமுறையோ, அமைப்போஇல்லாமல்ஒருசெயல்பாட்டைப்பற்றிபேசுவதுசாத்தியமாகக்கூடிய ஒன்றே. வேதாகமம் அடிக்கடி இந்நிலையில் இருக்கிறது.

வேதாகம செயல்பாட்டுடன் தம்முடைய கலாச்சாரத்தைக் கலந்து, இத்தகைய முறைகளையும் செயல்பாடுகளையும் முக்கியமானதாக்கி, மிகப்பெரிய தவறினை கிறிஸ்தவர்கள் செய்கின்றனர். உதாரணமாக, பிரசங்கமானதுபிரசங்கமேடையிலிருந்துசெய்யப்படவேண்டுமெனவும், மூன்று குறிப்புகளினால் உருவாக்கவேண்டும் என்றும், வல்லமையான குரலில் அதனைக் கூறவேண்டும் எனவும் சிலர் வலியுறுத்துகிறார்கள். முதல்இரண்டு குறிப்புகளைக்குறித்து வேதாகமம் எதனையும் கூறவில்லை என்பதும், "சத்தமிட்டு" எனக் குறிப்பிடுவதின் பொருள் அக்காலத்தில் ஆம்பளிஃபயர்கள் எதுவும் இருக்கவில்லை என்பதும் கவனிக்கப்படவேண்டியவை.

தவறாகபுரிந்துகொள்ளாதீர்கள். இத்தகையகாரியங்கள்தவறானவை என வேதாகமம் போதிக்கவில்லை. எத்தகைய ஒரு கலாச்சாரத்திற்கும் ஏற்றவகையில்முறைகளைஏற்படுத்திக்கொள்ளும்அதிகாரத்தைவேதாகமம் நமக்கு வழங்கியுள்ளது, இதனால் நம்மால் வேதாகம செயல்பாடுகளை நிறைவேற்ற முடியும்.

செயல்பாடுகளுக்கும் முறைகளுக்கும், கலாச்சார முக்கியத்துவங்களுக்கும் முக்கியம் இல்லாதவைகளுக்கும் உள்ள வேத வசனங்கள் கூறும் வேறுபாட்டை அறிந்து கொள்வது, வேதாகம விளக்கங்களில்ஏற்படும்பல்வேறுசிக்கல்களைதீர்க்கஉதவுகிறது. இதனை மனதில்வைத்துபார்க்கும்போது "ஒருவரையொருவர்பரிசுத்தமுத்தத்தோடு வாழ்த்துங்கள்" என்பதும் கூட புரிந்து கொள்ளக் கூடிய கருத்தேயாகும். அது முதல்நூற்றாண்டில்பொருள்பட்டதைப்போல், இந்தஇருபத்தியோரம் நூற்றாண்டிலும்கூடபொருத்தமாயிருக்கிறது. ஒருபுறம்பார்த்தால், "ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்" என்பது கலாச்சாரத்திற்கு பொருந்துகிறது; மறுபுறம் "முத்தமிடுதல்" என்பது முதலாம் நூற்றாண்டின் வாழ்த்தும் முறைகளில்

முக்கியமான ஒன்றாயிருக்கிறது. சில கலாச்சாரங்களில் இன்னமும் அது காணப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின்தலைவர்கள்ஒருவருக்கொருவர்முத்தமிட்டுவாழ்த்துகூறுவதை நாம் கண்டிருக்கிறோம். ரஷ்யதலைவர்கள் வெளிநாடுகளுக்குச்செல்லும் போது, இப்படி செய்வது குறிப்பிடத்தக்கது. அவர்கள்தம்மைவரவேற்கும் அதிபர்களை தம் இருகரங்களாலும் அணைத்து வலது கன்னத்திலோ அல்லது கன்னத்தின் இரண்டு பக்கங்களிலோ முத்தமிடுகின்றனர். இந்த வாழ்த்துக்கள் "பரிசுத்தமானவையோ" அல்லது "பொருளுள்ளவையோ" அல்ல என்பதை புரிந்துகொள்ளுங்கள். இது வெறும் ராஜரீக உறவு முறை - இது ஸ்பானிய மக்கள் அடிக்கடி கூறுவதற்கு ஒத்தது - *ஹோலா, கோமோ எஸ்டே உஸ்டட்?" இதற்கு மற்றநபர் பதில் கூறுவார் - "பியன், கிரேசியாஸ், வை, உஸ்டட்"*

புரூசை நான் சந்திக்கும் போது இதைத்தான் நான் செய்தேன். "ஹலோ, எப்படி இருக்கிறீர்கள்?" என்று ஆங்கிலத்தில் கேட்டேன். "நன்றாக இருக்கிறேன், நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என அவர் பதிலளிப்பார் என எதிர்பார்த்தேன். இது வெறும் உரையாடல் முறை. வேறு எந்த முறையிலும் பதில் கூறுவதை நான் எதிர்பார்க்கவில்லை. இதனால் தான் அவன் கூறியவைகளை நான் கேட்க வில்லை.

செயல்பாடும் முறையும்

சிலமதிப்பீடுகளின்படி, இந்த "ஒருவருக்கொருவர்" அறிவுரையானது மற்றவைகளில் இருந்து வேறுபட்டது. இதுவரை நாம் கண்ட அனைத்து அறிவுரைகளும் செயல்பாட்டை மையமாக கொண்டிருந்தன. ஆயினும், பரிசுத்த முத்தத்தினால் ஒருவரை ஒருவர் வாழ்த்துவதில், செயல்பாடும் முறையும் இருக்கின்றன. ஒரு புறம் பார்த்தால் "ஒருவரை ஒருவர் வாழ்த்துவது" ஒரு செயல்பாடும், பொதுமையானதாகவும் இருக்கிறது. எந்த ஒரு கலாச்சாரமாயினும், இதனை நாம் செய்தே ஆகவேண்டும். அந்த வாழ்த்து கூறும் "முறை" வேறுபட்டதாயிருக்கும். வேறு வகையாக கூறினால், நாம் கிறிஸ்தவர்களாய் இருப்பதினால், கிறிஸ்துவுக்குள் உள்ள சகோதர சகோதரிகளுக்கு சிரத்தையுடனே நாம் வாழ்த்து கூறவேண்டும். ஆயினும், தெரிவிக்கப்படும்வாழ்த்தானது ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்திற்கு பொருத்தமானதாகவும், எதிர்பார்க்கப் படுவதைப்போலவும் இருக்கவேண்டும்.

ரஷ்யாவிலும் உக்ரைனிலும் உள்ள பேப்டிஸ்டுகளுக்கு நான் ஊழியம் செய்து கொண்டிருந்த போது, இந்த அறிவுரையை அவர்கள் மிகவும் தீவிரமாக பயன்படுத்தி கொண்டிருப்பதை கண்டு கொண்டேன், அவர்கள் ஒருவருக்கொருவர் உதட்டில் முத்தமிட்டனர், ஆண்கள் ஆண்களுக்கும், பெண்கள்பெண்களுக்கும்முத்தமிட்டனர். இத்தகையவாழ்த்தும்முறைகளை நான் சிறுவனாக இருந்தபோது சென்ற ஆலயத்தில் உள்ளவர்கள் பயன்படுத்தினர், ஆகவே இது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. ஒரு பெரிய உருவமுடைய பைலோரஷ்யர் ஒருவருடன் நெருங்கிப் பழகத் தொடங்கினேன். அப்போது நாம் பிரியும் போது என்னை தனது கரங்களால் அணைத்து மூன்று பெரிய அளவிலான முத்தங்களை எனது உதடுகளில் தந்தார். இது சிறிது அருவறுப்பாக எனக்குத் தோன்றியது என்பதை ஒத்துக்கொள்கிறேன். வெவ்வேறு கலாச்சார சூழ்நிலைகளுக்கு மாறுவது எனக்கு இலகுவானது தான், ஆனால் இந்த கலாச்சார அதிர்ச்சி தெரிந்து விடுமோ என பயந்தேன்.

என்னுடைய அனுபவத்தை பொறுத்தவரை பிரேசிலிய கிறிஸ்தவர்களின் அனுகுமுறை வேறுபட்டது. ஆண்கள் இன்னொரு ஆணை

கட்டித்தழுவுவார்கள், மேலும் ஆண்கள் பெண்களின் கன்னங்களில் முத்தம் கொடுத்து தம் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர் - ஆனால் முதலில் பெண்கள்தான் தொடங்கவேண்டும். தனியே வாழும் பெண்களும் கூட ஒரு முத்தத்தினாலேயே வாழ்த்தப்படுகிறார்கள், முதலில் இருகன்னங்கள், அதன் பிறகு முதலில் முத்தமிட்ட கன்னத்தில் முத்தமிடுகிறார்கள்.

நியூசிலாந்தில் நானும் என் மனைவியும் ஊழியம் செய்துகொண்டிருந்த நாட்களை என்னால் மறக்க முடியாது. இந்த அழகிய தீவுகளில் முதன் முறையாக குடியேறி பாலினேசிய மக்களின் பழைய பழக்கவழக்கங்களைக் குறித்த மேடை நாடகம் ஒன்றைப் பார்க்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. பழைய ஒரு நாட்டியத்தில் பங்கேற்குமாறு என்னை மேடைக்கு அழைத்தார்கள் - இதன் பெயர் "மூக்கை உரசுதல்" என்பதாகும், இதன் படி மற்ற மனிதனின் மூக்கை மேடையில் வைத்து உரசவேண்டும். இது மிகவும் வெறுக்கக்கூடிய அனுபவமாயிருந்தது. ஆனால் வாழ்த்துக் கூறும் முறை ஒவ்வொரு கலாச்சாரத்திலும் எத்தனையாய் மாறுகிறது என்பதை அறிந்து கொண்டேன்.

நம் கலாச்சாரத்தைப் பொறுத்தவரை கையை குலுக்குகிறோம், தனிமைக் காலங்களில் ஒருவரையொருவர் தழுவும் பழக்கம் உள்ளது. ஒரு போதகராக செயல்படும் வயதான மூப்பர் ஒருவர் எங்கள் ஆலயத்தில் இருக்கிறார் - "நான் அரவணைப்பேன்" என்று கூறும் சிறிய பட்டன் ஒன்றை அவர் அணிந்திருப்பார். அரவணைப்பது அவரின் அடையாளமாகும்! மக்கள் அதனை நேசிக்கின்றனர்.

ஒரு கலாச்சாரத்திலிருந்து இன்னொரு கலாச்சாரத்தில் முறைகள் மாறுபடுகின்றன. இச்செயல்பாடுகள் கிறிஸ்தவ சமுதாயத்தில் எந்த வகையைச் சார்ந்ததாக இருந்தாலும், வேதாகம அளவு முறைகளை அவை மீறக்கூடாது. உதாரணமாக, எந்தவகையில் "முத்தமிட்டுக்" கொண்டாலும், அது எப்போதும் "பரிசுத்தமானதாக" இருக்க வேண்டும். இதுவும்கூட இந்த "ஒருவருக்கொருவர்" அறிவுரையின் கலாச்சார பரிமாணத்தின் ஒரு பகுதியாகும். நாம் எத்தனை செய்தாலும் கூட, கர்த்தரின் பரிசுத்தத்தன்மையை அது பிரதிபலிக்கவேண்டும். பேதுரு எழுதியதைப் போல், "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" (1 பேதுரு 1:15).

வேத வசனத்தில் காணப்படும் "முத்தம்"

ஒரு முத்தத்தினால் மற்றவர்களை வாழ்த்துவதற்கு வேதாகமம் பலவேறு உதாரணங்களைக் காட்டுகிறது: யூதாவும் கிறிஸ்துவும் (மத்தேயு 26:48-49); ஊதாரிப்பிள்ளையும் அவன் தகப்பனும் (லூக்கா 15:20); எபேசிய மூப்பர்களும் பவுலும் (அப்போஸ்தலர் 20:37). அந்த முத்தங்கள் குறிப்பாக எந்த வகையைச் சேர்ந்தவை என இந்த விளக்கங்களில் காணமுடியாது. மிலேத்து என்ற இடத்தில் எபேசிய மூப்பர்களும் பவுலும் பிரியும் காட்சியை லூக்கா விவரிக்கும்போது, இதைப்பற்றி அவன் சிறிது கூறுகிறான். "அவர்கள் மிகவும் அழுது என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்கமாட்டீர்களென்று அவன் சொன்ன வார்த்தையைக்குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்து, கப்பல்வரைக்கும் அவனுடனே கூடப்போனார்கள்" (அப்போஸ்தலர் 20:37) இந்த இடத்திலும் கூட விளக்கங்கள் போதுமானவையல்ல. நமக்கு கூறப்பட்டவைகளைக் குறித்து ஆராய மட்டுமே நம்மால் முடியும். அங்கு அவர்கள் கழுத்திலோ கன்னத்திலோ முத்தமிட்டிருக்கலாம். மேலும், இது அந்நாளின் கலாச்சாரத்தை ஒட்டியிருக்கலாம்.

வேத வசனங்களில் "முறையை" பற்றி மறைத்து வைத்திருப்பது

ஒரு வகை வடிவமைப்பாகும். புதிய ஏற்பாட்டு செயல்பாடுகளை விவரிப்பதற்கு புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களை அநேக முறைகளைப் பற்றி எழுதும்படி அவர் ஏவியிருந்தால், உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் செயல்படுவதற்கு மாறாக அம்முறைகளின் படி வாழத்தொடங்கியிருப்பர். ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்திற்கும், வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒரு தனிப்பட்ட முறையை உருவாக்கவும், வேதாகம கருத்துக்கள் நம்மை வலியுறுத்துவதை விட்டு விட்டு, முதலாம் நூற்றாண்டின் அமைப்புகளையும் வாழக்கை முறையினையும் இன்னமும் கடைபிடித்திருப்போம். இது கிறிஸ்தவத்திற்கு ஆபத்தானது. பழைய கிறிஸ்தவர்கள் வேத வசனங்கள் தமக்கு முறைகளை கற்றுகொடுக்க அங்கில்லையே என மனம் வருந்தினார்கள். புதிய ஏற்பாடு முழுவதும் முறைகளைப்பற்றியபல்வேறுகாரியங்கள்கூறப்பட்டிருந்தால்அதுஎப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். ஆலயம் நிச்சயமாக பிரச்சனைக்குள்ளாகியிருக்கும். மத்தியகிழக்குகலாச்சாரத்தினால்இன்னமும் நாம் கட்டுபட்டிருப்போம்.

சிரத்தையுள்ள கிறிஸ்தவ அன்பு

வாழ்த்துக் கூறும் முறை எத்தகையதாக இருக்கவேண்டும் என்புதைக்குறித்து பவுலும் பேதுருவும் கவலைப்படவில்லை, ஆனால் அது "பரிசுத்தமானதாயும்" - சுத்திகரிக்கப்பட்ட ஒன்றாயும் - உண்மையான கிறிஸ்தவ அன்பின் வெளிப்பாடாகவும் இருக்கவேண்டும் என கருதினார். விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள்ளாக உண்மையாகவே சகோதரர்களும் சகோதரிகளுமாகஇருப்பதை அதுகாட்டவேண்டும். அது வெறும்வாழ்த்து மட்டும்அல்ல-அதாவது ஒருகுறிப்பிட்ட கலாச்சாரத்தின்சமூகஉணர்வுகளை மட்டும் அது வெளிப்படுத்துவதில்லை. அது சிரத்தையும் பொருளும் அடங்கிய, நம்மீதுகர்த்தர்கரிசனையாய்இருக்கிறார்என்பதைக்காட்டக்கூடிய ஒன்றாக இருக்கவேண்டும்.

பொதுவாக மக்களுக்குள் உள்ள வாழ்த்துக்கள் வெறுமையாயும் மேலோட்டமாகவும் இருக்கின்றன. நான் எனது அனுபவத்தைக் கூறியதைபோல் "ஹலோ, எப்படி இருக்கிறீர்கள்?" என மக்கள் கூறுவர், ஆனால் உங்கள் நிலை என்ன என்று உண்மையாகவே அவர்கள் அறிந்து கொள்ள நினைப்பதில்லை. "உங்களைப் பார்ப்பது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது" என அநேகமக்கள் கூறுவதுண்டு. ஆனால்மீண்டும்உங்களை அவர்கள் காணும் போது திரும்பிக்கூட பார்ப்பதில்லை. "நீங்கள் வந்ததையிட்டு மகிழ்ச்சியடைக்கிறேன்" என்று அநேக மக்கள் கூறுவர், ஆனால் மீண்டும் நீங்கள் வந்தால் அவர்கள் கவனிக்கக் கூடமாட்டார்கள். இவை எல்லாம் பொருளற்றவையும் வெறுமையானவையுமாகும், இவற்றில் பல நிகழ்வுகள் நேர்மையில்லாமலும், கபடத்தனமானதாயும் இருக்கலாம். நம்மில் அநேகர், கலாச்சார பழக்கத்தால் இத்தகைய சொற்களைக் கூறிக்கொள்கிறோம்.

தூய நோக்கங்களுடன் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர்வாழ்த்தவேண்டுமென்பதுபவுலினதும்பேதுருவினதும்கவலையாய் இருந்தது. கரிசனத்தையும் அன்பையும் காட்டுவதாய் ஒவ்வொரு வாழ்த்தும் இருக்கவேண்டும். இன்று ஒருவருக்கொருவராக கிறிஸ்தவர்கள் வாழ்த்து கூறும்போது, இதேவிதமான செயல்பாடு அங்கிருக்கவேண்டும். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள உறுப்பினர்கள் நடுவே கபடத்திற்கும் நேர்மையின்மைக்கும் இடமில்லை.

கலாச்சார தடைகளை மேற்கொள்ளுதல்

வேதாகமம் கூறும்படி செய்யாமலிருக்கசிலநேரங்களில்நம்கலாச்சாரங்கள் காரணமாயிருக்கின்றன. உதாரணமாக, என் மனைவியாகிய எலைனின் குடும்பத்தில் சரீரப்படியான வாழ்த்துக்கள் இருக்கவில்லை. என்னுடைய அனுபவம் அதற்கு மாறானது. இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் என் அம்மாவிற்கும், எனது சகோதர சகோதரிகளுக்கும் நான் முத்தமிடுவேன்.

எனக்கு நிச்சயார்த்தம் நடைபெற்றபோது, எலைனின் தாயாரிற்கு முத்தம் கொடுப்பது சரியான ஒன்று என எண்ணினேன். நான் அவருடைய கன்னத்தில் முத்தமிட முயன்றபோது, அவர் தன்னுடைய கலாச்சாரத்தில் பழக்கப்பட்டதற்கிணங்க, உடனடியாக பின்வாங்கினார். ஆயினும் கூட, அத்தகைய விஷயங்களை அறிந்திருந்த நான் அம்முயற்சியை கைவிடவில்லை. அடுத்தமுறை நான் அவரைச் சந்தித்தபோது ஒரு முத்துடன் அவருக்கு வாழ்த்து கூறினேன் - ஆனால் இம்முறை அவர் பின்வாங்கவில்லை. அவர் அந்த அறையின் பாதி தூரத்திற்கு வந்து இந்த வாழ்த்து கூறுதலைத் தொடங்கினார். நான் அவரைச் சந்திக்கும்போது முத்தம் கொடுக்காவிட்டால் அபாயத்தைச் சந்திக்கும் அளவிற்கு இது மாறியது. அத்தகைய வாழ்த்தும் முறையை அவர் உள்ளத்தின் ஆழத்தில் விரும்பினார். ஆயினும் அவருடைய கலாச்சாரம் இதுவரை அவரை அனுமதிக்கவில்லை.

இந்த உதாரணத்தில், என் மாமியாரின் கலாச்சாரம் வேதாகம போதனைகளுடன் ஒருங்கிசையாததாக இருந்தது. ஆனால் இது நடைபெறும்போது, கிறிஸ்தவர்கள் வேதாகம உண்மையை கடைப்பிடிக்கும்படியாக "கலாச்சாரம்" நகர்ந்து இடம் கொடுக்கவேண்டும். தேவனுடைய ஏற்பாட்டு உலகத்தில் இது எப்போதும் நடந்தது.

இந்த கருத்தை இன்று செயல்படுத்துவதற்கு தேவையான செயற்குறிப்புகள்

முயற்சி 1

கிறிஸ்துவுக்குள் உள்ள மற்ற சகோதர சகோதரிகளுடன் ஒருங்கிசைவுடன் வாழுவதில் நிச்சயமாயிருங்கள்.

மற்றவர்களின்மீதுகரிசனம்இல்லாவிட்டால்உங்களால்சிரத்தையுடன் வாழ்த்தமுடியாது, அல்லது இன்னொரு கிறிஸ்தவ சகோதர சகோதரிக்கும் உங்களுக்கும் இடையில் ஏதாவது பிரச்சினை இருந்தாலும் அப்படிச்செய்யமுடியாது. பிரச்சினையைச் சரி செய்வதே கிறிஸ்துவின் சித்தத்திற்கு மறுபடியும் வருவதற்கான முதலாவது அடியாகும். ஒருவருக்கெதிராக பாவம் செய்திருந்தால் நேரடியாக அவரிடம் சென்று, நீங்கள் ஏன் அப்படிச் செய்தீர்கள் என்பதை பகிர்ந்து கொள்ளுங்கள். மறுபுறம்வேறொரிவருக்குஎதிராகநீங்கள்பாவம்செய்திருந்தால்,உடனடியாக முயற்சியில் ஈடுபட்டு பாவமன்னிப்பைக் கேளுங்கள்.

இத்தகைய பரிமாற்றத்தில் எல்லாமே மற்றவரின் தவறுதான் என நீங்கள் உணர்ந்தாலும் கூட, அவரைப்போலவே நீங்களும் தவறிழைத்திருக்கலாம் என்பதைக் கண்டுகொள்ள ஆயத்தமாயிருங்கள். தவறான புரிந்துகொள்ளுதலினாலும், பேச்சுவார்த்தை சரியானபடி இல்லாததினாலும், கிறிஸ்தவர்கள் நடுவில் மோசமான உணர்ச்சிகள் இந்நாட்களின் காணப்படுகின்றன. மற்ற நபர் தவறு செய்துள்ளார் என இரண்டு பேருமே எண்ணுகின்றனர்.

தன் தந்தையுடன் இரயில் பாதையில் நடந்து போய்க்கொண்டிருந்த சிறுவன் ஒருவனை நினைவு கூறுகிறேன். "அப்பா இங்கே பாருங்கள்," சிறுவன்கூறினான்,"அங்கேஇரயில்தண்டவாளங்கள்இணைந்துவிட்டன." தந்தை பதில் கூறினார், "இல்லை மகனே, அவை எப்போதுமே இணைவதில்லை, அவை அவ்வாறு தோன்றுகின்றன."

தன் வீட்டிற்கு சென்றவுடனே தாயாரிடம் நேரடியாகச் சென்று தன் தந்தை பொய் பேசியதாக அவன் கூறினான். "இரயில் தண்டவாளங்கள் ஒன்றுடன் ஒன்று இணைவதில்லை என அப்பா கூறினார்," என சிறுவன் கூறினான். "ஆனால் அவைகள் இணைகின்றன. நான் என் கண்களினால் கண்டேன்."

ஒரு சிறுவிஷயத்தில் எத்தனைக் கிறிஸ்தவர்கள் மற்றவர்களை குற்றஞ்சுமத்துகிறார்கள். "தண்டவாளங்கள் இணைவதைப்போல்" காணபபட்டாலும் அவை தொடர்ந்தும் "பிரிந்து" தானிருக்கின்றன. முழுகாட்சியையும் நாம் காண்பது இல்லை.

முயற்சி 2

மற்றவர்கள்மீது கரிசனம்வைப்பதற்கு எல்லாமுயற்சிகளிலும்ஈடுபடுங்கள்

மற்ற மக்களின் விருப்பங்களில் நாம் சிரத்தையாக கரிசனம் வைக்காவிட்டால், அவர்களை வாழ்த்தும்போது அது மகிழ்ச்சியாக இருக்காது. அவர்களைத் தவிர்க்கவோ அல்லது ஓடிவிடவோ நாம் விரும்புவோம் - நம்மீது ஆர்வமில்லாமல் இருப்பதாக கூற மற்ற மக்களை நாம் குறை கூறிக்கொண்டிருப்போம்.

மற்ற கிறிஸ்தவர்களின் மீது சிரத்தையாக அன்பு கூறுவதை நீங்கள் கடினமானதாகஉணர்ந்தால்,அதுஇரண்டுகாரணங்களினால்தோன்றியதாக இருக்கலாம். நீங்கள் உங்களை மையமாக கொண்ட நபராக இருக்கலாம், ஏனெனில்நீங்கள்எப்போதுமேஉங்களைக்குறித்துமுதலில்எண்ணுவதுடன் உங்களைச் சுற்றித்தான் உலகத்தை அமைத்திருக்கிறீர்கள். அல்லது மக்களுடன்இருப்பதற்குநீங்கள்தயக்கமுடையவராயிருக்கலாம்,ஏனெனில் நீங்கள் பயமுடையவர்களாகவும், தாழ்வுணர்ச்சியுடனும் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்.

இந்தபிரச்சினைகளுக்குஎதுகாரணமாயிருந்தாலும்அடிப்படையில் ஒரு தீர்ப்பு மட்டுமே இருக்கிறது. நீங்கள் உங்களை மறக்கவேண்டும். மற்றவர்களிடம்நீங்கள்செல்லவேண்டும்.கர்த்தருடையஉதவியுடன்இதனை உங்களால் செய்யமுடியும்! உங்கள் பிரச்சினை மனவியல் சம்பந்தப்பட்டதாயிருக்கும் போது அது மிகவும் வேதனையானதாயிருந்தாலும் - கிறிஸ்தவ உறவுமுறைகளில் உள்ள லாபங்களை சீக்கிரமாகவே உணரததொடங்குவீர்கள். அப்படிச்செய்யாதபோதுஆவிக்குரியபடிஎப்படிவளரமுடியுமோஅப்படி வளரமாட்டீர்கள். அதற்கு மேலும், சரீரத்தின் ஒரு பாகமாக மற்றவர்கள் வளருவதற்கு உதவி செய்யவேண்டும் என்ற பகுதியில் முழுமையாக நீங்கள் செயல்பட மாட்டீர்கள்.

முயற்சி 3

மற்ற கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்து கூறும்போது சரீர தொடுதலைக் குறித்த விஷயங்களை கருத்தில் கொள்ளவும்.

முதல்நூற்றாண்டுகிறிஸ்தவர்கள்சொற்களுக்கும்மேற்பட்டநிலையில் ஒருவரை ஒருவர் வாழ்த்தினர். இது நிச்சயமாக நடந்தது. ஒரு முத்தம்

அது எந்த வகையில் கொடுக்கப்பட்டதாயிருந்தாலும் - மற்ற நபரின் சரீரத்தைத் தொடுவது இங்கு நிகழ்ந்திருக்கிறது. தொடிவதினால் ஏற்படும் அபாயங்களைக் கருத்தில் கொண்டு அப்படிச் செய்வதின் மூலம் பாவத்திற்குள் சென்று விடுவோம் என்பது கிறிஸ்தவர்களின் கருத்தாக இருந்திருக்குமோ?

சரீரப்பிரகாரமாக ஒருவருக்கொருவர் தம் பாவத்தைத் தெரிவிக்கும்போது ஆபத்து இருக்கவே செய்கிறது, குறிப்பாக எதிர்பாலோருடன் இத்தகையச் செயல்கள் ஆபத்தை விளைவிக்கலாம். இந்த உணர்ச்சிபடியான நடத்தைகளில் மக்கள் பலவீனமுள்ளவர்களாயிருந்தால், அவர்கள் எத்தகைய சூழ்நிலையில் இருந்தபோதிலும், சரியான சிந்தனையும் நடத்தையும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்தவர்களின் எதிர்பாலானோர் "வெறுமனே பேசிக்கொள்வதிலும்" ஆபத்து இருக்கவே செய்கிறது.

சரீரப்பிரகாரமாக பாசங்களைத் தெரிவிக்கும்போது - குறிப்பாக எதிர்பாலோரிடம் அப்படி பழகும்போது உருவாகும் பிரச்சினைகளைத் தவிர்க்க கிறிஸ்தவர்களுக்கு உதவும் சில வழிமுறைகள் கீழ்க்கண்டவாறு.

1. சரீரப்படியான பாசத்தைக் காட்டுகையில், உறவில்லாத ஆண்களும் பெண்களும் இதனைத் தவிர்க்கலாம்.
2. திருமணமாகாதவர்கள் தனிமையான சூழ்நிலைகளில் இருக்கும்போது, சரீரப்படியான பாசம் தெரிவிக்கும் முறையைத் தவிர்க்கலாம். திருமணம் செய்து கொள்ளப்போகிறோம் என எண்ணும் மக்கள் கூட எந்த ஒரு சமயத்திலும் கவனமாக இருக்கவேண்டும்.
3. போதகர்களும், ஆலோசனைக் கூறுவதைத் தொழிலாக கொண்டுள்ளவர்களும், தனிமையில் இருக்கும்போது, சரீரப்படியான பாசங்களைத்தெரிவிக்கையில்மிகுந்தஎச்சரிக்கையுடன்இருக்கவேண்டும். உணர்ச்சிகளிலும் ஆவிக்குரியபடியும் பலவீனமான ஒரு நபரால், தேவையில்லாத பேச்சுகள் மூலம் ஒருவரின் மரியாதையை அழிக்கமுடியும். இத்தகைய நபர்கள், தம்முடைய வீண் கற்பனைகளின் மூலம் காணும் காட்சிகளை பெரிது படுத்தலாம்.

மேலும், பாலியல் பலாத்கரங்களைக் குறித்து மக்களைக் குறைப்படுத்தும் போக்கை நம்மால் அலட்சியப் படுத்தமுடியாது. நமது சமுதாயத்தில் இது ஒரு கொள்ளை நோயாகிவிட்டது. சட்டப்படி வழக்குத் தொடரும்விதமாக, இன்னொருவரின்உதவியுடன்காட்சிகளை அமைப்பது வெகுவாக நடைபெறுகிறது. குறிப்பாக கிறிஸ்தவ தலைவர்களாகிய நாம் மிகுந்தகவனமாகஇருக்கவேண்டும்-ஆனால் 'குணமாக்கும்தொடுதலின்' முக்கியத்தை நாம் அலட்சியப் படுத்தக் கூடாது.

4. திருமணமாகாத கிறிஸ்தவர்கள், மற்ற நபர்களின் உணர்வுகளைத் தூண்டி எழுப்பி, தவறானசிந்தனைகளையும்செயல்பாடுகளையும்வெளிப்படுத்தும் விதமாக சரீரப்படியான உணர்வுகளைக் காட்டவே கூடாது.

5. இலகுவாகபாவம்செய்யக்கூடியவர்கள், எதிர்பாலாரிடம் சரீரப்படியான பாசத்தை தெரிவிக்கும் போது மிகவும் எச்சரிக்கையுடனிருக்கவேண்டும்.

ஒருமுறைஒருஇளம்பெண்ணுடன்பேசிக்கொண்டிருந்தேன். தனது கிறிஸ்தவதநதையைக்குறித்துஅவள்புகார்கூறினாள். அவர்உணர்ச்சிகளைத் தூண்டும்வகையில்உதடுகளில்முத்தமிடுவதாககூறினாள். பின்பொருநாள், அவர் தன் இல்லற வாழ்க்கையில் மனைவியால் மகிழாதவர் என்பதால், உறவுகளில்பாவம்செய்யக்கூடியவராகஇருந்தார்என்பதையும், அதனைத் தனது சொந்த மகளிடமே காட்டினார் என்பதையும் அறிந்து கொண்டேன்.

இறுதி வார்த்தை

பக்குவப்பட்ட கிறிஸ்தவர்களால் தொடும்வகை பாசத்தைக் காட்டமுடியும், காட்டவும் வேண்டும். நம்முடைய சமுதாயத்தைப் பொருத்தவரை, கைகுலுக்குவதும், கன்னத்தில் முத்தமிடுவதும், மிதமாக அணைத்துக்கொள்வதும் சரியானவைகளே. இத்தகைய பாசத்தை அநேக கிறிஸ்தவர்களால்வெளிப்படுத்தமுடியும். ஆனால்இது தூயநோக்கங்களின் அடிப்படையில் அமைந்திருக்கவேண்டும். இந்த முறையில் இதனைச் செயல் படுத்தும்போது அது ஒருமைப்பாட்டையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்தி ஆவிக்குரியமற்றும்மனநிலைக்காயங்களையும்குணமாக்குகிறது. ஆனால் சரியானமுறையில் இது வெளிப்படுத்தப்படாத போது, அதாவது தவறான நோக்கங்கள், சுயநலச்செய்கைகள் ஆகியவற்றை இது பிரதிபலித்தால், காயங்களையும், கசப்புகளையும், கெட்டநடத்தைகளையும் நோக்கு இது வழிநடத்தும். ஆனால் கிறிஸ்தவ உறவுமுறைகளில் இது முக்கியமான பாகம் என்பது உண்மையில்லையா?

சிறு குழுக்கள் விவாதிப்பதற்கான வழிமுறைகள்

தொடக்கம் (இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்)

1. குழுவின் கூட்டம் தொடங்குவதற்கு முன்னால், பல குழுக்களிலுள்ள உறுப்பினர்களை வெவ்வேறு கலாச்சாரத்திற்கு ஏற்றவாறு ஆடையணிந்து, அதற்கேற்றவிதமாக ஒருவரை ஒருவர் வாழ்த்தும் படி கூறுங்கள்.

இங்கே சிலமுறைகள் கூறப்பட்டுள்ளன:

ரஷ்யர்கள்: ரஷ்ய தொப்பியையும்மயிரிழையினால்தயாரிக்கப்பட்ட முழு ஆடையையும் அணியுங்கள். வருபவர்களை இறுக்கமாக அணைத்து வலது கன்னத்தில் முத்தமிடுங்கள்.
எஸ்கிமோ: முகத்தை மட்டும் காட்டும்படியான முழு ஆடையை அணியுங்கள். வருபவர்களின் இரண்டு தோள்களையும் பிடித்து மூக்கை உரசுங்கள்.
ஆசியர்கள்: ஆசியர்களைப் போல் ஆடை அணியுங்கள். வருபவர்களை குணிந்து வரவேற்கவும்.
நிறுவன அதிகாரி: நிறுவன ஆடை அணியுங்கள். வருபவர்களை உறுதியான கைகுலுக்களால் வரவேற்கவும்.

2. மூன்று பேர் கொண்ட குழுக்களை உருவாக்குங்கள். சிரத்தையில்லாத மோசமான வாழ்த்தும் முறை என அவர்கள் கருதும் ஐந்து முறைகளை பட்டியலிடும்படி கூறுங்கள். பட்டியல்களை ஒப்பிடுங்கள். ஒரு குழுவின் பட்டியலிலுள்ள குறிப்பு இன்னொரு குழுவின் பட்டியலில் இருந்தால் அவர்களுக்கு ஒரு மதிப்பெண் வழங்குங்கள். உரையாடுங்கள்: சரியான பொருள்படும்படிமட்டுமேஇந்தவாழ்த்துக்கள்கூறப்பட்டிருந்தால், இதனை எத்தனைமுறைபயன்படுத்துகிறீர்கள்? நாம்கூறுவதைஇந்தவாழ்த்துக்கள் தெரியப்படுத்தவில்லை எனில், இதனால் உண்டாகும் பயன் என்ன?

உரையாடுவதற்காக

1. ஒரு வேதாகம செயல்பாட்டிற்கும், கலாச்சார முறைக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன? "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்." என்ற அறிவுரையின் பொருள் என்ன? கலாச்சாரம் என்பதென்ன? இன்றைய கிறிஸ்தவர்களுக்கு பவுல் அதே கட்டளையை எழுதியிருந்தால்,எத்தகையவார்த்தைகளைஅவன்பயன்படுத்தியிருப்பான்.

2. ஒரு கிறிஸ்தவர்களின் குழுவில் வாழ்த்து கூறும் செயல்முறையானது எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது? புதிய ஏற்பாட்டில் அது ஐந்து முறை கூறப்படுவதால் அதற்கு இருக்கும் முக்கியத்துவத்தின் மதிப்பைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

3. கொலோசெயர் 3:12-14 ஐ வாசியுங்கள். நம்முடைய வாழ்த்து கூறுவதில் என்ன உறவுமுறைகளை இக்கிறிஸ்தவர்கள் எப்படி பிரதிபலிக்கிறார்கள்? அந்த வாழ்த்துக்கள் எம்முறையைச் சார்ந்ததாக இருக்கும்?

4. கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்தும்போது, அவர்களின் சரீரம் எந்த அளவுஒன்றுடன்ஒன்றுபடுவதுசரியானதுஎனநீங்கள்காணுகிறீர்கள்? அதிகப்படியான தொடுதல் எத்தகைய சூழ்நிலைக்குச் சரியானது என நீங்கள் எண்ணுகிறீர்கள்? இதனைத் தவறாக பயன்படுத்துவதை எப்படி பாதுகாப்பீர்கள்? இதனைத் தவறாக புரிந்துகொண்டிருந்தீர்களா?

5. "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்." என்ற வேதாகமத்தின் அறிவுரையைத் தடுக்கும் கலாசசாரத் தடைகள் இருக்கின்றனவா?

முடிவு

மற்ற குழுவின் உறுப்பினர்களைப் பார்க்கும்போது அவர்களை வாழ்த்துவதற்கானகுழுவுக்குரியவாழ்த்தைஉருவாக்குங்கள்.உதாரணமாக, குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் பொருள் உள்ளதாக கருதக்கூடிய சொற்றொடர்களை உருவாக்க நீங்கள் விரும்பலாம். (அது "கர்த்தர் உங்களோடிருப்பாராக" என்பதைப் போன்றிருக்கலாம்) அது ஒரு பாவனையுடனோ தழுவுதலுடனோ கூறப்படலாம். நீங்கள் எதனைத் தேர்ந்தெடுத்தாலும்அதனைக்குறித்துநன்குகலந்துரையாடுங்கள்,இதனால், இது வெறும் ஒரு வாழ்த்தாக இல்லாமல், உங்கள் குழுவினர் உபயோகிக்கக் கூடிய அர்த்தமுள்ள சடங்காக இருக்கும். ஒன்றாக சேர்ந்து ஜெபித்த பிறகு அதனை முடிவு செய்ய உங்கள் வாழ்த்துதலை பயன்படுத்துங்கள்.

அடுத்தமுறைக்காக

1. எட்டாம் அத்தியாயத்தை வாசியுங்கள்.
2. கலாச்சாரத்திற்கு ஏற்றபடியும் வேதாகமத்திற்கு ஏற்றபடியும் சரியான ஒரு வாழ்த்தும் முறையினால் மற்ற கிறிஸ்தவர்களை வாழ்த்துவதற்கான வழிகளைக் குறித்து யோசித்து, அதற்காக ஜெபியுங்கள்.
3. நீங்கள் தனிமையில் இருந்து காதலில் ஈடுபட்டிருந்தால், தூய்மையைக் காப்பாற்றிக்கொள்வதற்கானஇந்தஅதிகாரத்தின்வழிமுறைகளைக்குறித்து கலந்துரையாடுங்கள்.



அத்தியாயம் எட்டு

ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள்

[illegible]கோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் [illegible]யாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், [illegible]ன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்.

கலாத்தியர் 5:13.

வளர்ந்துவரும் ஓவியர் ஒருவர் கடைசி இராப்போஜனத்தின் படத்தை [illegible]ாக வரைந்துவிட்டு, எழுத்தாளர் லியோ டால்ஸ்டாயின் கருத்துக்காக [illegible] ஓவியத்தை அவரிடம் எடுத்துச் சென்றார். கவனமாகவும் [illegible]க்கொள்ளும் வகையிலும், ரஷ்ய வார்த்தைகளின் அரசர் அதைப் [illegible]ார். அதன் பிறகு நடுவில் இருக்கும் உருவத்தைப் பார்த்து "இவரை [illegible] நேசிக்கவில்லை" என்று கூறினார்.

"ஏன், அது தேவனாகிய இயேசு கிறிஸ்து" என்று அந்த ஓவியன் [illegible]ான்.

"அது எனக்குத் தெரியும்," டால்ஸ்டாய் வலியுறுத்தினார், "நீ [illegible]ரை நேசிக்கவில்லை. நீ அவரை அதிகமாய் நேசித்திருந்தால், இன்னமும் [illegible]ாக அவரை வரைந்திருப்பாய்.

இந்த முறையில் நம்மில் சிலர் வளர்ந்துவரும் ஓவியர்களே. ஆனால் [illegible]கமம் நம் எல்லோரையும் பணியாளராகவே இருக்கக் கற்பிக்கிறது [illegible] தேவனாகிய இயேசு கிறிஸ்துவிற்கும், ஒருவருக்கு ஒருவரும் [illegible]ாளாக இருக்கும்படி கற்பிக்கிறது. இதை மனதில் வைத்துக்கொண்டு [illegible]ால்ஸ்டாயின் குறிப்பை படிப்பதற்காக மாற்றி எழுதிக் கொள்ளலாம், [illegible]கள் அவரை அதிகமாக நேசித்தால், நீங்கள் அவருக்கு அதிகமாக [illegible] செய்வீர்கள்." இன்னும் கூறினால், "நாம் ஒருவரை ஒருவர் [illegible]போமானால் நாம் ஒருவருக்கொருவர் அதிக வேலை செய்துக் [illegible]வோம்." கலாத்தியருக்கு பவுல் எழுதியதைப் போல, "சகோதரரே, [illegible]கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் [illegible]த்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் [illegible]ஞ்செய்யுங்கள்" (கலாத்தியர் 5:13).

நாம் வேலையாட்களாக இருக்க வேண்டும்

புதிய ஏற்பாட்டு மொழியின் நான்கு அடிப்படை வார்த்தைகளான "சேவை செய்," "வேலைகள்," "சேவை செய்தல்" ஆகியவை அடிக்கடி மொழிபெயர்க்கப்படுகின்றன. அல்லது மொத்தத்தில் இந்த அடிப்படை சொற்கள்300க்கும்அதிகமானமுறைபயன்படுத்தப்பட்டுள்ளது.(சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தல நடபடிகளில் 130 முறையும், 170 முறை மற்ற நிருபங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது).

மிகவும் அதிகமாக உபயோகப்படுத்தப்படும் இரண்டு வார்த்தைகள் "தவ்லியோ" மற்றும் "தயோகோனியோ" ஆகும். "தவ்லியோ" என்பது அடிமையாக இருக்கவேண்டும், சேவை செய்யவேண்டும், கீழ்ப்படிய வேண்டும், ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பொருள் படும். இது நல்ல வகையிலும் கெட்ட வகையிலும் உபயோகப்படுத்தப்படுகிறது. இது நல்ல வகையில்பார்க்கும்போது கர்த்தருக்கும்கிறிஸ்தவ அன்பில்தொடர்புடைய நபர்களுக்கும் சேவை செய்யவேண்டும் என்று பொருள் தரும். கெட்ட வழியில் பார்த்தோமானால் சில அசுத்த சக்திகளுக்கு அடிமையாகுதல் என்றுபொருள்தரும்.உதாரணமாகபவுல்ரோமர்களுக்குஎழுதியகடித்தத்தில் மக்கள் பாவத்தின் அடிமைகளாக இருக்க முடியும் என்று போதித்தார். (ரோமர் 6:6).

'தயோகோனியோ' என்றால் யாருக்காவது ஊழியம் செய்யவேண்டும் என்று பொருள். இன்னும் கூறினால், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் இந்த வார்த்தையை, மக்களுக்கு உணவும், தண்ணீரும் கொடுப்பவர்களையும், மற்றவர்களின் பொருள் தேவை மேல் அக்கரை எடுத்துக் கொள்ளுபவர்களையும் விவரிக்க பயன் படுத்தினார்கள். மிகவும் பொதுவாககூறினால்மற்றவர்கள்நலனுக்குஉதவும்வகையில்எதையாவது செய்ய முன்வருபவர்களை இது விவரிக்கிறது. இந்த பொதுக் கொள்கையிலிருந்து தான் 'டீக்கன்' என்ற வார்த்தை நமக்கு கிடைத்தது.

இந்த விளக்கங்களிலிருந்து முதல் வார்த்தையாகிய 'தவ்லியோ' என்பது தன் அர்த்தத்தில் மிகவும் சக்தி வாய்ந்தது என்பது தெளிவாகிறது. சிலவகையானஇவ்வார்த்தைகள்புதியஏற்பாட்டில்ஏறத்தாழ160முறைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன. ஒரு *தவ்லோஸ்* அடிமையாகவும், கட்டுப்பட்டவனாகவும்,சேவைசெய்பவனாகவும்இருந்தான்.இதனுடைய சக்தி வாய்ந்த அர்த்தத்தில் பார்த்தால், இந்த வார்த்தை மற்றவரின் விருப்பத்திற்கு தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்துவிட்ட ஒரு நபரை பற்றி கூறுகிறது. இந்த அர்த்தத்தைத்தான் பவுல் எழுதும் பொழுது உபயோகப்படுத்தினான். "ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள் [தவ்லியோ]"(கலாத்தியர்5:13)ஒருவருக்கொருவர்மிகவும்அர்ப்பணத்துடன் ஊழியம் செய்யவேண்டும் என்பதைப் பற்றி அவன் எழுதிக்கொண்டிருந்தான்.விசுவாசிகளாகஇருந்துநாம்நம்மைமுழுமையாக மற்றவர்களுக்குகொடுப்பதுஒருவருக்கொருவர்அடிமைகளாகஆவதற்குத் தான்.

இன்றைய சமுதாயம் இந்த முக்கியதுவத்திலிருந்து எத்தனை வேறுபடுகிறது! "என்னுடைய" மற்றும் "என்னைப்" பற்றியுள்ளதற்போதைய பத்திரிக்கைகளின் தலைப்புக்களை கணக்கெடுத்துப் பாருங்கள். இந்த பதிப்பகங்களின்தாகம்என்னவென்றால்நான்முக்கியமானவன்,என்னுடைய உரிமைகள் எல்லாம் மிகவும் முக்கியமானவை என்பதாகும். ஒரு வேளை என்னுடைய உரிமைகள் உங்கள் உரிமைகளுடன் போரிட்டால், நான் முதலில் வருவேன். ஒரு வேளை, நீங்கள் என்னுடைய தேவைகளை சந்திக்க முடியாவிட்டாலும், நான் உங்களுடைய தேவையை சந்திக்க முடியாவிட்டாலும், ஒரு வேளை நம்மால் ஒன்றாக வேலை செய்ய

முடிவிட்டாலும், நீங்கள் உங்கள் வழியில் போங்கள் நான் என் வழியில் போகிறேன்.

"உங்கள் உணர்வுகளை செவ்வைப்படுத்துங்கள்" என்ற தன்னுடைய புத்தகத்தில் "சக் சிவிண்டால்" இந்த முக்கியதுவத்தை எழுத்து பிரமிட் மூலம் கூறியுள்ளார். பிரமிட்டின் உச்சியில் 'நான்' என்றும் அது கீழே செல்லும் பொழுது "நாம்" "என்னுடையது" மற்றும் "நான்தான்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

என்
நான்
எனது
என்தன்மை

மக்கள் ஏன் இப்படி செயல்படுகிறார்கள்? வேதாகமம் இக்கேள்விக்கு திலளிக்கிறது. எல்லோரிடமும் விரைந்து செயல்படும் நம் வக்கொள்கையை அது பிரதிபலிக்கிறது. ஆதாமும் ஏவாளும் கர்த்தருக்கு ...ப்படியாத காலம் முதற்கொண்டே, நாம் எல்லோரும் சுயநலவாதிகளாக ...கியுள்ளோம். ஆண்கள் அதிகாரமுள்ளவர்களாகவும், அடிக்கடி ...ரேமானவர்களாகவும் உள்ளனர். அவர்களின் எண்ணத்திலும் செயலிலும் ...ணகளுக்கு எதிராக செயல்படுகின்றனர். மேலும் மற்ற எல்லா மனித ...த்தவருக்கும் எதிரிகளாய் ஆகியுள்ளனர் சுயநலமுள்ளவர்களாகவும், ...க கொடுக்காதவர்களாகவும், அதிகாரங்களுக்கு அடி ...யாதவர்களாகவும் பெண்கள் மாறியுள்ளனர். உண்மையில் இதுவெல்லாம் ...ண ஆதிக்கத்திற்கும் சுயநலத்திற்குமான ஒரு எதிர்செயலே ஆகும், ...னால் அதனுடைய வேரில் எல்லா மனித குலத்தையும் அசுத்தப்படுத்தும் ...த்தின் பிரதிபலிப்பு காணப்படுகிறது. நமக்கு நாமே கவனம் ...த்துகிறோம் - நம்முடைய நலத்திற்காக. இது நம்முடைய இயற்கை.

இந்த பிரச்சினையில் இருந்து நாம் எப்படி விடுபட முடியும்? பவுல் ...த கேள்விக்கு பதிலளிக்கிறான்.

நாம் ஒருவருக்கொருவர் சேவை செய்ய வேண்டும்

நம்முடைய சுயநலம் உருவத்தை உடைப்பதற்கான சாத்தியத்தை ... எல்லோருக்குமாக இயேசு உருவாக்கினார். கிறிஸ்துவுக்குள், நாம் ...றவர்களுக்கு ஊழியம் செய்யவும், நம்மைப் போல் மற்றவர்களை ...க்கவும் சுதந்திரமானோம் (கலாத்தியர் 5:14). நாம் கிறிஸ்துவர்களாய் ...கும்போது நமக்கு புதிய வாழ்க்கை, அதாவது நித்திய ஜீவன் - கிடைக்கிறது. ...லும் அந்த சிறந்த பரிசு நம்மை நாம் இருக்கும் இடத்தை விட மேலான ...த்திற்குப் போவதற்கான வல்லமையைக் கொடுக்கிறது. கூடவே ...றவருக்கு சேவை செய்பவருக்கு கிடைக்கும் முழுநிறைவையும் நாம் ...நுபவிக்கமுடியும். இதைத்தான் இயேசு கிறிஸ்து குறிப்பிட்டார். இதை ...னஅவர் "தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; ...னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் ...டைவான்." (மத்தேயு 16:25) என சொல்லும்பொழுது குறிப்பிட்டார்.

கிறிஸ்தவம் தொடர்புடையது. முதலில், இயேசு கிறிஸ்துவுடன் ...ற்பட்ட உறவை அடக்கியுள்ளது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து,

கர்த்தரின் மைந்தன் என்பதைத் தெரிந்துக்கொண்டு மட்டும் நாம் கிறிஸ்துவர்களாகாமல், அவரை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவர்களாகிறோம்.

யோவான் எழுதினான் "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." (யோவான் 1:12). மேலும் இந்த வகையில் இயேசு கிறிஸ்துவை நாம் பெறும் பொழுது நமக்கு அவரிடம் சிறப்பான தொடர்பு ஏற்படும்.

ஆனால் கிறிஸ்துவுடனும் கிறிஸ்துவுக்குள்ளுமான புதிய தொடர்பு *செங்குத்தாக* உள்ளது. அது *மட்டமாகவும்* உள்ளது. நாம் ஆலயமாகிய கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினர்களாக ஆகிறோம். ஒரே ஆவியினாலே நாமெல்லாரும் ஒரு சரீரத்தில் வைக்கப்படுகிறோம் (1 கொரிந்தியர் 12:13).

முதலாம் அதிகாரத்தில் பார்த்ததைப்போல நாமெல்லாரும் "ஒருவருக்கொருவரின் உறுப்பினர்கள்." மனித சரீரத்தில் பல உறுப்புகள் ஒன்றை ஒன்று சார்ந்து, ஒருகிணைந்து இருப்பதைப் போல, கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள மற்ற எல்லா பாகங்களுடனும் தொடர்புடையவர்களாக உள்ளோம். (வசனம் 26).

ஒருவருக்கொருவர் அன்புடன் சேவை செய்ய வேண்டும்

உண்மையான அன்பினால் ஒருவருக்கொருவர் சேவை செய்யவேண்டும். பவுல் கலாத்திய கிறிஸ்தவர்களை நோக்கி நீங்கள் சுதந்திரமானவர்கள் என்றுச் சொன்னான். ஆனாலும் அந்த சுதந்திரத்தை அவர்கள் பாவ வாழ்க்கையில் ஈடுப்படுவதற்காக பயன்படுத்தக்கூடாது. (கலாத்தியர் 5:13). வேறு விதமாக கூறினால் நிறைவில்லாமலும் சரீர சம்பந்தமாகவும் மற்றவர்களுக்கு சேவைச் செய்வது சாத்தியமே.

நமக்கு மற்றவர்களிடம் உள்ள உறவை நோக்கி எது நம்மை வழி நடத்த வேண்டும்? பவுல் எழுதினான் "நாமெல்லாம் ஒருவருக்கொருவர் அன்புடன் சேவை செய்யவே உள்ளோம். இந்த குறிப்பை இன்னும் தெளிவுப்படுத்த, கலாத்தியருக்கு நினைவுபடுத்தினான், "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்" (வசனம் 14).

அன்பு என்பதற்கு இரண்டு அடிப்படை வார்த்தைகள் (அகாப்பே மற்றும் ஃபிலியோ) முன்னூறுக்கும் அதிகமான முறை புதிய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஒரு பாதி கர்த்தரிடம் நமக்கு உள்ள உறவையும் மறு பாதி மற்றவர்களிடம் நமக்கு உள்ள உறவையும் கூற இந்த கருத்து உதவுகிறது. "சிறந்த கட்டளை எது" என்ற பரிசேயனின் கேள்விக்கு இயேசு பதிலளித்தது இதன் பார்வையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இயேசு பதிலளித்தார்: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாவது கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்." (மத்தேயு 22:36-40)

மற்ற புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் அன்பு என்பது நம்முடைய உறவுகளுக்கு வழிகாட்டும் தெய்வீகதத்துவமாக இருப்பதாக ஆராய்ந்துள்ளனர்.

குறிப்பாக யோவான் இந்த கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தான். அவனுடைய முதலாம் நிருபத்தில் அன்பு என்ற வார்த்தையை ஐம்பதுக்கும் அதிகமான முறை உபயோகித்துள்ளான். அவன் ஐந்து முறை அழுத்தமாக எழுதினான் "ஒருவரை ஒருவர் நேசியுங்கள்." (1 யோவான் 3:11,23; 4:7, 11-12).

கிறிஸ்தவ உறவின் தரத்தை அளப்பதற்கான மிகவும் முக்கியமான தகுதி அன்பு என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் தன் கடிதத்தில் மீண்டும் மீண்டும் விளக்கிக் காட்டியுள்ளான். தொடரும் சொற்றொடர்களைக் கவனியுங்கள்.

இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது (1 கொரிந்தியர் 13:13)
அன்பை நாடுங்கள் (14:1)
உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது (16:14)
நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி (எபேசியர் 4:2)
அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார் (4:15)
கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். (5:2)
இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். (கொலோசெயர் 3:14)
அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு (2 தீமோத்தேயு 2:22)

வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளதைப் போல அன்பு என்பது எல்லா கிறிஸ்தவ உறவுகளுக்கும் வழிகாட்டும் தத்துவமாக உள்ளது. கூடவே ஒருவருக்கொருவர் சேவை செய்யும் முறையும் இதில் அடங்கியுள்ளது. கிறிஸ்துவைப் போல அன்பு இல்லாவிட்டால் நம்முடைய உறவுகள் சுயநலத்தாலும் வலியுள்ள கட்டுகளாலும் ஆதிக்கம் செலுத்தப்படும். பிறவர்களுக்கு சேவைச் செய்வது நல்லதைவிட கெட்டதாகி விடுகிறது. ஆனால் தெய்வீக அன்பின் தத்துவத்தின் வழிநடத்துதலின் மூலம் பிறவர்களுக்கு சேவைச் செய்வது கிறிஸ்துவைப் போல உள்ள சபையின், சக்தி வாய்ந்த உதாரணமாகிவிடும்.

சேவை செய்வதற்கான சுதந்திரம்

பெரிய ஜம்போ விமானத்தில் நான் ஏறும்போது ஆச்சரியப்படுவதை நிறுத்துவதில்லை. ஏரோ டைனமிக்ஸ் விதி செயல்படுவதை முதலில் நான் அனுபவிக்கிறேன். உதாரணமாக, 500 இருக்கைகள் கொண்ட பயணிகளை ஏற்றக் கூடிய 747 மிகப் பெரிய வாகனம். முழுமையாக மக்களையும், அவர்கள் எடுத்துச்செல்லும் பொருட்களையும், எரிபொருளையும் சேர்த்து 400 டன் எடை இருக்கும்.

அந்த விமானம் புறப்படும்போது நான்கு மிகப்பெரிய 'ஜெட்' இயந்திரங்களை பைலட்டுகள் இயக்குகின்றனர். நீங்கள் இருக்கிற

இருக்கைகளிலிருந்து பின்னுக்கு தள்ளுவதை நீங்கள் உணரும் அளவிற்கு அந்தவிமானம் செல்லும் பொழுது சக்தி செயல்படுகிறது. ஒரு நிமிடத்திற்கும் குறைவான நேரத்தில், அந்த பெரிய இயந்திரம் ஆகாய மார்க்கமாக ஒரு கால் பந்தாட்ட மைதானத்தின் தூரத்தைக் கடந்துவிடுகிறது, சராசரியாக 40,000 அடி உயரத்திற்கு வானத்தில் உயர ஏறிவிடுகிறது, மேலும் ஒரு மணி நேரத்திற்கு சுமார் 600 மைல் தூரம் பயணம் செய்கிறது.

அதிகமாக பயணம் செய்யும் மக்கள் இந்த அனுபவத்தை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் ஆர்வில்ரைட்டு மற்றும் வில்பர்ரைட்டு ஆகியோர் இந்த நம்பமுடியாத அதிசய சம்பவத்தில் தாமும் ஒரு பகுதி என்பதை நினைத்து எப்படி உணருவார்கள் என்பதை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? அவர்கள் அநேகமாக மாரடைப்பு வருவதற்கான நபர்களாக இருந்திருப்பர்.

ஆச்சரியத்தக்க விஷயம் என்னவென்றால் புவியீர்ப்பு விதி, மிகவும் பெரிய மற்றும் அதிக எடைக் கொண்ட எந்த பொருளாலும் பூமியிலிருந்து மேலே போகமுடியாது என்று சொல்கிறது. உண்மையில், நான் ஆறடி உயரமும் 190 பவுண்டு எடையும் உடைய மனிதன், ஆனாலும், பத்து அடி உயரம் கொண்ட கூடை வளையத்தில் கூடைப்பந்தை போடுவதற்கு குதிக்க வேண்டிய அளவிற்கு கூட என்னால் குதிக்க முடிந்ததில்லை, இதைச் செய்வதாக இருந்தால், நான் புவியீர்ப்பு விதியை தோற்கடிக்க வேண்டும்.

அத்தனை எடைக்கொண்ட 747, நடைப்பாதையிலிருந்து தூக்கிக் கொண்டுகழுகைப்போலபறப்பதுஎப்படிஎன்பதைவிளக்கஇதுஉதவுகிறது. புவியீர்ப்பின் விதியை அதன் சக்தி வாய்ந்த 'ஜெட்' இயந்திரங்களும் பொறியியல் வடிவமைப்பும் தோற்கடித்துவிடுகின்றன. இந்த விஷயத்தில் மனித புத்திசாலித்தனத்தால் வேலைச் செய்யும் ஏரோ டைனமிக்ஸ்சின் விதி புவியீர்ப்பு விதியை விட அதிக சக்தி வாய்ந்தது. இந்த தத்துவம் ஆவிக்குரிய பகுதியிலும் உண்மையானதாக உள்ளது. எல்லா காலத்திலும் வாழ்ந்த எல்லா மனிதர்களிடமும் பாவத்தின் மற்றும் சாவின் விதி இயங்கி வந்தது (ரோமர் 8:2), ஆனால் வேதாகமம் சிறந்த மற்றும் சக்தி வாய்ந்த ஒரு விதியை வெளிப்படுத்துகிறது. அது மனித பொறியியல் மூலம் அல்ல, கர்த்தராலேயே இயக்கமுடியும். அது தான் ஆவிக்குரிய வாழ்க்கையின் விதி. இயேசு கிறிஸ்துவின் வருகையின் பொழுது அது கிடைக்க வகைச் செய்யப்பட்டது(வசனம்2). இந்தவிதிதான்நம்மைசுதந்திரமாககர்த்தருக்கும் மற்றவருக்கும் அன்புடன் சேவைச் செய்ய வைக்கிறது. இதனால் தான் பவுல், சுதந்திரத்தின்பகுதியில்சேவைசெய்வதுஎன்றால்என்னஎன்பதைக் குறித்து கூறுகிறார். நாம் கிறிஸ்துவுக்குள் சுதந்திரமாக இல்லை என்றால் நம்மால் கர்த்தரின் விருப்பப்படி சுதந்திரமாக சேவை செய்யமுடியாது. பவுல் எழுதினான், "சகோதரரே, நீங்கள் *சுயாதீனத்திற்கு* அழைக்கப்பட்டீர்கள், இந்தச் *சுயாதீனத்தை* நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" (கலாத்தியர் 5:13).

கிறிஸ்துவுக்குள் சுதந்திரம்: விசுவாசத்தின் மூலம் கிடைக்கும்

பவுல் இந்தப் பகுதியை அவனுடைய கலாத்திய கடிதத்தில் சுதந்திரத்தின் வாக்குமூலம் மூலம் தொடங்கினான். எப்படி இருப்பினும், சுதந்திரத்திற்காகத்தான்கிறிஸ்துநம்மைவிடுதலையாக்கியுள்ளார், என்பதை எழுதுவதற்குமுன்பாகவேஇந்தகருத்தைஅவன்அறிமுகப்படுத்தியுள்ளான் (5:1). இந்த அற்புதமான ஆவிக்குரிய உண்மையை இன்னும் முழுமையாக

அறிந்து கொள்ள, பவுல் எழுதியுள்ள மற்றுமொரு கடிதத்தைப் பார்க்க வேண்டும். ரோமருக்கு எழுதிய நிருபத்தில் கிறிஸ்தவர்களின் பழைய மற்றும் புதிய முறைகளுக்கு இடையே அடிக்கடி நடக்கும் சண்டையுடன் தொடர்புடைய வேதாகமத்தின் ஒரு பகுதியினை முடிவுக்கு கொண்டு வந்த பிறகு, பவுல் முடித்தான்:

> ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:1-2).

இயேசு கிறிஸ்துவே நம்முடைய சுதந்திரத்தின் வழி. மேலும் கிறிஸ்துவுக்குள் சுதந்திரம் விசுவாசத்தின் வழியாக கிடைக்கும் என்று வேதாகமம் தெளிவுப்படுத்துகிறது. இதனால் பவுல் எழுதினான்:

> இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிறநம்பிக்கையினால்மேன்மைபாராட்டுகிறோம். (ரோமர் 5:1-2)

கிறிஸ்துவுக்குள் சுதந்திரம்: ஏற்றுக்கொள்ளுதலின் மூலம் தொடர்புபடுத்துகிறோம்

ஒரு கிறிஸ்தவன் எப்போது சுதந்திரமாக உள்ளான்? கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கும் அதே வேளையில் (ரோமர் 6:18, 22), விசுவாசிகளாயிருக்கும் நாம் அனைவரும் பாவத்தில் இருந்து விடுதலையாக்கப்பட்டுள்ளோம் என்று வேதாகமம் போதிக்கிறது. நாம் கிறிஸ்தவர்களாகும்பொழுது பாவம் ஒருபோதும் நம் எஜமானனாக இருக்க முடியாது. எப்போது விசுவாசத்தின் மூலம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக நம்புகிறோமோ, அப்போதிலிருந்து நாம் அவருடைய மரணத்தின் மூலம் அடையாளம் காணப்படுகிறோம். இந்தச் செயலில், கிறிஸ்துவுக்குள் மறிக்கிறோம், பவுல் எழுதினான், "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச்சிலுவையில்அறையபப்பட்டதென்றுஅறிந்திருக்கிறோம்" (வசனம் 6). பவுல் மேலும் சொல்கிறான், "மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே"

தவறாக புரிந்துகொள்ள வேண்டாம். பாவத்திலிருந்து விடுதலை என்றால்நாம்இனிமேல்பாவம்செய்யதூண்டப்படமாட்டோம், எப்போதும் பாவம் செய்ய மாட்டோம், பாவம் செய்ய நமக்கு சுதந்திரம் இல்லை என்று வேதாகமம் எங்குமே கற்பிப்பது இல்லை. இதனால் தான் "பாவ வாழ்க்கையில் ஈடுப்படுவதற்காக" கிறிஸ்துவின் சுதந்திரத்தை பயன்படுத்த வேண்டாம் என்று கலாத்தியர்களை பவுல் கண்டித்தான் (கலாத்தியர் 5:13). வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்றால் நாம் பாவத்தின் சக்தியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம். பழைய முறைக்கும் பாவத்துக்கும் நாம் சேவை செய்ய வேண்டியதில்லை. சிறையின் கதவுதிறந்துள்ளது. புதியஉலகத்திற்குள்

நடந்துபோவதேநாம்செய்யவேண்டிதெல்லாம். நாசி சிறைமுகாமிலிருந்து விடுவிக்கப்படுவதாககோரி டென்பூம் அவளுக்கு அறிவிப்புகொடுத்தபிறகு அவளை அங்கிருந்து சிறைவாசல் கதவுக்கு அழைத்துச் சென்றார். பிறகு அவள் எழுதினாள்:

வாசற்கதவுவிரைவாகதிறந்தது. முகாமுக்குமுன்னால்உள்ளஏரியைப் பார்த்தேன். நான் சுதந்திரத்தை சுவாசிக்க முடிந்தது. "என்னைத் தொடர்ந்து வா" என்றுசீருடையில்இருந்தஇளம்பெண்அதிகாரி என்னிடம்சொன்னாள். பின்திரும்பிப் பார்க்காமல் நான் மெதுவாக வாசற்கதவுக்குச் சென்றேன். எனக்குபின்னால்வாசற்கதவுசாத்தப்படுவதால்ஏற்படும்கீழ்களின்இறைச்சல் சத்தத்தை நான் கேட்டேன். பிலதெல்பியாவில் உள்ள தேவாலயத்துக்கு இயேசுசொன்னவார்த்தைகளைஎன்மனதில்சுதந்திரமாகவும்விரைவாகவும் நினைத்துக்கொண்டேன். "இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதைஒருவனும்பூட்டமாட்டான்." (வெளிப்படுத்தின விசேஷம் 3:8)

ஒரு வேளை கோரி வாசற்கதவுக்கு நடக்காமல், தான் சுதந்திரமாக இருக்கிறாள் என்ற உண்மையை ஒத்துக்கொள்ளாமல் அவளுடைய தங்குமிடத்திற்குதிரும்பியிருந்தால், அவள்சுதந்திரத்தைஏற்றுக்கொள்வதை விட சிறையிலிருப்பதையே தேர்ந்தெடுத்திருப்பாள். ஏட்டின்படி அவள் சுதந்திரமாகஇருந்திருக்கலாம், ஆனால், யதார்த்தமாகஅவளால்சுதந்திரமாக இருக்க முடியாது.

இது பல கிறிஸ்தவர்களிடம் காணப்படுகிறது. சிறைக்கதவு திறந்துள்ளது கூடவே நாம் விடுதலையாக்கப்பட்டுள்ளோம். பாவம் ஒருபோதும் நம் எஜமானன் கிடையாது. ஆனால் எதிர்பாராத விதமாக, அநேக கிறிஸ்தவர்கள் சிறைக்கதவின் வழியாக நடக்காமல், கர்த்தரின் சூரிய ஒளியாகிய கிருபைக்குள்ளும் அன்புக்குள்ளும் போவதில்லை. தவறான சுற்றுச்சூழலிலும் தவறான இடத்திலும் இருப்பதை தேர்ந்தெடுக்கிறோம். கூடவே தவறான மக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்கிறோம். நாம்நம்முடையசுதந்திரத்தைசொந்தமாக்கிகொள்வதில்லை - அதுவே நம்மை சுதந்திரத்தின் அடுத்த படிக்கு எடுத்துச் செல்லும்.

கிறிஸ்துவுக்குள் சுதந்திரம் - கீழ்படிதலின் மூலம் இயக்கப்படுகிறது

விமானம் புறப்படுவதற்கு எந்த தடையும் இல்லை என்பதை தெரிந்துக்கொண்ட 747-யின் பைலட்டுகள் ஒரு நாள் முழுவதும் நடைப்பாதையின் கடைசியில் அமர்ந்திருக்கலாம். கோபுரத்தில் இருந்து மீண்டும் மீண்டுமாக அவர்கள் புறப்படுவதற்கான அனுமதியைப் பெற்றிருக்கலாம். மின்சார சக்தி இருக்கும் என்று அவர்களுக்கு தெரியும். ஆனால் ஜெட் இயந்திரங்கள் இயக்கப்படாமல் விமானம் எப்போதும் தரையில் இருந்து மேலே செல்லமுடியாது. விமானம் செல்லும் வகையாக இருக்க வேண்டும்.

ஒருகிறிஸ்தவனின்நிலையும்இதுதான். கிறிஸ்துவுக்குள்சுதந்திரமாக உள்ளேன் என்பதை நான் தெரிந்துக் கொள்ளலாம். நான் சத்தியத்தை உண்மையாக எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் ஒருபோதும் உலக வழிமுறைகளுக்கு மேல் என்னால் நடக்க முடியாது. என்னை உண்மையில் விடுதலையாக்குவது நடைமுறைப்படுத்தப்பட்ட சத்தியமே. உலகத்தைபடைத்தவரானகர்த்தரின் வாஞ்சைக்கும் விருப்பத்திற்கும் நாம் நம் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து அவருடன் ஒற்றுமையாக நடப்பதின் மூலம் கிடைக்கும் சுதந்திரத்துடன் இதை ஒப்பிடமுடியாது. சில வழுவான கூட்டு சபையில் நம் தனிமனித

தன்மையைஇழக்கிறோம்என்றுஇதற்குபொருள்அல்ல,சுயஅடையாளத்தை இழக்கிறோம் என்பதும் இதன் பொருள் அல்ல. ஆனால், கர்த்தர் நாம் என்ன ஆக வேண்டும் என்பதற்காக படைத்தரோ, அப்படி ஆவதற்காக நாம் விடுதலையாக்கப்பட்டுள்ளோம். போய் சேருவதற்கான சுதந்திரம், பகிர்ந்துகொள்வதற்கான சுதந்திரம் ஆகியவை நம்மிடமிருக்கின்றன. சுருக்கமாக கூறினால், நாம் கர்த்தருக்கும் மற்ற ஒருவருக்கொருவருக்கும் சேவைச் செய்ய சுடந்திரம் பெறறோம். நாம் அவைகளைத் திரும்ப கண்டுபிடிப்பதற்காக நம் வாழ்க்கையை தொலைத்துவிடுகிறோம்.

நேர்மையின் ஊழியர்கள்

ஒரு நாள் *டல்லாஸ் மார்னிங் நியூஸ்* என்னும் செய்தித்தாளை படித்துக் கொண்டிருந்தேன். அப்போது, "நடத்தை, மரியாதை மற்றும் மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைக் கண்டேன். அது பாப் செயின்ட் ஜான்ஸ் என்பவரால் எழுதப்பட்டிருந்தது. அவர் ஒரு உணவகத்தில் தன் நண்பர் ஒருவருடன் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் விவரிப்பது போல, குண்டான பெரிய பையன் ஒரு இளம் பெண்ணுடன் ஒரு மேஜையின் அருகில் உட்கார்ந்திருப்பதை அவர் கவனித்தார். கண்ணாடி அணிந்த பெரிய குண்டான பையன் அங்கு உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருப்பதை பாப் பார்த்துக்கொண்டிருந்தார். ஒருமுறை அவன் ஏதோ சொல்வதற்காக அசைந்துக் கொண்டிருந்தது போல தெரிந்தது, அவன் தலையில் மின்விளக்கு எரிந்தது.

"அந்த பையன் உடனே அந்த பெண்ணின் அருகில் சென்று கட்டிபிடித்தான்," என்று பாப் புகார் கூறினார். ஒன்றும் தெரியாமல் அந்த பெண் அந்த பையனுக்கு மேலே சற்று சாய்ந்தாள்.

அவன் கடைசியாக சொன்னான், "ஹே நீ தயாரா? போகலாம் வா" என்று சொன்ன பிறகு அவன் ஏதோ ரகசியத்தை அறிந்தவனைப் போல சிரித்தான். அவன் எழுந்து வெளியில் செல்ல ஆரம்பித்தான். அந்த இளம் பெண் எழுந்து கதவின் வழியாக அந்த பையனைப் பின்தொடார்ந்து சென்றாள். ஆனால் சுமார் 30 நிமிடங்கள் கடந்த பின் அந்த பெண் மீண்டுமாக அவளுடைய நண்பன் இல்லாமல் வந்தாள். என்ன நடந்தது என்று கேட்டபோது "நாங்கள் தனித்தனி கார்களில் சென்றோம், என் வீடு வரை என்னை பின் தொடர்ந்து வந்தான். ஆனால் நான் திடீரென விரைவாக திரும்பி அவனிடமிருந்து தப்பிவிட்டேன். எப்படி பார்த்தாலும் அவன் விடாப்பிடியான ஆள் தான்.

ஒரு சில நிமிடங்கள் கழித்து எப்படியோ அந்த பெரிய குண்டு பையன் மீண்டுமாக அந்த இடத்திற்கு வந்து விட்டான். "ஓ, ஹாய்" என்று அந்த இளம் பெண் சொன்னாள். "உனக்கு என்ன ஆனது? நான் கவலைப்பட்டேன்" நான் இந்த கதையைப் படித்தவுடன் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் "ஒருவருக்கொருவர் சேவை செய்யுங்கள்" என்று பவுல் கலாத்தியருக்கு ஊக்கமளித்ததை நான் நினைத்துப்பார்க்கிறேன். வாழ்க்கை உறவுடையது என்று இது விவரிக்கிறது. நம் எல்லோருக்கும் ஏராது தேவை இருப்பதால் நம்மால் ஒருவருக்கொருவர் அன்புடன் சேவை செய்ய முடியும். அல்லது ஒருவருக்கொருவர் நாம் முக்கியத்துவம் கொடுக்காமல் போகலாம். ஒரு வகையில், அந்த பெண்ணுக்கு அந்த பையனை பிடிக்கவில்லை. அந்தப் பையன் தன்னை தன் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொள்ள போகிறான் என்பதை அந்த பெண் அறிந்திருந்தாள். அவள் அந்த சாலையில் ஏற்கெனவே வந்திருந்தாள். மற்றுமொரு வகையில் அவளுடைய உணர்ச்சி தேவைகள் காரணமாக அவளுக்கு தன் வாழ்க்கையில் ஒரு மனிதன் தேவைப்பட்டான். மேலோட்டமாக இருந்த போதிலும்

அவளுக்குஒருஉறவுவேண்டுயிருந்தது.இந்தகுறிப்பிட்டமாலைபொழுதில், தன்னால் இன்னும் சிறப்பாக செய்ய முடியும் என்று தன்னைத் தானே நம்ப செய்துக் கொண்டாள். ஆனால் எல்லாம் நடந்த பிறகு அவளால் தன் உறவு தேவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியவில்லை.

வாழ்க்கை உறவுகளால் ஆனது

மக்களாக இருப்பதால், நாம் மனித குடும்பத்தின் ஒரு பகுதியாகவே உள்ளோம். ஒரு பெண் தங்கும் விடுதியில் இருந்தாலும் சரி, அல்லது கன்னிமடத்தில்இருந்தாலும்சரி,அவள்ஒருவனின்மனைவியாகஇருந்தாலும் சரி, அல்லது எஜமானியாக இருந்தாலும் சரி, கண்டிப்பாக அவள் மற்ற ஒருவரின் அல்லது பலரது நட்புக்கு கட்டுப்பட்டோ அல்லது சார்ந்தோ இருக்கவேண்டும். ஒரு ஆண் நிறுவனத்தின் அதிகாரியாக இருந்தாலும் சரி,போதகராகஇருந்தாலும்சரி,ஒருவேளைஅவர்அமெரிக்கஜனாதிபதியாக இருந்தாலும் சரி, உள்ளூர் மருந்து கம்பெனியின் தலைவராக இருந்தாலும் சரி,மற்றவர்களிடம்அவருக்குஉறவுஎன்பதுவேண்டும்.பதிலுக்கு செய்யும் சில பொறுப்புகளைக் கொண்ட சில வகையான மனித உறவுகள் இல்லாமல் வாழ்வதென்பது சாத்தியமில்லை. நாம் ஒருவரிடமிருந்து ஒருவர் தனித்து இருப்பதில்லை, இருக்கவும் முடியாது. நாம் ஒருவரை ஒருவர் சார்ந்து இருப்பதுக்குகாரணமநம்முடையஉடலரீதியான,உணர்ச்சிரீதியான,சமுதாய ரீதியானமற்றும்ஆவிக்குரியரீதியானதேவைகள்சந்திக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான்.

இது கர்த்தரின் வடிவமைப்பாகும். காலம் தொடங்கியது முதல் இது உண்மையாகவே உள்ளது. கர்த்தர் ஆதாமைப் படைத்த பொழுது, அவர் சொன்னார் "பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதியாகமம் 2:18). இதன் காரணமாக கர்த்தர் ஆதாமுக்கு ஏவாளை உண்டாக்கினார். இது மனித வாழ்க்கையையும் அதன் பொறுப்பையும் தொடக்கி வைத்தது.

இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளாயிருந்து கர்த்தரின் அற்புதமான குடும்பமாக உள்ளோம். இது மனித பரிமாணத்தின் குடும்பமாக மட்டும் இல்லாமல் தெய்வீக பரிமாணத்தின் குடும்பமாகவும் உள்ளது. "ஒருவருக்கொருவர் சேவை செய்யுங்கள்" (5:13) என்று பவுல் கலாத்தியர்களுக்கு எடுத்துரைத்த போது கிறிஸ்தவ குடும்பத்தின் மற்றும் மனித குடும்பத்தின் உண்மையான உறவுகளைப் பற்றி அவர் நன்றாக தெரிந்து வைத்திருந்தான். அதனால் தான் 'சேவை செய்யுங்கள்' என்ற குறிப்பை அளிப்பதற்கு முன் அவன் எழுதினான் "இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல்" (வசனம் 13).

பாவ வாழ்க்கையின் செயல்கள்

பவுல்கலாத்தியருக்குஎழுதும்போதுஇப்படிகூறினான்"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன" (5:19). விசுவாசியாவதற்கு முன்னரே அவர்கள் வாழ்க்கை முறையில் பாவம் புகுந்து கொண்டது. பாவ வாழ்க்கையின் செயல்கள் அவருக்குத் தெரியும். எல்லா காலத்திலும் இருக்கும் கிறிஸ்தவர்களும், கலாத்தியர்களும் இதை நன்றாக தெரிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே பவுல் அவைகளை பட்டியலிட்டுள்ளான் (வசனம் 19-21):

விபசாரம்	வேசித்தனம்
அசுத்தம்	காமவிகாரம்
விக்கிரகாராதனை	பில்லிசூனியம்
பகைகள்	விரோதங்கள்
வைராக்கியங்கள்	கோபங்கள்
சண்டைகள்	பிரிவினைகள்
மார்க்கபேதங்கள்	பொறாமைகள்
கொலைகள் வெறிகள்	களியாட்டுகள்

'நான் உங்களை எச்சரிக்கிறேன்' பவுல் தொடர்ந்தான் "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (வசனம் 21).

இவைகளில்ஏதாவது ஒன்றில் ஒருவன்பாவவாழ்க்கையில்ஈடுபட்டால் அவனால் கிறிஸ்தவனாக இருக்க முடியாது என்று பவுல் தன்னுடைய கடைசி வாக்குமூலத்தில் சொல்கிறானா? விடை இல்லை என்றே முடிவு செய்யப்பட்டது. ஆனால்கிறிஸ்துவைப்பற்றி தெரியாதவர்களின்வாழக்கை முறை இது என்று பவுல் சொல்கிறான். ஆனால் கலாத்தியரில் உள்ள ஒருபகுதியில் அவன்மேலும் சொல்கிறான் "அப்பொழுதுமாம்சஇச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" (வசனம் 16). பரலோகத்தில் இருக்கும் கிறிஸ்துவுடன்நாம்இருக்கும்வரையிலும் அதுஎப்போதும்உண்மையாகவே இருக்கும் ஆனாலும்உண்மையாகஇயேசுவைவிசுவாசிக்கும்உண்மையான விசுவாசியுடன் சம்பந்தப்படும் போது பாவத்துக்கு அடிமையாக இருந்து அவர்களின்பழையவாழ்க்கையைத்தொடரமாட்டார்கள். ஒருஉண்மையான விசுவாசி உண்மையில் உண்மையின் அடிமையாக மாறிவிடுவான். சுயநலமாகவும், மாம்சமாகவும்மற்றும்சிற்றின்பவழியிலும்மற்றவர்களுக்குச் சேவை செய்வதை விட அன்புடன் சேவைச் செய்வதற்காகவே அந்த விசுவாசி தன் சுதந்திரத்தைப் பயன்படுத்துவான்.

ஆவியின் கனிகள்

ஆவியில் வாழும் கிறிஸ்தவர்களை நாம் எப்படி அடையாளங் கண்டுக்கொள்வது? தங்களுக்கு மற்றவர்களிடம் உள்ள உறவில் ஆவியின் கனிகளைத் வெளிப்படுத்துவார்கள். அடுத்து பவுல் இந்த தகுதிகளை பட்டியலிட்டார் (கலாத்தியர் 5:22-23) பிலிப்பியருக்கான அவனுடைய ஜெபத்தில், அவன் இந்த தகுதிகளை "நீதியின் கனிகள்" என்று அடையாளங்காட்டுகிறான். (பிலிப்பியர் 1:11):

அன்பு	சந்தோஷம்
சமாதானம்	நீடியபொறுமை
தயவு	நற்குணம்
விசுவாசம்	சாந்தம்
இச்சையடக்கம்	

இந்த தகுதிகள் பழைய வாழ்க்கையின் செயல்களுக்கு முற்றிலும் முரண்பாடகவே உள்ளது. அதனால்பவுல்முடிக்கிறான். "நாம்ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும்கடவோம். வீண்புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம்" (கலாத்தியர் 5:25-26)

ஒரு "பறவையின் பார்வை"

இந்த பகுதியில் பவுலின் வலியுறுத்தல்களைக் குறித்து நாம் பெரிய படத்தை கற்க வேண்டும் என்பது இந்த தருவாயில் முக்கியமானது. ஒருவரையொருவர் சிற்றின்ப வழியாகவும் மாம்ச வழியாகவும் சேவை செய்து கொள்வதை விட ஒருவருக்கொருவர் அன்புடன் சேவை செய்யவேண்டும் என்பதே பவுலின் முக்கியமான கவலை. நாம் நம் பழைய வாழ்க்கையைத் தொடர்ந்தால் மற்றவர்களிடம் நமக்கு உள்ள உறவு விரைவில் ஒழுங்கீனமில்லாமலும், சுத்தமில்லாமலும், விக்கிரகவழிப்பாடகவும் ஆகிவிடும். உறவுகள் வெறுப்பு, மனஸ்தாபம், பொறாமை, கடுங்கோபம், சுயநலம், சச்சரவு மற்றும் பிளவை பிரதிபலிக்கும் இந்த எல்லா கருத்தையும் உறவின் இயற்கை என்று யாருமே ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஆனால் அவைகள் நம்மை நோக்கியே அமைந்திருக்கின்றன.

இதற்கு மாறாக, நாம் ஒருவருக்கொருவர் அன்புடன் சேவைச் செய்தால், ஒருவருக்கொருவரின் தேவைகளை நாம் சுயநலமில்லாமல் சந்திக்கலாம். நம்மில் உள்ள அதிக அன்பே இதன் முடிவாக இருக்கும். மக்கள் *மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும்* இருப்பார்கள். *மனசமாதானம், அமைதி* மற்றும் ஒற்றுமையின் அறிவு அங்கு இருக்கும். நாம் ஒருவரையொருவர் *அமைதியாகவும் அன்புடனும்* நடத்துவோம்! நம்முடைய உறவுகளில் எது சரியோ அதை நாம் செய்வோம். வேதாகமத்தின் வழிகாட்டுதலின் மூலம் ஒருவருக்கொருவர் உண்மையாக நடந்துக்கொள்வோம். ஒருவரை ஒருவர் அன்புடன் நடத்தி, சுயக்கட்டுப்பாட்டை செயல்படுத்துவதன் மூலம் நாம் மற்றவர்களை நம் சுயநலத்திற்காக பயன்படுத்தமாட்டோம்.

நாம் ஆவியில் வாழ்வோமானால் ஆவியின் கனிகளைப் நம்மால் பிரதிபலிக்க முடியும். கூடவே நம்முடைய உறவுகள் உண்மையினால் வர்ணணை செய்யப்படும். ஆகவே, மற்றவர்களுக்கு அன்பு ஊழியனாக இருக்க வேண்டுமானால் நாம் முதலில் உண்மையின் ஊழியனாக இருக்க வேண்டும். கர்த்தரின் பரிசுத்த ஆவியானவரின் தலைமையை பின்தொடர்ந்து செல்வது நம்முடைய பொறுப்பு, மற்றவர்களின் உறவின் பிடியில் சிக்கவிடாமல் அவர்களுக்கு சேவை செய்யச் செய்கிறார்.

உங்களைக் குறித்தென்ன?

நீங்கள் மற்றவர்களிடம் எப்படி உறவாடுகிறீர்கள்? உங்கள் தேவை முக்கியமானதுதான், ஆனால் மற்றவர்களை உங்கள் சுயநலத்திற்காக பயன்படுத்துகிறீர்களா? உங்கள் பழைய வாழ்க்கைக்கு இடங்கொடுக்கிறீர்களா? நீங்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யாமல் அவர்களை உங்களுக்கு ஊழியம் செய்வதற்காக அனுமதிக்கிறீர்களா? நீங்கள் கொடுப்பவராக இல்லாமல் பெற்றுக்கொள்பவராக மட்டும் இருக்கிறீர்களா? அல்லது நீங்கள் கடவுளின் பரிசுத்த ஆவியானவரை பின்தொடர்கிறீர்களா? நீங்கள் உங்களையே பரிசோதித்துக் கொள்ளலாம். பவுலின் இரண்டு பட்டியல்கள் உங்களை சரியானவராக இருக்க உதவி செய்யும். மற்றவர்களிடம் உங்களுக்கு உள்ள உறவை வர்ணணை செய்யும் இடத்தைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். நீங்கள் நேர்மையானவராக இருந்தால், விரைவிலேயே நீதியின் ஊழியரா, அல்லது அநீதியின் ஊழியரா, என்று முடிவு செய்து கொள்ளலாம்.

ஒருவருக்கொருவர் அன்புடன் சேவை செய்துக் கொள்வதற்கான நடைமுறைகள்

முயற்சி 1

"நீங்களும், உங்கள் ஆலயத்தில் உள்ள மற்றவர்களும், உங்கள் ...வுகளில் ஆவியின் கனிகளை விட பாவ வாழ்க்கையின் செயல்களை ...அளவிற்கு பிரதிபலிக்கிறீர்கள் என்பதனை மதிப்பிடுங்கள்."

இந்த தகவல்களைப் பெறுவதற்கான ஒரு வழி, பின்வரும் கேள்விகளுடன்தொடங்குவதுதான்.இந்தபதில்கள்விசுவாசிகளின்சரீரத்தில் கிறிஸ்தவ பக்குவம் எப்படி உள்ளது என்பதைப் பற்றி குறிப்பிடுகின்றன. ...ங்கள் கிறிஸ்துவைப் போல உள்ள நிலையை அளப்பதற்கு உதவவே ...நிலையுள்ள அளவுகோல் சேர்க்கப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட ...பியல்புஎப்போதுமேதெரிவதில்லைஎன்பதனைஎண்1தெரிவிக்கிறது. ...துஎப்பழுதுமேதெரிகிறதுஎன்பதனைஎண்7காண்பிக்கிறது.இடையில் ...ள்ள எணகள் தெரிவதன் அளவைக் காட்டுகின்றன.

சில கிறிஸ்தவர்கள் தங்கள் ஆலயங்களில் பழைய வாழ்க்கையின் ...ல்கள் புலப்படுவதாக நம்புவதில்லை. ஏனெனில் அங்கு வெளிப்

	எப்போதும் தெரிவதில்லை				எப்போதும் தெரிகிறது		
...டைய ஆலயத்தில் கிறிஸ்துவின் அன்பு ...க்கொருவரிடம் ...டுத்தப்படுகிறதா?	1	2	3	4	5	6	7
... மற்றும் சந்தோஷத்தின் சான்றுகள் ...?	1	2	3	4	5	6	7
..., ஒன்றாயிருத்தல், ஒற்றுமை அங்கு ...?	1	2	3	4	5	6	7
...கள் ஒருவரிடம் ஒருவர் ...யாயிருக்கிறார்களா?	1	2	3	4	5	6	7
...களுடைய செயல்களிலும் ...களிலும் தயவாய் இருக்கிறார்களா?	1	2	3	4	5	6	7
...மையை அவர்கள் விளக்குகிறார்களா? ...த்தைகளினால் செய்யப்படுவதை விட ...ன செயல்களினாலே செய்யப்படுகிறது.	1	2	3	4	5	6	7
...கள் ஒருவருக்கொருவர் உண்மையாக ...றார்களா? (இது நம்பிக்கையின்மைக்கும், ...தியின்மைக்கும், எதிர்மறையாக உள்ளது).	1	2	3	4	5	6	7
...ரிடம் ஒருவர் தங்களுக்கு உள்ள ...ில உணர்ச்சியையும் அமைதியையும் ...கள வெளிப்படுத்துகிறார்களா?	1	2	3	4	5	6	7
...களின் பொது வாழ்க்கை முறையிலும், ...ரிடம் ஒருவர் உரையாடும் பொழுதும் ...களிடம் சுயக்கட்டுப்பாடு உள்ளதா?	1	2	3	4	5	6	7

படையான ஒழுக்கமற்ற மாமிச இச்சை, சுத்தமில்லாமை, விபச்சாரம், விக்கிரக வழிபாடு, சூனயம், குடிப்பழக்கம் மற்றும் களியாட்டம் இருப்பதில்லை. ஆனால் பழைய வாழ்க்கை முறையில் வெறுப்பு, மனஸ்தாபம், பொறாமை, கடுங்கோபம், சுயநலம், சச்சரவு, பிரிவினை மற்றும் பகை ஆகியவைகளெல்லாம் அடங்கியுள்ளது என்ற உண்மையை அவர்கள் கவணித்தும் கவணியாததைப் போல் இருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் நன்மையான பிரதிபலிப்பை அடையாளங் கண்டுக்கொள்வதில் உங்களுக்கு சிரமம் இருந்தால் அங்கு ஒரே ஒரு முடிவு தான் இருக்கமுடியும். அதிகமான ஆவியின் கனிகளை விட பாவ வாழக்கையின் செயல்களே அதிகமாக பிரதிபலிக்கிறது. இது உண்மையாக இருக்குபோது கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் ஊக்கமாக ஊழியம் செய்வதில்லை. ஆனால் அவர்கள் ஒருவருக்கொருவர் பாவத்திலும், சுயநலமுள்ள வழியிலும் ஊழியம் செய்து கொள்கிறார்கள்.

முயற்சி 2

உங்களுடைய சொந்த குறிக்கோளையும் உங்கள் கவனிக்கும் தன்மையின் பிழையின்மையும் பரிசோதித்துக் கொள்வதற்காக உங்கள் ஆலயத்தில் உள்ள பல கிறிஸ்தவர்களிடம் முயற்சி 1 ஐ செய்ய சொல்லுங்கள். அதன் பிறகு ஜெபத்துடனே உங்கள் குறிப்பை ஒப்பிட்டுப்பாருங்கள்.

முயற்சி 3

ஆலயத்தில் உள்ள மற்றவர்கள் ஊக்கத்துடன் ஒருவருக்கொருவர் அன்புடன் சேவை செய்து கொள்வதில்லை, ஆவியின் கனிகளை விட பாவ வாழ்க்கையின் செயல்களே தெளிவாக இருக்கிறது, என்று உங்கள் குழு நினைத்தால் பின்வரும் அனுகுமுறைகளை எடுப்பதைப் பற்றி யோசியுங்கள்.

முதலாவதாக உங்களுக்கு மற்றவர்களிடம் உள்ள சொந்த உறவை, உங்கள் பழைய வாழ்க்கை ஆக்கிரமித்துக் கொள்வதற்கு நீங்கள் அனுமதிப்பதைப்பற்றி நீங்கள் குற்றவுணர்வு அடைவதில்லை என்று முதலில் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இரண்டாவதாக, ஒரு சிறு குழுவாக இருந்து, ஆலயத்திலுள்ள மற்றவர்களுக்கு நான் ஆவியின் கனியின் எடுத்துக்காட்டாக இருப்பேன் என்று உங்களுக்குள்ளேயே உறுதி செய்து கொள்ளுங்கள்.

மூன்றாவதாக, உங்கள் சுய வாழ்க்கை சரியாக உள்ளதா, என்பதை உறுதி செய்து கொண்ட பிறகு ஆலயத்தில் உள்ள மற்றவர்களுக்கு ஜெபம் பண்ணத் தொடங்குங்கள்.

நான்காவதாக, ஆவிக்குரிய பெருமை மற்றும் பொய்யான ஆவிக்குரிய பன்புகள் ஆகியவற்றுக்கு எதிராக உங்களைக் கவனமாக பாதுகாத்துக் கொள்ளுங்கள். உயர்வான எண்ணங்களும் ஆவிக்குரிய பெருமையும் தீர்வுகளை விட பிரச்சனைகளையே அதிகமாக கொண்டு வரும்.

சிறு குழுக்கள் விவாதிப்பதற்கான வழிமுறைகள்

தொடக்கம்

சென்ற முறை நீங்கள் உருவாக்கிய குழுவில் ஒருவரை ஒருவர் வாழ்த்தி தெரிவித்து வரவேற்றுக்கொள்ளுங்கள். அதன் பிறகு இந்த கேள்விக்கான

...லை ஒவ்வொருவரும் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒரே ஒரு பணிக்காக ...களால் ஒரு வேலையாளை அர்ப்பணிக்கமுடியுமானால், அந்த ...லையாளுக்கு எந்த பணியை தருவீர்கள்?

உரையாடலுக்காக

...லாத்தியர் 5:13ஐ வாசியுங்கள், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கும், ...திரத்திற்கும் உள்ள உறவு என்ன? மற்றவர்களின் ஊழியனாக ...பதற்கும் கிறிஸ்துவின் ஊழியனாக இருப்பதற்கும் என்ன ஒற்றுமையை ...கள் பார்க்க முடிகிறது ?

...றிஸ்தவர்கள் எதிலிருந்து சுதந்திரமாக உள்ளார்கள்? இதை உங்கள் ...கையில் எப்படி அனுபவிக்கிறீர்கள்?

...றிஸ்தவர்கள் "ஒருவருக்கொருவர் சேவை செய்வதற்கான" சில ...பிட்ட வழிகள் என்ன? ஒருவருக்கொருவர் சேவை செய்வதில் ...த்தியர் 5:22, 23) ஆவியின் கனிகளின் தொடர்பு எப்படியானது?

...ற்சி 1 ல் உள்ள நடைமுறை முயற்சிகளைப் பயன்படுத்தி உங்கள் ...த்தில் ஆவியின் கனியின் சாட்சியை நீங்கள் எல்லாம் ஒன்றாகக் ... உங்கள் மதிப்பீட்டை ஒப்பிட்டுப்பாருங்கள். நீங்கள் எந்த இடத்தில் ...ளர எடுக்கவேண்டிய காரணத்தை பார்க்கிறீர்கள்? எந்த குறிப்பிட்ட ...வில் உங்கள் சிறு குழுவால் ஆவியின் கனிகளைப் பற்றி மனமறிந்து ...கம் கொடுக்க முயற்சி செய்ய முடியும்?

முடிவு

இருவராக இருந்து, ஆவியின் கனிகளை பற்றி விளக்குவதற்கு ... வரைவேண்டிய உங்கள் சுய தேவையைப் பகிர்ந்து கொண்டு ...பிறகு ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள். அதன்பிறகு உங்கள் ...ம் முழுவதற்குமாய் ஜெபம் செய்யுங்கள்.

அடுத்தமுறைக்காக

...த்தியாயம் ஒன்பதை வாசியுங்கள்
...ங்கள் ஆலயத்திற்காக தொடர்ந்து ஜெபியுங்கள்
...ங்கள் குடும்ப அமைப்பில் ஆவியின் கனியிடம் உங்களுக்கு உள்ள ...வ விளக்குவதற்கான வழிமுறைகளை இந்த வாரம் தேடிபபாருங்கள்.



அத்தியாயம் ஒன்பது

ஒருவரின் பாரங்களை இன்னொருவர் சுமங்கள்

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, அப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.

(கலாத்தியர் 6:2)

ஒரு ஞாயிற்றுக் கிழமை காலையில் வாழ்க்கையின் அதிர்ச்சி ஒன்று கொடுக்கப்பட்டது. நான் எங்கள் ஆலயத்தில் நடைபெறும் ...தனைகள் ஒன்றின் பாதியில் இருக்கும் போது யாரோ ஒருவர் வந்து, ...டைய நல்ல நண்பன் ஒருவன் அவனுடைய மனைவியையும் ஆறு ...தைகளையும் விட்டு விட்டு பக்கத்து வீட்டுக்காரன் மனைவியுடன் ...ருப்பு ஒன்றிற்கு போய் விட்டான் என்று என்னிடம் புகார் கூறினார். ... கேட்டு என்னால் நம்பமுடியவில்லை. இது எப்படி சாத்தியம்? ...னிதர் உறுதியான விசுவாசி, முந்தைய ஊழியக்காரர், இப்போது ...கரமான கிறிஸ்தவ தொழிலதிபர் என்று பிரபலமானவர். அவருடைய ...ல்வேறு பிரபலமான கிறிஸ்தவ நிறுவனங்களின் நிர்வாக உறுப்பினராக ...ளது. இது தவறானதாக இருக்க வேண்டும்!

...துரதிருஷ்டவசமாக இது தவறான தகவலாக இருக்கவில்லை. நான் ...பதை முடித்திருந்ததால், என் சக போதகர் ஒருவருக்கு ஆராதனை ...ம் சந்தர்ப்பத்தை அளித்துவிட்டேன். இந்த மனிதனை நன்கு அறிந்த ...வர்களில் ஒருவரை அழைத்துக்கொண்டு அவருடைய வீட்டிற்கு ...னாம். நாங்கள் அங்கு சென்றபொழுது, அவருடைய மனைவி ...ருடனும், அவருடைய பிள்ளைகள் - சிறிய குழந்தைகள் முதல் ...ஞர்கள் வரை தரையில் உட்கார்ந்திருப்பதையும் நான் கண்டேன். ...துவீட்டுக்காரியின் கணவனும் அங்கு இருந்தார். அவர் அதிகமாக ...திருந்தார். இதுவே அவருடைய கவலையைக் கையாளுவதற்கான ...டையவழி. இந்த குடும்பத்திற்கு நான் ஊழியம் செய்ய முயற்சித்தேன். ...பின்பு அடுத்த நாள் அந்த மனிதரை அவருடைய தொழில் நடக்கும் ...தில் சந்தித்து நம்மால் ஆன எல்லாவற்றையும் நாம் செய்யவேண்டும் ... என்னுடன் வந்த பெரியவருடன் பேசி முடிவெடுத்தேன்.

நாங்கள் சென்றபொழுது, என் நண்பர் ஒருமாதிரியாகத்தான் இருந்தார், ...ல் சொல்வதை கேட்கும் மனநிலையில் இருந்தார். இதைப் பற்றி ...காலங்களாக நினைத்திருந்ததாகவும், தன் மனதை மாற்றிக் ...ண்டதாகவும் தெரிவித்ததுடன் எங்களை அவருடைய அலுவலகத்தை ...போகுமாறு கூறினார். இதற்குபதிலாக அவரிடம் எவ்வளவு அன்பாக

கூறமுடியுமோ அவ்வளவு அன்பாக, நாங்கள் போகமாட்டோம், ஏனென்றால் நாங்கள் இந்த கோர வழியில் போவதற்கு அனுமதிக்கும் அளவிற்கு அவரை நேசித்ததாக கூறினோம்.

முடிவாக, அவர் எங்களிடம் கட்டிடத்திற்கு வெளியில் பேச ஒத்துக்கொண்டார், ஏனென்றால் அவருடைய அலுவலகம் சுற்றிலும் கண்ணாடியால் அமைக்கப்பட்டிருந்தது. எங்களுடைய சந்திப்பு மற்ற எல்லா ஊழியர்களாலும் கவனிக்கப்பட்டது. ஏதோ ஒன்று மிகவும் தவறாக உள்ளதென்று அவர்களுக்குத் தெரியும். நாங்கள் போவதில்லை என்பதில் மிகவும் தீவிரமாக உள்ளோம் என்பதை உணர்ந்த பிறகு அவர் மிகவும் தனிமையான இடத்தில் எங்களிடம் பேச அவர் ஒத்துக்கொண்டார்.

அன்று நான் இதுவரையிலும் யாரிடமும் சொல்லாத சிலவற்றை என் நண்பரிடம் சொன்னேன். அவர் தொடர்ந்து, நாங்கள் போகவேண்டும் என்று அதிகமாக வலியுறுத்தியதால், நான் கடுமையாக அவரிடம், என்னை சிமெண்ட் கலவைப் போடப்பட்ட நடைப் பாதையினடியில் அடைக்கவேண்டும் என்று கூறினேன். மீண்டும் சற்று உயர்ந்த குரலில், நாங்கள் அங்கு இருப்பது அவரை நேசிப்பதாலும் கூடவே அவரை அவர் விழுந்துள்ள பாவபிடியில் இருந்து விடுவிப்பதற்காகவும் தான் என்று நான் உறுதியளித்தேன். நாங்கள் எதிர்த்துக்கொண்டிருந்த நல்ல மனிதர் எங்களைவிட மிக அதிகமாக பலமும் உடம்பும் கொண்டவராக இருந்தமையால், என்னுடன் வந்த பெரியவர் என் பின் நின்று ஆடிக்கொண்டிருந்ததாக அவர் பின்னால் கூறினார். என்னுடைய ஆலோசனையினால் அவர் எளிதில் பின் தொடர்ந்து வந்திருக்கலாம்.

நாங்கள் எந்த அளவிற்கு உறுதியாய் உள்ளோம் என்பதைப் பார்த்த அவர் கடைசியாக ஒரு அமைதியான இடத்தில் எங்களிடம் பேச ஒப்புக்கொண்டார். உணவகத்தின் பின்புறம் உள்ள தனி அறையில் அமர்ந்தவாரே, மறுபடியும் தயவாக ஆலோசனைக்குச் செல்லுமாறு கேட்டோம். என்னுடன் வந்த பெரியவர், என் நண்பர் அருகில் சென்று அவருடைய கைகளை என் நண்பர் கை மேல் போட்டு, கூடவே கண்களில் கண்ணீருடன், உதவிக்காக போகுமாறு அவரிடம் தயவாய் கேட்டதை என்னால் எப்பவுமே மறக்கமுடியாது. நாங்களும் அவனுடன் வருவோம் என்று அவனிடம் கூறினோம்.

இரண்டு மணிநேர தீவிர உரையாடலுக்கு பின்னும் நாங்கள் போகவில்லை என்பதைக் கண்ட அவர் கடைசியாக ஒரு கிறிஸ்தவ ஆலோசகரைப் பார்க்க ஒப்புக்கொண்டார். நாங்கள் அவருடனும் அவருடைய மனைவியுடனும் சென்றோம். அந்த சந்திப்பில், அவர் ஆறுவாரத்திற்கு ஆலோசனைப் பெறுவதற்கு முடிவெடுத்தார். நாங்கள் அவரைப் பின்தொடராமல் இருப்பதற்காகவே அவர் எங்கள் ஆலோசனைக்கு ஒப்புக்கொண்டதாக பின்னர் என்னிடம் கூறினார்.

ஏறத்தாழ ஆறு வாரங்கள் சென்றது. மேலும் நான் இந்த மனிதரைப் பார்க்கவோ பேசவோ இல்லை. அவர் ஆலோசனைப் பெற்றுக் கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அவர் அவருடைய வார்த்தையைக்காப்பாற்றினார். அதன்பிறகு ஒருநாள் ஞாயிறு ஆராதனையை நடத்திக்கொண்டிருக்கும்போது நான் மேலே பார்த்தேன். அப்போது அவர் தன் மனைவியுடன் நடந்து வந்து உட்கார்ந்ததைக் கண்டு இன்ப அதிர்ச்சி அடைந்தேன். ஆராதனைமுடிந்தபிறகு அவர் முன்புறம் வந்து அவருடைய பெரிய கைகளை என் மேல் போட்டு, அவருடைய கண்ணீர் கன்னத்தின் வழியாக ஓட அவர் சொன்னார், "ஜீன், நீ என்னை விட்டு விடாததற்கு கர்த்தருக்கு நன்றி" என்றார். வெளிப்படையாக ஆண்டவர் இந்த மனிதருடைய வாழ்க்கையில் ஒரு அற்புதத்தைச் செய்தார். அவருடைய மனைவி புற்றுநோயால் இறப்பதற்கு முன்னர், எட்டு வருடங்கள் சிறப்பான திருமண வாழ்க்கையை வாழ்ந்தார். அதற்கு பிறகு, அருமையான கிறிஸ்தவ

பெண்ணுக்கு மறுமணம் செய்து வைக்கப்பட்டுள்ளார். கூடவே, அவர் இன்னும் கர்த்தரின் சித்தத்திற்கு ஏற்றபடி நடந்து கொண்டிருக்கிறார். நான் இந்த கதையை பலமுறை சொல்வதை அவர் கேட்டிருக்கிறார். மேலும் ஒவ்வொரு முறையும் அவர் கண்ணீருடனும் ஆழமான உற்சாக உணர்வுடனும் பிரதிபலித்துள்ளார். ஒரு முறை அவர் சொன்னார், "நான் எஞ்சிய வாழ்க்கை முழுவதும் உங்களுக்கு கடன் பட்டுள்ளேன்."

அன்பிற்கான ஓர் பரீட்சை

சகவிசுவாசிகளின் வாழ்வில் உள்ள பாவங்களில் சம்மந்தப்படுவது கர்த்தர் கிறிஸ்தவர்களுக்கு கொடுத்த கடினமான வேலை. ஒருவருக்கொருவரின் கட்டளையை மற்றவரிடத்தில் எடுத்துச் செல்வது எளிதான காரியம். ஆனால், கடினமான அன்பு இன்னும் கஷ்டம். முதலாவதாக இரட்டை உணர்ச்சியைக் கண்டு நான் எல்லாமுறையும் அருகுகிறேன். மற்ற நபரின் சொந்த வாழ்க்கையில் நுழைவதை நான் விரும்புவதில்லை. அது எப்போதுமே என்னை அசௌகரியப்படுத்துகிறது. இரண்டாவதாக, நான் விலங்குகளுக்கு எப்போதுமே பயப்படுகிறேன். இது மிகவும் வலியுடையது. ஆனாலும் கூட மற்ற கிறிஸ்தவனுக்கு உண்மையான அன்பு பரிட்சையை நான் கண்டுபிடித்துள்ளேன். அது நான் இந்த ஆபத்தை எடுக்க விரும்புகிறவனா என்பதுதான். இன்னும் கூறினால், இதுவே எனக்கு கர்த்தர் மீதுள்ள அன்பின் பரீட்சை. என்னுடைய சௌகரியமில்லாத உணர்ச்சிக்கு பதிலாக அவருடைய விருப்பத்திற்கு நான் கீழ்ப்படிகிறேனா?

பல தேவாலயங்கள் இந்த பொறுப்பை முழுமையாக ஒதுக்கிவைக்கின்றன. மற்றவைகள் இதனை லேசாக எடுத்துக்கொள்கின்றன. இன்னும் சில ஆலயங்கள் ஒதுக்கிவைக்க முடியாத வதந்தியை இந்த பாவம் உருவாக்கிய பிறகுதான் அதனுடன் சம்மந்தப்படுகிறார்கள். எதிர்பாராத விதமாக, அதற்குள் பாவத்தின் பிடியில் மாட்டிக்கொண்டுள்ள அந்த நபருக்கு உதவி செய்வதில் இயற்கையாக தாமதமாகிவிடுகிறது. அங்கு மிகவும் அதிகமான வலி, காயம், தவறாக புரிந்துக்கொள்ளுதல், சங்கடம், மனக்கசப்பு உள்ளது.

பவுல் கலாத்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதிய போது இது நடக்கக் கூடாது என்பதில் அக்கறையுடன் இருந்தான். ஒவ்வொருவரின் சுமையை மற்ற ஒவ்வொருவரும் சுமக்க வேண்டும் என்று விசுவாசிகளுக்கு உற்சாகமூட்டினான் (கலாத்தியர் 6:2) நாம் பாவத்துடன் கட்டப்பட்டிருக்கும் போது, அதிகமான எடை நம்மை கீழே தள்ளி அமுக்கிவிடுவதையே பவுல் 'சுமை' என்று சொன்னான். இது நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது, ஏனென்றால் பாவ வாழ்க்கையின் செயல்களுக்கு அடிமையாக இருப்பதைவிட, ஆவியில் நிறைந்து, ஒருவருக்கொருவர் அன்புடன் சேவை செய்ய ஏன் முயற்சிக்க வேண்டும் என்பதைப் பற்றி விரிவான விளக்கத்தை இப்போதுதான் அவன் கூறினான்.

பவுல் சரியான இடத்திற்கு வந்தான்-

> சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப் பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு (கலாத்தியர் 6:1).

இந்தப் பிரச்சனையைப் பற்றி பவுல் எந்த கேள்வியையும் விட்டுவிடவில்லை. மற்றவர்கள்பாவம்செய்யும்பொழுதுகிறிஸ்தவர்களுக்கு பொறுப்பு உண்டு. நாம் கர்த்தருடைய சித்தப்படி இருக்க வேண்டுமானால் நமக்கு வேறு வழிகிடையாது. நாம் அந்த நபரை மீட்க முயற்சி செய்யவேண்டும், அவர் அவருடைய பாவத்தை உணரவும் அதை மேற்கொள்ளவும் நாம் உதவ வேண்டும்.

இந்த குறிக்கோளை பூர்த்திசெய்வதற்கும், இந்த செயலை நடத்திச் செல்லுவதற்கும், நன்மையான முடிவு வேண்டுமென்பதால், மிகவும் தேவையான சில குறிப்பிட்ட விதிமுறைகளை பவுல் கொடுத்துள்ளான்.

மீண்டும் உருவாக்குதல் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் குறிக்கோள்

பொதுவாக கூறினால், புதிய ஏற்பாட்டில் இரண்டு வகை மக்களைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது; ஒன்றுகிறிஸ்தவர்கள் மற்றவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்; ஆனால் இரண்டு வகை கிறிஸ்தவர்களும் உண்டு, ஒன்று ஆவிக்குரியவர்கள் மற்றும் உலகபிரகாரமானவர்கள். ஆவியினால் வாழ்ந்து, ஆவியுடனே நடப்பவர்கள் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாவர் (கலாத்தியர் 5:25). இந்த விசுவாசிகளை நாம் அடையாளங் கண்டு கொள்ளலாம் ஏனென்றால் இவர்கள் மற்ற ஒவ்வொருவருடன் உள்ள தங்களின் உறவில் ஆவியின் கனிகளாகிய அன்பு, சந்தோஷம், அமைதி, பொறுமை, தயவு, நன்மை, உண்மை, நேர்மை மற்றும் சுயகட்டுப்பாட்டை வெளிக்காட்டுகிறார்கள் (கலாத்தியர் 5:22-23).

உலகபிரகாரமான கிறிஸ்தவர்கள் என்பது யார்? அவர்கள் கண்டிப்பாக விசுவாசிகள் தான் ஆனால் சில சமயம் அப்படிச் சொல்வது கடினம். அவர்கள் பாவ வாழ்க்கையில் ஈடுபட்டு வாழும், கிறிஸ்தவர்கள் அல்லாதவரைப் போலவே வாழுவார்கள். கொரிந்தியர் நிச்சயமாக இந்த வகுப்புக்கு பொருத்தமாவார். அவர்கள் உண்மையான விசுவாசிகளென்று பவுலுக்குத் தெரியும். ஏனென்றால் கர்த்தரின் கிருபை அவர்கள் வாழ்வில் இருந்ததற்கான சாட்சியை அவன் கண்டுள்ளான். (1 கொரிந்தியர் 1:4-7) விசுவாசிகளாகவும் பரிசுத்தவான்களாகவும் கிறிஸ்துவுக்குள் அங்கீகரிக்கப்பட்டவர்கள் இருந்தார்கள் என்று அவர்களை இவன் அடையாளங்காட்டினான். எதிர்பாராத விதமாக, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் இந்தப்பகுதியில் மிகவும் குறைந்த அளவு சாதித்துள்ளார்கள். கிறிஸ்துவுக்குள் அவர்கள் மீண்டும் பிறந்த அதே வேளையில் கர்த்தர் அவர்களை புனிதமாகக் கண்டார். இது எல்லா கிறிஸ்தவனுக்கும் கொஞ்சம் உண்மையாகவுள்ளது. கூடவே நாம் மீட்கப்படுவதற்கு ஒரே காரணமுமாயிருக்கிறது. ஆனால், கர்த்தரை ஒரு பரிசுத்தமுள்ளவராக, உண்மையுடையவராக, எப்போதும் முடிவில்லாதவராக, அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கை முறையில் அவர்கள் பிரதிபலிக்கவில்லை.

பவுல் சொல்லத்தொடங்கியது என்னவென்றால், இவர்களை அவன் கிறிஸ்துவினிடத்தில் அழைத்து போய் அவர்களுடன் வாழ்ந்த போது அவர்களிடம் இவன் ஆவிக்குரிய விசுவாசிகளாக பேசமுடியவில்லை. ஆனால் உலகப்பிரகாரமான விசுவாசிகளாய் அவனால் அவர்களிடம் பேசமுடிந்தது. பவுல் அவர்களின் வாழ்க்கை முறையை விவரிப்பதைக் கவனியுங்கள்.

> மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக் குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப்

பேசவேண்டியதாயிற்று. நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப்போஜனங்கொடாமல், பாலைக்குடிக்கக்கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? (1கொரிந்தியர் 3:1-3).

பவுல் கடிதத்தின் இந்த இடத்திலும் மற்றும் மீதி உள்ள இந்த நிருபத்திலும் கொரிந்தியர்களின் நடத்தையை பற்றி விவரித்திருப்பது அவனுடைய கலாத்திய நிருபத்தில் பாவ வாழ்க்கையின் செயல்கள் என்று அவன் விவரித்திருப்பதும் சம்பந்தப்படுகிறது. அவர்கள் இன்னும், ஆவியில் நடப்பதைவிட மாம்சத்தில் நடக்கிறார்கள். அவர்களின் ஒருவருக்கொருவர் உறவு எதுவாக இருந்தாலும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும் கனியும் அவர்களிடம் பிரதிபலித்தது.

இது போல உள்ள மக்களுக்கு உதவுமாறு பவுல் கலிலேய கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தினார். கர்த்தரின் விருப்பப்படி வாழாமல் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு தங்கள் வாழ்வில் பாவத்துடன் ஈடுபடுத்தி வாழும் உலகப்பிரகாரமான கிறிஸ்தவர்கள் ஒரு சுமையல்ல என்று அவன் தெளிவுப்படுத்தினான். ஆனால் அவன் எழுதினான். "ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்" (கலாத்தியர் 6:1).

இதுவரை நாம் பார்த்த எல்லா மாதிரியான ஊக்கமளிப்புகளும் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய வேண்டியதைக் குறித்தவையாகும். இது கிறிஸ்தவர்களின் பொறுப்பு என்றும் தெரிவிக்கிறது. ஆனாலும் கூட யாரெல்லாம் கிறிஸ்துவின் சரீரத்தில் நன்றாக முழுமையடைந்துள்ளார்களோ அவர்கள் மட்டும்தான் மற்ற விசுவாசிகளின் வாழ்க்கையில் உள்ள கடுமையான பாவத்தை மேற்கொள்ள முடியும். இதனால்தான் இயேசு இந்த விவகாரத்தைப் பற்றி அவ்வளவு குறிப்பாக பேசினார்.

குருடனுக்குக் குருடன் வழிகாட்டக்கூடுமோ? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? அல்லது நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரனை நோக்கி: சகோதரனே, நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைஎடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய். (லூக்கா 6:39, 41-42).

உலகபிரகாரமான கிறிஸ்தவர்கள், முக்கியமாக யாரெல்லாம் பாவத்தில் பிடிப்பட்டுள்ளார்களோ அவர்களுக்கு உதவுவது ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் கட்டாய கடமையாக உள்ளது. மேலும் கூறினால், அவர்களை பாவம் செய்யாமல் தடுப்பது நம்முடைய கடமையாக உள்ளது. பவுல் ரோமருக்கு எழுதினான்"

அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன். (ரோமர் 15:1-2, 1 கொரிந்தியர் 8:9ஐயும் பார்க்கவும்)

மீட்கப்படுதல் ஒருவருக்கும் அதிகமானவர்களின் பணி

இரண்டுவித்தியாசமானஅனுகுமுறைகளில்பாவத்துடன்ஈடுபடும் இரண்டு வகையான பாவ நடத்தை இருக்கிறது என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில், கிறிஸ்துவுக்குள் உள்ள மற்றொரு சகோதரனுக்கு அல்லது சகோதரிக்கு எதிராக பாவம் செய்யும் நபர், இரண்டாவதாக, தனக்கு எதிராகவும், கிறிஸ்துவின் பெரிய சரீரத்திற்கு எதிராகவும் பாவம் செய்யும் மற்றுமொரு நபர்.

மற்ற கிறிஸ்தவனுக்கு எதிரான பாவம்

இந்த வகை பாவத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இயேசு கிறிஸ்து ஒரு குறிப்பிடத்தக்க அனுகுமுறையை கொடுத்துள்ளார்:

> உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் நீ போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்.அவன்செவிகொடாமற்போனால், இரண்டுமூன்றுசாட்சிகளுடையவாக்கினாலேசங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. (மத்தேயு 18:15-17).

சிலர் தங்கள் சுயநலத்தின் பொருட்டு, மற்ற கிறிஸ்தவர்களுக்கு எதிராகசெய்தபாவத்தைசமாளிப்பதற்காககுறிப்பிட்டசிலவழிமுறைகளை கொடுத்துள்ளார். இந்தமாதிரி விஷயத்தில்எதிர்கொள்ளுதல்ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களுடன் இருக்கவேண்டும். எப்படி முன் செல்வது என்பதைப்பற்றி, வேறுமுதிர்ந்தகிறிஸ்தவனிடம்புத்தியைப்பெறுவதை ஆட்சேபித்து நாம் மற்றவர்களிடம் பேசக்கூடாது. ஆனால் நமக்கு எதிராக பாவம் செய்த நபருக்கு முன் நேரில் செல்ல வேண்டும். ஒரு வேளை, இந்த நபர் நம்மை கவனிக்காவிட்டால், அதன்பிறகு நாம் மேலும் பல நபர்களை, இந்த பிரச்சனையை மீண்டும் ஒரு முறை எதிர்க்க நம்முடன் அழைத்துச் செல்ல வேண்டும். மீண்டும் இதற்கு பதிலில்லைஎன்றால், இந்தபிரச்சனையைஆலயத்திடம்எடுத்துச்செல்ல வேண்டும். இதைப்போலபலஉதாரணங்களில்ஆவிக்குரியதலைவர்களே சம்மந்தப் பட்டிருப்பார்கள். இதற்கு இன்னமும் பதில் இல்லை என்றால், அந்த நபர் விசுவாசியாயிருந்தாலும் அவரை ஒரு கிறிஸ்தவன் அல்லாதோரைப் போலவே கருதவேண்டுமே தவிர நமக்கு வேறு வழி கிடையாது.

பாவத்தில் மாட்டிக்கொண்டுள்ள ஒரு கிறிஸ்தவன்

பவுல் கலாத்தியரில் இந்த வகையான பாவங்களைச் சமாளித்துக்கொண்டிருந்தான். இந்த விஷயத்தில் ஒரு கிறிஸ்தவன் பாவத்துடன் கட்டுப்பட்டு, கூடவே உதவி வேண்டிய நிலையில் இருக்கிறான். கர்த்தரின் பெரிய குடும்பத்திற்கு எதிராகவும் அவனுக்கே எதிராகவும் அவனுடைய பாவம் உள்ளது. இதைப் போன்ற உதாரணங்களில், இந்த நபர் பல ஆவிக்குரிய கிறிஸ்தவர்களால் உடனடியாக அனுகவேண்டும் என்று பவுல் குறிப்பிடுகிறான். அதனால் தான் அவன் எழுதினான், "ஆவிக்குரியவர்களாய் இருக்கும் நீங்கள் அவர்களை மீட்கவேண்டும்."

சில விஷயங்களில், பவுல் இயேசு கிறிஸ்து கூறியுள்ள மூன்றாம் முயற்சியைதேர்ந்தெடுத்துள்ளான். இந்த அனுகுமுறை குற்றம் சாட்டப்படும் தன் சகோதரன் அல்லது சகோதரியின் வார்த்தைக்கும், கூடவே இரண்டு மூன்று சாட்சிகளின் வார்த்தைக்கும், செவிக்கொடுக்க மறுக்கும் தனி நபரைச் சேர்க்கும். இந்த இடத்தில், பல ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் இந்த நபரை காப்பாற்ற முயற்சி செய்து அவரை இந்த பிடியிலிருந்து விடுவிக்கவேண்டும். இதைத்தான், விபச்சாரத்தில் மாட்டிக்கொண்டிருந்த என் நண்பனை விடுவிக்க நானும் என்னுடன் இருந்த மற்றொரு பெரியவரும் முயற்சித்தோம். இந்த விஷயத்தில் அவன் தன் மனைவியின் பேச்சையும் தன்னுடைய குழந்தைகளுடைய பேச்சையும் கேட்க மறுத்துவிட்டான்.

மீண்டும் கட்டுதல் நேர்மையுடனும் பணிவுடம் செய்யப்பட வேண்டிய ஒன்று

"அமைதியாக அவரை மீட்டுவிடுங்கள்," என்று பவுல் எழுதினான். பணிவும், சாதுவான தன்மையும் தேவைப்படுகிறது என்று அவன் குறிப்பிட்டான். அதனால்தான், அவன் எழுதினான். "ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்" (கலாத்தியர் 6:3). கர்த்தருக்கு நன்றி என்று அவன் பதிலளித்தான்.

நாம் எல்லோரும் கர்த்தரின் கிருபையின் நோக்கமாயிருக்கிறோம்

கர்த்தருடைய குழந்தைகள் என்று கூப்பிடுவதற்கான யோக்கியதை அவர்களுக்கு உள்ளதா என்பதை உணர்ந்த பிறகு தான் கிறிஸ்தவர்கள் மற்ற கிறிஸ்தவர்களிடம் பாவத்தைப் பற்றி அனுகவேண்டும். நாமும் கிறிஸ்தவர்கள் அல்லாதோரை இந்த வழியில் தான் அனுகவேண்டும் என்று பவுல் தீத்துவுக்கு தெளிவுபடுத்தினான். இந்த வழியாவது 'எல்லா மனிதர்களிடத்திலும் உண்மையான பணிவை காணபிக்கவேண்டும் என்பது தான்.' அதன் பின்பு ஏன் என்று விளக்கமளித்தான்

> ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு. ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும். அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்

படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களு மாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். (தீத்து 3:2-5)

கிரீட்டில் உள்ள கிறிஸ்தவர்கள் அனைவரையும் உண்மையான புரிந்துக்கொள்ளுதல் பணிவு மற்றும் சாதுவான தன்மையின் உணர்வுடனே அனுகவேண்டும் என்று தீத்துக்கு பவுல் ஊக்கமளித்துக் கொண்டிருந்தார். நாம் இன்னமும் பாவத்தில் இருக்கும் பொழுது கூட கர்த்தருடைய கிருபை மட்டும் தான் நம்மை காப்பாற்றியுள்ளது என்பதை நாம் எப்பவுமே ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். தன்னுடைய சொந்தவாழ்க்கையில் கர்த்தரின் கிருபையைபுரிந்துக்கொள்ளாதஎந்தமீட்கப்பட்டமனிதனும்கர்வத்துடனும், பெருமை அல்லது உயர்வு உணர்ச்சியுடனும் எந்த மீட்கப்பட்ட, மீட்கப்படாத எந்த மனிதனையும் அனுகமுடியாது.

பாவத்தில் பிடிபட்டுள்ள கிறிஸ்தவர்களுக்கு எப்படி உதவுவது என்பதைபற்றி கலாத்தியர்களுக்குபவுல்எழுதும்போதுஇதுவேஅவனுடைய கவலையாய் இருந்தது. உண்மையான அமைதி மற்றும் பணிவின் எண்ணத்தையும் உடைய மக்களை அனுகுமாறு ஆவிக்குரிய விசுவாசிகளுக்கு பவுல் ஆலோசனைக்கூறினான். இந்த அனுகுமுறையின் மூலம் நாம் பாவத்தில் இருக்கும்பொழுது கூட கிறிஸ்து நம்முடன் எந்த மனநிலையில் இருந்தாரோ அதே மனநிலையில் அவர்கள் அந்த நபரின் சுமையைதூக்கஉதவி செய்வார்கள். இதனால்தான்பவுல்கொரிந்தியரிடத்தில் முறையிட்டான். பலபாவத்தில்சிக்கியுள்ளகிறிஸ்தவர்களுக்கு "பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" (2 கொரிந்தியர் 10:1).

இதனால் தான் கர்த்தரின் சத்தியத்தை எதிர்க்கும் மக்களிடம் சண்டைக்கு போவதை தவிர்க்க வேண்டும் என்று தீம்மோத்தேயுவிற்கு பவுல் எச்சரித்தான். ஆனால் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற யாவருக்கும் பவுல் எழுதினான்:

கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச்சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால்பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும். (2 தீமோத்தேயு 2:24-26)

நம்முடைய குழந்தைகளிடத்தில் பெற்றோர்களாக இருந்தும், மக்களிடத்தில் போதகராக இருந்தும், மற்ற கிறிஸ்தவரிடத்தில் ஒரு கிறிஸ்தவனாக இருந்தும், நாமெல்லாம் மற்ற கிறிஸ்தவர்கள் வாழ்வில் இருக்கும் பாவத்தைகையாளுதலில் தவறுசெய்துவிட்டோம். மற்றவர்களை அமைதியுடனும், பணிவுடனும், சாதுவான முறையிலும் நடத்த வேண்டும் என்ற பவுலின் கட்டளையை நான் மகிழ்ச்சியுடன் செயல்படுத்தி கொண்டிருக்கும் போது, கர்த்தரிடம் ஐக்கியம் இல்லாதவர்களை எதிர்ப்பது என் சொந்த கடமையாக இருந்தது. நான் என் வார்த்தைகளில் உணர்ச்சி இல்லாமல் இருந்தபொழுதும், கண்டுபிடிப்பதில் அதிக விரைவாகவும்

கொடூரமாகவும்இருந்தபொழுது,எனக்குஅதிகமானதவறானபொறுப்புகள் இருந்தன.நான்பாவத்தைக்குறித்துகவனிப்பதில்சரியாகஇருந்திருந்தாலும் மற்றவரை திருத்துவதற்கு நான் தேடிப்போன விதம் தவறாக இருந்தது.

உலக பிரகாரமான கிறிஸ்தவர்கள் நம்பிக்கையை பிரதிபலிக்காதபோது

நாம் எவ்வளவு தான் அமைதியாகவும் பணிவுடனும், தயவுடனும், உணர்சியுடனும் இருந்தாலும் சில உலக பிரகாரமான கிறிஸ்தவர்கள் இந்த அனுகுமுறைக்கு பதிலளிக்கமாட்டார்கள். பவுல் இந்த சத்தியத்தை கொரிந்தியருக்கு எழுதும் பொழுது கண்டான். இதன் விளைவாக அவர்களுக்கு தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைத் தந்தான். "நான் பிரம்போடு உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?" (1 கொரிந்தியர் 4:21).

சில கிறிஸ்தவர்கள் அதிகமாக பாவத்தில் அகப்பட்டுள்ளதாலும், அதிகமாகதன்னைத்தானேவஞ்சித்துக்கொள்ளுவதாலும்,அதிககர்வமாக இருப்பதாலும், அவர்களால் அமைதியான பணிவான அனுகுமுறைக்கு பதிலளிக்க முடியாது. அவர்களால் முடியவில்லை என்றால், ஆலய ஒழுக்கத்தின்மூலமாகஅப்படிப்பட்டவிசுவாசிகளின்ஐக்கியத்தைமுறியடிக்க நாம் இரண்டாவது முயற்சியை எடுக்க வேண்டும்.

முழுமைப் பெறாத வகையில் கொரிந்தியர்கள் பாவத்துக்கு பதிலளித்தமையால், பவுல் எந்த பதிலும் தரவில்லை.

> நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது,வெறியனாயாவது,கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது (1 கொரிந்தியர் 5:11).

இதுபவுலின்கடைசிமுயற்சியாகஇருந்தது ஆனாலும்,அவனுடைய கடினமான அன்பு வழக்கத்தில் இல்லாத முடிவைக் கொண்டுவந்தது. வெளிப்படையான ஒழுங்கீனத்தின் நடுவில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதர்களைகொரிந்தியா சபைஉள்ளடக்கியிருந்தது.அவர்கள்தம்சொந்த பாவத்துடன்சண்டையிடுவதற்குவந்தார்கள்.பவுல்இரண்டாவதுநிருபத்தில் எழுதியது போல "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இல்லாமல்இரட்சிப்புக்கேதுவானமனந்திரும்புதலைஉண்டாக்குகிறது.... இந்தக்காரியத்திலேநீங்கள்எல்லாவிதத்திலும்உங்களைச்சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்." (2 கொரிந்தியர் 7:10-11). இன்னும் கூட, ஒழுங்கீனத்தின் நடுவில் இருந்து வெளியேற்றப்பட்ட அந்த ஒழுங்கற்ற மனிதன் கூடவே வருத்தமடைந்தான். கிறிஸ்துவைப் போலவே அந்த மனிதனைமன்னிக்கவும்,அவனைதிரும்பபெறுக்கொள்ளவும்,அவனை நேசிக்கவும், அவனை கிறிஸ்தவ அன்பில் உற்சாகப்படுத்துமாறும் பவுல் அவர்களை ஊக்கமூட்டினான். உடனடி விரோதமல்ல, மீட்கப்படுதல் ஒழுக்கத்தின் உண்மையான நோக்கமாகும்.

ஒரு முறை ஒரு கிறிஸ்தவ மனிதன் அவனுடைய சக விசுவாசிகளை ஒரு தொழில் உடன்படிக்கையில் ஏமாற்றினான். அவன் உண்மையில் மாறுப்பட்ட சட்டங்களை எதிர்த்தான். பின்பு அவனுடைய தவறான செயல்களை ஒப்புக்கொண்டான். பல மனிதர்கள் அவனை அன்புடன் சந்தித்தார்கள், ஆனால் நேருக்கு நேராக அவனுடைய பாவங்களை சந்தித்தார்கள்.

முதலில், அவன் வருந்தியதுப்போல தெரிந்தது. ஆனால் அதற்கு பின்னர் இருந்த அவனுடைய நடவடிக்கைகள் அவன் உண்மையான, உடைந்த மனதுடனும், வருத்தத்துடனும் பதிலளிக்கவில்லை என்பதனை தெரிவித்தது. அவன்பொய்சொல்வதையும்ஏமாற்றுவதையும்தொடர்ந்தான். அவனுடைய ஏமாற்றும் செயல்களுக்கு பழியானவர்கள் அவனுடைய இந்த நடத்தையை ஆலயத்தில் உள்ள தலைவர்களிடத்தில் புகார் கூறினர். வளைஅவனைமூடுவதற்குதொடர்ந்தபொழுதுஅவன்,இந்தபிரச்சனையை வெளியே கொண்டுவர முயற்சித்த மக்களை கண்டித்து மூப்பர்களுக்கு ஒரு கடிதம் எழுதினான். இது பாவத்தை ஒத்துக்கொள்ளாத, குற்றமுடைய மக்களின் பொதுவான தந்திரத்தின் ஒரு பகுதிதான். மற்றவர்களின் மேல் பழி போடுவதன் மூலம் தம் மீதுள்ள கவனத்தை எடுத்து போடுவதற்கு அவர்கள் முயற்சிப்பர்.

இந்ததருவாயில், மீட்கப்படுதலை குறித்து கலாத்தியரில் (கலாத்தியர் 6:1-2) பவுல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கு அப்பால் இந்தபிரச்சினைச் சென்றுள்ளது. இந்த மனிதன் உதவியை நிராகரித்தான். இதன் விளைவாக, விஷயத்தை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லுங்கள் என்ற இயேசுவின் திட்டத்திலுள்ள கடைசி முயற்சிக்கு ஆலயத்தில் இருந்த தலைவர்கள் போக வேண்டியிருந்தது. இந்த வழக்கில், பெரியவர்களாலும் எல்லா பாதிக்கப்பட்டதரப்பினாலும்ஆலயம்நிறைந்தது. எல்லாருமேபாதிக்கப்படும் வரையிலும், முழு ஆலயமும் இதில் சம்மந்தப்பட அவசியமும் இல்லை, தேவையும் இல்லை.

துரதிருஷ்ட வசமாக இந்த மனிதன், பெரியவர்களாலும் எல்லா பாதிக்கப்பட்ட தரப்பினாலும் எதிர்க்கப்பட்ட பொழுதும், அவன் இன்னும் முழுமையான நேர்மையுடனும் வருத்தத்துடனும் பதிலளிக்கவில்லை. சில பொய்களுக்கும், குற்றநடத்தைக்கும் அவன் ஒப்புக்கொண்ட போதிலும், முறையான அதிகாரத்துக்கு அவனையே மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற பெரியவர்களின் ஆலோசனையை தொடர முடியாதவனாய் இருந்தான். இதற்கு பதிலாக ஆலயத்தை விட்டுவிட முடிவு செய்தான்.

இந்த இடத்தில், அவன் கிறிஸ்தவன் அல்ல என்பதற்காக மட்டும் இல்லாமல் அவனை அவிசுவாசியாக நடத்துவதைத் தவிர ஆவிக்குரிய தலைவர்களாலும்பாதிக்கப்பட்டமக்களாலும்ஒன்றும்செய்யமுடியவில்லை. இதற்கு பதிலாக, இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தினால் அவர்கள் அவனை ஏமாற்றும், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவன் அல்லாதவனை நடத்துவதைப் போலவே நடத்தவேண்டும். இதன் விளைவாக, இதைப் போன்ற வழக்குகளை கையாளுவதற்காக அமைக்கப்பட்டுள்ள சட்டபூர்வமான அதிகாரிகளிடத்தில் இந்த வழக்கை எடுத்துச்செல்வதே பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருந்த ஒரே வழி. வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல அன்புடன் எதிர்த்தலுக்கு ஒரு கிறிஸ்தவன் பதிலளிக்கவில்லை என்றால் ஒரு கிறிஸ்தவமில்லாத நீதிமன்றத்துக்கு முன்போவதைவிட வேறுவழி இல்லைஎன்பது எதிர்பாராத விஷயம். தன் நாட்டின் சட்டத்தை எதிர்க்கும் கிறிஸ்தவன் அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டும்.

மீட்கப்படுதல் கவனமாக செய்யப்பட வேண்டும்

சில கிறிஸ்தவர்களும், ஏன் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களும் கூட, மற்றவர்களை அவர்கள் பாவ பிடியிலிருந்து விடுவிக்க உதவி செய்ய அனுகும்போது கவனமாக செயல்படவேண்டும். "உங்களையே நீங்கள் கவனியுங்கள்" என்று பவுல் எச்சரித்தான். "நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு" (கலாத்தியர் 6:1).

இந்த வகை எதிர்ப்புகளிலும் குறுக்கிடுதலிலும் இதனால்தான் ...ன்றுக்கும் மேற்பட்டோர் இருக்க வேண்டும் என்ற அவசியத்துக்கு இது ...றுமொரு காரணம். மாம்ச இச்சைகள் மிகவும் போலியானதும் ...க்கூடியதுமாய் இருக்கின்றன. சில கிறிஸ்தவர்கள், பாவபிடியில் உள்ள ...விசுவாசிக்கு உதவி செய்ய முயற்சித்து, அவர்களும் அதே பாவத்தில் ...ழுந்துவிடுவார்கள்.

இந்த பிடியில் விழுந்துள்ள ஒரு போதகராகிய நண்பர் எனக்கு ...னார். தன்னுடைய கணவனிடத்தில் சரியான உறவை வைக்காத பெண் ...வருக்கு உதவ முயற்சி செய்து கொண்டிருந்தார். என்ன நடந்திருக்கும் ...று உங்களால் யூகிக்கமுடியும்!

அந்த நபருடன் விபசாரம் செய்வதில் தன் வாழ்வை ...த்துக்கொண்டார். அவருடைய பாவத்தை அறிக்கையிட்ட போதிலும், ...து அவருடைய குடும்பத்தையும் மனைவியையும் நாசப்படுத்தும் ...ளவில் முடிந்தது. அங்கு மீட்க்கப்படுதலும் மன்னிப்பும் இருந்தபோதிலும் ...னதழும்புகள் இன்னமும் உள்ளது. அது அவர்களின் எஞ்சிய வாழ்க்கை ...ழுவதும் இருக்ககூடும்.

மீட்கப்படுதல் ஜெபத்துடன் செய்யப்படவேண்டும்

மற்ற கிறிஸ்தவர்களின் பாவச் சுமையை சுமப்பதில் ...டுபட்டுள்ள செயல்களுக்கு யாக்கோபு ஒரு முக்கியமான அளவைச் ...கிறான். "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்" என்று தன்னுடைய நிருபத்தில் எழுதியுள்ளான். ...பிறகு அவன் ஏன் என்று விளக்கினான். "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக்கோபு 5:16).

ஒரு கிறிஸ்தவன் பாவத்தில் ஈடுப்படும்போது, "மனுஷன் எதை ...க்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று ...க்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்." (கலாத்தியர் 6:7- ...கிறிஸ்துவிடத்தில் திரும்பாத ஒரு கிறிஸ்தவன் அல்லாதவன், தன் ...க்கை தொடர்ந்து செய்வதன் மூலம் தன் முடிவில்லாத வாழ்க்கையை ...துஇல்லாமலே கழித்துவிடுவான். பரிசுத்த ஆவியினிடத்தில் தொடர்பு ...ம் வைத்துக்கொள்ளாமல், அதற்கு பதிலாக பாவ வாழ்க்கையின் செயல்களில் ஈடுபடும் கிறிஸ்தவர்களுக்கு அழிவு வந்து சேரும். ஆவிக்குரியதாகவும், மனரீதியாகவும், உடல்ரீதியாகவும், அவர்கள் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத சரீர அழிவு வந்து சேரும்.

எல்லா கிறிஸ்தவர்களும் அல்ல, சில கிறிஸ்தவர்கள் உடல்ரீதியாக பலவீனமாய் இருப்பது அவர்களின் பாவத்தால் தான் என்று யாக்கோபு தெரிவிக்கிறான்.

உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால அது அவனுக்கு மன்னிககப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு 5:14-16).

எல்லா பலவீணங்களும் ஒரு குறிப்பிட்ட பாவத்தால் தான் வருகிறது என்றுயாக்கோபுசொல்லவில்லைஎன்பதைகுறிப்பெடுத்துக்கொள்ளுங்கள். ஆனால், அவன் எழுதினான், "அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" (யாக்கோபு 5:15).

கர்த்தர் உண்மையில் எல்லா விசுவாசிகளுக்கும் மனரீதியான மற்றும் உடல்ரீதியான பலவீணங்கள் வரும்போது, அவர்களைக் குணப்படுத்திவிடுவேன் என்று சத்தியம் செய்யவில்லை. ஆனாலும் கூட, அவர் கீழ்ப்படிதலையும், விசுவாசத்தையும் மதிக்கிறார். கூடவே பல உதாரணங்களில், நாம் அவருடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு ஜெபிக்கும் போது குணப்படுத்துவார். சில சமயங்களில் இது திடீரென நடந்துவிடும்.

ஒரு விஷயம் உறுதி. நாம் நம் பாவத்தை அறிக்கையிடும் பொழுது இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மை எல்லாப் பாவங்களில் இருந்தும் கழுவுவதை தொடர்கிறது. (1 யோவான் 1:9) கர்த்தருடைய விருப்பத்தை எதிர்க்கும் எந்த ஒரு விஷயத்தை நாம் செய்து இருந்தாலும் பரவாயில்லை, அங்கு மன்னிப்பு எப்பொழுதுமே உண்டு. இந்த பாவங்களின் விளைவாக நாம் நம் உடல்ரீதியான மற்றும் உணர்ச்சி ரீதியான வாழ்வில் கஷ்டங்களை அனுபவிக்கலாம். ஆனால், நாம் மன்னிப்பு பெறவில்லை என்று இதற்கு அர்த்தமல்ல.

இந்த தத்துவத்தை இன்றைய வாழ்வில் அமல்படுத்துவதற்கேற்ற முயற்சிகள்

முயற்சி 1

பாவ பிடியில் இருக்கும் மற்ற கிறிஸ்தவனுக்கு உதவ முயற்சி செய்வதற்கு முன்னர் எப்போதும் உங்கள் சொந்த வாழ்க்கையைப் பரிசோதியுங்கள்.

ஆவிக்குரியவர்களாகஇருப்பவர்களில்நீங்களும்ஒருவரா? அதாவது ஆவியுடன்தொடர்புவைத்து, நீங்கள் ஆவியினால் உங்கள் வாழ்க்கையை முறைப்படுத்துகிறீர்களா? நீங்கள் இந்த வழியில் வாழ்கிறீர்களா? மற்ற கிறிஸ்தவர்களிடத்தில் உங்களுக்கு உள்ள உறவில் இப்படி இருக்கிறீர்களா? அப்படியானால் ஆவிக்குரிய கனி வெளிப்படையாக உங்கள் வாழ்க்கையில் இருக்கிறதா?

உங்களையே நீங்கள் பரிசோதித்துக்கொள்ளுங்கள். ஆவிக்குரியவர்களில் நீங்களும் ஒருவர் என்று நீங்கள் கருதினால், அன்பு மற்றும் சந்தோஷத்தை உங்களால் பிரதிபலிக்க முடியும். மற்ற கிறிஸ்தவர்களிடத்தில் அமைதியுடன் இருப்பீர்கள், நீங்கள் பொறுமை, தயவு, நன்மை, விசுவாசம், அமைதி மற்றும் சுயக்கட்டுப்பாட்டை வெளிப்படுத்துவீர்கள் (கலாத்தியர் 5:22-23).
மேலும் நீங்கள் என்ன செய்தாலும், இயேசுவின் வார்த்தையை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள் மிகவும் முக்கியமான ஒன்றை அவர் சொன்னார். "இதோ உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி" (மத்தேயு 7:4).

முயற்சி 2

எப்பொழுதுமே மற்ற கிறிஸ்தவனின் வாழ்க்கைமுறையை உண்மையான வேதாகம தோற்றத்தில் இருந்து கணக்கிடுங்கள்.

சில கிறிஸ்தவர்கள் மற்ற கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் பாவம்

இருக்கிறதா என்று தேடிப் போகிறார்கள். சில கிறிஸ்தவர்கள் மற்ற கிறிஸ்தவர்களின்பாவத்தைகணக்கிடுவதில்உதவிசெய்வதற்காகவேதாகமப் பட்டியலைத் தயாரிப்பதில் வல்லவர்கள். இது உண்மையில், மற்றவர்களை விரைவில் தீர்ப்பதற்கு வழிநடத்தும் (காண்க: ரோமர் 4:13). இதுவே பாவம் தான். இது எல்லோரையும் விட தான் அதிக ஒழுங்குடையவன் என்ற மனப்பான்மையை வெளிப்படுத்தும்.

இன்னொரு புறம் கிறிஸ்தவர்கள், பாவ பிடியில் அகப்பட்டுள்ள மற்ற கிறிஸ்தவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். சற்று முன்பு தான் ஒருவருக்கொருவரின் சுமையை சுமங்கள் என்று பவுல் கிறிஸ்தவர்களுக்கு அறிவுரை கூறினான். கூடவே அவன் பாவவாழ்க்கையின் செயல்களை விவரிக்கிறான். இந்த பட்டியல் விசுவாசிகளின் வாழ்க்கையில் உண்மையில் பாவம் என்றால் என்ன என்பதை தீர்மானிப்பதற்காக உள்ள வேதாகத் தகுதியாக மாறியுள்ளது. இது மேலான கலாச்சார பட்டியலாக உள்ளது. கூடவே எல்லா காலத்திற்குமான வழி முறையாகவும் உள்ளது.

கீழேகொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில்தமிழ்மொழிபெயர்ப்பில் உபயோகிக்கப்பட்ட சொற்களைக் காணலாம். இதன் மூலமாக பவுல் என்ன கூறுகிறான் என்பதை தெளிவாக கண்டுக்கொள்ள முடியும்.

விபசாரம்
வேசித்தனம்
அசுத்தம்
காமவிகாரம்
விக்கிரகாராதனை
பில்லிசூனியம்
பகைகள்
விரோதங்கள்
வைராக்கியங்கள்
கோபங்கள்
சண்டைகள்
பிரிவினைகள்
மார்க்கபேதங்கள்
பொறாமைகள்
கொலைகள்
வெறிகள்
களியாட்டுகள்

முயற்சி 3

பாவத்தில்மாட்டிக்கொண்டுள்ளகிறிஸ்தவர்களைஎதிர்க்கும்பொழுது எப்போதும் வேதாகம விதிமுறைகளைப் பயன்படுத்துங்கள்.

புதிய ஏற்பாடு மூன்று முறைகளில் ஒழுங்குமுறை நடவடிக்கையைத் தெரிவிக்கிறது. முதலில், நாம் ஒரு கிறிஸ்தவனை அவன் பாவத்தைக் குறித்து கண்டிக்கவேண்டும், அவனை சாத்தானுடைய பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும். (1 தெசலோனிகேயர் 5:14; கலாத்தியர் 6:1-2).

இரண்டாவதாக அந்த நபர் பதிலளிக்கவில்லை என்றாலும் பாவத்திலிருந்து திரும்பவில்லை என்றாலும் அந்த கிறிஸ்தவனிடத்தில் நாம் ஐக்கியம் வைக்கக்கூடாது (2 தெசலோனிகேயர் 3:6,14).

கடைசிநடவடிக்கையானதுதள்ளிவைப்பது, அவனைஉண்மையில் ஒரு அவிசுவாசியை போல கருதவேண்டும். மற்ற கிறிஸ்தவர்கள் வாழ்க்கையில் உள்ள பாவத்தை நாம் கையாள முறையான வழிமுறைகளை

பயன்படுத்தும் பொழுது, நாம் எப்பொழுதுமே, முதலாம் அளவுக்கு மேல் போகவேண்டிய அவசியம் இருக்காது. ஒரு வேளை அந்த நபர் பதிலளிக்கலாம், கூடவே மீட்கப்படலாம். அல்லது கேட்காமலேயே தன்னுடைய சக கிறிஸ்தவர்களிடமிருந்து தனியாக பிரிந்து செல்ல முடிவெடுக்கலாம். நாம் எப்போது அன்புடன் உண்மையை பேசுகிறோமோ அப்போது இது உண்மை தான். மக்கள் நல்ல முறையில் பதிலளிக்கவில்லை என்றாலும், நாம் அவர்கள் மீது வைத்திருக்கும் கரிசனையைப் பாராட்டுவதோடு, அதிக பிரச்சனையை உருவாக்குவதற்கு பதிலாக ஆலயத்தை விட்டு வெளியே போவதைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

துரதிருஷ்டவசமாக, இந்த தொடக்க நிலையில் செயல்படுவதில் தான் நாம் அடிக்கடி தோற்றுப் போகிறோம். மேலும் அவர்களை பாவத்திலிருந்து விடுவிக்க வேண்டுமானால் ஒருவருடைய சுமையை மற்ற ஒருவர் சுமக்க வேண்டும் என்று பவுல் நமக்கு சொன்ன பொழுது இந்த முதலாம் நிலையைத்தான் தன் மனதில் வைத்திருந்தான். மீட்கப்படுதல் ஒழுக்கத்தின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். அதை எந்த அளவுக்கு நாம் செயல்படுத்தினாலும் பரவாயில்லை, ஒழுக்கப்படுத்தல் எப்பொழுதுமே அன்புடன் செய்யப்பட வேண்டும். கூடவே பாவவாழ்க்கையின் செயல்களில் ஈடுபடுவதை விட அந்த நபரை ஆவியுடன் மீண்டும் ஒருமுறை தொடர்புவைத்துக் கொள்வதற்காகவும், அந்த நபரை அவனுடைய பாவத்திலிருந்து திரும்ப உதவும் நோக்கத்துடனும் ஒழுக்கம் செய்யப்பட வேண்டும்.

சிறு குழுக்கள் விவாதிப்பதற்கான வழிமுறைகள்

இந்த பாடத்தில் உள்ள தொடக்க விளக்கங்களை சத்தமாக படியுங்கள். அதன்பின், தொடரும் இந்த கேள்விகளை விவாதியுங்கள்:

இந்த பிரச்சனையினால் நீங்கள் எதிர்க்கப்பட்டால், நீங்கள் எப்படி நடந்துக்கொள்வீர்கள்?
தொடக்கத்தில் பதிலளிக்காத ஒரு நபரிடம் எந்த அளவுக்கு அழுத்தத்தை செலுத்தவேண்டும் என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?
ஏன் இந்த அனுகுமுறை எப்பொழுதுமே செயல்படாது?
இந்த விளக்கத்தில் எந்த வேதாகம விதிமுறைகள் பிரதிபலிக்கின்றன?

உரையாடலிற்காக

1. ஒருவருடைய சுமையை ஒருவர் சுமக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கும் பொழுது எந்த வகையான பாரங்கள் உங்கள் நினைவுக்கு முதலில் வருகின்றன? கலாத்தியர் 6:1ஐ வாசியுங்கள். 'ஒருவருடைய சுமையை ஒருவர் சுமக்க வேண்டும்,' என்பது பாவப்பிடியில் சிக்கியுள்ள யாரையோ மீட்பது என்பதை குறிக்கிறது என்பதற்கான என்ன செய்கைகளை நீங்கள் பார்க்கிறீர்கள்?
2. பாவத்தில் சிக்கியுள்ளனர் என்பதற்கும், உலக வாழ்க்கை வாழ்கின்றனர் என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன? (கலாத்தியர் 6:1). சென்ற இரண்டு பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள பாவங்களின் பட்டியலை பாருங்கள். எதிர்பதற்கு காரணம் வேண்டும் என்பதற்காக பாவங்களில் எதை உடனடியாக கருதுவீர்கள்? எதிர்ப்பதற்கு அழைப்பு கொடுப்பதற்கு சில வேறு பாவங்களே (உதாரணம்: பொறாமை) போதுமானது என்பதை நீங்கள் எப்படி முடி

செய்வீர்கள்? நீதிமானாக இல்லாமல் நீங்கள் எப்படி இந்த முடிவை எடுக்க முடியும்?
3. கலாத்தியர் 6:5ஐ வாசியுங்கள். ஒருவருடைய சுமையை ஒருவர் சுமக்க வேண்டும் என்ற இந்த கற்பித்தலுடன் எப்படி இந்த வாக்குமூலத்திற்கு தொடர்புவகுக்கிறது? சுமையைசுமப்பவர்களுக்கு வேண்டியதகுதிகளுடன் இது எப்படி சம்மந்தப்படுகிறது?
4. ஒருவருடைய சுமையை மற்ற ஒருவர் சுமப்பது, உங்கள் ஆலயத்தில் உண்மையாக வேண்டும் என்றால் என்ன செய்யப்படவேண்டும்?

முடிவு

இந்த அதிகாரத்தைப் படிக்கும் பொழுது, சில குழு உறுப்பினர்கள், பாவத்தை குறித்துக் யாரையாவது அனுகவேண்டும் என்ற ஒரு கடமையை அடையாளங் கண்டிருப்பீர்கள். பாதுகாப்பை அளிப்பதற்காகவும், ஆதரவைக் கண்டுக் கொள்வதற்காகவும் அந்த குழு உறுப்பினர்களுக்கு நம்பிக்கையானசுற்றுச்சூழலைக்கொடுப்பதற்க்கும்ஜோடியைஅமையுங்கள். தனி நபர் சூழ்நிலையை நம்பிக்கையுடனும் பெயர்களை சொல்லாமலும் அவர்களுடைய துணையிடம் பகிர்ந்துக்கொள்ள விடுங்கள். பாவத்தில் பிடிபட்டவருக்கும், ஒருவருக்கு ஒருவரும் ஜெபம் பண்ண வேண்டும். மேலும் அவர்களுடைய கடமைகளில் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாய் இருக்க வழிகளைக் கண்டுபிடிக்கவும். மற்றவர்களை எதிர்க்க வேண்டும் என்று அவர்கள் நினைக்க கூடிய குறிப்பிட்ட சூழ்நிலைகள் மக்களுக்கு இல்லை என்றால் ஆவிக்குரிய, பணிவுடைய கிறிஸ்தவர்களாய் அவர்கள் தொடர்ந்து வளர்வதற்கு ஒருவருக்கொருவர் ஜெபம் பண்ண வேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

அடுத்தமுறைக்காக

த்தாம் அதிகாரத்தை வாசியுங்கள்.
உங்கள் துணைக்காகவும், உங்களுக்கு தெரிந்த யாராவது பாவத்தில பிடிபட்டிருந்தால் அவர்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.



அத்தியாயம் பத்து

ஒருவருக்கொருவர் பொறுத்துக்கொள்ளுங்கள்

மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி
(எபேசியர் 4:2)

நான் மக்களை நேசிக்கிறேன். என்னுடைய சொந்த பலவீனங்கள் எனக்கு நன்கு தெரியுமாகையால், மற்றவர்களிடம் இருக்கும் பலவீனத்தை சகித்துக்கொள்வது எனக்கு சற்று எளிதாகவே உள்ளது. அந்த விதத்தில் நான் அதிர்ஷடமுள்ளவன். சில மக்கள் தங்களிடம் இருக்கும் பலவீனங்கள் மற்றவர்களிடமும் இருக்கிறது என்பதை அறிந்தும் அதை ஏற்பதில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இன்னும், என் கடந்தகால, நிகழ்கால உறவுகளை நான் யோசிக்கும் போது ஏற்றுக்கொள்வதிலும் விரும்புவதிலும் மிகவும் கஷ்டப்பட்ட சில முகங்கள் என் நினைவிற்கு வருகின்றன.

அப்படிப்பட்டவர்களில் ஒரு முகம் என் நினைவிற்கு வருகிறது. உண்மையிலேயே தனே இவருக்கு மோசமான எதிரியாக இருந்தார், இன்னமும் இருக்கிறார். இவர் எப்பொழுதுமே யாரிடமாவது சண்டைப் போட்டுக் கொண்டிருப்பார். மற்ற மக்களிடம் தவறான முறையில் கடுமையான வார்த்தைகளைப்பேசும்பழக்கம் அவருக்குஇருப்பதாக அவருக்குதெரியும், உடன் அவரே ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் அவர் மாறவில்லைஎன்பது வருத்தத்திற்குரியது.

ஒரு முறை அவர் என் அலுவலகத்திற்கு வந்து என்னிடமும் மற்ற எவரிடமும் விடாமல் பேசிக்கொண்டிருந்ததை நான் ஞாபகம் வைத்திருக்கிறேன். அவருடைய தொடர் கண்டனத்துக்கு எந்த பதிலும் கொடுக்காமல் கிட்டதட்ட 45 நிமிடங்கள் கவனித்துக் கொண்டிருந்தேன். அதன் பின் அவர் போவதற்காக எழுந்தார். அந்த தருவாயில், அவருடைய கண்ணோட்டங்களை நான் பொறுமையாக கவனித்ததாக அவரிடம் தெரிவித்தேன். கூடவே, மரியாதைக்காவது பதிலளிக்குமாறு அவரிடம் கேட்டேன்.

அவருடைய குற்றச்சாட்டுக்கு, ஒன்றுக்கு பிறகு ஒன்றாக நான் பதிலளிக்க முப்பது நிமிடங்களை எடுத்துக்கொண்டேன். அதற்கு உதவிய அவருக்கு எல்லா புகழும் சேரட்டும். அதிர்ஷ்டவசமாக அவரை நன்கு தெரிந்த சக போதகர் ஒருவர் என்னுடன் இருந்தார், நான் முடித்த பொழுது, நான்விட்ட இடத்தில் இருந்து அவர் பிடித்துக்கொண்டார். நான் சொன்னதை அவர் உறுதிப்படுத்திக் கொண்டார். அதன்பிறகு, இந்த மனிதன் கேட்கவேண்டிய சில கூடுதலான விஷயங்களை அவர் பகிர்ந்துகொண்டார்.

இந்த இடத்தில், அவர் தாழ்மையாகவும் பணிவாகவும் மாறினார். வெளிப்படையாக, அவர் உண்மையாக இருந்தார் என்று நான் நம்புகிறேன். அவர் தன் குறிப்புத்தாள்களை கிழித்தார். மேலும் இந்த பிரச்சனைகளை மறுபடியும் எப்பொழுதுமே கொண்டுவருவதில்லை என்று என்னிடம் கூறினார்.

ஆனால், எதிர்பாராத விதமாக, அந்த மாற்றம் தற்காலிகமானதாக இருந்தது. ஆபத்தான கருத்து தெரிவிக்கின்ற தன்னுடைய பழைய பழக்கத்திற்கு அவர் விரைவில் திரும்பினார். சமீபமாக, இரக்கமில்லாமலும் காரணம் ஏதும் இல்லாமலும் அவர் மற்றொரு ஆவிக்குரிய தலைவரைத் தாக்குவதை நான் கண்டேன். எனக்கு தெரிந்த எல்லா மனிதர்களையும் விட, இந்த போதகர் இந்தவகையான தீவிர குற்றச்சாட்டை விரும்புவதில்லை.

நான் இன்னமும் இந்த சண்டைப் போடும் குணம் உடைய மனிதரை நேசிக்கிறேன். கூடவே அவ்வப்போது அவருக்காக ஜெபம்பண்ணுகிறேன். ஆனால் வெளிப்படையாக, நான் அவருடன் கூட இருப்பதை நான் இழப்பதில்லை என்பது எனக்கு தெரியும். நான் அந்த மனிதனுடைய முரட்டுத்தனத்திற்காகவும் அவருடைய உணர்ச்சியில்லாத ஆவிக்காகவும் அவருடைய கருத்தை உரைக்கும் மனநிலைக்காகவும் அவரை மன்னித்து விட்டேன். ஒரு விதத்தில், அவரை அன்புடன் பொறுத்துக்கொள்கிறேன் என்று நான் நம்புகிறேன். அவர் மாறுவார் என்று நான் நம்புகிறேன். அவர் மாறினால் அது கட்டாயமாக அவருடைய மனைவிக்கும் அவருடைய குழந்தைக்கும் ஒரு சிறந்த ஆசிர்வாதமாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். இதற்கிடையில் அவரை மனந்திரும்ப வைக்கவும், அவருடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய கனியை பிரதிபலிக்கவைக்க உதவி செய்யவும் கர்த்தர் யாரையாவது உபயோகித்தால் அவர்களிடம் இந்த பொறுப்பை பகிர்ந்துக் கொள்ள நான் சந்தோஷப்படுகிறேன் என்பதை இப்பொழுதே ஒப்பு கொள்கிறேன்.

நான் இந்த கதையைப் பகிர்ந்துகொள்வது இந்த மனிதனின் குற்றத்தை ஏற்பதற்காக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக அல்ல. உண்மையில், அவர்களுக்கு அவர்களையே நேசிப்பதில் கஷ்டம் இருக்கிறது. அதிர்ஷ்டவசமாக இந்த மனிதனைப்போலவே இருப்பதில் சிலர் அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். பலமக்கள் அன்புள்ள எதிர்ப்புக்கு பதிலளிக்கின்றனர். அவர்கள் மாறுகிறார்கள். ஆனால் அவர்கள் மாறவில்லை என்றால், அவர்களை நாம் அன்புடன் சகித்துக்கொள்ள வேண்டும். இது கூடுதல் எதிர்ப்பு என்று பொருள் படும்.

பொறுமை

ஒவ்வொருவரின் பலவீனங்களையும் கையாளுதல் என்று வரும்பொழுது, பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் நம்முடைய மற்ற ஒருவருக்கொருவருக்கு செய்ய வேண்டிய கடமையை இன்னும் தெளிவாக்கியுள்ளான்.

ஆகையால்,நீங்கள்தேவனால்தெரிந்துகொள்ளப்பட்டபரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோசெயர் 3:12-13)

கருணை, தயவு, நேர்மை, பொறுமை போன்ற பல முக்கியமான வார்த்தைகள் பவுலின் கட்டளையாகிய 'ஒருவருக்கொருவர் சகித்துக்கொள்ளுங்கள்என்பதைமுந்திச்செல்கிறது.ஆனாலும்பொறுமை என்பதே முக்கியமான வார்த்தை.

"கிங்ஜேம்ஸ்வேர்ஷன்" என்றஆங்கிலவேதாகம்மொழிபெயர்ப்பு "நீடிய பொறுமை" என்ற வார்த்தையை உபயோகிக்கிறது, ஆவியுடன் நடப்பதற்கு இது ஒரு வழி (கலாத்தியர் 5:25). புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கான பவுலின் ஜெபத்தில் பொறுமை என்பது முக்கியமானதாக உள்ளது.

சகலவிதநற்கிரியைகளுமாகியகனிகளைத்தந்து,தேவனைஅறிகிற அறிவில்விருத்தியடைந்துகர்த்தருக்குப்பிரியமுண்டாகஅவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப்பொறுமையும்நீடியசாந்தமும்உண்டாவதற்கு,மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம். ஒளியிலுள்ளபரிசுத்தவான்களுடையசுதந்தரத்தில்பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும் (கொலோசேயர் 1:10-12).

"ஒருவரை ஒருவர் சகித்துக்கொள்ள வேண்டும்" என்பது மற்ற ஒவ்வொருவரின் பலவீனத்தில் பொறுமையாக இருக்க வேண்டும் என்பதுதான். நம்மில் ஒருவருமே ஒழுங்கு கிடையாது. குறிப்பாக மனித உறவுகளில்நாம்எல்லோரும்தவறுகிறோம்.நம்மிடம்இருந்துஎதிர்பார்ப்பதை விட மற்ற கிறிஸ்தவர்களிடமிருந்து எதிர்ப்பார்ப்பது எவ்வளவு சுலபமாய் இருக்கிறது.

இதுகுறிப்பாகநம்முடையகுடும்பங்களில்உண்மையாகஇருக்கிறது மற்றசமுதாயஅமைப்பில்,நாம்ஒருவரையொருவர்தெரிந்துகொள்ளுவதை விட இந்த அமைப்பில் நாம் அதை தெரிந்து கொள்ளலாம். பல நாட்களுக்கு பல வாரங்களுக்கு, பல வருடங்களுக்கு நாம் ஒன்றாக வாழ்கிறோம். இது நேருக்கு நேரான அனுபவம். இந்த அமைப்பில், குழந்தைகளாகவும், பெற்றோர்களாகவும் இருந்து நம்முடைய நன்மை தீமைகளை நாம் பார்க்கிறோம். தங்களிடமிருந்து தாங்களே எதிர்பார்ப்பதை விட குழந்தைகளிடமிருந்து பெற்றோர்கள் அடிக்கடி அதிகமாக எதிர்பார்க்கிறார்கள்.தங்கள்வாழ்வில்உள்ளமற்றபெரியவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதைவிடகுழந்தைகள்தங்கள்பெற்றோர்களிடமிருந்துஅடிக்கடி அதிகமாக எதிர்பார்க்கின்றார்கள். ஒன்றாக இந்த சக்தி ஏதாவது ஒன்றில் அடிக்கடி வெளியேறும். ஆனால் ஒருவர் மீது ஒருவருக்கு இருக்கும் சகிப்புத்தன்மையிலும் பொறுமையிலும் அல்ல.

விரிவாக்கப்பட்டநம்குடும்பத்திலும்இதுஉண்மையாகவேஉள்ளது. கிறிஸ்துவுக்குள்சகோதரசகோதரிகளாகவாழும்பொழுதுஒவ்வொருவரின் பல குணத்தை நாம் அறிந்துக்கொள்ள முடியும். அதன் பின்பு, நாம் ஒருவரையொருவர்அன்புடன்சகித்துக்கொள்ளவேண்டும்என்றசவாலைச்

சந்திக்க ஒருவரையொருவர் அன்புடன் சகித்துக்கொள்ள வேண்டும் என்ற சவாலைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. ஒருவரிடம் ஒருவர் பொறுமையில்லாமல்இருப்பதற்குநாம்தூண்டப்படும்வேளையில், இயேசு கிறிஸ்துவையும், நம்மைக் குறித்த அவருடைய மனநிலையையும், நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். இது பவுலின் உற்சாகமூட்டுதலாயிருந்தது. இந்த மனிதனைக் குறித்து இருந்த கர்த்தரின் நீடிய சாந்தமும், பொறுமையும் இவன் வாழ்க்கை தெரியப்படுத்தியது. அவனுக்கு அது மற்றவர்களை குறித்து அதிக சகிப்பு தன்மையை தந்தது (1தீமோத்தேயு 1:15-17). பாவிகளிலேயேகொடும்பாவியாகதன்னைத்தானேபார்த்துக்கொண்டதால், அவனைமீட்டுக்கொண்டதில்கர்த்தருடையஅன்பையும்பொறுமையையும் அவன் அனுபவித்தான். அது பவுலை மற்றவர்களிடத்தில் இயேசு கிறிஸ்துவின் அன்புடனும் பொறுமையுடனும் நடக்கச் செய்தது.

மன்னிக்கும் ஆவி

ஒருவரையொருவர்சகித்துக்கொள்ளுவதும், மன்னிக்கும்ஆவியை உடையதுமே கர்த்தருடைய பார்வையில் அர்த்தமுள்ளது. கொலோசெயருக்கு பவுல் எழுதிய கடிதத்தில் இதை தெளிவுப்படுத்தி இருப்பதைக் கவனியுங்கள். ஒருவரை ஒருவர் சகித்துக் கொள்ளுங்கள் என்று கூறினான். "கூடவே ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (கொலோசேயர் 3:13).

சிலகிறிஸ்தவர்கள்பலவருடங்களாகவிரோதத்தைச்சுமப்பதுஎத்தனை துக்கமாயிருக்கிறது. இது எத்தனை வருத்தமாயிருக்கிறது! இயேசு கிறிஸ்துவைப் பின் தொடர்பவர்களின் நடத்தையிலிருந்து இது எப்படி அப்பாற்பட்டிருக்கிறது. கிறிஸ்து நம் பாவங்களை எல்லாம் ரத்து செய்திருக்கும்போது ஒரு கிறிஸ்தவன் தன் சக விசுவாசிக்கு எதிராக விரோதத்தைவைத்திருப்பதுஎவ்வளவுநன்றிக்கெட்டசெயலாகஇருக்கிறது.

எனக்கு எதிராக கசப்புத்தன்மையின் எண்ணங்களை சுமந்து வருவதாக ஒப்புக்கொண்டு சக போதகர் ஒருவர் எனக்கு எழுதிய கடிதத்தை நான் சமீபத்தில் பெற்றுக்கொண்டேன். அவர் மன்னிப்பு கேட்டிருந்தார். அதைத் தருவதற்கு நான் தயாராக இருந்தேன். அவரை சென்ற பல காலங்களுக்கு முன்பே மன்னித்துவிட்டேன். கர்த்தர் அவருடைய இந்த மனநிலைக்காக அவரை குற்றப்படுத்தியதைப் பார்ப்பது ஒரு சிறந்த ஆசீர்வாதமாகஇருந்தது. மன்னிப்புஎன்றதலைப்பைப்பற்றிவேதத்திலிருந்து ஒரு செய்தியை அவர் தயாரித்துக் கொண்டிருந்ததும், பரிசுத்த ஆவியானவரின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்ததுமான இந்த சிறப்புகள் அவருக்கே சேரும். அவரை ஏற்கெனவே மன்னித்துவிட்டேன் என்பதை அவரிடம்தெரியப்படுத்துவதில்எவ்வளவுமனதெளிவு. மேலும்அவருடைய ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபிப்பேன்.

ஒரு சக்தி வாய்ந்த கதை

ஒருநாள்பேதுருஇயேசுவினிடத்தில்வந்துகேட்டான், "ஆண்டவரே, எனக்கு எதிராக என் சகோதரன் பாவம் செய்தால் அவனை எத்தனை முறை நான் மன்னிக்கலாம்? ஏழு முறை வரைக்குமோ?

அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 18:21-22)

பின்பு இந்த குறிப்பை விளக்க இயேசு ஒரு கதையைச் சொன்னார்.

எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப்பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம்தாலந்துகடன்பட்டவன்ஒருவனைஅவனுக்குமுன்பாக கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும்விட்டு, கடனைத்தீர்க்கும்படிக்கட்டளையிட்டான்.

அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில்பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைப்பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக்கண்டு, அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான்.

அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான்.

அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததைஅவன்உடன்வேலைக்காரர்கண்டு, மிகவும்துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள்.

அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால், அந்தக்கடன்முழுவதையும்உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.

நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார் (மத்தேயு 18:23-35).

"எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்!"

பொறுமையாயிருங்கள், ஒருவரையொருவர் அன்போடு சகித்துக் கொள்ளுங்கள் என்றபவுல் ஊக்கப்படுத்தினான். மேலும்தொடர்ந்து அவன் கூறினான். "மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்." (எபேசியர் 4:2-3).

பொறுமை, சகிப்புத்தன்மை, கூடவே மன்னிப்புத்தன்மை எல்லாம் கிறிஸ்துவை பின் தொடர நாம் மாறும் பொழுது தானாகவே நடந்துவிடும் செயல்கள் அல்ல. அவை எல்லாம் முயற்சியுடன் நிதானித்து யோசித்து செய்ய வேண்டிய செயல்கள் மன்னிப்பின்மையின் ஆவியை உடைய,

எனக்கு தெரிந்த எல்லா நபர்களும் இதைச் செய்வதற்கு முடிவு செய்வார்கள். இது என் வாழ்க்கையில் உண்மையானது என்பது எனக்குத் தெரியும். ஒருவரை தவிர்ப்பதின் மூலமும், ஒரு நபரின் முதுகுக்குப் பின்னால் பேசுவது மூலமும் நாம் என்ன நினைக்கிறோம் என்பதை மற்றவருக்கு தெரியப்படுத்த இவை எல்லாவற்றையும் அடிக்கடி தேர்ந்தெடுக்கிறோம்.

வேறு முறையில் பார்ப்போமானால், ஒருவருக்கொருவர் உண்மையில் அக்கறை எடுக்கும் கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய சித்தத்தை எல்லா முறையும் செய்ய வேண்டும் என்று உண்மையில் கவலை உடையவர்கள், "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்." இது செயல் படும் கிறிஸ்துவம்.

ஒரு தருவாயில், யாரோ என்னிடம் சொன்னார்கள், நான் கிறிஸ்துவுக்குள் இருக்கும் மற்றொரு சகோதரனை ஆழமாக அவமதித்துவிட்டேன் என்று. அவருக்கு வணக்கம் தெரிவிக்காமல் வேண்டுமென்றே அவரைக் கடந்து சென்றேன் என்று நம்பினார். நான் அதிர்ச்சியடந்தேன். அப்படி வேண்டுமென்றே செய்யவில்லை என்பது எனக்கு நன்றாக தெரியும். என்னை அவர்களுக்கு பிடிக்காது என்று எனக்கு தெரிந்த மக்களை தவிர்ப்பது கூட எனக்கு கடினமான ஒன்றாயிருந்தது, நான் நேசித்து மதிக்கும் யாரையாவது தனியே விட்டு விடவும் நான் விரும்பவில்லை - இப்படித் தான் இந்த சகோதரனைப் பொறுத்தவரை நான் நினைத்தேன்.

ஆனாலும், இந்த நபர் நாட்டின் வேறு ஒரு பகுதிக்குச் சென்றிருந்த போதிலும், தொலைப்பேசி மூலமாக அவரை அழைத்து, அவரிடம் மன்னிப்புக் கேட்டேன். அவரைக் கடந்துபோகும் பொழுது அவரை அலட்சியப்படுத்தியதாக நினைத்துக் கொண்டிருப்பதாக, கிரேப்வைன் மூலமாக கேள்விப்பட்டேன் என்று அவரிடம் நான் சொன்னேன். நான் சில நேரங்களில் முன் யோசனையில் இருப்பேன் என்று கூறி அவரிடம் மன்னிப்பு கேட்டேன். இது மன்னிப்பு கேட்பதற்கு ஒரு காரணமில்லை, கூடவே கவனமில்லாமையால் மக்களிடம் பேசாமல் கடந்து சென்றுவிடுவேன் என்றும் கூறினேன். என்ன நடந்திருக்கும் என்பதில் நான் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறேன். அவா உடனே என்னை மன்னித்தார். கூடவே அவருடைய அதிக உணர்ச்சியை அவர் ஒப்புக்கொண்டார். இந்த உறவு உடைந்திருந்தது என்று எனக்கு தெரியாத போதிலும் நான் இந்த உறவை புதுப்பித்துக் கொள்ள முடிந்ததற்கு கர்த்தருக்கு நன்றி. யாரோ இந்த பிரச்சனையைக் குறித்து என் கவனத்திற்கு எடுத்துவர அக்கரை எடுத்துக்கொண்டதற்கு நன்றி தெரிவிக்கிறேன்.

கணவர்களும் மனைவிகளும்

திருமணமானவர்களாய் இருந்து நாம் சந்திக்கும் சிறப்பான சவால் என்னவென்றால் மற்றவரின் பலவீனங்களை ஒருவரையொருவர் சகித்துக்கொள்வதுதான். இந்த நிலையில் தான் மற்ற மக்கள் செய்ய முடியாத ஒருவருக்கொருவரை தெரிந்துக்கொள்ளும் வழிகளை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

எதிர்பாராத விதமாக சில தம்பதியினர் அவர்களை எரிச்சல் ஊட்டும் விஷயங்களைக்குறித்து ஒருவருக்கொருவர் உரையாட வேண்டும் என்பதை கற்றுக்கொள்வதில்லை. சில சமயங்களில் இது சின்ன விஷயமாக தொடங்கி மிகப்பெரும் எரிச்சலாக வளர்ந்துவிடும். அதன் பிறகு தான் வெடி சப்தம் வரும், இந்த பிரச்சனையை உருவாக்கிய வாழ்க்கைதுணை யாரோ அவருக்கு இது அதிசயமாக வரும். சில வேளைகளில், இது சும்மா நடப்பதற்கு காரணம், நம்மைக் கவலைப்படுத்திக் கொண்டிருக்கும் உணர்வை பகிர்ந்து

கொள்ளாமல் அவற்றை அடைத்து வைப்பதால் தான். மற்ற வேலைகளில், நம்முடைய பேச்சு எவ்வளவு குறைவாக இருக்கிறது என்றால் அதை மற்றவரால் கேட்கமுடிவதில்லை. உதாரணமாக, என்னுடைய திருமணத்தில் என் மனைவி என்னிடம் எதையோ சொல்ல முயற்சித்த சூழ்நிலைகளை நான் ஞாபகம் வைத்திருக்கிறேன். ஆனாலும் கூட அவளுடைய ஒலிபரப்பு அவ்வளவு பலமாக இல்லாத காரணத்தால் முழுமையாக அந்த தகவலை தொலைத்துவிட்டேன் என்பதை அவரே ஒப்புக்கொள்கிறார். என்னுடைய பக்கத்தில், என்னுடைய சப்தம் ஏற்கும் கருவியின் சப்தம் மிகவும் குறைத்து வைக்கப்பட்டிருந்த காரணத்தால் சத்தத்தின் அடையாளம் வந்துக் கொண்டிருந்தாலும் என்னால் அந்த சத்தத்தின் அடையாளத்தை கேட்டிருக்கமுடியாது. இந்தவகையான பிரச்சினை நமக்கு இருக்கும்போது குறிப்பாக உறவின் இரண்டு பக்கமும் இருக்கும் பொழுது பேச்சில் தடை உண்டாகிறது என்பதை பற்றி நாம் ஆச்சரியப்படக் கூடாது.

நம்மை ஒருவருக்கொருவர் அன்புடன் சகித்துக்கொள்ள வைப்பதற்கு திறந்த மற்றும் தெளிந்த பேச்சு மிகவும் முக்கியமானதாகும். மேலும் கூறினால், நம்முடைய துணையை எது எரிச்சலூட்டுக்கிறது என்பதை நாம் அறிந்துக்கொண்டப்பிறகு, இந்தவிஷயங்களை மாற்றுவதற்கான சாத்தியமான குறிக்கோள்களை நாம் அமைக்கவேண்டும். உதாரணமாக ஷவர் கதவை தண்ணீர் சூழ்ந்த பிறகு நான் அதை அப்படியே விட்டுவிட்டு வருவது என் மனைவியை எரிச்சலூட்டியது என்பதைக் கண்டுபிடித்தேன். கதவு காய்ந்த பின் அதனைத் துடைப்பதற்குள் அவள் மிகவும் சோர்வடைந்து விடுவதாகவும் கூடவே அதில் விடப்பட்ட கறைகளை எடுப்பதற்கு அதிக அளவில் வேலைசெய்யவேண்டியுள்ளதாகவும் அவர் என்னிடம் கூறினார். பிரச்சினையை புரிந்து கொண்ட பிறகு, நான் அதை தீர்த்துவைத்தேன். உண்மையில், அந்த பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள எனக்கு குறைந்த நேரமே தேவைப்பட்டது. ஆனால் இது இப்போது தானாகவே இயங்குகிறது. சில வினாடிகளில் என் மனைவியை சந்தோஷப்படுத்தும் அந்த விஷயத்திற்காக துணித் துண்டை உபயோகப்படுத்தலாம்.

துணி டிராயரின் கதவை பாதியாக அப்படியே திறந்து விட்டு போகும் ஒரு மிகவும் கெட்ட பழக்கம் தன்னிடம் இருப்பதாக ஒப்புக்கொண்ட நண்பர் ஒருவர் எனக்கு இருக்கிறார். அவருக்கு பின்னால் வந்து அந்த டிராயரின் கதவை சாத்துவது அவருடைய மனைவிக்கு எரிச்சலை உண்டாக்கியது. சிலகாலங்களுக்குபிறகு அவர் தகவலை பெற்றுக்கொண்டார். அந்த இடத்தில் கவனத்துடன் இருக்கவேண்டும் என்பதை கற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்தார். அந்த டிராயர்களை மூடுவதற்கு ஒரு சில வினாடிகளே எடுத்தது. பதட்டத்தை அகற்றுவதற்கு இந்த சிறிய அன்புள்ள செயல் என்ன செய்தது என்பதை நினைத்துப் பாருங்கள்.

சில மக்கள் சார்ந்திருக்கும் பண்பை அதிகமாக உடையவர்கள் என்பது உண்மை. அவர்களை எப்பொழுதுமே நாம் சந்தோஷப்படுத்த முடியாது என்று தெரிகிறது. இது திருமண வாழ்வில் நடக்கும்பொழுது, தம்பதிகள் ஆபத்தான தொந்தரவுக்கு அழைக்கப்படுவார்கள். ஆனாலும் கூட, கிறிஸ்தவர்களுக்குள் இப்படி நடப்பது தொடரக்கூடாது. நாம் அனைவரும் உறவினுள் நம்முடைய சொந்த சுமைகளை சுமக்க கூடியவர்களாய் இருக்க வேண்டும் (கலாத்தியர் 6:5). கிறிஸ்து நம்மை நேசித்ததைப் போல நாம் ஒவ்வொருவரும் மற்றவரை நேசிக்கும் பொழுது பிரச்சனை நிச்சயமாக தீர்க்கப்படும்.

பெற்றோர்களும் குழந்தைகளும்

பெற்றோர்கள் குழந்தைகளிடம் இந்த பிரச்சினையை அதிக அளவில் சந்திக்கிறார்கள். சிறு குழந்தைகள் பரஸ்பர உறவுகளைப் புரிந்து கொள்ளுவதில்லை. அவர்கள் குறிப்பிட்ட வளர்ச்சியை அடையும்வரை இயற்கையாகவே சுயநலவாதிகளாக இருக்கிறார்கள்.

பெற்றோர்களாயிருந்து, சிறு குழந்தைகளிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கக்கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்கவேண்டும். மீறினால் அவர்களுக்கு நாம் ஏமாற்றம் அளிப்போம். அவர்களுக்கு கோபத்தை உண்டாக்குவதுடன், மனக்கசப்பையும், அதிகமான பிரச்சினைகளையும் கூட உருவாக்குவோம். இதனால் தான் பவுல் எழுதினான். (கொலோசெயர் 3:21)

தங்களால் செய்யமுடியாததை தம்முடைய பிள்ளைகள் செய்யவேண்டும் என சில பெற்றோர்கள் எண்ணுவது என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்குகிறது. இது வெளிப்படையான கோபம், கசப்புத்தன்மை, தைரியமின்மை இவைகளுக்கு குழந்தைகளை எதுத்துச் செல்லும். குழந்தைகள் ஏமாற்றுத்தனத்தை தெளிவாக கற்றுக்கொள்கிறார்கள்.

குழந்தைகள் இந்த தத்துவத்தை பயிற்சி செய்ய கற்றுக்கொள்ளவேண்டும். ஆனால், அவர்களின் பெற்றோர், ஒருவருக்கொருவரின் உறவிலும், தங்களுடன் உள்ள உறவிலும் செயல்படுகிறதைப்பார்த்து இலகுவாக கற்றுக்கொள்கிறார்கள். அவர்களிடம் பொறுமையாய் இருங்கள், மன்னியுங்கள். அன்புடனே ஒருவரையொருவர் சகித்துக்கொள்ளுங்கள்" என்று கூறும்போது அதன் பொருள் என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கான அடித்தளம் கிடைப்பது இதற்கு பின்பு தான்.

போதகரும் மக்களும்

நான் முன்பு கூறியதைப் போல, மக்களை நான் நேசிக்கிறேன். மேலும் அவர்களிடம் தொடர்புகொள்வதில் சிறிது கடினமாயுள்ளது. ஆனால் ஒரு இடத்தில் மட்டும் நான் எனது பொறுமை போய் விடுகின்றது. மேலும் எனது மனநிலையையும் நான் பார்க்க வேண்டியுள்ளது. நற்செய்தியாகிய நீர் மற்றும் உதாரணத்தை உருவாக்க முயற்சிக்கிறேன். என் மனைவியும் நானும் தசமபாகத்தை (மொத்தவருமாணத்தில் 10 சதவிகிதம்) ஆலயத்திற்கு தொடர்ந்து கொடுத்துவருகிறோம். மேலும் சிறப்புத்திட்டத்தைதாங்குவதிலும் தசமபாகத்தை விட அதிகமாக கொடுப்பதிலும் நாங்கள் முன்னாலிருக்கவேண்டும் என முயற்சி செய்கிறோம். எங்கள் வாழ்க்கை முறையாக பலவருடங்கள் இதனைக் கட்டியுள்ளோம். மேலும் கர்த்தரின் பணிக்கு என்று முதலில் பணத்தை எடுத்து வைக்காமல், எங்கள் தேவைக்கென்று பணத்தை எடுத்து, செலவு செய்வதில்லை.

ஆனாலும் கூட, கலாச்சாரத்தின்படி நாம் வாழ்கிறோம் என்பதில் எந்த இரகசியமும் இல்லை. அது கிறிஸ்தவர்களை அசுத்தப்படுத்தியுள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் பணத்தைக் குறித்து சுயநலமிகளாக இருந்து, மற்ற கிறிஸ்தவர்களை ஆலயத்தினுடைய பணச்சுமையை சுமக்க வைப்பதைப் பார்க்கும்போது, கவலையாக இருக்கிறது. மேலும், இதே மக்கள் சுயநலத்துடன் ஆலயத்தினுடைய எல்லா சலுகைகளையும் அனுபவிக்கிறார்கள், இந்த சலுகைகள் எல்லாம் மற்ற மக்களால் கொடுக்கப் பட்டவை.

தயவுசெய்து தவறாக புரிந்துகொள்ளவேண்டாம். பணக்கஷ்டத்தின் காரணமாக கொடுக்க முடியாதவர்களைப் பற்றி நான் கூறவில்லை.

கர்த்தருடைய பணிக்கு உதவாமல், தொலைகாட்சி கட்டனத்தை தொடர்ந்து கட்டும் கிறிஸ்தவர்களையும், தொடர்ந்து வெளியில் சாப்பிட போகிறவர்களையும், வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டுமுறை திரையரங்குகளுக்குச் செல்லும் கிறிஸ்தவர்களையும் பற்றி நான் பேசுகிறேன். தங்கள் வருமாணத்தைக் கர்த்தருடன் பகிர்ந்துகொள்ளாமல் மாதாமாதம் சேமிப்பில் வைக்கும் கிறிஸ்தவர்களையும், இரண்டு அல்லது மூன்று விலை உயர்ந்த கார்களை ஓட்டிச் செல்லுபவர்களையும், அதிக செலவு உள்ள விடுமுறைப் பயணங்களை மேற்கொள்ளும் கிறிஸ்தவர்களைப் பற்றி நான் பேசுகிறேன்.

வேதாகமம் தாராளமாக இருப்பதைக் குறித்து போதித்துள்ளதை இவர்கள் அறிந்திருந்தும், என்னைக் கவலைப்படுத்துகிறார்கள். ஆனாலும் கூட இந்த மக்களை அன்புடன் சகித்துக்கொள்ளுங்கள் கொள்ளுங்கள் என்றுஎன வேதாகமம் எனக்குப் போதிக்கிறது. அவர்களின் வாழ்க்கையை பரிசுத்த ஆவியானவர் தான் மாற்ற வேண்டுமென்பதை உணர்ந்து, அவர்களுக்கு தொடர்ந்து எடுத்துக்காட்டாக இருந்து, அவர்களுக்கு கற்பிக்கவேண்டும். அன்புடைய கிறிஸ்தவனாக நான் இருப்பதை அவர்களின் பலவீனங்கள் தடுப்பதை அனுமதிக்காமல், இந்த இடத்தில் தான் நான் பொறுமையுடனும் மன்னிக்கும் தன்மையுடனும் இருக்க வேண்டும்.

அன்புடன் ஒருவரையொருவர் சகித்துக் கொள்ளுவதற்கான நடைமுறை முயற்சிகள்

முயற்சி 1

உங்களை நீங்கள் நன்றாய் பார்த்துக் கொள்ளுங்கள்.

நேர்மையுடன் உங்களுடைய பலவீனங்கள் மற்றும் சுபாவங்களைப் பற்றி பட்டியலிடுங்கள். இந்த கேள்விகள் உங்களுக்கு உதவும்.

1. வீட்டில் என் மனைவி மற்றும் குழந்தைகளை (அல்லது என் பெற்றோர்களை, என் சகோதரர்களை, என் சகோதரிகளை அல்லது என் குடியிருப்பு நண்பனை) எரிச்சலடையச் செய்யும் எந்த செயல்களை நான் செய்கிறேன் (அல்லது செய்வதில்லை)?
2. ஆலயத்தில் கிறிஸ்துவுக்குள் இருக்கும் என் சக சகோதர சகோதரிகளை எரிச்சலடைய செய்யும் எந்த செயல்களை நான் செய்கிறேன் (அல்லது செய்வதில்லை)?
3. அலுவலகத்திலோ பள்ளிக்கூடத்திலோ என் சக ஊழியர்களை அல்லது ஆசிரியர்களை கூடவே என் சக மாணவர்களை எரிச்சலடையச் செய்யும் எந்த செயல்களை நான் செய்கிறேன் (அல்லது செய்வதில்லை)?
4. என் நண்பர்களை எரிச்சலடைய செய்யும் எந்த செயல்களை நான் செய்கிறேன் (அல்லது செய்வதில்லை)?

முயற்சி 2

மற்ற கிறிஸ்தவர்கள் மீது உள்ள உங்கள் மனநிலை மற்றும் செயல்களின் வெளிச்சத்தில் உங்கள் பலவீனங்களை மதிப்பிடுங்கள்.

தொடரும் கேள்விகள் உங்களுக்கு உதவும்.

உங்களுக்கு நீங்களே செய்துகொள்வதை விட மற்றவர்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கிறீர்களா?

உங்களிடமிருக்கும் அதே பலவீனங்கள் மற்றவர்களிடம் இருந்தால் அவர்களை நீங்கள் விமர்ச்சிப்பீர்களா?

முயற்சி 3

நீங்கள்தொடர்புகொள்வதில்கஷ்டமாகஉள்ளகிறிஸ்தவர்களின்பட்டியலைத் தயாரியுங்கள்.

நீங்கள்யாரைப்பற்றியும்நினைக்கமுடியவில்லைஎன்றால்,கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்.எதையாவதுஎழுதவேண்டும்என்பதற்காகபெயர்களை வேண்டா வெறுப்பாக தேர்ந்தெடுக்காதீர்கள். நீங்கள் நேர்மையாக இருக்கிறீர்கள் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பட்டியலைத்தயாரித்தபிறகு,இந்தகிறிஸ்தவர்களிடம்ஏன்தொடர்பு கொள்ள முடியவில்லை என்று உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள். அவர்கள் மீது நீங்கள் ஏன் கோபமாயிருக்கிறீர்கள்? உங்களைக் காயப்படுத்துவதற்குஅவர்கள்ஏதாவதுசெய்துவிட்டார்கள்என்பதற்காகவா? இப்படி நினைக்கிறீர்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்களா? உங்களுடையநினைவுகள்நியாயப்படுத்தப்பட்டுள்ளனவா? அல்லது அதிக உணர்ச்சிவசப்பட்டு பேதலிப்பதன் காரணமாக, நீங்கள் செய்வது சரி என்று நினைக்கிறீர்களா? அல்லது உங்களைப் பற்றி அவர்கள் அதிகமாக நினைவூட்டுவதால்நீங்கள்அவர்கள்மீதுமனஸ்தாபப்பட்டுஇருக்கிறீர்களா?

முயற்சி 4

உங்களைக்காயப்படுத்துவதற்குஎப்போதாவதுஎதையாவதுசெய்தஎல்லா நபர்களையும்,மனமறிந்துநிதானத்துடன்யோசனைசெய்துமன்னியுங்கள்.

இந்த முயற்சி எடுப்பது மிகவும் கடினமானது, ஆனால் நீங்கள் இதைச்செய்யவேண்டும்.அதன்பிறகுஒருவருக்குஇந்தகிறிஸ்தவர்களிடம் பேசுங்கள். பேசும்போது என்ன நினைக்கிறீர்கள் என்பதை அவர்களிடம் சொல்லுங்கள். அவர்கள் தான் முதலில் தவறு செய்திருந்தாலும் நீங்கள் உங்களுடைய மனநிலைக்காக அவர்களிடம் உங்களை மன்னிக்கும்படி கேளுங்கள்.

இந்த எச்சரிக்கையின் வார்த்தையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! உங்கள் "மன்னிக்கும்தன்மையை" அவர்கள் மன்னிப்பு கேட்கிறார்கள்என்றநிபந்தனையின்அடிப்படையில்வைக்காதீர்கள்.நீங்கள் உங்கள் சொந்த மன நிலையை கவனித்துக்கொள்ளுங்கள். மேலும் கர்த்தர் தாமே அவர்களின் மனநிலையை கவனித்துக்கொள்ளுவார்.

ஒரு கிறிஸ்தவன் உங்களுக்கு எதிராகவும் (மற்றவர்களுக்கு எதிராகவும்)பாவம்செய்திருப்பதாகவைத்துக்கொள்வோம்.அதற்குமனம் வருந்திய பதில் தேவைப்படும். மேலும் பதில் ஏதும் அந்த நபரிடம் பெற்றுக்கொள்ளமால்அவரிடம்அன்புடன்அணுகியிருந்தால்,பிறகுநீங்கள் இயேசு மத்தேயு 18:15-17 சொல்லியிருக்கும் படிச்செய்யலாம். ஆனாலும் உங்களுடைய அணுகுமுறை இரக்கம், தயவு, அமைதி, நேர்மை மற்றும் பொறுமை இவை எல்லாம் கொண்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்(கொலோசெயர்3:12). அது அப்படி இருந்தால், உங்களுக்கு நன்மையான பதில் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

சட்டத்தை நம்முடைய சொந்த கைகளில் எடுக்க நாம் முடிவு செய்யக்கூடாது என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். பவுல் கூறுவதைக் கேளுங்கள்:

> ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்குமுன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய

நாடுங்கள். கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு (ரோமர் 12:17-21).

ஒரு முறை ஒரு கெட்ட மனிதன் வேண்டுமென்றே நம்முடைய ஆலயத்தின் அலுவலகத்துக்கு தீ வைத்தபொழுது, நான் ஒரு போதகராக இருந்து, இந்த வகையான மன்னிக்கும் தன்மையுடன் அவனை பிடித்துக் கொடுக்க முன் வரவேண்டியிருந்தது. ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பாதிக்கப்பட்டனர். உண்மையில் எங்களுடைய நூலகம் உட்பட, பதினைந்து முழு நேர போதகர்களும் அவர்களின் முழுமையான நூலகத்தை இழந்தார்கள். இது ஆலயத்தின் மீது மட்டும் நடத்தப்பட்ட ஒரு தாக்குதல் அல்ல. ஆனால் இயேசு கிறிஸ்துவின் மீதும் சுவிசேஷத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல். ஆலயத்தின் மூத்த தலைவராக இருந்து, மன்னிக்கும் தன்மையில் பிரச்சினையை உடனே சந்திக்க வேண்டியிருந்தது. கூடவே இந்த கொடூரமான செயலை செய்த அந்த மனிதனை மன்னிப்பதற்காக பிரார்த்தனை கூட்டத்தையும் நடத்தவேண்டியிருந்தது.

இன்னும் கூட இந்த தீயிட்ட மனிதன் சுதந்திரமாக உள்ளான். நான் அவனை மன்னித்துவிட்டேனா? ஆம்! எனக்கு இன்னமும் நீதி வேண்டுமா? ஆம்! ஆனால் சட்டத்தை சொந்த கைகளில் எடுத்துக்கொள்வது என்னுடைய பொறுப்பல்ல. அவன் தன் பாவத்தை அறிக்கையிடுவானென்றும், மன்னிப்பை அனுபவிப்பதற்கும், பின்பு அவனையே மாற்றிக்கொண்டு கூடவே இந்த நீதிக்கு அவன் அபராதம் தருவதற்காகவும் நான் இன்னமும் ஜெபித்துக் கொண்டிருக்கிறேன் இதற்கு இடையில் நான் "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்குமுன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்" (ரோமர் 12:17) என்பதை கடைபிடிக்கிறேன்.

கோரியின் கதை

நாசி கைதிகள் முகாமில் நம்பமுடியாத துன்புறுத்தல்களை அனுபவித்த கோரி டென் பூம் தான் 'மன்னிக்க முடியும்' என்பதற்கான மிகவும் குறிப்பிடத்தக்க இன்றைய நாளின் உதாரணமாக உள்ளார். ஆனாலும் வாழ்க்கையின் கடைசி காலத்திற்கு செல்லும் பொழுது, சில கிறிஸ்தவ நண்பர்களை மன்னிப்பதுதான் அவருக்கு மிகவும் கடினமான சவாலாக இருந்தது என்று அவர் பகிர்ந்துக் கொண்டார். இந்த விஷயத்தைப் பற்றி பேசும் பொழுது அவர் எழுதினார்.

உலகத்தைச் சுற்றிய ஒரு நீண்ட பலனளிக்கும் வாழ்க்கைக்கு பிறகு என்னுடைய எல்லா எதிரிகளையும் மன்னிக்க கற்றுக்கொண்டேன் என்று சொல்வதில் நான் விருப்பப்படுகிறேன். இரக்கமுள்ள மற்றும் தருமசிந்தையுள்ள நினைவுகள் என்னிடமிருந்து இயற்கையாக பொழிந்தன. மேலும் அது மற்றவர்கள் மீதும் பொழிந்தது என்று சொல்வதில் நான் விருப்பப்படுகிறேன். ஆனால் அவர்கள் அப்படிச் செய்வதில்லை. நான் பதினெட்டாவது பிறந்த

நாளைக் கடந்த பொழுதிலிருந்தே ஒரு விஷயத்தைக் கற்றுக்கொண்டேன். நான் நல்ல நினைவுகளையும் நடத்தையையும் சேகரித்து வைக்க முடியாது, ஆனால் கர்த்தரிடமிருந்து ஒவ்வொரு நாளும் புதிதாக அவற்றை எடுத்துக்கொள்ளலாம் என்பது தான் அது.

ஒவ்வொரு முறை நான் கடவுளிடம் போகும் பொழுதும் அவர் எனக்கு வேறு எதையாவது கற்று தருகிறார் என்பதற்காக நான் சந்தோஷமாக இருக்கலாம். நான் நேரத்தை நினைவுக்கு கொண்டு வருகிறேன். நான் நேசித்து நம்பின கிறிஸ்துவ நண்பர்கள் என்னைக் காயப்படுத்தி சில விஷயங்களைச் செய்தபொழுது நான் கிட்டதட்ட எழுபது வயதுடையவளாக இருந்தேன். ரவேன்ஸ் பார்க்கில் இருந்த காவலர்களை மன்னிக்க முடிந்த இவருக்கு, கிறிஸ்தவ நண்பர்களை மன்னிப்பது என்பது குழந்தை விளையாட்டாக இருக்கும் என்று நீங்கள் நினைத்திருக்கலாம். அது அப்படி இல்லை. நான்கு வாரங்களுக்கு நான் உள்ளே குமுறிக் கொண்டிருந்தேன். இறுதியாக என்னுள் தன் அற்புதத்தை நடத்துமாறு கர்த்தரிடம் கேட்டேன். மறுபடியும் அது நடந்தது. முதலில் உறைந்த இரத்தமான முடிவு, பின்பு சந்தோஷத்தின் பெரு வெள்ளமும் அமைதியும் ஆயிற்று. நான் என் நண்பர்களை மன்னித்திருந்தேன். என் பிதாவிடம் நான் ஒப்படைக்கப்பட்டிருந்தேன்.

அப்படியானால், முழுமையான காரியத்தையும் மாற்றிக்கொண்டு திடீரென ஏன் பாதி இரவில் விழித்துக்கொண்டேன்? என் நண்பர்களை நான் நினைத்தேன். ஒரு வேளை நான் நேசித்த மக்கள் வழிப் போக்கராக இருந்திருந்தால் நான் இந்த அளவிற்கு வருத்தப்பட்டிருக்க மாட்டேன்.

நான் உட்கார்ந்து மின் விளக்கைப் போட்டேன் "பிதாவே எல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டது என்று நினைத்தேன்".

ஆனால் மறுநாள் இரவு நான் மீண்டும் எழுந்தேன். அவர்கள் மிகவும் இனிக்கும்படி பேசினார்கள். அவர்கள் என்ன திட்டம் தீட்டுகிறார்கள் என்பதைப் பற்றி எந்த அறிகுறியும் இல்லை. "பிதாவே" நான் சத்தம் போட்டு அழுதேன். "எனக்கு உதவி செய்யும்!"

பின்பு மன்னிக்கும் தன்மையின் இன்னொரு இரகசியமானது தெளிவானது. "நான் உன்னை மன்னிக்கிறேன்" என்று வெறுமனே சொல்வது போதாது. அதை வெளியே விட்டுவிடுவதைத் தொடங்க வேண்டும். கூடவே என்னுடைய விஷயத்தில், அவர்களின் பாவம் என்னுடையதைப் போல் ஆழ்க்கடலின் அடியில் புதைக்கப் பட்டிருப்பது போல நடக்கிறார்கள் என்று அர்த்தம் கொள்ளும். கர்த்தர் அவைகளை இதற்கு பிறகு ஞாபகம் வைக்காமல் இருந்தார். மேலும் அவர் கூறினார் "அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை" (எபிரேயர் 10:17). பின்பு நானும் ஞாபகம் வைப்பதில்லை. மேலும் நினைவுகள் எனக்கு திரும்ப வந்து கொண்டிருந்ததற்கு காரணம் என்னவென்றால் என் மனதில் அவர்களின் பாவங்களை வைத்திருந்தது தான்.

இதனால் கர்த்தருடைய மற்றுமொரு தத்துவத்தை கண்டு பிடித்தேன். நாம் கர்த்தரை நம்முடைய உணர்ச்சிகளுக்காக மட்டும் அல்ல ஆனால் நம்முடைய எண்ணங்களுக்காகவும் நம்பவேண்டும். அவரிடம் என் மனதை புதுப்பிக்கவேண்டும் என்று கேட்ட பொழுதே

அவர் என்னுடைய எண்ணங்களையும் கூட எடுத்துவிட்டார். இந்த சின்ன பகுதியிலிருந்தும் கூட இன்னமும் அதிகமாக அவர் எனக்கு போதிக்க வேண்டியிருந்தது. என்னுடையபதினெட்டாம் பிறந்த நாளைக் கடந்து பல வருடங்களுக்கு பிறகு அமெரிக்க நண்பர் ஒருவர் என்னைச் சந்திக்க ஹாலந்திற்கு வந்தார். பார்னில் உள்ள என் சிறு வீட்டில் நாங்கள் உட்கார்ந்திருந்தோம். பல காலங்களுக்கு என்னை நன்றாக பயன்படுத்திக் கொன்ற அந்த மக்களைப் பற்றி என்னிடம் அவர் என்னிடம் கேட்டார்.

"அது ஒன்றுமில்லை," சற்று கம்பீரமான தோற்றத்துடன் நான் சொன்னேன். "அவை எல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டன"

"ஆமாம், உங்களால் தானா" அவர் கேட்டார். ஆனால் அவர்களைக் குறித்து என்ன? உங்களுடைய மன்னிக்கும் தன்மையை அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா?"

"மன்னிப்பதற்கு ஒன்றுமில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள்! அப்படிநடந்தது என்று அவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள் என்ன சொன்னாலும் பரவாயில்லை, என்னால் அவர்கள் குற்றவாளிகள் என்று நிருபிக்க முடியும்." என்னுடைய மேஜைக்கு நான் ஆவலாக போனேன். "பாருங்கள், அது என்னிடம் கறுப்பு வெள்ளையில் உள்ளது! அவர்களுடைய எல்லா கடிதங்களையும் பத்திரமாக வைத்திருக்கிறேன். மேலும் எங்கே என்றும் என்னால் காண்பிக்க முடியும்...

"கோரி!" என்னுடைய நண்பர் தன் கையை என் முதுகில் போட்டு டிராயரை மெதுவாக மூடினார். "உங்களுடைய பாவம் மட்டும் தானா கடலுக்கு அடியில் உள்ளது? இன்னமும் உங்களுடைய நண்பர்களின் பாவங்கள் கருப்பு வெள்ளையில் அப்படியே இருக்கின்றனவே?"

ஒரு ஆச்சரியமான நிலையில் என்னால் எதையும் பேச முடியவில்லை. "தேவனாகிய இயேசுவே," இறுதியாக முணுமுணுத்தேன் "என்பாவங்களை எடுத்துப்போடக்கூடியவரே, மற்றவர்களுக்கு எதிரான ஆதாரங்களை இத்தனை வருடங்கள் சேகரிப்படுத்தி வைத்திருந்த என்னை மன்னியும்! உம்முடைய மகிமைக்கு இனித்து மணக்கும் தியாகமாக எல்லா கருப்புகளையும் வெள்ளைகளையும் எரிப்பதற்கான கிருபையை எனக்குத் தாரும்."

என்னுடைய மேஜை முழுவதும் தேடி, எல்லா கடிதங்களையும் எடுத்து, அவைகளை சுருட்டி, எரியும் நிலக்கரி தீச்சட்டியில் போட்டு எரித்த பிறகு தான் அந்த இரவு நான் தூங்கப் போனேன். எரித்து முழுங்கியது போல என் இருதயமும் முழுங்கியது. "எங்களுடைய பாவச்செயல்களை மன்னியும்," என இயேசு எங்களுக்கு ஜெபிக்க கற்றுக் கொடுத்தார். "எங்களுக்கு எதிராக குற்றஞ் செய்பவர்களை நாங்கள் மன்னிப்பதுப் போல." அந்த கடிதங்களின் சாம்பலில், இன்னமும் அவருடைய கிருபையின் இன்னொரு முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வரும் காலங்களில் மன்னிக்கும் தன்மைப் பற்றி இன்னும் அதிகமாக அவர் என்ன போதிக்க போகிறாரோ! ஆனால் இன்றைய இரவின் செய்தி நன்றாக இருந்தது.

மனக்கசப்பின் கதவையும் வெறுப்பின் விலங்கையும் திறக்கும் சாவியாக உள்ளது மன்னிக்கும் தன்மையே. கசப்புத்தன்மையின் சங்கிலியையும் சுயநலத்தின் விலங்கையும் மன்னிக்கும் தன்மை உடைத்துப்போடுகிறது. நம்முடைய பாவங்களை மட்டும் எடுத்துப் போடாமல், அவர்கள் எப்பொழுதுமே பாவம் செய்யவில்லை

என்ற உணர்வுக்கு அவர்களைக் கொண்டுச் செல்கிறது.[1]

சிறு குழுக்கள் விவாதிப்பதற்கான வழிக்காட்டி

தொடக்கம்

இந்த கேள்விகளுக்கு ஒவ்வொருவரும் அவளுடைய அல்லது அவருடைய பதிலை பகிர்ந்துக் கொள்ளுங்கள். உங்கள் குடும்பத்தில் உள்ள செல்ல பிராணி வளர்க்கும், உங்களுக்கு கோபம் உண்டாக்கும், யாரோ ஒருவர் யார்?

மற்றவர்களை கோபப்படுத்தும் எந்த பழக்கம் உங்களுக்கு உள்ளது என்று உங்களுக்கு தெரியுமா?

விவாதத்திற்காக

1. நீங்கள் புதிதாக ஏதாவது ஒரு செயலை கற்றுக்கொண்டிருக்கும் பொழுதோ அல்லது உங்கள் வாழ்க்கையில் ஒரு கடினமான பகுதியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் வேலையிலோ, உங்களிடம் தொடர்ந்து பொறுமையாக இருந்த யாரையாவது உங்களால் நினைக்க முடிகிறதா? உங்கள் குழுவிடம் அதனைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அந்த நபரின் பொறுமை, எப்படி உங்களைப் பற்றி உங்களுக்கு இருந்த நோக்கத்தைப் பாதித்தது? அந்த வகையான பொறுமையை நீங்கள் உங்களை சுற்றி உள்ளவர்களிடம் காட்டினால் அந்த உறவு எப்படி வித்தியாசமாக இருக்கக் கூடும்?

2. நீங்கள் விரும்பும் ஒருவரையோ அல்லது உங்களையோ காயப்படுத்திய யாரையாவது மன்னிப்பதில் நீங்கள் எந்த அளவிற்கு சுலபமாயிருக்கிறீர்கள்? தீங்கை அனுபவித்த யாரோ ஒருவருக்கு நீங்கள் எப்படி மன்னிக்கும் தன்மையைப் பற்றி சொல்வீர்கள்?

3. ஒருவரையொருவர் சகித்துக்கொள்ளுதல், ஒருவரையொருவர் கடிந்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் இடையேயும், மற்றவர்களின் பாவத்தை குறித்த அவர்களை எதிர்ப்பதற்கும் இடையில் என்ன உறவு இருக்கிறது? மற்ற நபர்களின் பதிலினால் நம்முடைய பொறுமையும் மன்னிக்கும் தன்மையும் பாதிக்கப்படுமா? அப்படி இருக்கக் கூடுமா?

4. ஒருவரையொருவர் சகித்துக் கொள்ளுவதற்கு கடினமாயிருக்கும் போது நீங்கள் என்ன செய்வீர்கள். மற்றவர்களினால் எரிச்சல்படாமல் இருப்பதற்கு எத்தகைய முயற்சிகளை எச்சரிக்கையாகவும், அப்படி நடைபெறா வணணமும் செய்வீர்கள்? மற்ற நபர்களின் பதிலினால் நம்முடைய பொறுமையும் மன்னிக்கும் தன்மையும் பாதிக்கப்படுமா?

---

[1] கோரி டென்பூம், தேவனுக்கான நடை, 181-183, அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது

முடிவு

மத்தேயு 18:21-22 மற்றும் கொலோசெயர் 3:13 ஐ வாசியுங்கள். ஒவ்வொரு நபருக்கும் நேரம் ஒதுக்குங்கள். தனியாகவும் கூடவே அமைதியிலும் இருக்கச்செய்து, அவனுக்கு அல்லது அவளுக்கு எதிரான, மன்னிப்பதற்கு கடினமான மற்றவர்களின் எல்லா குற்றங்களையும் ஒரு காகிதத்தில் எழுதும் படிக்கூறுங்கள். அதன் பின்பு, அவனோ அல்லது அவளோ கிறிஸ்துவுக்கு எதிராக செய்த குற்றங்களை எல்லாம் ஒரு காகிதத்தில் எழுத வேண்டும்.

எல்லோரும் முடித்த பிறகு குழுவின் நடுவில் ஒரு குப்பைக்கூடையை வையுங்கள். பாவ அறிக்கையின் ஜெபத்திற்காகவும் (நேரிடையானவை தேவை இல்லை) மற்றும் கர்த்தரின் மன்னிப்புக்கு நன்றி கூறுவதற்காகவும் குழு உறுப்பினர்களுக்கு அழைப்புக் கொடுங்கள். பின்பு பாவப்பட்டியலை கசக்கி தூக்கி எறிந்து விடுங்கள். அவர்கள் மன்னிக்கப்பட்டதைப் போல, மற்றவர்களை அவர்கள் மன்னிப்பதற்கான வல்லமையை வேண்டுவதற்காக ஒவ்வொருவரையும் ஜெபம் பண்ணுவதற்கு அனுமதியுங்கள். கூடவே அவர்களுக்கு எதிராக பண்ணப்பட்ட குற்றங்களின் பட்டியலை அழித்து விடுங்கள்.

அடுத்தமுறைக்காக

1. பதினோறாம் அத்தியாயத்தைப் படியுங்கள்
2. உறவை சரி செய்யத் தேவைப்படும் மன்னிக்கும் தன்மைக்காக தேவையான முயற்சிகளை இந்த வாரத்தில் மேற்கொள்ளுங்கள்.



அத்தியாயம் பதினொன்று

ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்

தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.
(எபேசியர் 5:21)

ஒரு நாள் நானும் என் மனைவியும் ஆலயத்திற்கு போய் கொண்டிருந்தோம். எங்களுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டிருந்த எட்டு வயதானஎங்கள்இளையமகன் 'கெண்டன்' ஒருகுறிப்பிட்டஉணவகத்தைக் குறிப்பிட்டு "ஆலயம் முடிந்த பிறகு நாம் யாரையாவது இரவு உணவிற்காக உணவகத்திற்கு அழைப்போமா" என்று கேட்டான்.

"ஆம்," என்று நான் பதிலளித்தேன். ஆலயத்திற்காக அவர்கள் செய்யும்சேவையைபாராட்டுவதைப்பகிர்ந்துகொள்ளுவதற்காக,தலைமைப் பண்புக் கொண்ட குடும்பத்தை, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இரவு உணவிற்காக நானும் என் மனைவியும் அழைத்துப் போய் கொண்டிருக்கிறோம். நாங்கள் ஒரு, அசைவ உணவகத்தை தேர்ந்தெடுத்துள்ளோம். 'கெண்டன்' அவர்களுடன் பல ஞாயிற்றுக்கிழமைகள் போயிருந்தான். ஒரு குறிப்பிட்ட நாள், அவன் எதிர்மறையாக பதிலளித்தான் "நான் போக விரும்பவில்லை," அவன் சொன்னான் "எனக்கு இந்த உணவு பிடிக்கவில்லை."

என் தொடக்க பதிலும் கூட எதிர்மறையாக தான் இருந்தது. அவன் வெளியில் போய் சாப்பிட முடிந்ததற்காக எந்த அளவு நன்றியுடன் இருக்க வேண்டும் என்று சொல்ல நினைத்தேன். நான் அவனுடைய வயதில் இருக்கும்பொழுது, நாங்கள் எப்பொழுதுமே வெளியில் போய் சாப்பிடமுடியாது. நான் என் மனைவியைப் பார்த்தேன். அவள் நான் நினைத்ததைத் தான் நினைத்து கொண்டிருந்தாள் என்பதை என்னால் சொல்லமுடியும். இருப்பினும்நாங்கள் இருவரும்எங்கள் நாக்கைக்கடித்துக் கொண்டோம். கூடவே நாங்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்று சொல்வதைத் தவிர்த்தோம். வெளியே சாப்பிட முடிந்ததற்கான ஆசீர்வாதங்களை பற்றி அவனிடம் விளக்குவதை விட அவன் எங்கே போக ஆசைப்படுகிறான் என்று நான் அவனிடம் கேட்டேன்.

அவன் உடனே பதிலளித்தான். ஹாம் பர்கரையும் வருவலையும் நாங்கள்பெற்றுக்கொள்ளக்கூடியஒருஇடத்தைகுறிப்பிட்டான்.உணவுக்காக அழைத்து போகும் இடமாக அந்த இடம் எங்கள் மனதில் இருக்கவில்லை. ஆனாலும்கூட, மீண்டும்ஒருமுறைஎன்வாயைமூடிக்கொண்டு, கென்டன் ஏன்இப்படிபதிலளிக்கிறான்என்றுஎனக்குநானேகேட்கத்தொடங்கினேன்.

ஆலயத்தின் பிரசங்கம் முடியும் தருவாயில், என்னிடம் அதற்கான பதில் இருப்பதாக நான் உணர்ந்தேன். நான் மேடையில் இருந்து கீழே வந்த பிறகு, முன் வரிசையில் உட்கார்ந்திருந்த என் மனைவியிடம் அதை நான் பகிர்ந்து கொண்டேன். "கென்டன்" ஏன் இப்படி பதிலளிக்கிறான் என்பது எனக்கு தெரியும் என்று நான் நினைக்கிறேன்," நான் சொன்னேன் "அவன் சும்மா உட்கார்ந்து சலிப்படைந்துள்ளான். ஒன்றாக ஐக்கியப்படுவதற்காக நேரம் எடுத்துக்கொண்டு, நாம் மெதுவாக, பாதி உணவைஅருந்திக்கொண்டிருக்கும்நேரத்தில்அவன்முடித்துவிட்டுஒன்றும் செய்ய முடியாமல் உட்கார்ந்து காத்துக்கொண்டிருப்பான்.

"நானும் அதையே தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்," என்று அவள் சொன்னாள்.

"அவன் எங்கே போக வேண்டும் என்கிறானோ, நாமும் அங்கே போக வேண்டும் என்று நம்புகிறேன்," என நான் பதிலளித்தேன். மீண்டும் எலைன் ஒப்புக்கொண்டாள். அசைவ உணவை விட பர்கரையும் வருவலையும்ஒருஎட்டுவயதுபையனுக்குஅதிகமாகபிடிக்கிறதுஎன்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம்.

சில நிமிடங்கள் கழித்து, கென்டன் ஆலயத்தின் முன்புறம் நோக்கி ஆலயத்தின் உட்பாதை வழியாக போய் கொண்டிருப்பதை பார்த்தேன். அந்த காட்சியை நான் எப்பொழுதுமே மறக்கமாட்டேன். அவன் தன் கைகளைசட்டைப்பையுக்குள்வைத்திருந்தான்.அப்போதுஅவன்முகத்தில் சோகமான வெளிப்படுத்தல் இருந்தது. இருப்பினும், வெளியிலாவது தன் "தந்தையின் விருப்பத்திற்கு" அவன் மாற்றிக்கொண்டான் என்பதைக் காட்ட விரும்பினான். அது என்னவாக இருக்குமோ!

"கென்டன்," என நான் கூப்பிட்டேன். "இங்கு ஒரு நிமிடம் வா"

என் மகன் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தான்!

"உங்களுக்கு என்ன வேண்டும் தந்தையே?" என்னை அணுகும் பொழுது அவன் கூறினான். "அந்த ஹாம்பர்கர் கடைக்கு இன்னமும் போகவேண்டுமா?" என்று நான் கேட்டேன்.

இன்னமும் அதிக ஆச்சரியமாக அவனுடைய ஆரம்ப வேண்டுகோளை அப்படியே கூறினான். "சரி மகனே அங்கு தான் நாம் போகிறோம்," என்று நான் கூறினேன்.

அடுத்து நடந்தது என்னை ஆச்சரியப்படுத்தியது! அவன் அவனுடைய கைகளை என்னை சுற்றிப் போட்டு கூடவே ஆழ்ந்த உணர்ச்சியுடன் சொன்னான் 'அப்பா நான் உங்களை நேசிக்கிறேன்'

அன்று நாம் விரைவு உணவுவிடுதிக்குச் சென்றோம். எங்களுடன் வந்த குடும்பத்தினருக்கு இரண்டு குழந்தைகள் இருந்த காரணத்தால் அது மிகவும் சிறப்பான இடமாக அமைந்தது. அது மிகவும் குறைவான விலை உள்ளதாகவும் இருந்தது.

ஆனால், அந்தநாளின்உணவுவேளைஎனக்கும்என்மனைவிக்கும் ஒரு சிறப்பான பாடத்தைக் கற்றுக்கொடுத்தது. 'கென்டன்' அந்த இரண்டு குழந்தைகளுக்கு இடையில் அமர்ந்து, ஒரு கையை ஒரு மேல் போட்டு, மற்ற கையை மற்ற குழந்தையின் மேல் போட்டு, கூடவே முழு உணவின் பொழுதும் கவனித்துக்கொண்டான். என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப்பார்க்கஎனக்கும்என்மனைவிக்கும்அதிகநேரம்ஆகவில்லை. எங்கே போக வேண்டும் என்று நினைத்தானோ, அங்கே போனதற்காக எங்கள் எட்டு வயது மகன் அவனுடைய உற்சாகத்தைத் தெரிவித்து

கொண்டிருந்தான். உண்மையில், அவன் அந்த இரண்டு குழந்தைகளிடம் பேசிக்கொண்டு இருப்பதன் மூலம் அவன் உண்மையில் அவர்களை கவனித்துக்கொண்டிருந்தான். அதனால் அவர்களின் பெற்றோர்களை நாங்கள் சந்திக்க முடிந்தது. நான் மிகவும் ஆழமாக தொடப்பட்டேன் என்பதை சொல்வதற்கு அவசியமில்லை. பெற்றோர்களாக இருந்து எங்கள் இளைய மகனுக்கு நாங்கள் ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது. கூடவே அவன் அன்புடனும் உற்சாகத்துடனும் பதிலளித்துக் கொண்டிருந்தான்.

கென்டனுடைய மரியாதையை அன்று நாங்கள் இழந்தோமா? இல்லை, நாங்கள் அவன் மரியாதையை வென்றோம். அடுத்த முறை அவன் எங்களின் வெகுளித்தனத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தானா? இல்லை, அவன் இன்னமும் அதிகமாக ஒத்துழைத்தான். ஒரு வாரமோ அதற்கு பின்போ, நாங்கள் ஒன்றாக காரில் போய்கொண்டிருந்தோம். அவன் திடீரென சொன்னான் "அப்பா, சில நேரங்களில் நான் செய்ய நினைக்கும் எல்லாவற்றையும் செய்ய என்னை அனுமதிக்கிறீர்கள் என்று நினைக்கின்றேன்."

ஆச்சரியம், என்ன நடந்தது என்பதை என்னால் பார்க்க முடிந்தது. நாங்கள் அவனுடைய விருப்பத்திற்கு ஒப்புகொடுத்து விட்டோம் என்பதை குறித்து அவன் இன்னமும் குற்றவுணர்வோடு இருந்தான். "இல்லை மகனே," என்று நான் சொன்னேன், "நீ எங்களைப் பயன்படுத்திக் கொள்வதில்லை, எங்களுடைய முதலாவது தேர்வாக இது இருக்காத போதிலும் சில வேலைகளில் நீ என்ன செய்யவேண்டும் என்று நினைக்கிறாயோ அதைச் செய்வதில் நாங்கள் சந்தோஷப்படுக்கிறோம்."

கென்டன் இப்போது ஒரு வளர்ந்த மனிதன். அவனின் பெற்றோர்கள் அவனுக்குத் தம்மை ஒப்புகொடுத்த அந்த நிகழ்வை அவன் இன்னமும் மறக்கவில்லை. பலவகையான உறவுகளுக்கு ஒத்துப்போகும் ஒரு முக்கியமான தத்துவத்தை நான் கற்றுக் கொண்டேன். அதிகார நிலையில் நாம் இருக்கும் பொழுது கூட, நமக்கு கீழே பணிப்புரியும் மற்றவர்களிடம் ஒப்புக்கொடுப்பதனால் நம்முடைய நிலை குறைந்து போவதில்லை. உண்மையில், அது சரியாக இருக்கும்பொழுது, நாம் என்னவாக இருக்கிறோம் என்பதற்கான மரியாதையை நாம் வெல்லுவோம். நாம் தக்கவைத்துள்ள இடத்திற்கு, இந்த சூழ்நிலைப் பயன்படுத்திக் கொள்ளும் சில மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் அதைச் செய்யும்பொழுது அவர்கள் மிகவும் பக்குவபடாத மக்களே. ஆம், என் எட்டு வயது மகனை விட குறைந்த அளவிற்கே பக்குவப்பட்டவர்கள்.

ஒரு வேதாகம காட்சி

பலவகையான் கிறிஸ்தவ உறவுகளை விவரிக்க ஒப்படைப்பு என்னும் கருத்தை வேதாகம எழுத்தாளர்கள் உபயோகித்துள்ளனர். ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுங்கள் என்று எல்லா கிறிஸ்தவர்களையும் (ஆண்களையும், பெண்களையும்) பவுல் ஊக்கமூட்டியுள்ளான். (எபேசியர் 5:21) பெரியவர்களுக்கு தம்மை ஒப்படைக்கவேண்டும் என்று பவுல் இளைஞர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் (1 பேதுரு 5:5). அவர்களுடைய அதிகாரிகளுக்கு ஒப்படைக்கவும் கூடவே அவர்களுடைய தலைவர்களுக்கு கீழ்ப்படியவும் கிறிஸ்துவ சரீரத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எபிரெயர் 13:17) வேலைக்காரர்கள் தம்முடைய எஜமானனுக்கு ஒப்புகொடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர் (தீத்து 2:9; எபிரெயர் 6:5; கலாத்தியர் 3:22; 1 பேதுரு 2:18). இது கிறிஸ்தவர் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர் எஜமானனுக்கும் பொருந்தும். குழந்தைகள் தம்முடைய பெற்றோர்களுக்கு ஒப்புக்கொடுத்து கீழ்ப்படியவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறார்கள் (எபேசியர் 6:1; கலாத்தியர் 3:20). மேலும்,

கிறிஸ்தவர்கள் தம் வாழ்க்கையில் கிறிஸ்தவர்கள் அல்லாத, குறிப்பாக அரச அதிகாரிகளாக இருப்பவர்களிடம் தம்மை ஒப்புகொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றனர் (ரோமர் 13:1; 1 பேதுரு 2:13).

பணியாள் தலைமை

அதிகார நிலையில் உள்ள கிறிஸ்தவர்கள் ஒப்படைக்கும் மனநிலையிலும் கூட பணிபுரிய வேண்டும் என்று வேதாகமம் தெளிவுப்படுத்துகிறது. கிறிஸ்து ஆலயத்தை நேசித்ததைப்போல கணவர்கள் மனைவிகளை நேசிக்குமாறு கூறப்படுகின்றனர் (எபேசியர் 5:25). வேலைக்காரனாக இருக்காமல் நம்மால் கிறிஸ்துவைப் போல நேசிக்கமுடியாது. கூடவே பணிந்துப்போகாமல் நம்மால் வேலைக்காரனாக இருக்க முடியாது. இது முரண்பட்டதைப் போல இருக்கும் உண்மையான கூற்றாக இருந்தாலும், நம்முடன், மாமிசமாக இருந்தபொழுது இதைத் தான் கிறிஸ்து நமக்காகச் செய்தார்!

தகப்பன்மார்கள் தம் குழந்தைகளின் தேவைகளைச் சந்தித்து, கூடவே அவர்களைப்புரிந்துகொண்டு, அவர்களிடம் மென்மையாக நடந்துக்கொள்ள வேண்டும் (எபேசியர் 6:4; கலாத்தியர் 3:21). அவர்களுக்கு சேவைச் செய்யாமல் இதை நாம் செய்யமுடியாது.

பெரியவர்களும் அல்லது போதகர்களும் வேலைக்காரனாக இருக்கவே அமர்த்தப்பட்டுள்ளனர். தலைவர்களாக இருந்து நாம் சேவைச் செய்ய ஆர்வமாக உள்ளோம் (1 பேதுரு 5:2). நம்முடைய இடத்தை பணரீதியாகவும், மனரீதியாகவும் அல்லது சமுதாயரீதியாகவும் ஒரு நீதியற்ற லாபமாக பயன்படுத்தி அதை மற்ற கிறிஸ்தவர்களின் மீது சுமத்தக் கூடாது.

கிறிஸ்து அவரையே நமக்கு கொடுத்த பொழுது எப்படி நம்மை நடத்தினாரோ அதைப் போலவே கிறிஸ்தவ எஜமானர்களும் அவர்களின் வேலைக்காரர்களை நல்ல முறையிலும் மென்மையாகவும் நடத்தவேண்டும் (எபேசியர் 6:9; கலாத்தியர் 4:1). கிறிஸ்துவுக்குள் இந்த மக்கள் எல்லாம் அடிமைகள். மட்டுமல்ல, கிறிஸ்துவுக்குள் சகோதரர்கள் இந்த வகையில் நடத்தப்பட்டவேளையில், புதிய ஏற்பாட்டு ஆலயத்தில் உள்ள அடிமைத்தன முறைகள் வெகுவாக மறைந்தன. இந்த சமுதாய நோய் கிறிஸ்துவுடன் போட்டிப் போட முடியாது என்று அடிமைகளின் எஜமானர்கள் பார்த்தனர். பவுல் அடிமைத்தனத்தை எதிர்க்கவில்லை, ஆனால் கிறிஸ்து அவர்களை நேசித்ததைப் போல, எஜமானர்கள் அவர்களின் அடிமைகளை நேசிக்கவேண்டும் என்று போதித்து அதை அழித்தது சுவாரசியமாக உள்ளது. ஆச்சரியப்படும் வகையில், இந்த அனுகுமுறை ரோம உலகமாகிய புறஜாதியார் மற்றும் யூதர் ஆகிய இரண்டிலும் பெண்களின் திருமணத் தகுதியை மாற்றியது. கிறிஸ்துவுக்குள் அவள் தன்னில் சரிபாதி என்று அவன் நம்பும்பொழுது எப்படி ஒரு கிறிஸ்தவ கணவன் தன் மனைவியை தாழ்மையாக நடத்தமுடியும் (கலாத்தியர் 3:28). குடும்பத்திலும் ஆலயத்திலும் தன் அதிகாரத்தின் நிலையைதக்கவைத்துக்கொண்டே ஒரு வேலைக்காரனாக இருக்க முடியும் என்று இது நமக்கு விளக்குகிறது.

ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுத்தல்

இயேசு பூமியில் இருந்த பொழுது, அவருடைய ராஜ்ஜியத்தில் யார் சிறந்தவராக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி சீடர்கள் அவர்களுக்குள்ளேயே வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருந்தபோது இயேசு அவர்களிடம் சொன்னார்.

புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார் (மத்தேயு 20:25-28).

நம்முடைய அதிகாரத்தின் நிலை எந்த அளவிற்கு வித்தியாசமான கொள்கையாக இருந்தபோதிலும் நாம் ஒருவருக்கொருவர் தாழ்ந்து நடக்கச் செய்தது இயேசு கிறிஸ்துவால் மட்டுமே சாத்தியமானது. கிறிஸ்தவம் தனிமைப்பட்டது. கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்த பொழுது மக்களிடையே உறவை செயல்படுத்துவதற்காக ஒரு முற்றிலும் புதிய அணுகுமுறையை இந்த உலகத்திற்கு எடுத்து வந்தார். புறஜாதியாரின் உலகத்தில், இயேசு அழைத்ததைப் போல ஒருவருக்கொருவரின் ஒப்படைப்பு என்று எந்த விஷயமும் இருக்கவில்லை. கீழ்ப்படிதல் மற்றும் ஒப்படைத்தலின் செயல்கள் கூட சுயநலமுடையவர்களுக்கு ஒரு வழியாகிவிட்டது. ஆனால், கிறிஸ்துவுக்குள் எல்லா விசுவாசிகளுக்கும் நாம் காட்டும் மரியாதையின் மூலம் ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுத்து வாழ்வதற்கான சாத்தியம் இருக்கிறது.

கிறிஸ்துவின் உதாரணம்

இந்த உலகத்தின் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, எல்லா மனிதர்களுக்கும் வேலைக்காரனாகிய பொழுது இதைத் தான் நமக்கு விளக்கினார். அவர் "தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (பிலிப்பியர் 2:6-7). அதிகாரத்தில் இருக்கும் கிறிஸ்தவர்கள் உட்பட எல்லா கிறிஸ்தவர்களும், இந்த கிறிஸ்துவின் உதாரணத்தைப் பின் தொடர வேண்டும் என்று பவுல் தெளிவு படுத்துகிறான். கிறிஸ்து நேசித்ததைப் போல நாமும் நேசிக்க வேண்டும். நாமெல்லோரும் "ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலிப்பியர் 2:3-4). நீங்கள் "தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்." (எபேசியர் 5:21). யார் ஒருவர் சரியான உதாரணத்தை அமைக்கிறார்களோ நம்முடைய குறிக்கோள் "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப்பியர் 2:5)

சுயநலம்

துரதிருஷ்டவசமாக, அதிகாரத்தின் நிலையில் உள்ள எல்லா கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்துவின் மனது கிடையாது. கீழ்ப்படிதலுள்ள ஸ்தானத்தில் இருக்க கட்டாயப்படுத்துவதற்காக சில மனிதர்கள் ஒப்புக்

கொடுக்கும் மற்றும் பணிவின் கொள்கையை அவர்கள் மனைவிகள் மீதும் மற்றவர்கள் மேலும் சுமத்துவார்கள். அவர்களின் சொந்த வழியை அடைவதற்கான ஒரு "சங்கமாகவே" வேதாகமத்தை அவர்கள் பயன்படுத்துகின்றார்கள். இது கிறிஸ்து நேசித்ததைப் போல நேசிப்பது அல்ல. இது சுயநலம், இதை நாம் செய்யும் பொழுது, மரியாதையை நாம் வலியுறுத்துவதன் மூலம் அதை நாம் பெற்றுகொள்ள முடியாது என்பதை நாம் இன்னமும் கற்கவில்லை. அது உண்மையானதாகவும் அர்த்த முள்ளதாகவும் இருக்க வேண்டுமானால் அதை நாம் சம்பாதிக்க வேண்டும்.

பாதுகாப்பு இல்லாமை

எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. நான் திருமணப் முடிந்து, கணவராக இருந்த பொழுது, அதை என்னுடைய வழியில் செய்ய போகிறேன் என்பதை நான் தெளிவு படுத்தினேன். அப்படியே செய்தோம் பின்பு, என்னுடைய மனைவியின் கருத்து மிகவும் மேலானதாக இருந்ததை நான் ஒப்புக்கொண்டேன். என்னுடைய முடிவை அன்பினால் அல்ல, குடும்பப்பொறுப்புகளின் தலைவர் என்ற நிலையை பாதுகாத்துக்கொள்ளவே என் முடிவை எடுத்தேன் என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஒரு புதிய கணவராக இருந்து, என்னை ஒரு தலைவராக நான் நியமித்து கொள்ள வேண்டும். என் மனைவிக்கு இது நன்கு தெரிந்திருந்த போதிலும் - அந்த செயலில் புண்பட்டிருந்த போதிலும் அவள் வேண்டுமென்றே ஒப்புக்கொடுத்தாள். துரதிருஷ்டவசமாக, அந்நாளில் அதிக மரியாதையை நான் பெறவில்லை. பின்பு நான் மன்னிப்பு கேட்க வேண்டியிருந்தது. என்னுடைய மன்னிப்பை ஏற்றுக்கொண்டு என்னை மன்னித்து அந்த விஷயத்தை எப்பொழுதுமே கொண்டுவராதது அவளுடைய பெருமை என் மனைவிக்கே சேரும். அந்த விதத்தில், நான் செய்ததை விட அதிக பக்குவத்துடன் அதைச் சமாளித்தாள்.

குழப்பம்

வேதாகமம் போதிப்பதைக் குறித்து சில கிறிஸ்வர்கள் குழப்பமடைந்துள்ளனர். மனைவி விட்டுச் சென்று விட்ட ஒரு கணவரிடம் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தேன். "ஏன் அவள் விட்டு சென்றாள்?" நான் கேட்டேன் "நான் கட்டுப்படுத்த முயற்சிப்பதாக அவள் நினைக்கிறாள்," என அவர் பதிலளித்தார்.

"அப்படிச் செய்தீர்களா?" நான் அவரிடம் பதிலுக்கு கேட்டேன்.

ஆதியாகமம் 3:16ஐக் குறிப்பிட்டு, "நான் அவளை ஆட்சி செய்ய வேண்டும்" என்று வேதாகமம் எனக்குச் சொல்கிறது என்றார்.

தவறாக கூறப்பட்ட இந்த பதிலுக்கு உணர்ச்சியுடன் நடந்துக் கொள்ள முயற்சித்து, அவர் கர்த்தர் சொன்னதை, தவறாக புரிந்து கொண்டதாக அவரிடம் குறிப்பிட்டுச் சொன்னேன். "அது தான் பாவத்தின் விளைவு" என கூறினேன். "ஆதாமும், ஏவாளும் பாவம் செய்த பொழுது, அவளும், அவளுடைய எல்லா பெண் குழந்தைகளும், எல்லா பேரக்குழந்தைகளும் அவர்களுடைய கணவர்களின் அதிகாரத்தை மீஞ்சுவதற்கு தூண்டப்படுவார்கள்." "ஆனால் கணவர்களாக இருந்து" நான் தொடர்ந்தேன். "நம்முடைய தூண்டுதல் நம்முடைய மனைவிகளை ஆக்கிரமிக்கவும், கட்டுப்படுத்தவும் கூடவே சீர்குலைப்பதாகவும் தான் இருக்கும். நம்புகிறீர்களோ இல்லையோ இந்த இளைஞர் முழுமையாக ஆச்சரியமடைந்தார். அவர் வேதத்தை மட்டும் தவறாக புரிந்துக் கொள்ளவில்லை ஆனால் அவர தன் பாவத்தை நியாயப்படுத்தி விட்டார்.

இயேசு கிறிஸ்து வந்த பொழுது, மீட்பைக் கொடுத்து, பரிசுத்த ஆவியானவரை நம்முடன் தங்கும்படி அனுப்பினபொழுது, கிறிஸ்துவுக்குள் கணவர்கள் மற்றும் மனைவிகளாக இருந்து, பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளாக இருந்து, நம்முடைய வாழ்க்கைகளில் ஒரு அற்புதமான மீட்கப்படுதலை அனுபவிக்க வேண்டும். மேலும் நமது தலைமையை தொடர்ந்தவாறு, ஒரே நேரத்தில் ஒருவருக்கொருவர் வேலைக்காரர்களாக நம்மால் இருக்க முடியும். இது சில விஷயங்களில் ஒப்புக்கொடுத்தலை அடக்கியுள்ளது. மேலும், பின்தொடர்பவர்களாக இருந்து, அதிகாரத்தில் இருப்பவர்களிடம் எதிர்க்கவும் தடுக்கவும் முயற்சி செய்யாமல் நம்மை அவர்களிடம் ஒப்புக்கொடுக்கலாம். இதை வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் "கிறிஸ்துவுக்கு நாம் கொடுக்கும் மரியாதையின் மூலம் ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுக்கலாம்."

வேதாகம விதி முறைகள்

மற்ற கிறிஸ்தவர்களுக்கு ஒப்பு கொடுப்பது மனதில் எழுகிற உணர்ச்சி வேகத்தினதும், பிரதிபலிப்பின் காரணமாகவும் அமைந்து விடக்கூடாது என்று பவுல் மிகவும் தெளிவாக கூறினான். அவர்கள் அப்படி இருந்தால் நாம் சுயநலத்துடன் பதிலளிக்கலாம். ஆனால் ஒருவருக்கொருவா ஒப்பு கொடுத்தலின் விதிமுறைகள், இயேசு கிறிஸ்துவிலும் அவரின் வார்த்தைகளிலும் அடங்கி இருக்கிறது. இப்படித்தான் இதனையொத்த ஒரு பகுதியில், கொலோசெயருக்கு பவுல் ஊக்கமூட்டினான்.

> கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச்செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் (கொலோசெயர் 3:16-17).

கர்த்தருடைய வார்த்தையின் அடிப்படையில் இல்லாத எந்த விஷயத்தையும், மற்ற கிறிஸ்தவனிடம் வேண்டிக் கேட்க எந்த கிறிஸ்தவனுக்கும் உரிமையில்லை. கர்த்தருடைய வார்த்தையை நாம் அறியபோது மனிதர்களுடைய வார்த்தைகளை விட கர்த்தருடைய வார்த்தைக்குத் தான் கீழ்ப்படியவேண்டும் (அப்போஸ்தலர் 4:19; 5:29). ஆனாலும், தவறான ஒன்றைச் செய்யவேண்டும் என்று நம்மை வற்புறுத்தும் போது, அதை நாம் மரியாதையுடன் தடுக்க வேண்டும். கர்த்தர் நம்முடைய மனநிலையை மதிக்கிறார். மேலும் இயேசுவுடன் உள்ள நமது உறவைத் தக்கவைக்க முயற்சி செய்யும் மனிதனின் இருதயத்தை அவர் மென்மையாக்குகிறார்.

அதிகாரத்தில் உள்ள சில கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய சித்தத்தை தக்க மற்றவர்கள் மீது அழுத்தம் செலுத்துவதை தொடர்வார்கள். இது நடக்கும் பொழுது, ஆலயத்தில் இருக்கும் உயர்ந்த அதிகாரிகளிடம், குறிப்பாக ஆவிக்குரிய தலைவர்களிடம் முறையிடலாம் என்பதை நாம் புரிந்துக்கொள்ளவேண்டும். இது சீர்குலைக்கும் அல்லது ஒழுக்கமற்றிருக்கும் கணவர்களின், மனைவிகளுக்குப்பொருந்தும். ஒருவேலை கணவன்மார்கள் தங்களின் மனைவிகளின் அன்புடைய புத்திமதிகளினால் திருந்தவில்லை என்றால், அவர்களின் மனைவிகள் இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்

பட்டுள்ளவிதிமுறைகளைப்(மத்தேயு18:15-17)பின்தொடர்ந்து,அவர்களின் ஆவிக்குரிய தலைவர்களிடமிருந்து உதவி பெறுவதற்கான உரிமை அவர்களுக்குஇருக்கிறது.இந்தவிதத்தில்ஒருமனைவியை"கிறிஸ்துவின் சகோதரியாக" பார்க்கவேண்டும், கூடவே வாழ்க்கைத் துணையாகவும் பார்க்கவேண்டும். அவளுக்கு இருக்கும் வேதாகம உரிமைகளையும் மதிப்புகளையும்அவளுடையகணவர்-அதாவது"கிறிஸ்துவுக்குள்உள்ள சகோதரர்" தகர்க்க கூடாது. அவள் மனதில் எழும்புகிற எண்ணம்படி நடந்து, அவளிடம் உள்ள ஒப்புக்கொடுக்காத தன்மையை நியாயப் படுத்தினால், இதுவும் ஆலயத்தில் உள்ள முதிர்ந்த ஆவிக்குரிய தலைவர்களால்கண்டுப்பிடிக்கப்பட்டு,அவர்கள்இவளுக்குதன்கணவரிடம் உள்ள உறவில் வழிகாட்டி, அவளை மென்மையாக ஊக்கமூட்டுவார்கள்.

ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுப்பதற்கான நடை முறை முயற்சிகள்

எல்லா கிறிஸ்தவர்களும் ஒருவருக்கொருவர் தம்மை ஒப்படைக்க உதவும் வகையில் பின்வரும் முயற்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

முயற்சி 1

ஒருவருக்கொருவர் ஒப்பு கொடுப்பது ஆலயத்தின் தலைமையுடனே தொடங்கவேண்டும்.

பவுல் போதித்தவைகளையெல்லாம் சாதாரண குழுக்களின் உறுப்பினர்களுக்கு முன் எடுத்துக்காட்ட வேண்டும். போதகர்கள், ஊழியர்கள், பெரியவர்கள், மற்றும் ஆலய டீக்கன் ஆகியோருக்கிடையே வாய்ச்சண்டையும், குறைந்த அளவில் மகிழ்ச்சியும் இருந்தால், அது மற்ற உள்ளூர் கிறிஸ்தவ குடும்ப உறுப்பினர்கள் எல்லோரிடமும் இயற்கையாகி விடும். கணவருக்கும் மனைவிக்கும் இடையே உள்ள பதட்டத்தை குழந்தைகளிடமிருந்துமறைக்கமுடியாததுஎப்படியோஅதைப்போலவே, ஆலயத்தில் இருக்கும் தலைவர்களிடம் இருக்கும் ஒற்றுமையின்மையை மற்ற ஆலய உறுப்பினர்களிடமிருந்து மறைக்க முடியாது.

இந்தஎதிரிடையும்உண்மைதான்.உண்மையாகவேகிறிஸ்துவுக்குள் ஒன்றுபட்டுள்ள குழுத் தலைவர்கள், அவர்கள் யாருக்கு பொறுப்புடையவர்களாயிருக்கிறார்களோஅவர்களுக்குஒருஅற்புதமான எடுத்துக்காட்டாகிறார்கள். தலைமைத்துவ நிலையில் இருந்து அவர்கள் அனுபவித்துவெளிப்படுத்தும்அன்பும்ஒற்றுமையும்,முழுஆலயத்தையும் வடிகட்டிவிடும்.

யார் சிறந்தவனோ அவன் மற்றவர்களுக்கு வேலைக்காரனாக இருக்கவேண்டும்

வடபிலானோ, டெக்சாசில் உள்ள ஐக்கிய வேதாகம ஆலயத்தின் மூத்தபோதகராகநான்சேவைசெய்துவருகிறேன். நான்ஒருபெரியவனாக இருந்துமற்றகர்த்தருடையமனிதர்களுடனும்சேவைசெய்துவருகிறேன். நான் குழுவின் தலைவராக சேவை செய்தாலும், வேண்டுமென்றே மற்ற மனிதர்களின் அதிகாரத்துக்கு அடியில் என்னை நியமித்துக் கொண்டேன். என்னுடையசெயல்களுக்குஅவர்களிடம்பதிலளிக்கும்படிஎன்னைநானே ஆக்கிக்கொண்டேன்.

ஆனால், அதே நேரத்தில் நான் இந்த மனிதர்களுடன் இணையாக சேவை செய்கிறேன். நாங்கள் முடிவு எடுக்கும்பொழுது, இந்த மனிதர்களுடைய கருத்துக்களுடன் என்னுடைய கருத்துக்கள் முந்திச் செல்லக்கூடாது என்பதற்காக மிகவும் கஷ்டப்படுவேன். இந்த அளவிலான தலைமைத்துவத்துடனே நான் அவர்களுடன் சேவை செய்கிறேன். நாம் எல்லோரும் சக போதகர்கள்.

ஆனாலும், இந்த மனிதர்கள் எல்லாம் என்னைத் தலைவராகவே பார்க்கின்றார்கள். அவர்கள் என்னுடைய கருத்துக்களுக்கும் என்னுடைய சிபாரிசுகளுக்கும் கவனத்துடன் செவிகொடுக்கிறார்கள். அவர்கள் என்னை நிச்சயமாக தம்முடைய மூத்த தலைவராக அடையாளம் கண்டு கொள்கிறார்கள்.

இந்த ஏற்பாட்டுடன், நான் மூன்று நிலைகளில் செயல்படுகிறேன். முதலாவதாக, நான் தேர்ந்தெடுத்தவாறு, இந்த மனிதர்களுக்கு நான் பதிலளிக்க வேண்டியுள்ளது. இரண்டாவதாக, முடிவு எடுப்பதில் அவர்களுக்கு இணையானவனாக நான் வேலை செய்யவேண்டியுள்ளது. மூன்றவதாக, நான் அவர்களின் தலைவர். இந்த அமைப்பு இயேசு கிறிஸ்து தன் சீடர்களுக்கு போதித்த "எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக் கடவன்" (மாற்கு 9:35) என்பதுடன் ஒத்துப்போகிறது என்று நான் நம்புகிறேன். இயேசு மனித சரீரத்திற்குள் கர்த்தராக இருந்து, அப்போஸ்தலர்களுக்கு அவர்களின் கர்த்தரும் போதகருமாக இருந்து, அவர்களின் கால்களைக் கழுவி இந்த வகையான தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்தார் (யோவான் 13:14).

இந்த திட்டம் நன்றாக செயல்படுவதற்கு, என்னுடைய மற்றும் அவர்களுடைய மனநிலைகளை அதிக அளவில் இது சார்ந்துள்ளது. இந்த தருவாயில், நம்முடைய குறிக்கோள்களும் நம்முடைய முறைகளும் அழகான ஒருங்கிணைப்புடன் கலக்க வேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தையின் தத்துவங்களையும் போதனைகளையும் நிராகரித்தால், எந்த அமைப்பும் எந்த முறையும் சிறப்பாக செயல்படாது என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

முயற்சி 2

ஒப்புக்கொடுத்தல் என்னும் பாடத்தைக் குறித்து வேதாகமம் போதிப்பதை எல்லா விசுவாசிகளும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

இது மனைவிகள், குழந்தைகள் மற்றும் ஊழியர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் அல்ல. ஆனால், கிறிஸ்துவின் சரீரத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இது கொடுக்கப்பட்டுள்ளது. கணவர்கள் அவர்களின் தலைமை இடத்தை விட்டு கொடுக்காமலே அவர்களின் மனைவிகளுக்கு தம்மை ஒப்புக்கொடுக்க முடியும் என்பதையும், பெரியவர்கள் அவர்களின் அதிகாரத்தின் நிலையைவிட்டுக்கொடுக்காமல் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள மற்றவர்களுக்கு தம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதையும், பெற்றோர்கள் அவர்களின் ஸ்தானத்தை விட்டுக் கொடுக்காமல் குழந்தைகளின் கருத்துக்களைக் கேட்க முடியும் என்பதையும், முதலாளிகள் தங்களின் மரியாதையை இழக்காமல் அவர்களுடைய ஊழியர்களுக்கு கவனமுள்ள சலுகைகளை கொடுக்கமுடியும் என்பதையும் நாம் உணரவேண்டும். இது கிறிஸ்துவைப் போல தம் மனதை உருவாக்கிக் கொள்ளுவதற்கான திறவுகோலாகும். தம்மை மீண்டும் கண்டுகொள்வதற்கு, தம் வாழ்க்கையைத் தொலைக்கவேண்டும்.

முயற்சி 3

மற்றவர்களுக்கு ஒப்படைத்தல் மற்றும் கீழ்ப்படிதலைக் குறித்துப் போதிக்கும், கீழ்க்கண்ட வேத வசனங்களை தியானியுங்கள். ஒவ்வொரு தலைப்பிலும் அமைந்துள்ள பாடத்திலிருந்து பல வகையான உறவுகளை குறிப்பெடுங்கள். கிறிஸ்துவின் சரீரத்தினுடைய மற்ற உறுப்பினர்களுக்கு எதிராக உங்கள் சொந்த கருத்துக்களை மதிப்பிடுவதற்கான தகுதியாக இந்த வேதாகம வசனங்களை பயன்படுத்துங்கள். நீங்கள் உறுதியாய் இருக்கிறீர்கள் என்று நினைக்கும் இடங்களை வட்டமிடுங்கள். நீங்கள் எந்த இடத்தில் வளர வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அந்த இடத்தை கோடிடுங்கள்.

மூப்பர்களிடமிருந்து கிறிஸ்துவின் சரீரத்தின் மற்ற உறுப்பினர்களுக்கு

உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கணகாணிப்புச் செய்யுங்கள் (1 பேதுரு 5:2-3).

எல்லா கிறிஸ்தவர்களிடமிருந்து மூப்பர்களுக்கு

நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாக திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும் (1 தீமோத்தேயு 5:17).

உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களான படியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே (எபிரேயர் 13:17).

வாலிபர்களிடமிருந்து வயதானவர்களுக்கு

அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத் தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மை யுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1 பேதுரு 5:5-6).

கணவர்களிடமிருந்து மனைவிகளுக்கு

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து... அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான் (எபேசியர் 5:25, 28)

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள் (கொலோசெயர் 3:19).

அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களான படியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள் (1 பேதுரு 3:7).

புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி (1 கொரிந்தியர் 7:3-4).

மனைவிகளிடமிருந்து கணவர்களுக்கு

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.... சபையானது கிறிஸ்துவுக்குக்கீழ்ப்படிகிறதுபோலமனைவிகளும்தங்கள்சொந்தப் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபேசியர் 5:22-24).

மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள் (கொலோசெயர் 3:18).

முதிர்வயதுள்ளஸ்திரீகளும்அப்படியேபரிசுத்தத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களும், அவதூறுபண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களுமாயிருக்கவும், தேவவசனம் தூஷிக்கப் படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தி யுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில்தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர் களுமாயிக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரி யங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு (தீத்து 2:3-5).

அந்தப்படி மனைவிகளே, உங்கள்சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக்கீழ்ப்படியாதவர்களாயிருந்தால்,பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப் படுத்திக்கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னா பரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்,அழியாதஅலங்கரிப்பாயிருக்கிறசாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது (1 பேதுரு 3:1-4).

பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளுக்கு

பிதாக்களே,நீங்களும்உங்கள்பிள்ளைகளைக்கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:4).

பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள் (கொலோசெயர் 3:21).

குழந்தைகளிடமிருந்து பெற்றோர்களுக்கு

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது (எபேசியர் 6:1-3).

பிள்ளைகளே,உங்களைப்பெற்றாருக்குஎல்லாக்காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது (கொலோசெயர் 3:20).

எஜமானர்களிடமிருந்து வேலைக்காரர்களுக்கு

எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்யவேண்டியவைகளைச்செய்து,அவர்களுக்கும்உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதமில்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள் (எபேசியர் 6:9).

எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள் (கொலோசெயர் 4:1).

வேலைக்காரர்களிடமிருந்து எஜமானர்களுக்கு

வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து; மனுஷருக்குப்பிரியமாயிருக்கவிரும்புகிறவர்களாகப்பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின்ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள் (எபேசியர் 6:5-8, கூடவே கொலோசெயர் 3:22-25 யைப் பார்க்கவும்).

வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள் (1 பேதுரு 2:18).

கிறிஸ்தவர்களிடமிருந்து அரசு அதிகாரிகளுக்கு

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம்மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படியவேண்டும். ஆகையால்யாவருக்கும்செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள் (ரோமர் 13:1, 5, 7).

நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப்புகழ்ச்சியும்உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள். நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள் (1 பேதுரு 2:13-17).

முயற்சி 4

நீங்கள் வளர வேண்டிய இடங்களை அறிந்து அதற்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

இப்போது உங்கள் பலத்தையும் பலவீனத்தையும் தனிமைப் படுத்திவிட்டீர்கள். கீழேயிருந்து நீங்கள் வளர வேண்டிய இடங்களுக்கு எண் இடுங்கள். தேவைப்படும் இடங்களில் எண் ஒன்று என்று நீங்களே கொடுத்துக்கொள்ளுங்கள். எண் இரண்டு என்று அடுத்த இடத்திற்கு கொடுங்கள். அதை போலவே தொடருங்கள்.

முயற்சி 5

சில குறிப்பிட்ட குறிக்கோள்களை அமைத்துக் கொள்ளுங்கள்.

தொடங்குவதற்கு, அதிகமாக வளர்ச்சி தேவைப்படும் இடத்தை தேர்வு செய்து கொள்ளுங்கள். ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை அமைத்துக் கொள்ளுங்கள். மேலும், இந்த இடத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு இன்னமும் கீழ்ப்படிவதற்கு எடுக்கப்போகும் செயல் முயற்சியை நீங்கள் குறிப்பிடுங்கள். ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய இடத்தை தேர்வு செய்து கொள்ளுங்கள். மேலும் அவை எல்லாவற்றையும் முழுமையாக முடிக்கும் வரையிலும் ஒரு புதிய குறிக்கோளை அமைத்துகொள்ளுங்கள். உங்களுடைய பழைய குறிக்கோள்களைக் குறித்து உங்களுக்கு நீங்களே நியாயப்படுத்திக் கொண்டும், திரும்ப பார்த்துக் கொண்டும் இருங்கள்.

இந்த இடங்களில் நீங்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவதற்கு அவர் உங்களுக்கு உதவ வேண்டும் என்று தொடர்ந்து ஜெபியுங்கள்.

சிறு குழுக்கள் விவாதிப்பதற்கான வழிமுறைகள்

தொடக்கம்

பின் தொடரும் கேள்விகளுக்கான உங்களின் பதில்களை பகிர்ந்துக் கொள்ளுங்கள்

யாரிடமாவது ஒப்புகொடுக்கவேண்டும் என்று கூறப்பட்டபோது உங்களின் உணர்ச்சி வேகம் எப்படி இருந்தது?

யாராவது அவர்களை உங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டபோது உங்களின் உணர்ச்சி வேகம் எப்படி இருந்தது?

விவாதத்திற்காக

1. ஒப்படைப்பு என்னும் தலைப்பு ஒரு உணர்ச்சி பூர்வமான, முட்கள் நிறைந்த தலைப்பாக, ஏன் உள்ளது. ஒப்படைப்பு என்னும் கருத்து ஆலயங்களிலும் சமுதாயத்திலும் எப்படி சீர்குலைக்கப்பட்டுள்ளது? வேதாகமத்தின் பார்வையில் உள்ள ஒப்படைப்புக்கும். சமுதாயத்தின் பார்வையில் உள்ள ஒப்படைப்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

2. இயேசு எந்த வழியில் ஒப்படைத்தலை எடுத்துக் காட்டினார்? ஒப்புகொடுக்க வேண்டும் என்பதின் அர்த்ததை இந்த உதாரணம் உங்கள் காட்சியில் எப்படி அமைக்கிறது? ஒப்படைக்கும் மனிதனாக இருக்க வேண்டும் என்ற உங்களின் சொந்த மனநிலையை இது எப்படி பாதிக்கிறது

3. எந்த சூழ்நிலைகளில், ஒரு நபர் மற்ற நபர்களை, அவனுக்கோ, அவளுக்கோ ஒப்புக்கொடுக்குமாறு அழைக்க முடியும்? ஒரு நபர் மற்ற நபர்களை எந்த சூழ்நிலைகளில் வேறு யாருடனாவது தம்மை ஒப்படைக்குமாறு வலியுறுத்த முடியும்? நீங்கள் உங்களை ஒரு நபரிடம் ஒப்படைக்கவேண்டும்என்று அழைக்கப்பட்டு, அவர் அந்த அதிகாரத்தை தவறாக பயன்படுத்தினால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

4. முயற்சி 3-ல் குறிப்பிட்டுள்ள நடைமுறை முயற்சிகளின் பிரிவுகளுக்குஏற்பசிறுகுழுக்களாக, அதாவதுபெரியவர்ஒருசிறுகுழுவிலும், வாலிபர்கள் ஒரு சிறு குழுவிலும், மனைவிமார்கள் ஒரு சிறு குழுவிலும், பிரித்துக் கொள்ளுங்கள். சிறு குழுக்களுக்கு மேல் பங்கு கொள்ள தகுதியுடைவர்கள், அவர்களுக்கு பிடித்ததான ஒரு சிறு குழுவில் சேர்ந்து கொள்ள தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சிறு குழுக்களில், கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசியுங்கள். அடுத்த மாதம் அல்லது வாரம் நீங்கள் எந்த வகையான ஒப்படைத்தலை உங்கள் வாழ்க்கையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதைக் குறித்து விவாதியுங்கள்.

முடிவு

சிறுகுழுக்களாகநிற்கவேண்டும், ஒருவருக்கொருவர்கடமையுடன், மற்றவரை தாங்கி பிடிக்கும்படியும், துணை நிற்கும்படியும் இருப்பதற்கு ஏதாவது ஒரு எழிய முறையை ஏற்படுத்துங்கள் (உதாரணமாக ஒவ்வொருவரும் அந்த வாரம் கூப்பிடுவதற்காக ஒரு துணையை ஏற்படுத்திக் கொள்ளலாம்), பின்பு ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.

அடுத்தமுறைக்காக

1. அத்தியாயம் 12 ஐ படியுங்கள்
2. உங்கள் சொந்த குறிக்கோளை நோக்கி செயல்படுங்கள்.
3. உங்கள்துணைக்குழுஉருவாக்கியுள்ளஆதரவையும்உத்திரவாதமுள்ள திட்டத்தையும் பின் தொடருங்கள்.



அத்தியாயம் பன்னிரண்டு

ஒருவரை ஒருவர் உளக்கப்படுத்துங்கள்

ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்

(1 தெசலோனிக்கேயர் 5:11).

சில வருடங்களுக்கு முன்பு ஒரு நல்ல பாடத்தை நான் படித்தேன். காகோவிலுள்ள மூடி சாயங்கால பாடச்சாலையின் இயக்குனராக ணியாற்றினேன் - அது சாதாரண மக்களுக்கான ஊழியமாகும். ஆயிரம் ணவர்கள் பங்கு பெற்றனர். இம்மக்களில் அநேகர் முழுநேர ஊழியத்தில் பட்டிருந்தனர், ஆனால், ஞாயிறுப் பாடசாலை ஆசிரியர்களாகவும், க்கட்டளை உறுப்பினர்களாகவும், மூப்பர்களாகவும், டீக்கன்களாகவும் ணியாற்றினர். மேலும் மற்றவர்கள் தம்முடைய ஆலயங்களில் சாதாரண ணிகளிலும் இருந்தனர். தம்முடைய வேதாகம அறிவை அதிகரித்துக் ள்வதற்காகவும் சிலர் மூடி வேதாகமக் கல்லூரிக்கு வந்தனர்.

இப்பாடசாலையின் இயக்குனராக நான் இருந்தமையால், சிக்காக்கோ தியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள வெவ்வேறு ஆலயங்களில் சங்கிப்பது வழக்கம். நம்முடைய ஊழியத்தைக் குறித்தும், நம்மால் வர்களுக்கு எப்படி பணியாற்ற முடியும் என்பதைக் குறித்தும் மக்களை ரியச் செய்வதற்காக அப்படிச் செய்தேன்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியின்போது, ஒரு ஞாயிற்றுக்கிழமை சாயங்கால ராதனையில் நான் பேசி முடித்த பிறகு, ஒரு பெண் என்னிடம் வந்து னை அறிமுகப்படுத்திக் கொண்டார். டாக்டர் சார்லஸ் ஹார்ன் தன் ழ்க்கையில் எத்தனை ஆசீர்வதமாய் இருந்தார் என நான் அறிந்து ள்ளவேண்டுமென அவா விரும்பினார். அவர் நடத்தும் வகுப்புக்களை ன் தவறவிட்டதேயில்லை. என அவர் கூறினார். "என்னுடைய பகல் ழுவதும் சிக்காக்கோவின் நகரப்பகுதியில் செயலாளராக ணியாற்றுகிறேன்," அவர் தொடர்ந்தார், "மேலும் நான் பாடசாலைக்குச் ல்லும் போது மிகவும் களைப்படைந்தவளாய் இருப்பேன். ஆயினும் ந்தப் பாடம் என் வாழ்வை மாற்றுகிறது!"

அவர்கூறியவற்றைக்குறித்துஎண்ணியவனாய்,மறுநாள்காலையில் எனது அலுவலகத்திற்கு வந்த உடனேயே, அந்த பேராசிரியரை தொலைப்பேசியில் அழைத்தேன். வெளிப்படையாக கூறினேன். நான் அப்படி பேசும் போது மறுமுனையானது அமைதியில் ஆழ்ந்திருப்பதை என்னால் "கேட்க" முடிந்தது. அதன் பிறகு ஆழமான நேர்மையாலும் பாராட்டுகளாலும்பொதியப்பட்டகீழ்க்கண்டவார்த்தைகள்அவரிடமிருந்து வந்தன, "நன்றி. மிக்க நன்றி, ஜீன்! எனக்கு அது தேவை!" "நல்லது" நான் கூறினேன், "இந்த மாணவர் உண்மையாகவே உங்களைப் பாராட்டுகிறார், சார்லஸ். உங்கள் ஊழியம் அவர் வாழ்வை மாற்றுகிறது. நானும் கூட உங்களை பாராட்டுக்கிறேன்! உங்கள் விசுவாசத்திற்கு என் நன்றி."

இந்தப் பேராசிரியரின் வாழ்க்கையை, காலையில் நான் செய்த இந்த தொலைபேசி மாற்றும் என் நான் எண்ணிப்பார்க்கவில்லை. இதற்கு மாறாக, அவருடைய இத்தனை ஆண்டுகால போதனை அனுபவத்தில், ஒரு சிறந்த விமரிசனத்தை அவருக்கும் மேலான ஒருவரிடமிருந்து அவர் கேட்பது இதுவே முதல்முறை என்பதை நான் கண்டுக்கொண்டேன். "கிறிஸ்தவர்களுக்கு நடுவில் இப்படி நடக்கவே கூடாது" என எனக்கு நானே நினைத்துக் கொண்டேன்.

விசுவாசமாயிருப்பது பாராட்டப்படவேண்டிய ஒன்று

சார்லஸ் ஒரு விசுவாசமிக்க ஆசிரியர். அவர் இப்போது மரித்துவிட்டார். ஆனால்கர்த்தருடையஊழியர்கள்பரலோகராஜ்ஜியத்தில் தம்முடையசன்மானத்தைப்பெறும்படியாககாத்திருக்கவேண்டுமென்பது கர்த்தருடைய திட்டமில்லை. இதனால் தான் "ஒருவரையொருவர் மதிக்கும்படி" கர்த்தர் நம்மிடம் கூறினார். ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துவது மிகச் சிறந்த இரட்டை கருத்தினை உடையது!

இதே அனுபவத்தினால் ஒரு இலக்கை ஏற்படுத்தினேன் - பாராட்டு வார்த்தைகளால் மற்ற பேராசிரியர்களையும் உற்சாகப்படுத்துவதே அது. இதன் விளைவாக, மாணவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறியும் பொருட்டுஎன்காதுகளைக்கூர்மையாக்கி,இத்தகையதகவல்கள்அளிக்கும் கேள்விகளைக் கேட்பதை முக்கியமாக்கிகொண்டேன். மற்ற பேராசிரியர்களுக்கு இத்தகவல்களை மாற்றுவதற்கு இயற்கையான சந்தர்ப்பங்கள் கிடைக்குமென எதிர்பார்த்திருந்தேன்.

இந்த ஊழியத்தை நான் காணும்போது, போதனையாளர்களின் மன நிலையானது குலைந்து போன நிலையில் இருந்ததை அறிந்தேன். இதற்கான காரணம், பல ஆண்டுகளாக இந்த பணியிடம் நிரப்பப்படாமலேயே இருந்தது. இதன் விளைவாக, பகல் நேர பாடசாலையில் போதித்த ஆசிரியர்கள் இந்த ஊழியத்தை பாரமாக கருதினார்களேதவிரஒருவாய்ப்பாககருதவில்லை. ஆயினும், இத்தகைய ஊக்கமூட்டும் அனுகுமுறையைத் தொடங்கிய நாளிற்கு பிறகு தனிப்பட்டவர்களுக்கான இயக்குனர் என்னைத் தொலைப்பேசியில் அழைத்தார். "ஜீன்" அவர் அழைத்தார், "நீங்கள் என்ன செய்கிறீர்களோ எனக்குத் தெரியாது, ஆனால் ஒரு ஊழிய குழுவில் இத்தனைச் சிறந்த மாறுதல்களை இதுவரை நான் கண்டதில்லை"

"ஜான், அது மிகவும் இலகுவானது," நான் பதில் கூறினேன். "மாணவர்கள்கூறும்சிறந்தவிமரிசனங்களைக்கேட்டு, பேராசிரியர்களுக்கு அதனைத் தெரிவிக்கிறேன்!"

அலட்சியப்படுத்தப்பட்ட அறிவுரை

மற்றவர்களை உற்சாகப்படுத்த நாம் ஏன் இத்தனை வெட்கப்படுகிறோம்? வேதாகமம் அளிக்கும் இந்த முக்கியமான பொறுப்பை நாம் ஏன் தட்டி கழிக்கிறோம்? "உற்சாகப்படுத்தாமையின் வரத்தை" சில கிறிஸ்தவர்கள் பெற்றுள்ளதாக உணருகிறார்கள். சில மோசமான விமரிசனங்கள் தம்மிடம் இருக்கும் போது மட்டுமே மற்றவர்களுடன் தொடர்புக்கொண்டு பேசுகிறார்கள்! இதற்கு அவர்கள் பேசாமலேயே இருந்திருக்கலாம் -ஏனெனில் அவர்கள் பேசுவது உற்சாகத்தை இழக்கச் செய்கிறது.

வெற்றிகரமாக செயல்படும் பிரபலமானவர்களுக்கு சிறந்த விமரிசனங்கள் தேவையில்லை என்ற தவறான புரிந்து கொள்ளுதலின் அடிப்படையிருந்து இத்தகைய அலட்சியங்கள் வெளிவருகின்றன. ஆனால், குறிப்பாக கூறினால், அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் இது தேவைப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சமயத்தில், ஒரு செய்தியினாலேயோ, அல்லது ஒரு தொடர்ச்சியான செய்தியினாலேயோ ஆழமாக தொடப்பட்ட மக்கள் ஆலய ஆராதனைக்கு பிறகு என்னிடம் வந்து கூறுவார்கள். "ஜீன் நீங்கள் இதனை எப்போதும் கேட்டுக்கொண்டே இருக்கலாம் ஆனால்" - அதன் பிறகு அவர்கள் தம் பாராட்டுரையைத் தொடருவார்கள். நான் அவர்களுக்கு பதிலளிக்க விரும்புவேன் - "இல்லை மக்கள் அதைப் போன்றவற்றை எப்போதுமே கூறுவதில்லை! ஆயினும், அவர்கள் அப்படிச் செய்ய வேண்டுமென விரும்புகிறேன்!"

எல்லாமே இருப்பதாக தோன்றும் தலைவர்களுக்கு உற்சாகப்படுத்துதல் தேவையுள்ளது என்பதை அநேக மக்கள் நம்புவதில்லை என்பதை நீங்கள் காணுங்கள். ஆனால் நாம் இவற்றை எதிர்பார்க்கிறோம், நாம் எத்தனை வெற்றிகரமானவர்களாய் இருந்தாலும், நம்மனைவரிடமும் "எல்லாம் ஒன்றாயிருப்பதில்லை" என்பதும் ஒரு செய்தியை அறிவிக்க மேடையில் ஏறும் போதும், ஒரு வகுப்பை எடுப்பதற்கு வகுப்பில் நிற்கும் போதும் காணப்படுவதைப்போல் இருப்பதில்லை என்பதும் உண்மையாகும். ஊழியத்தில் மிகப்பெரிய காரியங்களைச் செய்துக் கொண்டிருந்தாலும், இயேசுவை தொடர்ந்து பின்பற்றுவதற்கு சிறப்பான விமரிசனங்கள் தேவை! நம்முடைய செயல்படும் திறனைக் குறித்து சில சமயங்களில் இரண்டாவது யோசனை செய்ய விழைபவர்களாய் உள்ளோம். உற்சாகப்படுத்துதல் நம்மனைவருக்கும் தேவை.

"இன்னுமொரு உற்சாகப்படுத்துதல்"

கிறிஸ்து பரலோகத்திற்கு திரும்பிய பிறகு, தனது குமாரர் இங்கு செய்தவைகளின் தொடர்ச்சியை செயல்படுத்த பரிசுத்த ஆவியானவரைக் கர்த்தர் மையப்படுத்தியிருப்பது அவரின் திட்டமாகும். யோவான் நற்செய்தியில் நான்கு முறை "தேற்றவாளர்" என பரிசுத்த ஆவியானவரைக் குறித்து இயேசுவானவர் குறிப்பிடுகிறார். (யோவான் 14:16, 26; 15;26; 16:7) வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள் "ஆறுதல் படுத்துபவர்" என்றனர். புதிய ஆங்கில மொழிபெயர்ப்பில். "உதவி செய்பவர்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்த ஆங்கில மொழித்தலைப்புகளில் ஏன் இத்தனை வேறுபாடுகள்? கிரேக்க புதிய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்ட மூலச் சொல்லானது, "பாரகிள்டோஸ்" என்பதாகும், இதனை நாம் அப்படியே ஆங்கிலத்தில் எழுதினால் இது "இன்னொரு பாரகிளிட்" என்பதாகும். கிரேக்க வினைச் சொல்லான பாராகாளியோ என்பது "உற்சாகப்படுத்துதல்" என அடிக்கடி

மொழி பெயர்க்கப்படுவது மிக முக்கியமான ஒற்றுமையாகும். ஆகவே இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவரை "இன்னொரு உற்சாகப்படுத்துபவர்" எனக் காண்பது மிகவும் சிறந்ததாகும் - இதனால் தான் ஆங்கில மொழி பெயர்ப்பு ஒன்றில் "ஆறுதல் படுத்துபவர்" என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கால அப்போஸ்தலர்கள் தம் வாழ்க்கையில் மிகவும் பயந்தவர்களாயிருந்தனர். அவர்களுடைய இருதயங்கள் "கலங்கியிருந்தன" (யோவான் 14:27). எருசலேமிலிருந்த மதத்தலைவர்கள் அவர்களை வெறுத்த விதம் முன் எப்போதையும் விட மிகவும் அதிக அளவில் இருந்தது. அவர்களுடைய தலைவரை கொல்வதற்கு எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகள் இரகசியங்கள் இல்லை. "ஆகையால் இயேசு அதன்பின்பு வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரியாமல்" (11:54). அவர்களை விட்டுச் செல்லபோவதாக இயேசு அறிவித்தபோது அவர்கள் பயந்து உற்சாகமிழந்ததில் எந்த ஆச்சரியமுமில்லை.

உண்மையில் பார்த்தால் இயேசு அவர்களை விட்டு விடப்போவதில்லை. பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இன்னமும் அவர்களுடனே கூட இருக்கபோகிறார். இதனால்தான் *"அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்"* (14:17) என்று அவர் கூறினார். இந்த சொற்றொடரின் மூலமாக பரிசுத்த ஆவியானவரை இயேசு அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார், திரியேகத்தில் ஆவியானவர் தனிப்பட்டவராய் இருந்தாலும் கூட, பிதா மற்றும் குமாரருடன் ஒன்றாகவே இருக்கிறார், குமாரரைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அது போலவே, குமாரரைக் கண்டவன் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுதலையும் கண்டான். இங்கு மூன்று பேர் இருந்தாலும் அவர்கள் ஒருவராகவே இருக்கின்றனர், மேலும் இயேசுவானவர் பூமியிலே இருக்கும் போது பிதாவானவரையும் ஆவியானவரையும் வெளிப்படுத்தினார்.

ஆகவே பரிசுத்த ஆவியானவர் இன்னொரு "தேற்றரவாளராகவும்" - அதாவது இன்னுமொரு *"உற்சாகப்படுத்துபவராக"* இருக்கிறார். கிறிஸ்து பூமியில் செய்தவைகளை அவர் தொடர்ந்து செய்கிறார். அவர் அப்போஸ்தலர்களையும் விட்டுவிடுவதில்லை - அல்லது கிறிஸ்துவைப் பின் பற்றிய மற்றவர்களையும் விட்டுவிடுவதில்லை.

பரிசுத்த ஆவியானவரைக் குறித்து இயேசு கூறிய அனைத்தையும் பதினோரு அப்போஸ்தலர்களும் புரிந்து கொள்ளவிட்டாலும், அவர் கூறியது என்னவென்று சீக்கிரமாகவே அறிந்து கொள்ளப் போகின்றனர். கிறிஸ்து மரித்து, உயிரோடெழுந்து, பரலோகம் ஏறிய பிறகு, அவர்களும், விசுவாசிகளின் ஒரு குழுவினரும் இயேசு அவர்களிடம் கூறியபடி எருசலேமில் காத்திருந்தனர் (லூக்கா 4:49). அப்படி அவர்கள் காத்திருக்கையில், இயேசு வாக்குத்தத்தம் செய்தபடியே பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். இது ஒரு பரபரப்பான நிகழ்வாகும். அவர்களில் சிலருக்கு வரங்களை அளித்தமையால் கர்த்தரின் சத்தியத்தை அவர்களால் அறியவும் புரிந்துக் கொள்ளவும், வெளிக்கூறவும் முடிந்தது. அவர்கள் போதிக்கும் செய்திகளை நிரூபிக்கும் விதத்தில் அதிசயங்களைச் செய்யவும் அவர்களில் சிலருக்கு அதிகாரம் வழங்கினார்.

பரிசுத்த ஆவியானவரை *"சத்தியத்தின் ஆவி"* எனவும் இயேசு அறிவித்தார். துன்பங்களிலும் கஷ்டங்களிலும் ஆழ்ந்திருந்த சமயத்தில் அப்போஸ்தலர்களை உற்சாகப்படுத்த மூன்று முறை இப்படிச் செய்தார்:

> நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அபொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்..... சத்திய ஆவியானவர் (யோவான் 14:16-17).

பிதாவினிடத்திலிருந்துநான்உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சிகொடுப்பார் (15:26).

இன்னும் அநேககாரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளைநீங்கள்இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் (16:12-13).

ஏவப்பட்ட கர்த்தரின் வார்த்தை

பரிசுத்த ஆவியானவர் வந்தபோது இயேசுவின் வாக்குத்தத்தை அவர்நிறைவேற்றினார். அவரால்ஏவப்பட்டுஎழுதப்பட்டவேதவசனங்கள் அவருடைய மிகப்பெரிய ஈவாகும். "தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேதுரு 1:21) என எழுத்தாளர்களின் ஏவப்பட்ட வார்த்தைகளாலும், "வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16) என பவுல் தீமோத்தேயுவிடம் கூறியதும் இதனை நிருபிக்கின்றன. கர்த்தரின் வார்த்தையை எழுதுவதற்கு ஏவிய பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை அவன் குறிப்பிடுகிறான்.

"ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துதல்" கர்த்தரின் சத்தியத்தின் மிக அடிப்படையான பொருளாகும்! இதனால் தான் பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்குஎழுதினான், "சத்தியத்தைஅன்பினால்பேசி" தொடர்ந்து அதனைச்செய்யஉற்சாகப்படுத்தினான். பிறகு அவன்கூறினான், "அன்புடன் சத்தியத்தைக்கைகொண்டுதலையாகியகிறிஸ்துவுக்குள்எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" (எபேசியர் 4:15).

மற்றவிசுவாசிகளைஉற்சாகப்படுத்துவதற்கான அடிப்படைக்காரணம் கர்த்தரின் வார்த்தையே என விளக்குவதற்கு அநேக விளக்கங்கள் வேதாகமத்தில்இருக்கின்றன. உதாரணமாக, தீத்துவிற்குஎழுதியநிருபத்தில் மூப்பர்களின்குணநலன்களைக்குறித்துபவுல்எழுதும்போதுபோதகர்களைக் குறித்து இவ்வாறு எழுதினார், "*ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும்,* எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான்போதிக்கப்பட்டதற்கேற்றஉண்மையான வசனத்தைநன்றாய்ப்பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும்" (தீத்து 1:9).

தீமோத்தேயுவிற்குபவுல்இவ்வாறுஎழுதினான், இந்தஇளம்போதகர் "*உலகிற்கு பிரசங்கிக்கும்படி*" மாற்றப்பட்டான். அவன் "*சரிப்படுத்தவும், கண்டிக்கவும், உற்சாகப்படுத்தவும்*" ஏதுவாக "காலத்திற்கேற்றவாறு ஆயத்தப்படுமாறு" அவன்கூறினான் (2 தீமோத்தேயு 4:2) இதற்குமேலும், தெசலோனிக்கேயரின் புதிய கிறிஸ்தவர்களை பவுலும், சீலாவும், தீமோத்தேயுவும் சீடர்களாக்கிய போது அவர்கள் ஒவ்வொருவரையும் தம்முடையராஜ்யத்திற்கும்மகிமைக்கும்உங்களை அழைத்ததேவனுக்கு நீங்கள்பாத்திரராய்நடக்கவேண்டுமென்று, தகப்பன்தன்பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்."

(1 தெசலோனிக்கேயர் 2:11-12) போல் செய்தனர். இந்த உற்சாகப்படுத்துதலுக்கான பொருளை பவுல் உடனடியாக விவரிக்கிறான்:

> ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது. (1 தெசலோனிக்கேயர் 2:13).

ஆவிக்குரிய வளர்ச்சிக்கான திறவுகோல்

ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தவேண்டுமென நமக்குத் தெளிவாக கூறும் புதிய ஏற்பாட்டு வசனம் எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் காணப்படுகிறது. இந்த வசனம் இவ்வாறு கூறுகிறது:

> சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும் (எபிரெயர் 10:25)[1]

கிறிஸ்தவர்கள் „அடிக்கடி சந்தித்து "ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தும்போது" என்ன நடக்க வேண்டும்? முதலாவதாக நம் *விசுவாசத்தில் நாம் வளர* வேண்டும் (எபிரெயர் 10:23) இரண்டாவதாக நம்பிக்கையில் நாம் வளர வேண்டும் (எபிரெயர் 10:23) மூன்றாவதாக, நம் அன்பில் நாம் வளரவேண்டும் (எபிரெயர் 10:24).

மற்ற எந்தப் பண்புகளை விடவும் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள உறுப்பினர்களின் நடுவில் இருக்கும் ஒருவருக்கொருவரின் உற்சாகப்படுத்தலானது "மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து" (வசனம் 24), ஆக இருக்கவேண்டும். கொரிந்தியருக்கு பவுல் எழுதியபோது, இந்த உண்மையை பவுல் அடிக்கோடிட்டுக் காட்டினான். 1 கொரிந்தியரின் மிகப்பெரிய வசனத்தின் முடிவில் பவுல் சுருக்கமாக இவ்வாறு கூறினான், "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது" (1 கொரிந்தியர் 13:13).

உற்சாகப்படுத்தும் செய்தி

இயேசு கிறிஸ்து மீண்டும் வந்து தம்மை பரலோகத்திற்கு எடுத்துக் செல்வார் என தெசலோனியாவின் கிறிஸ்தவர்கள் புரிந்து கொண்டாலும், கிறிஸ்துவின் வருகைக்கு முன்னால் மரித்த கிறிஸ்தவர்களின் நிலை என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. இதற்கு அத்தாட்சியாக,

---

[1]அல்லேலன் எனக்குறிப்பிடப்படும், "ஒருவருக்கொருவர்" என்று மொழி பெயர்க்கப்பட்ட குறிப்பிட்ட வார்த்தையானது எபிரெயர் 10:25 இன் சொற்றொடரில் பயன்படுத்தப்படாவிட்டாலும், எபிரெயர் 10:24 இல் இது உபயோகிக்கப்பட்டுள்ளது. வசனம் 25 இல் காணப்படும் இந்த யோசனையானது இந்த கோட்பாட்டின் விரிவாகும். ஆகவே வசனம் 25 இல் "ஒருவருக்கொருவர்" என்ற வார்த்தைகளை மொழிபெயர்ப்பாளர்கள் உபயோகிக்கத் தலைப்பட்டனர்.

தெசலோனிக்கேயவின் பவுல் ஊழியம் செய்யத் தொடங்கிய சில நாட்களுக்குப்பிறகுசிலகிறிஸ்தவநண்பர்கள்மரித்தனர்,இதனால்அவர்கள் தம் அன்பிற்குரியவர்களின் நித்திய வாழ்வைக் குறித்து மிகவும் கலங்கினர். இது மிகவும் அடிப்படையான கேள்வியாக நமக்கு தெரியலாம், ஆனால் புதிதாக பாகான் வணக்கத்திலிருந்து மாறியிருந்த புதிய விசுவாசிகளுக்கு இது மிகவும் முக்கியமான கேள்வியாயிருந்தது.

பவுல் தன்னுடைய முதலாவது நிருபத்தில் இந்தக் கேள்விக்கு பதில் கூறுகிறான. "அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை" (1 தெசலோனிக்கேயர் 4:13). பிறகு, அவர்கள் ஏன் துக்கிக்ககூடாது என்பதற்க்கான காரணத்தை அவன் கூறுகிறான் "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும்தேவன்அவரோடேகூடக்கொண்டுவருவார்" (வசனம் 14).

இறந்தவர்களோஉயிரோடுள்ளவர்களோஎடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கேற்பார்கள் என (எல்லாவிசுவாசிகளும்) பவுல் தெளிவுப்படுத்தினான். "இயேசுவுக்குள்நித்திரையடைந்தவர்களையும்" என அவர்களுக்குஉறுதிக் கூறிவிட்டு, "பின்புஉயிரோடிருக்கும்நாமும்காத்தருக்குஎதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்." (4:17) என்றான்.இந்தகாரியத்தைமிகவும்தெளிவாகஅவர்கள்புரிந்துக்கொண்டனர் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள "எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (வசனம் 17) எனக் குறிப்பிட்டான்.

இறுதி சடங்குகளில் பேசும்போதெல்லாம் இந்த வசனத்தை நான் அடிக்கடி உபயோகப்படுத்துவேன். இதற்கான காரணம் தெளிவானது. "ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" என பவுல் நம்மிடம் கூறினான் (1 தெசலோனிக்கேயர் 4:18; மேலும் காண்க: 5:11) அன்பானவர்கள் இறக்கும்போது துக்கம் உண்டாகும் என்பதை பவுல் மறுக்கவில்லை. மாறாக, அவர்களுடைய பிரிவு தற்காலிகமானது மட்டுமே. இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை பரலோக வீட்டிற்கு எடுத்துச் செல்ல வரும்போது அவர்கள் மீண்டும் ஐக்கியமாவர் - இதனால் கிறிஸ்தவர்களும் உயிரோடுள்ளவர்களும் அடங்குவர்.

வார்த்தைகளின் வல்லமை

தெசலோனிக்கேயர் நிருபத்தில் உள்ள "ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்" என்றபவுலின்அறிவுரையின்மையமானது,இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையைக் குறித்து நேரடியாக வேதாகமம் கூறும் "சத்தியவார்த்தைகளில்" இருக்கிறது. சரியானஇறைத்தத்துவத்துடன், ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்த வேறுபல "வார்த்தைச்" செய்திகளை நம்மால் பயன்படுத்த முடியும். அவற்றை நாம் சரியான முறையில் பயன்படுத்தும் போது, அவற்றை கேட்பவர்கள் மீது சரியான தாக்கத்தை விளைவிக்கிறது. உதாரணமாக, கீழ்க்கண்ட நீதிமொழியைப் பாருங்கள்:

> மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்; நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும் (நீதிமொழிகள் 12:25).

மூடி சாயங்கால பாடசாலையின் நண்பரான சார்லஸிடம் இதனைத் தான் நான் செய்தேன். வெவ்வேறு வகைகளிலும் அவர் கணத்த இருதயம் உடையவராயிருந்தார். இதற்கு காரணம் உற்சாகப்படுத்தாமையே. அவர் செய்வது சரியானது என உண்மையாகவே யாராவது பாராட்டுகிறார்களா என்பதில் நிச்சயமில்லை. இதற்கு மாறாக "நல்ல விதமாக" அவரிடம் பேசியபோது, அது அவரை உற்சாகப்படுத்தியது. தன்னைப்பற்றி நன்கு சிந்திக்க இது அவரை வழி நடத்தியது.

இந்தநீதிமொழிகள்கூறியஒருவகையானஏக்கத்தைநாம்அனைவரும் சில வேளைகளில் அனுபவித்திருப்போம். நாம் ஏதாவது ஒன்றினால் தடுக்கப்படும் போது, ஒரு கணமான உணர்ச்சி நம்மீது உருவாகிறது. அது குடும்பத்தின் நோயினாலோ அல்லது நெருங்கிய நண்பர் அல்லது அன்பானவர்களின்மரணத்தினாலோஉருவாகலாம்.ஒருகாரணத்தினாலோ அல்லது பல காரணங்களினாலோ, நம்மில் நாமே ஏமாற்றமடையலாம். ஒருவருடையஉணர்ச்சிகாயப்படுத்தவோஅல்லதுயாரையாவதுகிழிக்கவோ முயலலாம். நமக்கு மிகமுக்கியமான இலக்கை வெற்றி பெற முடியாது போயிருக்கலாம் அல்லது நம்மை கீழிறக்கிய யாரொருவராலோ ஏமாற்றம் அடைந்திருக்கலாம். இந்த நீதிமொழியில், இதமான சொல்லினால் கணத்த இருதயத்தைத் தேற்றலாம் என சாலமோன் நம்மிடம் கூறுகிறான். ஒருவன் வாழ்க்கையைக் குறித்து நினைத்துக் கொண்டிருக்கும் எல்லாவற்றையும் நம்மால் மாற்ற முடியும். அது மிகவும் இலகுவானது அதற்கு எச்செலவும் இல்லை.அதனைநாமஏன்அடிக்கடி செய்யக்கூடாது? துரதிருஷ்டவசமாக நம் சொந்த உலகில் நாம் கட்டுப்பட்டிருப்பதால், மற்றவர்களைப் பற்றி நாம் எண்ணிப் பார்ப்பதேயில்லை.

> இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும். (நீதிமொழிகள் 16:24).

இரண்டாவதுநீதிமொழிஉற்சாகப்படுத்தலின்இன்னுமொருமுக்கிய பரிமாணத்தைகாட்டுகிறது.இம்முறை,தேனைப்போன்றஇனியசொற்களைக் குறித்துசாலமோன்எழுதியுள்ளான்.அவை "தேன்கூடுபோல்ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்."

மனிதன் இரண்டு பரிமாணங்களையுடைய படைப்பு - ஆத்துமா/ ஆவி மற்றும் சரீரம். வேறு வகையாக கூறினால், நாம் மனவியல் மற்றும் சரீரப்படியானவாழ்க்கைமுறையினைக்கொண்டவர்கள்,இவைஇரண்டும் ஒன்றுக்கொன்றுதொடர்புடையவை.இதுஎந்தஅளவுஇருக்கிறதுஎன்றால் நாம்அடிக்கடி ஆன்மசரீரநிலைகளைக்குறித்துபேசுகிறோம். "சைக்கோ" என்ற சொல்லின் முதல் பகுதி கிரேக்க மொழியான சூச்சே என்பதிலிருந்து வருகிறது, இதன் பொருள் "ஆத்துமா" என்பதாகும். "சோமாடிக்" என்ற சொல்லின் இரண்டாம் பகுதி கிரேக்க சொல்லான சோமாவில் இருந்து வருகின்றது. இதன் பொருள் "சரீரம்" என்பதாகும். ஆகவே "சைக்கோசோமாடிக்" என்பது "ஆத்துமா" மற்றும் "சரீரம்" ஆகிய இரண்டையும் குறிக்கிறது. இனிய வார்த்தைகள் நம் மனம் மற்றும் சரீரம் ஆகிய இரண்டையும் நல்ல முறையில் தாக்குகிறது.

மறுபுறம், மற்றதும் உண்மையானது என சாலமோன் நம்மிடம் நினைவுப்படுத்துகிறான். அவன் இந்த நீதிமொழியையும் எழுதியுள்ளான் "மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; *முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்.*" (நீதிமொழிகள் 17:22), நீங்கள் "குணப்படுத்துபவரா" அல்லது "காயப்படுத்துபவரா?" மக்கள் தம்மைக் குறித்து நல்ல விதமாக எண்ணிக் கொள்வதற்கான முக்கியமான வழி *இனிய வார்த்தைகளை உபயோகிப்பதே.*

ஏற்றசமயத்தில்சொன்னவார்த்தைவெள்ளித்தட்டில்வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் (நீதிமொழிகள் 25:11).

என்னால் மறக்கக் கூடாத சிறுவயது நிகழ்வு ஒன்று இருக்கிறது. நான்வெறும்ஆறுவயதுடையவனாகவும்முதலாம்வகுப்புபடிப்பவனாயும் இருந்தேன். மிஸ் ஒலிவ் ஓவன்ஸ் என்ற பெயருடைய என் ஆசிரியை, கரும்பலகைக்குச் சென்று "மீ" என்ற சொல்லை எழுதினார், இப்போது இது சபிக்கப்பட்ட வார்த்தை என்பதை அறிவேன். இந்தச் சொல்லை எங்கள் புத்தகங்களில் எழுதும்படி அவர் எங்களிடம் கூறினார்.

"மீ" என்று எழுதப்பட்ட அல்லது அச்சடிக்கப்பட்ட சொல்லை இதுவரை நான் கண்டதில்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். இவையெல்லாம் "விவரம் தெரியாத" நாட்களுக்கு முந்தியவை, ஆகவே எத்தனையாய் முயன்றும் பென்சிலை சரிவர இயக்கமுடியவில்லை.

மிஸ் ஓவன்ஸ் ஒவ்வொரு வரிசையாக நடந்து வரத்தொடங்கினார், ஒவ்வொரு மாணவனின் முயற்சிகளைக் கூட பார்வையிட்டார். நான் மூன்றாவது வரிசையில் அமர்ந்திருந்தேன் - இது அந்த அறையின் முன்பகுதியிலிருந்துமுக்கால்வாசிதொலைவில்இருந்தது.முதல்வரிசையைக் கடந்துஇரண்டாவதுவரிசையைக்கடந்து-இப்போதுஎன்னுடையவரிசைக்கு வரத்தொடங்கினார். என்னை பயம் பிடித்துக் கொண்டது, என் இருதயம் வேகமாக அடிக்கத் தொடங்கியது! என் பேப்பரில் நான் எழுதியிருந்தது பூவியதிர்ச்சிக்கருவியின் தாறுமாறாக ஓடிய பேப்பரின் கீறல்களைப் போன்றிருந்தது!

ஆனால் மூர்ச்சையாகக்கூடிய நேரம் வந்தது! மிஸ் ஓவன்ஸ் என் மேசையருகேநின்றார்.எனதுஎதிர்பார்ப்புகளும்பரபரப்பும்கட்டுப்படுத்த இயலாததாய்இருந்தது.என்கண்களில்நீர்வந்தது,என்நிலையைவெட்கத்தால் கவிழ்த்தேன். என் ஆசிரியரை நான் நேசித்தேன். அவரை ஏமாற்றத்திற்குள்ளாக்க நான் விரும்பவில்லை. இதற்கு மேலும், நான் பகிரங்கமாக கேவலபடுத்தப்படுவேன் என்றும் பயந்தேன்.

என்பயத்திற்கானகாரணத்தைமிஸ்ஓவன்ஸ்உடனடியாகஉணர்ந்தார். அடுத்து என்ன நடந்தது என்பதை எப்போதுமே நான் மறக்கமாட்டேன். இந்த வார்த்தைகளை எழுதும்போது மிகவும் உணர்ச்சிவசப்படுவதை என்னால்உணரமுடிகிறது. அவர்குனிந்து, மற்றவர்களுக்கு கேட்காதவாறு என் காதுகளில் முணுமுணுத்தார். "அது பரவாயில்லை ஜீன்" அவர் கூறியவாறு குனிந்து என் கன்னங்களில் இதமாக முத்தமிட்டு அடுத்த மேஜைக்குச் சென்றார்!

அந்த நொடியை நான் ஏன் மறக்கவேமாட்டேன் என புரிந்து கொண்டீர்களா? அவர் என்னைத் திட்டி, "பெரிய பையனைப் போல நடந்து கொள்" என்று நேராக கூறியிருந்தால் என்னவாகியிருக்கும்! நான் மிகவும்நொந்துபோயிருப்பேன்.நான்ஏற்கெனவேவெட்கத்தைஉணர்ந்தேன் அது என் ஆசிரியை மற்றும் பாடசாலையின் மீது ஒரு வித வெறுப்பை எடுத்து வந்திருக்கும். அதற்கு மாறாக அந்த நொடிப்பொழுதில் இருந்து, அவரின் மாணவனாக இருப்பதால் பெருமைப்பட்டேன். நான் பாடசாலையையும் விரும்பினேன். என் ஆசிரியையை பிரியப்படுத்த கவனமாக முயன்றேன்.

இந்த நிகழ்வுக்கு தொடராக இன்னுமொன்றும் நடந்தது. வருடங்கள் பல சென்றுநான்கல்லூரியில்இருந்தபொழுதுமிஸ்ஓவன்ஸ்புற்றுநோயால் இறந்து போனார் என கேள்விப்பட்டேன். நான் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் தொலைவில் இருந்தாலும், என்நெஞ்சுவலிக்கத்தொடங்கியது. அவர்பட்ட துன்பங்களை எனது அவயங்களும் உணர்வதாக தோன்றியது. அப்போதுநான்உணர்ந்தவைகளை என்முதலாம்வகுப்பில்அவர்உற்சாகப் படுத்தியநொடிப்பொழுதுடன்இணைக்காமலிருக்கமுடியாது, அவர்இனிய

சொற்களை சரியான நேரத்தில் சரியான சூழ்நிலையில் கூறினார். "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச்சமானம்" (நீதிமொழிகள்25:11)என்றுநீதிமொழிகள் கூறுவதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும் என நம்புகிறேன்.

"பர்னபாஸ் - உற்சாகப்படுத்துதலின் மகன்"

மற்றவர்களின் உற்சாகப்படுத்தக் கூடிய சிறந்ததோர் மனிதனைக் குறித்து புதிய ஏற்பாட்டில் தேவன் ஒரு உதாரணத்தைக் கொடுத்தார் - அதனால் அவன் இத்தகைய உற்சாகப்படுத்துபவனாய் இருந்தான். அவன் பெயர் யோசேப்பு என்பதாகும், ஆனால் அப்போஸ்தலர்கள் அதனை பர்னபாஸ் என மாற்றினார்கள், இதன் பொருள் "உற்சாகப்படுத்துதலின் மகன்" என்பதாகும்.

பொருளாதார சிக்கல்களுக்கு நடுவில் முதன் முதலாக பர்னபாசை நாம் சந்திக்கிறோம். எருசலேமிலுள்ள தேவைகளுள்ள விசுவாசிகளுக்கு உதவுவதில் தனக்குள்ள பெருந்தன்மையை அவன் விளக்கினான். அவன் சைப்ரஸ் நாட்டின் கைத்தேர்ந்த வர்த்தகனாவான், அவன் எருசலேமிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நிலங்களை வாங்கியிருந்தான். எருசலேமிலேயே தங்கியிருக்க தீர்மானித்த புதிய கிறிஸ்தவர்களின் சரீரப் பிரகாரமான தேவைகளைச் சந்திப்பதில் அப்போஸ்தலர்களுக்கு உதவ வேண்டிஇருப்பதைக்கண்டு, "தனக்குச்சொந்தமான" ஒருவயல்வெளியை விற்று, அந்த பணம் முழுவதையும் அப்போஸ்தலர்களிடம் கொடுத்து, அதனை புதிய விசுவாசிகளுக்கு கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டான்.

பெருந்தன்மையுள்ள மனிதன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பாக நாம் வாசிக்கும்படி இந்த நிகழ்வை எழுதும்படி பரிசுத்த ஆவியானவர் ஏன் லூக்காவை ஏவினார்? முதலாவது அவருடைய *பெருந்தன்மையின் உதாரணத்தை* நாம் அறிந்து கொள்ளவேண்டுமென தேவன் விரும்பினார். இரண்டாவது, *பெருந்தன்மையான மக்கள் உண்மையான உற்சாகப்படுத்துபவர்கள்* என்பதை நாம் அறியவேண்டும் என தேவன் விரும்புகிறார். எந்த ஒரு போதகரிடமோ அல்லது கிறிஸ்தவ தலைவரிடமோ, அவர்களை கர்த்தரின் வேலைகளை செய்யும்படியாக எது உற்சாகப்படுத்துகிறது என்பதை கேளுங்கள்! பொருளுதவி செய்வதின் மூலம் தம் ஊழியத்தைத் தாங்கும் கிறிஸ்தவர்களே அதுவென்றும் இது அவர்களுடைய பாரத்தினை அவர்களின் தோளிலிருந்து இறக்குகிறது எனவும் கூறுவர் - இதனால் தான் இத்தகைய மக்கள் உற்சாகப்படுத்தும் உயரிய மனிதர்களாய் இருக்கின்றனர்.

ஒரு மக்கள் நாயகன்

ஆனால்பர்னபாசும்கூடஒரு "உற்சாகப்படுத்துபவனே" ஏனெனில் மக்களுக்காகஅவன்தன்னைஅர்ப்பணித்திருந்தான். பவுல்மனம்திரும்பி ஏறத்தாழமூன்றுஆண்டுகளுக்குப்பிறகு(கலாத்தியர்1:18).எருசலேமிற்குத் திரும்பியபோது - இன்னமும் அவன் சந்தேகத்திற்குள்ளானவனாகவே இருந்தான். "சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான்; *அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள்*" (அப்போஸ்தலர் 9:26) என லூக்கா எழுதினான். "முறைமைக்குள்ளாக" வருவதற்காகவே அவன் மனம்

மாறினான் என அவர்கள் உறுதியாக நம்பினார் - மேலும் அவன் முன்னால் செய்ததைப் போல் சரியான சமயத்தில் தாக்கப் போகிறான் எனவும் எண்ணினார்! ஸ்தேவானின் மரணத்தை பவுல் எப்படி ஒருங்கிசைத்தான் என்பதையும், ஆலயத்திற்கு எதிரான தாக்குதல்களை அவன் எப்படித் தொடங்கினான் என்பதையும் பல ஆண்டுகள் கடந்து போனாலும் அவர்கள் மறந்து போகவில்லை (8:1-3).

ஆனால் பர்னபாஸ் பவுலுடனே கூட ஆழமான உறவை ஏற்படுத்தியிருந்தான். முன்னால் துன்பப்படுத்திக் கொண்டிருந்த இவன் உண்மையானவன் என்பது பர்னபாசிற்குத் தெரியும். தன்னுடைய நண்பனுக்காக பரிந்து பேச, அப்போஸ்தலர்களின் "நிலமைக்கு" நேரடியாக போகும் துணிச்சல் அவனிடமிருந்தது (9:27).

ஒருவரை நீங்கள் நம்பும் போது ஒரு அபாயத்தை நாடுகிறீர்கள். பர்னபாஸ் அந்த அபாயத்தைச் சந்திக்க ஆயத்தமாயிருந்தான் ஆனால் அது குருட்டுத்தனமான நம்பிக்கையல்ல. உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு பவுலைக் குறித்த செய்திகளை சேகரிப்பதற்கு நிறைய நேரம் செலவிட்டிருந்தான். முதலாவது, பவுல் "தேவனை கண்டவன்" என அப்போஸ்தலர்களிடம் கூறியிருந்தான். இரண்டாவது, தேவன் நேரடியாக பவுலிடம் "பேசியிருந்ததை" அவன் அறிந்திருந்தான் மூன்றவதாக அவன் தமஸ்குவில் இருக்கும்போது "இயேசுவின் பெயரால் பயமின்றி" பிரசங்கித்தான் என்பதை கேள்விப்பட்டிருந்தான் (9:27). நற்செய்தியின் பொருட்டு பவுல் உறுதியாக இருப்பதால் அவன் தன் உயிரை காப்பாற்றிக்கொள்ளவேண்டியிருப்பதாக பர்னபாஸ் அறிவான் (9:23-25).

சந்தேகத்தின் லாபங்களை உற்சாகப்படுத்துபவர்கள் மக்களுக்கு கொடுப்பர். ஒரு பன்பிற்கான அத்தாட்சியைத் தேடும் யாருக்கோ உதவுவதற்காக மற்ற மக்கள் யோசித்துக் கொண்டிருக்கும்போதோ அல்லது அப்படிச் செய்ய மறுக்கும் போதோ, பர்னபாசைப் போல, உற்சாகப்படுத்துபவர்கள் தகவல்களை சேகரிக்க நேரத்தைச் செலவிட்டு அந்நபருக்கு "உதவ வெளிப்பட்டு" "பரிந்து பேசத்" தொடங்குவர்.

ஒரு பாகுபாடற்ற கிறிஸ்தவன்

இத்தகைய உற்சாகப்படுத்துபவனாக பர்னபாஸ் இருப்பதற்கு இன்னுமொரு முக்கியமான காரணமும் இருக்கிறது. அவன் "*யாரையும் பார்க்காதவனாய்*" இருந்தான். எருசலேமில் துன்புறுத்தல் மிகவும் அதிகமாக இருந்தபடியினாலே, அநேக யூத விசுவாசிகள் "*சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல்,* பெனிக்கேநாடு, சீப்புரு தீவு, அந்தியோகியா பட்டணம்வரைக்கும் சுற்றித்திரிந்தார்கள்" (11:19). நற்செய்தியானது யூதர்களுக்கு மட்டுமான செய்தியே என இன்னமும் அப்போஸ்தலர்கள் நம்பிக்கொண்டிருந்தனர். ஆனால் லூக்கா எழுதுகிறான் அவர்களில் சீப்புருதீவாரும் சிரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து, கிரேக்கருடனே பேசிக் கர்த்தராகிய இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தார்கள்" *(11:20)*. இதற்கு பதிலாக, இந்த புறஜாதியார் நற்செய்தியை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டனர்.

எருசலேமில் வாழ்ந்த யூதகிறிஸ்தவர்களுக்கு இது பேராச்சரியத்தை ஏற்படுத்தியது. தம்மிருதயங்களின் ஆழத்திலுள்ள காழ்ப்புணர்ச்சியுடன் போராடிய அவர்கள், கிறிஸ்தவர்களாயிருந்த போதிலும் கூட அங்கு நடக்கும் காரியங்களுக்கு பதிலளிப்பதை தவிர வேறு வழியில்லை என முடிவு செய்தனர். ஆனால் யார் செல்லுவார்? அங்கு செல்ல *சித்தமாயிருப்பது* யார்?

இறுதியாக, இம்மக்களின் விசுவாசத்தை உற்சாகப்படுத்த அந்தியோகுவிற்கு பர்னபாசை அனுப்ப அவர்கள் முடிவுசெய்தனர் (11:22).

செய்தி தெளிவானது. பர்னபாஸ் சிறந்ததோர் மனதையுடைய ஒரு மனிதன். புறஜாதியார் நடுவே பல ஆண்டுகளாக அவன் வாழ்ந்திருந்தான். அவன் அவர்களுடன் வியாபாரம் செய்தான். அவர்களுடனே கூட அவன் உணவருந்தியிருக்கிறான். தன்னைப் போன்று அவர்களும் கர்த்தரால் படைக்கப்பட்டவர்களேஎன்பதையும்அறிந்திருந்தான். அவன் ஒரு "பரிசுத்த ஆவியானவரால் நிறைந்த நல்ல மனிதன்" - அவன் இயேசுவால் *பாரகிளிடோசாக* (உற்சாகப்படுத்துபவனாக) காணப்பட்டான் (அப்போஸ்தலர் 11:24). அவன் அந்தியோகுவிற்கு வந்து "அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் நிறைந்தவனாய்" புறஜாதியார் இப்படி இருப்பதாக கண்டபோது "தேவனுடைய கிருபையைக் கண்டபோது, *சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னான்*" (11:23).

தம்மைவிட வேறுபட்ட மனிதர்களுக்கு நடக்கும் நல்ல காரியங்களை முன்னிட்டு, முன்பேதீர்ப்புகள் இல்லாதமக்களால் மட்டுமே உண்மையாகவே ஆனந்தமடைய முடியும். இதனால் தான் "உற்சாகப்படுத்துதலின் மகன்" என்று யோசேப்பின் பெயர் மாற்றப்பட்டது. அவன் பாரபட்சமற்ற கிறிஸ்தவனாயிருந்தான்.

பர்னபாசை போன்று உற்சாகப்படுத்துபவராக நீங்கள் இருக்கிறீர்களா?

உங்கள் வாழ்வைக் குறித்த உண்மைகளை அறிந்து கொள்ள கீழ்க்கண்ட கேள்விகள் உங்களுக்கு உதவும்:

நீங்கள் பெருந்தன்மையுள்ள கிறிஸ்தவரா?

தேவனுடைய பணிக்காக உங்கள் வருமானத்தின் எத்தனை சதவிகிதத்தை ஒழுங்காக கொடுத்து வருகிறீர்கள்?

நீங்கள் மற்றவர்களை நம்பும் கிறிஸ்தவரா? மனிதர்களிடமுள்ள நல்லவைகளைக்கண்டு மக்களை நீங்கள் நம்புகிறீர்களா? மக்களை அறிந்து கொள்ள உண்மயாகவே நீங்கள் நேரத்தை செலவிடுகிறீர்களா? கிறிஸ்தவர்களை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? கிறிஸ்துவானவர் உங்களை ஏற்று கொண்டதைப் போல் நீங்கள் மற்றவர்களை ஏற்றுக்கொள்கிறீர்களா? (ரோமர் 15:7). மிகக்குறிப்பாக, மற்றவர்களைக் குறித்து முன்தீர்ப்பு செய்யாதிருக்கிறீர்களா? உங்களுடைய இன மற்றும் மதங்களின் அடிப்படையில் மற்றவர்களை விட நீங்கள் உயர்ந்தவர் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா?

ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துவதற்கான செயல் முறைக் குறிப்புகள்

முயற்சி 1

கர்த்தரின் வார்த்தையை உபயோகிக்க கற்றுக்கொள்ளுங்கள்

கர்த்தரின் சரீரத்திலுள்ள மற்றவர்களை உருவாக்குவதற்கு கர்த்தரின் வார்த்தை எத்தனை முக்கியமானது என்பதை கிறிஸ்தவர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும். கர்த்தரின் வார்த்தை என்ன கூறுகிறது என்பதைக் கற்றுக்கொள்ள எல்லா கிறிஸ்தவர்களும் முயற்சி எடுக்க வேண்டும். உற்சாகப்படுத்துதல்தேவைப்படுவோருக்குவார்த்தையைப்பகிர்ந்துகொள்ள அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாய்இருக்கவேண்டும். வேறுவார்த்தைகளில் கூறினால், கிறிஸ்தவர்கள் வேதவசனங்களைக்குறித்த அறிவில்லாதவர்களாய்

இருந்தால், ஒருவருக்கொருவர் உற்சாகப் படுத்திக் கொள்ளமுடியாது. ஆகவே, கர்த்தரின் வார்த்தையைபடிக்கும்படியாக உங்கள் ஆலயத்திலுள்ள ...விசுவாசிகளையும் உற்சாகப்படுத்துங்கள்-இதுதனிப்பட்ட வளர்ச்சிக்கு ...முமல்லாமல் மற்றவர்களின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் இருக்கட்டும்.

முயற்சி 2

...த்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் ஊழியம் செய்ய பரிசுத்த ...வியானவரை அனுமதியுங்கள்.

அநேக மாதங்களாக வராத ஒரு நபர் "ஒரு சிறிய குழுவிற்குள்" ...ந்து செல்வதை நான் கண்டேன். அவரிடம் ஒழுக்கத்தில் ஒரு ...றையிருக்கிறதுஎன்பதுஎனக்குத்தெரியும். அவர் அங்குவந்திருப்பதைக் ...த்து கவனித்தது நான் மட்டும் தான். மேலும் அவரிடம் பிரச்சனை ...க்கிறது என்பதை அறிந்த சிலரில் நானும் ஒருவன். ஒரு சரீரமாக ...தால் ஒருவருக்கொருவர் வேதவசனங்களை பகிர்ந்துக் கொள்ளும் ...யத்தில் நாமிருக்கிறோம். என்னுடைய ஆச்சரியம் யாதெனில், ...மனிதனின் பிரச்சனையை சுட்டிக்காட்டும் வசனங்களை மட்டுமே ...கள் பகிர்ந்து கொண்டனர். இந்த மனிதனின் ஒழுக்கக்கேட்டைப் பற்றி ...குக வசனங்களை பரிமாறிக்கொண்ட யாருக்கும் தெரியாது. ஆனால், ...த்த ஆவியானவருக்குதெரியும்-கிறிஸ்துவின்சரீரத்திலுள்ளவெவ்வேறு ...பினர்களின் மூலமாக கர்த்தர் செயல்ப்பட்டதைக் காண நான் ...னுமதிக்கப் பட்டேன்.

இத்தகைய அனுபவங்கள் அரிதான ஒன்றாக இருக்கக்கூடாது என் ...தியாக விசுவாசிக்கிறேன். இதற்கு பதிலாக, நமது ஆலயங்கள் ...வகுப்படுத்தப்பட்டால், இது அடிக்கடி நிகழும். வேதவசனங்களின் ...ளைகைகளை ஆய்வுசெய்து, அதுவேதாகமத்திற்கும்கலாச்சாரத்திற்கும் ...றியபடி செய்வதின் மூலம் மட்டுமே, கர்த்தர் தன்னுடைய மக்களின் ...மாக பெரிதான காரியங்களைச் செய்ய முடியும். இது நம்முடைய ...நிலைக்கு வழிநடத்துகிறது.

முயற்சி 3

...கள் *ஆலய அமைப்பை மதிப்பிடுங்கள்.*

அநேக ஆலயங்கள் "சரீரப்படி இயங்காமல் பிரசங்கிப்பவரின் படி ...மாகும் வண்ணம்வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தில்போதகரோ, ...ரியரோ, அல்லது மற்ற ஆசிரியரோ கர்த்தரின் வார்த்தையை ...றவர்களுடன் பகிர்ந்து கொள்ள ஏற்படுத்தப்பட்டுள்ளனர். வேத ...த்தைத் தாம் மட்டுமே விளக்க வேண்டுமென சில போதகர்கள் ...யுறுத்துகின்றனர். இச்செயலில் அனைத்து கிறிஸ்தவர்களும்பங்கேற்க ...ண்டுமென வேதாகமம் போதிக்கிறது. எல்லா கிறிஸ்தவர்களும் ...அன்புடனே கூட சத்தியத்தைப் பேசவேண்டும்."

தவறாக புரிந்துக் கொள்ளாதீர்கள்! ஒரு போதகரோ அல்லது ஆசிரியரோ, ஒரு செய்தி மற்றும் அறிமுகத்தின் மூலமே கர்த்தரின் ...த்தையைத் தொடங்கவேண்டும். இதனை ஒவ்வொரு வாரமுடிவிலும் ...சொல்கிறேன். ஆனால் அது மட்டுமே ஒரே தொடர்பாக இருக்கக்கூடாது. வேதாகமம் ஒருவருக்கொருவர் மற்றும் முறை சாராத போதனை ...ஆகியவற்றிற்கு முக்கிய இடத்தை அளிக்கிறது.

கிறிஸ்துவின்சரீரம்செயல்பட-ஒருவரையொருவர்உற்சாகப்படுத்த கிறிஸ்தவர்கள் ஒன்றாக கூடவேண்டும். இதனால்தான் பவுல் ...கொலோசெயருக்கு எழுதினான்:

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும்ஞானப்பாட்டுகளினாலும்ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு (கொலோசெயர் 3:16).

உங்கள் ஆலயம் எப்படி இருக்கிறது? அவற்றின் அமைப்பு எப்படிபட்டது? கிறிஸ்துவின்சரீரத்தில்செயல்படஎல்லாஉறுப்பினர்களுக்கும் சுதந்திரம் இருக்கிறதா - அதாவது "ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தவும்" "ஒருவரையொருவர் உருவாக்கவும்" சுதந்திரம் இருக்கிறதா? பெரிய ஆலயங்களில், இதனைச் செயல்படுத்துவதற்கான ஒரே வழி சிறிய குழுக்களேயாகும்.

சிறிய குழுக்களுக்கான உரையாடலுக்கான வழிக்காட்டி

தொடக்கம்

ஒரு சிலர் எந்த வகையிலாவது உற்சாகப்படுத்தப்படும் விதத்தில் தம்முடைய அனுபவத்தை சுருக்கமாக பகிர்ந்து கொள்ளும் படி குழு உறுப்பினர் ஒருவருக்கு வாய்ப்பளியுங்கள்.

உரையாடலுக்காக

1.எபேசியர்4:14-16ஐவாசியுங்கள்.உற்சாகப்படுத்துவதற்கானஅடிப்படை ஆதாரமாக வேதாகமச் சத்தியம் ஏன் இருக்கிறது? வேதாகமச் சத்தியத்தின் மூலம் எந்த குறிப்பிட்ட சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் உங்களை உற்சாகப்படுத்தினர்? சத்தியத்தின்மூலமாகஎந்தசூழ்நிலையில்மற்றவர்களை உங்களால் உற்சாகப்படுத்த முடிந்தது?

2. 1 தெசலோனிக்கேயர் 4:13 - 5:11ஐ வாசியுங்கள். இன்று நம்முடைய ஆலயத்தில் ஆவிக்குரிய சத்தியத்தால் உற்சாகப்படுத்துதலும் ஒருவரையொருவர் உருவாக்குவதும், குறைவாக இருக்கிறதா? அதனை நம்மால் எப்படி மாற்றமுடியும்?

3.கிறிஸ்துவின்வசனம்உங்களுக்குள்ளேசகலஞானத்தோடும்பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோசெயர் 3:16) என்பதின் பொருள் என்ன?

4.வேதாகமவசனங்களைத்தவிரவேறுவார்த்தைகளைசிறப்பாகபயன்படுத்தி உங்களை உற்சாகப்படுத்திய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். அதற்கு மாறாக, நீங்கள் உற்சாகமிழந்தகாயப்பட்ட உங்கள் அனுபவங்களை பகிர்ந்துக் கொள்ளுங்கள். ஒரு குழுவாக, மோசமான அனுபவங்களை வேறுவிதமாக கையாளுவதைக் குறித்து உரையாடுங்கள்.

5. கர்த்தரின் வார்த்தையை உணர்ச்சியுடனே பயன்படுத்துவது ஏன் முக்கியமானது? வேத வசனங்களை ஆயுதமாக பயன்படுத்தி அல்லது "தடி" யாக உபயோகப்படுத்தி, அதனை நாம் பயன்படுத்தியதை மக்கள் உணராமலே நம்மால் எப்படி "அன்பினால் சத்தியத்தை பேச" முடியும்?

முடிவு

இந்த குழுவில் ஒருவரை ஒருவர் எப்படி உருவாக்கினீர்கள் என்பதையிட்டு கொண்டாடி ஒன்றாகச் சேர்ந்து முடியுங்கள். மீண்டும் பேசக் கூடுங்கள், அல்லது கீழ்க்கண்டவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்.

ஒரு சிறந்த புரிந்துகொள்ளுதல், அல்லது மாறிப்போன மனநிலை ஆகியவற்றை பகிர்ந்துகொள்ளும்படி ஒவ்வொருவராக நீங்கள் அழையுங்கள் அல்லது இந்த ஆராய்ச்சியின் மூலம், மற்றவர்களுடனான உறவுமுறையில் புதியமுறையில் எப்படி வாழ்கிறார்கள் என்பதை பகிர்ச் சொல்லுங்கள். உங்கள் வாழ்வுகளில் கர்த்தர் செய்தவற்றிற்காக நன்றி கூறி, ஒன்றாக ஜெபியுங்கள்.

ஒன்று சேர்ந்து இந்த புத்தகத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள தலைப்புகளைப் பார்த்து, உங்கள் குழுவினர் எந்த கொள்கைகளின் படி வாழ்ந்தனர் என்பனவற்றைபட்டியலிடுங்கள். துதி ஜெபங்களை ஏறெடுங்கள்.

அடுத்தமுறைக்காக

1. இந்த புத்தகத்தில் உள்ள கொள்கைகளை உங்கள் ஆலயத்தில் நடைமுறைப்படுத்த விரும்பினால் அதற்கான வழிமுறைகளைக் கண்டறியுங்கள், இவற்றைநடைமுறைப்படுத்துவதற்கு ஒரு நேரத்தை ஒதுக்கி சந்தித்து உரையாடுங்கள்.

2. தொடர்ந்து நீங்கள் படிக்க விரும்பினால். ஜீன் கெட்ஸ் எழுதிய மற்ற "ஒருவருக்கொருவர்" புத்தகங்களில் ஒன்றைப பயன்படுத்தலாம். அவை ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துதல் மற்றும் ஒருவரையொருவர் நேசித்தல் என்பனவாகும். சிறிய குழுக்களுக்கான உரையாடல் வழி காட்டிகள் இவ்விரு புத்தகங்களிலும் உள்ளன.

இரட்சிப்பின் கவிதை

(ஒரு இரட்சிப்பின் ஜெபம்)

இயேசுவே நீர் சிலுவையில் மரித்தீர்
இழந்து போனோரை மீட்க உயிரோடு எழும்பினீர்
இப்போது என் பாவங்கள் அனைத்தும் மன்னியும்
மீட்பராக, ஆண்டவராக, நண்பனாக என்னிடம் வாரும்
என் வாழ்வை மாற்றி புதிதாக்கும்
ஆண்டவரே! உமக்காக வாழ உதவி செய்யும்.

ஆமென்

மேட் & ஷெரி மெக்பெர்சன்

ஒருவரை ஒருவர் கட்டியெழுப்புதல்

கிழித்துப் போடாதீர்கள், பொறுமையாய் இருக்காதீர்கள் - கட்டி எழுப்புங்கள்!

வேதாகமத்தின்கட்டளையின்படிஒருவருக்கொருவர்வளராவிட்டால்கிறிஸ்துவின் சபையால், அது இருக்க வேண்டியதைப் போல் இருக்கமுடியாது. *ஒருவரை ஒருவர் கட்டி எழுப்புதல்*, 1976 இல் ஜீன் கெட்ஸ் அவர்களால் முதலில் பதிப்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து சிறப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் இந்த புத்தகமானது அத்தலைப்பிற்கிணங்க ஒருவரை ஒருவர் கட்டி எழுப்ப உதவி வருகிறது. மிகவும் பிரபலமாயுள்ள "ஒருவருக்கொருவர் வரிசையின்" மூலைக்கல்லான இந்த புத்தகம், டாக்டர். கெட்சின் ஆலயம் நிறுவுதல் மற்றும் கட்டி எழுப்புதலின் அனுபவங்களைக் கொண்டு இப்போது முழுமையாக மறுபடியும் எழுதப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட மற்றும் குழுவிற்கான பாடங்களையும் அடக்கியுள்ளது.

புதிய ஏற்பாட்டின் பன்னிரண்டு முக்கியமான "ஒருவருக்கொருவரின்" கட்டளைகளை, டாக்டர் கெட்சுடனே ஆராய்ச்சி செய்து, உங்கள் ஆலய வாழ்க்கையிலும்,உங்கள்தனிப்பட்டவாழ்க்கையிலும்வளருவதற்கானநடைமுறை முயற்சிகளை பின்பற்றுங்கள். இது ஒரு நீண்ட கால கட்டி எழுப்பும் செயல், ஆனால் அது கர்த்தரை பிரியப்படுத்தக்கூடியது. கூடவே இந்த வாழ்வில் மட்டும் இல்லாமல், அடுத்தவாழ்விலும் வெகுமதியைத் தரக்கூடியது.



டாக்டர் ஜீன் கெட்ஸ் டல்லாஸின் வடக்கு புறநகரில் உள்ள ஐக்கிய வேதாகம ஆலயத்தின் மூத்த போதகராகவும், *'Renewal'* என்ற அன்றாட வானொலி நிகழ்ச்சியின் தொகுப்பாளராகவும்,அமெரிக்காமற்றும்உலகம்முழுவதும் நடைபெறும் கருத்தரங்கு பேச்சாளராகவும் உள்ளார். இவர் ஆலயபுதுப்பித்தல்மையத்தின்இயக்குனராகவும், டல்லாஸ் வேதாகம கல்லூரியில் பேராசிரியராகவும் ப்ணியாற்றினார். இதற்கு முன்னர் 'மூடி' வேதாகம கல்லூரியில் ஆசிரியராக சேவைச் செய்தார். 1972இல் இருந்து டல்லாஸ் புறநகரில், மூன்று ஆலயங்களை அமைத்து கூடவே பல கிளை சபைகளை (அவை ஐக்கிய வேதாகம ஆலயங்கள் என அழைக்கப்படுகின்றன) நிறுவுவதற்கு உதவிசெய்து, ஒரு ஆலயத்தை உருவாக்கும்போதகராகஅவர்பணியாற்றியுள்ளார்.டாக்டர்கெட்ஸ்ஐம்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார்.

COOK INTERNATIONAL
a grassroots partner
&

Building up One Another
(Tamil)